இந்தியாவில் தற்கால சமய
இயக்கங்கள்.
ஃபார்க்குஹர்

2215

# இந்தியாவில் தற்கால சமய இயக்கங்கள்

1473
1

பதிப்பாசிரியர்

ஞான இருபின்சன்

# இந்தியாவில்
# தற்கால சமய இயக்கங்கள்


பதிப்பாசிரியர்

ஞான இருபின்சன்



கிறிஸ்தவ இறையியல் இலக்கியக் குழு

*Published by*

**The Christian Literature Society**
Post Box 501, Park Town, Madras-3

for

**The Tamil Theological Book Club**

*General Editor:* **Gnana Robinson**

*Director:* **Albert Manuel**

*Copyright: T.T.B.C.*

First printed, 1971

*Published with the help of*
*The Theological Education Fund*

Printed at the Diocesan Press, Nagercoil, 1971.

# CONTRIBUTORS

**Mr. T. Dayanandan Francis, M.A., B.D.,** is one of the Travelling Secretaries of the Christian Endeavour Movement of India. He is a Tamil Scholar and he has been a research student on linguistics for the past few years. He has translated the Gospel of Luke into Tamil for the Bible Society and for this series he has earlier contributed articles for **A Tholeogical Word Book of the Bible (1963)** and for **Religions of the Indian People (1965).**

**Rev. D. Pothirajulu, B.A., B.D.,** is a presbyter of the Church of South India from the Madurai Diocese. He is now Professor in Biblical Studies in the Tamil Nadu Theological Seminary, Arasaradi and is in charge of the Laity Department both in the Seminary and in the Diocese of Madurai and Ramnad.

**Rev. Gnana Robinson, B.Sc., B.D., M.Th., S.T.M.** is a presbyter of the Church of South India from the Kanyakumari Diocese. He is now the General Editor of the Tamil Theological Book Club and part-time lecturer in the Tamil Nadu Theological Seminary. He is also the Editor of *Irayiyal Malar*, the Seminary Quarterly. He has written several books in Biblical fields both in this and in the C.S.I. Theological Series.

**Vidvan V. P. K. Sundaram, M.A.,** is Professor in Tamil in the Tamil Nadu Theological Seminary. He is the author of **Arul Kural, Thiruppa Maalai** and several other books on Tamil literature.

**Mr. Sam Jeyasingh, B.A.** is a layman in Government Service and he comes from the Kanyakumari Diocese. He has contributed a number of articles to Diocesan magazines in Tamil Nadu.

**Rev. M. Azariah, B.A., B.D., S.T.M.** is a presbyter of the Church of South India from Madras Diocese. He is now the Director of the Youth Movement of the Diocese and also the Chaplain of the Bishop.

**The Rt. Rev. C. G. Diehl** is the Bishop of the Tamil Evangelical Lutheran Church. He is a veteran scholar on Popular and Village Religion in Tamil Nadu and is the author of **Instrument and Purpose** in English (1955), and **Kristendomens** Mote Med **Religionerna** in German (1961).

**Rev. S. Pushparaj, L.Th.,** is a presbyter of the Church of South India from Madras Diocese. He is now in charge of St. John's Church, Cuddalore

**Rev. J. P. Alexander, M.A., B.D.,** is a presbyter of the Church of South India from Kanyakumari Diocese and is now Professor in Church History in Tamil Nadu Theological Seminary. For the C.S.I. Theological series he has written books on Church History. For this series he has earlier written a Commentary on the Book of Revelation.

---

# அறிமுகம்

நற்செய்திப் பணியைப் பற்றியும், அதற்கு அடிப்படையான கிறிஸ்தவ நம்பிக்கையைப் பற்றியும் பேசப்படும் இடங்களிலெல்லாம் இன்று நம் காதுகளில் அடிக்கடி ஒலிக்கும் சொல் "பொருத்தம்" (relevance) என்பதாகும். நமது நற்செய்தியும் நம்பிக்கையும் வாழ்க்கையுடன் பொருந்துவனவாக அமைதல் வேண்டும். அல்லாவிடில் அவை ஏதோ கடந்த காலத்திற்குரியவையாக, உயிரற்றுப் பயனற்றுப் போகின்றன. கடவுளுடைய வாக்கு வாழ்க்கையுடன் பொருத்தப்படும்போதுதான் அது உயிருள்ள வாக்காகப் பலனளிக்கிறது. இவ்வாறு கடவுளுடைய வாக்கை, நற்செய்தியை, கிறிஸ்தவ நம்பிக்கையை, வாழ்க்கையுடன் பொருத்த நாம் நம் வாழ்க்கையின் சூழலை முழுமையாக, அதன் சமய, பொருளாதார, அரசியல், சமூக துறைகளில் அறிவது இன்றியமையாதது ஆகும். மக்கள் வாழ்க்கை நிலையையும் அன்னார் மனப்போங்கையும் அறியாது பாரம்பரிய அடிப்படையில் நற்செய்தியைக் கூறி அறிவிப்பது கற்பாறைகளின் மேல் விதைகளைத் தூவுதலை ஒக்கும்.

இன்று நம் நாட்டில் பல துறைகளிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன. நாளுக்கு நாள் பல்வேறு இயக்கங்கள் தோன்றி வளர்கின்றன. விழித்திருக்கும் திருச்சபை இந்த இயக்கங்களைக் கண்டும் வாளாவிருக்க முடியாது. இவற்றின் உள்ளும் புறமும் ஆராய்ந்து, விளைவுகளைச் சீர்தூக்கி, நல்லனத் தேர்ந்து, அல்லனக் களைந்து, நற்செய்தியை அவற்றுடன் பொருந்தச் செய்வது திருச்சபையின் தலையாய கடமையாகும். இத்தேவையை உணர்ந்த கிறிஸ்தவ இறையியல் நூலோர் குழு, தமிழ்நாடு இறையியற் கல்லூரியின் ஒத்துழைப்புடன் ஜூலை 13-20, 1970 இல் தற்கால சமய சமூக இயக்கங்கள் பற்றி ஒரு கருத்தரங்கை நடத்தியது. சமய சமூக அரசியல் பொருள்கள் பற்றிய கட்டுரைகள் படித்தளிக்கப்பட்டன; கருத்துக்கள் கலந்தாராயப்பட்டன; பங்குகொண்டோர் பயனுற்றனர். அப் பயனை ஏனையோரும் பெறவேண்டுமென்ற அவாவின் விளைவே இந் நூலின் வடிவில் வெளிவந்துள்ளது.

கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளைச் சமய இயக்கங்கள், அரசியல் இயக்கங்கள் என்று இரண்டாகப் பகுத்தோம். முதல் பகுதியே இந் நூலாகக் காட்சியளிக்கிறது. அடுத்த பகுதி இந்திய அரசியல் அரங்கில் (Indian Politics) என்ற தலைப்பில் விரைவில் வெளிவரும்.

இக் கட்டுரைகளைச் சிறப்புற ஆயத்தப்படுத்தித் தந்த அன்பர் அனைவருக்கும் எம் நன்றி.

கிறிஸ்தவ இறையியல் நூலோர் குழு,
மதுரை-10.

ஞான இருபின்சன்
பொதுப் பதிப்பாசிரியர்

## பொருளடக்கம்


பக்கம்

அறிமுகம் ... ... ... v

**முதலாம் பாகம்: முன்னுரை**

1. புதுயுகமும் புனரமைப்பு இயக்கங்களும் ... 3
2. இன்றைய இந்தியாவில் சமய, சமூக நிலைகள் 15

**இரண்டாம் பாகம்: இந்து சமய இயக்கங்கள்**

1. பிரம்ம சமாஜம் ... ... ... 33
2. ஆரிய சமாஜம் ... ... ... 48
3. இராம கிருஷ்ண இயக்கம் ... ... 57
4. பிரம்ம ஞான சபை ... ... 69
5. காஞ்சி காமகோடி பீடம் ... ... 76
6. வள்ளலாரும் சமரச சன்மார்க்க சங்கமும் ... 90
7. சுவாமி சின்மயாநந்தர் இயக்கம் ... 117
8. ஐயப்பர் வழிபாட்டு மறுமலர்ச்சி ... 129

**மூன்றாம் பாகம்: இஸ்லாமிய இயக்கங்கள்**

1. இக்பால் இயக்கம் ... ... 139
2. அகமதியா இயக்கம் ... ... 143
3. ஜமாத்—இ—இஸ்லாமி ஹிந்த் ... 157

**நான்காம் பாகம்: கிறிஸ்தவ சமய இயக்கங்கள்**

**அ. பிரிவினை இயக்கங்கள்**

1. பெந்தேகோஸ்தே இயக்கம் ... ... 165
2. ஏழாம்நாள் வருகைக் கோட்பாட்டாளர் இயக்கம் 171
3. எகோவா சாட்சி இயக்கம் ... ... 175
4. அறநெறிப் போர் எழுச்சி இயக்கம் ... 177
5. சுப்பராவ் இயக்கம் ... ... 180

**ஆ. நற்செய்திப் பணி இயக்கங்கள்**

1. இந்திய மிஷனரி சங்கம் ... ... 185
2. இந்திய தேசீய மிஷனரி சங்கம் ... 188
3. நிர்மல் மிஷன் ... ... ... 191
4. பாரக்கல் மிஷன் ... ... ... 192
5. இதர பல மிஷனரி இயக்கங்கள் ... 193

முதல் பாகம்

# முன்னுரை

1. புது யுகமும் புனரமைப்பு இயக்கங்களும்
2. இன்றைய இந்தியாவில் சமய சமூக நிலைகள்

# 1

# புதுயுகமும் புனரமைப்பு இயக்கங்களும்

**தி. தயானந்தன் பிரான்சிஸ்**

## அ. புதுயுகம்

உலக வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டு ஒரு சிறப்பிடத்தைத் தேடிக்கொண்டுள்ளது. நிகழ்ச்சிகள் நிறைந்ததொரு நூற்றாண்டாக அது திகழ்கின்றது. இந் நூற்றாண்டின் ஒவ்வொரு கட்டத்திலும் முற்போக்குச் சக்திகளின் இயக்கத்தைக் காண முடிகின்றது. மக்களிடையே புதுமை நாட்டமும் புரட்சிக் கருத்துக்களும், புனரமைப்பு வேலைகளும் பேரளவுக்குச் செல்வாக்குப் பெற்றது இந்த நூற்றாண்டில்தான். அறிவியல், வாழ்வியல் ஆகிய துறைகளிலும் ஆன்மீக நெறியிலும் குறிப்பிடத்தகுந்த அளவுக்கு மாறுதல்களும் முன்னேற்றங்களும் இந்த நூற்றாண்டில் ஏற்படலாயின. சமுதாயத்தில் தனி மனிதனுக்குள்ள மதிப்பைச் சரிவரப் புரிந்துகொள்ளும் போக்கையும் சமூக நலனில் அக்கறை காட்டும் பெருநோக்கையும் இந்த நூற்றாண்டில் காணமுடிகின்றது. இந்த நூற்றாண்டினைக் கழகங்களைக் கண்ட நூற்றாண்டு; இயக்கங்களைத் தோற்றுவித்த நூற்றாண்டு; சங்கங்களையும் சமாஜங்களையும் உலகிற்களித்த நூற்றாண்டு என்று கூறலாம்.

திருச்சபை வரலாற்றுப் பேராசிரியர் லாடுரேட் (Kenneth Scott Latourette) திருச்சபையின் வளர்ச்சி நிலையை ஆராய்ந்து அளவிடும்போது இந்த நூற்றாண்டினை "மாபெரும் நூற்றாண்டு" (The Great Centur ) என்று கூறுகிறார். நம் நாட்டைப் பொறுத்த வரையில் பத்தொன்பதாம் நூற்றாண்டு மாபெரும் நூற்றாண்டாக மகத்தான சாதனைகள் நிறைந்த நூற்றாண்டாக மட்டுமல்லாமல் புத்தம் புதியதொரு யுகத்தைத் தோற்றுவித்ததொரு நூற்றாண்டாகவும் திகழ்கின்றது.

கி. பி. 1800உக்குப் பிற்பட்ட காலம் புதுயுகத்திற்குட்பட்ட காலம். புதுயுகம் தோன்றிய நாளிலிருந்தே நாட்டு மக்களிடையே, அதிலும் குறிப்பாகக் கற்றறிந்தோர் வட்டாரத்தில் ஓர் எழுச்சி ஏற்பட்டுள்ளது. இவ்வெழுச்சியை விழிப்புணர்ச்சி என்று விளக்கலாம்; புத்துணர்ச்சி என்று பாராட்டலாம்.

**மேனாட்டவரின் தாக்குதல்கள்:** இந்த யுகத் திருப்பத்துக்குக் காரணங்கள் யாவை என்பதை ஆராயப் புகுந்தால் அவை வெளிநாட்டவரின் தாக்குதல்களே என்பது புலனாகிறது 'தாக்குதல்கள்' என்ற சொல் இங்கு அன்னியரின் அரசியல் ஆதிக்கத்தை மட்டும் குறிக்க பயன்படுத்தப்படவில்லை பல துறைகளில் அவர்கள் தாக்குதல்களை நடத்தினர்கள். அவற்றைப் பண்பாட்டுத் தாக்குதல், மொழித் தாக்குதல், மதத் தாக்குதல், அறிவுத் தாக்குதல் என பலபட விளக்கலாம்.

இந்தத் தாக்குதல்களுக்கு ஆளாகிய இந்திய மக்களிடையே சிந்தனை எழுச்சியும், பண்பாட்டுக் குழப்பமும் அறிவியல் அதிர்ச்சியும் ஏற்படலாயின.

மேனாட்டவரின் செல்வாக்கும் ஈடுபாடும் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தே நாட்டில் இருந்துவந்தன என்பது உண்மைதான். 1757 இல் ஆங்கிலேயர் பிளாஸிப் போரில் வெற்றி கண்டிருந்தார்கள், ஆனால் புது யுகத்தைத் தோற்றுவிக்கின்ற அளவுக்கு அவர்களிடையே ஆக்கச் சக்திகளின் இயக்கம் அப்போது இல்லை.

**ஆக்கச் சக்திகள்:** பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேனாட்டவர் செல்வாக்கில் நான்கு ஆக்கச் சக்திகள் பிணைந்து செயற்பட ஆரம்பித்தன. அந்த நான்கு ஆக்கச் சக்திகள் வருமாறு:

1. ஆங்கில ஆட்சியாளரின் செல்வாக்கு.
2. கிறிஸ்தவ மிஷனெரி இயக்கத்தின் வளர்ச்சி.
3. ஆங்கில மொழியின் வளமும் அதற்குக் கிடைத்த வரவேற்பும்.
4. கீழ் நாட்டவர் தம் கலை இலக்கியத்தில் மேனாட்டறிஞர் காட்டிய ஆர்வம்.

இந் நான்கு ஆக்கச் சக்திகள் செயற்பட்ட பெற்றியைச் சற்று ஆராய்வோம்.

**ஆங்கிலேயரின் ஆட்சி** கிழக்கிந்திய கம்பெனியின் ஆதிக்கம் நீங்கி ஆங்கிலேயரின் ஆட்சி ஏற்பட்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்திய மக்கள் நலனில் அக்கறை காட்டும் அரசாக விளங்க விழைந்தது. என்றாலும் நாட்டு மக்கள் அவ்வரசிடம் தங்கள் வெறுப்புணர்ச்சியையும் அதிருப்தியையும் காட்டத் தவறவில்லை. "சிப்பாய்க் கலகம்" எனப்படும் இந்தியரின் முதல் உரிமைப் போர் 1857 இல் தொடுக்கப்பட்டது. இந்தியர்தம் பலத்தை ஆங்கில அரசு அறிவதற்கு அது ஓர் அளவுகோலாக அமைந்தது. அதே நேரத்தில், மக்களின் நன்மதிப்பைப் பெறுவதற்கு எவ்வளவு சீரமைப்பு வேலைகளும் ஆக்கப் பணிகளும் நடந்தாக வேண்டும் என்பதும் ஆட்சியாளருக்கு விளங்கிவிட்டது.

பெண்டிங் பெருமகனார் போன்றவர்கள் புனரமைப்பு வேலைகளில் இறங்கினார்கள். மதத்தின் பேரால் சமுதாயத்தில் இருந்து வந்த கொடிய பழக்க வழக்கங்களுக்கு முடிவுகட்ட அவர் போன்றோர் முன்வந்தனர். சமுதாய வாழ்க்கையில் மக்களுக்குத் தேவைப்பட்ட வாய்ப்பு வசதிகளில் ஆங்கில அரசு கவனத்தைச் செலுத்தியது. அரசியல் அலுவலகங்களில் அவர்களுக்கு வேலைவாய்ப்புகள் தரப்பட்டன. அதோடு மக்களிடையே மலிந்துகிடந்த ஏற்றத்தாழ்வு உணர்ச்சிகளை அடக்கிப் பிளவுகளையும் பிணக்குகளையும்

ஒடுக்கிச் சமஉரிமைக் கருத்துக்களை அவர்களிடையே பரப்பும் முயற்சியிலும் ஆங்கிலேயரின் அரசு கவனம் செலுத்தியது.

அன்னிய ஆட்சியாளரின் இத்தகைய ஆக்கப் பணிகள் நாட்டில் கற்றறிந்தோரிடையே சிந்தனை எழுச்சியை உண்டாக்கின. ஆங்கிலேயரின் பெருநோக்கினையும் அதற்குப் பின்னணியாக இருந்த அவர்களுடைய அறிவியல், மதக் கருத்துக்களையும் அவர்களில் பலர் ஆர்வத்தோடு கற்றறிய முன்வந்தார்கள். தனி மனிதனின் உரிமைகளும் சமுதாய நலனும் ஆங்கிலேயரின் சிந்தனையிலும் செயலிலும் மைய இடம் பெற்றிருப்பதை அவர்கள் கண்டு கொண்டார்கள்.

**மிஷனெரி இயக்கம்:** தெற்கே தரங்கம்பாடியிலும் வடக்கே செராம்பூரிலும் எழுந்த மிஷனெரி இயக்கம் நாடு முழுவதிலும் மெள்ள மெள்ளப் பரவ ஆரம்பித்திருந்தது. பலகாலம் ஆங்கில ஆட்சியாளர் மிஷனெரிமாரைப் பாராட்டவோ அவர்களுக்குப் பக்கபலமாக நிற்கவோ அஞ்சினார்கள். அப்படிச் செய்தால் கிறிஸ்தவரல்லாத பல்லாயிரக்கணக்கான இந்திய மக்களிடையே தங்களுக்குள்ள மதிப்பும் மரியாதையும் மழுங்கிவிடும் என்று அவர்கள் அஞ்சினார்கள்.

ஆனால் ஒரு குறிப்பிட்ட கட்டம் வந்தபோது ஆங்கில அரசு மிஷனெரிமாரின் உதவியையும் ஒத்துழைப்பையும் எதிர்நோக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. உதாரணத்துக்கு இதைக் குறிப்பிடலாம்: கல்கத்தாவில் ஃபோர்ட் வில்லியம் **(Fort William)** கல்லூரியில் திறம்பட சமஸ்கிருதமும், வங்காள மொழியும் கற்பிக்கக்கூடிய ஒரு பேராசிரியரை அரசியலார் வலைபோட்டுத் தேடியபோது ஒரு மிஷனெரிதான் அவர்களுக்கு அதிசிறந்த ஆளாகக் கிடைத்தார். அவர்தான் வில்லியம் கேரி. அதோடு, மிஷனெரிமார் நடத்திய அச்சகம் சிறந்ததாகவும் பல மொழி வார்ப்புகளைக் கொண்டதாகவும் இருந்ததால் அதனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய இன்றியமையாமை அரசியலார்க்கு ஏற்பட்டது.

இவ்வாறாக, ஒன்றோடொன்று மோதிக்கொண்டிருந்தனவும் முரண்பாடுடையனவாகவும் இருந்த இரு பெரும் ஆக்கச் சக்திகள் இணைந்து செயற்பட ஆரம்பித்தன. அரசினரும் மிஷனெரிமாரும் ஒருசேர நாட்டு நலனிலும் மக்கள் முன்னேற்றத்திலும் அக்கறை காட்ட ஆரம்பித்தார்கள்.

சென்னையில் ஆன்டெர்ஸன் என்னும் ஸ்காட்லாந்துப் பெரியாரின் அரிய முயற்சியால் கிறிஸ்தவக் கல்லூரி நிறுவப்பட்டது. பம்பாயில் கல்லூரி நிறுவப்படுவதற்கு வில்சன் காரணமாக இருந்தார். கல்கத்தாவில் மிஷனெரிமாரின் கல்விப்பணி பெருகியவண்ணம் இருந்தது. அலெக்சாந்தர் டஃப் என்பார் ஒரு ஆங்கிலப் பள்ளியை ஆரம்பித்து அந்நகரில் மக்களிடையே பெரும் எழுச்சியை ஏற்படுத்திவிட்டார். ஆங்கில மொழியின்

வளமும் கிறிஸ்தவத் திருமறையின் ஆழ்ந்த கருத்துக்களும் அவை விடுத்த அறைகூவலும் மக்களைப் பேரளவுக்குக் கவர ஆரம்பித்தன.

மிஷனெரிமாரின் மருத்துவப் பணியும் நாடெங்கும் நடக்க ஆரம்பித்தது. தென்னாட்டில் 1876 இலிருந்து 1879 வரை கொடிய பஞ்சம் ஒன்று ஏற்பட்டது. அப்போது ஓய்வு ஒழிவு இல்லாமல் மிஷனெரிமார் நிவாரணப் பணியில் ஈடுபட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்றார்கள்.

**ஆங்கில மொழியின் செல்வாக்கு:** ஆங்கில மொழியினை ஆங்கிலேய ஆசிரியர்களிடம் கற்றறியும் வாய்ப்பு இந்திய மாணவர்களுக்குக் கிடைத்தது. கலை, இலக்கியம் ஆகியவற்றில் பண்பட்டிருந்த இந்திய உள்ளங்கள் ஆங்கிலத்தை விரும்பி ஏற்றன. அம்மொழியின் சொல்லாட்சித் திறனும், கருத்தாழமும், இலக்கிய வளமும் மாணவர்களைப் பெரிதும் கவர்ந்துவிட்டன. அம்மொழி இலக்கியத்தில் காணக்கிடக்கும் வாய்மை நெறியும், தனிமனித உரிமை பற்றிய கருத்துக்களும் உலக வாழ்க்கையின் மெய்ம்மை, சமுதாயப் பணியின் மாண்பு ஆகியவைகளைச் சிறப்பிக்கும் கொள்கைகளும், இந்து தர்மத்தில் ஊறி நின்ற மாணவர்களைப் புத்தம் புதியதொரு திசையில் தங்கள் சிந்தனையைச் செலுத்தும்படிச் செய்தன.

**மேனாட்டறிஞரின் இலக்கியப் பணி:** கீழ்நாடுகளின் கலை இலக்கியம் ஆகியவற்றில் பெருத்த ஈடுபாடுகொண்ட மேனாட்டறிஞர் சிலர் நாட்டில் உலவலாயினர். அவர்கள் பல நூல்களையும் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதிக் குவித்தார்கள். இந்தியரின் சமய நூல்களையும், இலக்கியங்களையும் ஆங்கிலத்திலும் பிறமொழிகளிலும் பெயர்த்து அவற்றை உலகிற்கு அறிமுகப்படுத்தலாயினர்.

அக் கால மக்களால் அரசியல் காரணங்களுக்காகப் பெரிதும் வெறுக்கப்பட்டவர் வாரான்ஹேஸ்டிங்ஸ். ஆனால் இந்து மதத்தையும் சமஸ்கிருத மொழியையும் மேனாட்டவர்க்கு முதன் முதலாக அறிமுகப்படுத்தியவர் அவரே ஆவார். அவரைத் தொடர்ந்து கோல்புருக், வில்சன், மாக்ஸ்மூலர் போன்றவர்கள் இந்து மதத்தின் இலக்கியச் செல்வங்களை ஆங்கிலத்தில் பெயர்த்துத் தரலானார்கள். கீதை, சாகுந்தலம் போன்ற நூல்கள் அழகாக மொழிபெயர்க்கப்பட்டன. எட்வின் ஆர்னால்டு 'ஆசிய ஜோதி'யையும் 'விண்ணகத்துப் பண்'ணையும் உலகிற்கு வழங்கியதும் இக் காலத்தில்தான்.

## ஆ. புனரமைப்பு இயக்கங்கள்

இந்த நான்கு ஆக்கச் சக்திகளின் பேரியக்கத்தின் விளைவாக மக்களிடையே புத்துணர்ச்சியும் பெருநோக்கும் பெருமித

மும் எந்த அளவுக்கு எழுந்தன என்பதை எடுத்துக்காட்டுகிற வகையில் சிலபல புனரமைப்பு இயக்கங்கள் ஏற்படலாயின. அவைகளுள் மூன்றினை மட்டும் இக் கட்டுரையில் சுருக்கமாக ஆராய்வோம். அவை மூன்றும் மூன்று வகைப்பட்டவை ஆகும். மாறுபாடுடைய கொள்கைகள் மூன்றினைச் சிறப்பிக்கும் மூன்று இயக்கங்கள் என அவற்றைக் கூறலாம்.

டாக்டர் பி. டி. தேவானந்தன் அவர்கள் புனரமைப்பு இயக்கங்கள் நான்கு வகைப்பட்டவை என்பார்கள். அவற்றைப் புனராக்கம், புத்தெழுச்சி, புத்துணர்ச்சி, புரட்சி இயக்கங்கள் என விளக்குவார்கள். (*Reform*, *Revival*, *Renaissance* and *Revolt*)[1]. புனராக்க இயக்கங்கள் பெரும்பாலும் வெளிப்புறச் சக்திகளின் இயக்கம் காரணமாக எழுகின்றன. புத்தெழுச்சி இயக்கங்கள் உட்புறச் சக்திகளின் காரணமாக எழுபவை. முன்னையவை புதுமை நாட்டம் கொண்டவையாக இருக்கும். பின்னையவை பழமையை மீண்டும் புதுப்பிக்கிறவையாக இருக்கும். புத்துணர்வியக்கங்கள் வெளிப்புறச் சக்திகள், உட்புறச் சக்திகள் இரண்டும் சேர்ந்தியங்கும்போது எழுவன ஆகும். இவை பழைய கோட்பாடுகளைப் புதுத் தொடர்களால் புதுப் பொருளோடு விளக்கும் இயக்கங்களாக இருக்கும. புரட்சி இயக்கங்கள் மதத்தின் அடிப்படைக் கொள்கைகளைத் தகர்த்தெறிவனவாக அமையும். புத்தம் புதிய அமைப்பு முறையில் அவை நாட்டம் செலுத்தும். தென்னாட்டில் தோன்றிய சுயமரியாதை இயக்கத்தை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.[2]

இக் கட்டுரையில் நாம் சுருங்க ஆராயப்போகும் மூன்று இயக்கங்கள், பேராசிரியர் தேவானந்தனின் பாகுபாட்டில் அமையும் முதல் மூன்று வகையைச் சார்ந்தவையாகும். அவை வருமாறு:

1. **பிரம்ம சமாஜம்: புனராக்க இயக்கம் (Reform movement).**
2. **ஆரிய சமாஜம்: புத்தெழுச்சி இயக்கம் (Revival movement).**
3. **இராமகிருஷ்ண மிஷன்: புத்துணர்ச்சி இயக்கம் (Renaissance movement).**

**பிரம்ம சமாஜம்:** *இராஜாராம் மோகன்ராய் (1772—1833)* இதனைத் தோற்றுவித்தார். மேனாட்டவரின் நேரடியான தாக்குதலுக்கு ஆளானவர் இவர். வெளிநாட்டவருடைய தாக்குதல்களைத் தாங்கிக்கொள்ளுகிற அளவுக்கு அவர் வாழ்க்கை பண்பட்டிருந்தது. இவர் பிராமண குலத்தில் பிறந்தவர்; இஸ்

---

1 P. D. Devanandan, *Resurgent Hinduism*, CISRS, 1958, p.5.

2 P. D. Devanandan, *Op. cit*, p. 5.

லாமியக் கருத்துக்களில் மூழ்கி எழுந்தவர்; பௌத்தமும் பயின்றவர். 1796 இலிருந்து ஆங்கிலமும் கற்க முனைந்தவர். விவிலியத்தை ஊன்றிப் படிக்கவேண்டும் என்பதற்காக மூல மொழிகளான எபிரேயம், கிரேக்கம் ஆகிய இரு மொழிகளையும் பயின்றவர்.

இத்தகைய பின்னணியோடு அவர் நடத்திய சிந்தனைப் போராட்டத்தின் விளைவாகக் கடவுள் ஒருவரே; அவர் உயர் திணையினர்: அடியாரோடு நேர் தொடர்புகொள்ளும் ஆள் தன்மையுடையவர் என்ற கொள்கை (Theism) அவர் உள்ளத்தில் ஆழப் பதிந்துவிட்டது. இராமானுஜரைப்போல வேதாந்த சூத்திரததை இந்தப் பணியில் இவர் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

கிறிஸ்தவமும் கிறிஸ்துவின் அறைகூவலும் அவரைப் பேரளவுக்குக் கவர்ந்தன. 1820 இல் "இயேசுவின் கொள்கைகள்" (Precepts of Jesus என்ற நூலை எழுதி வெளியிட்டார். அவர் கருத்துக்களுக்குச் செராம்பூர் மிஷனெரிமார் எதிர்ப்புத் தெரிவிகக வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இராம் மோகன் சமுதாயச் சீர்திருத்தத்திலும் பெருத்த அக்கறை காட்டினர். 1830இல் பிரம்ம சமாஜத்தினை ஏற்படுத்தி மூன்றாண்டுகளுக்குள்ளாகக் காலமாகிவிட்டார்.[1]

இந்தப் புதுயுக மனிதர் மேனாட்டவரின் தாக்குதல்களுக்கு ஆளாகியபோது அவற்றை மனமுவந்து வரவேற்பவராய் விளங்கினர்.

மேனாட்டவரின் பண்பாட்டிலும் மதத்திலும் சிறந்தவையாக இருந்தவைகளை ஏற்றுக்கொள்ள அவர் தயங்கவில்லை. அவற்றை இந்திய வாழ்வியலில் நுழைக்க முயன்றார்.

இந்தியப் புதுயுகத்தின் தந்தை எனப் போற்றப்பெறும் இராம் மோகனரின் கொள்கையை இவ்வாறு தொகுத்துக் கூறலாம்.

"மாற்றான் தோட்டத்து மல்லிகை என்றாலும் அதன் மணம் இனிமையானது, அதை நுகர்வதில் தவறில்லை".

**ஆரிய சமாஜம்:** மேனாட்டவரின் தாக்குதல்கள் காரணமாகக் கொதித்தெழுந்த ஒருவர் இந்த சமாஜத்தை நிறுவினர். இது பிரம்ம சமாஜம் போன்றது அல்ல. அன்னியரின் அன்போ, அக்கறையோ, பண்பாடோ, பககபலமோ, இந்துமதப் புனரமைப்புக்குத் தேவை இல்லை என்று கருதினர் இவ்வியக்கத்தைத் தோற்றுவித்த சுவாமி தயானந்த சரஸ்வதி. இவர்

1 பிரம்ம சமாஜத்தின் வரலாற்றை இந்நூலில் பின்வரும் கட்டுரையில் காண்க.

1824 இல் நாட்டின் மேற்குப் பகுதியில் பிறந்தவர். மூலசங்கரர் என்பது இவருடைய இயற்பெயர். இளமையிலேயே இவர் துறவறம் பூண்டார் நாடெங்கும் அலைந்து திரிந்து வேதாந்தத்தை ஊன்றிக் கற்று 'சரஸ்வதி' அடியார்களோடு சேர்ந்து கொண்டார்.

தயானந்தர் ஆங்கிலம் கற்காதவர். இந்து தர்மத்தைத் தவிர எதையும் விரும்பிப் போற்ருதவர். ஆகவே, வெறுப்பு, பகை, போட்டி மனப்பான்மை ஆகியவற்ரேடு செயற்பட்டார். கிறிஸ்தவத்தையும் இஸ்லாத்தையும் அறவே கடிந்தார்.

1875இல் ஆரிய சமாஜத்தைத் தோற்றுவித்து ஆறு ஆண்டுகள் வடநாடு முழுவதிலும் அலைந்து திரிந்து பிரச்சாரம் நடத்திஞர். இந்து மதத்தை விட்டுப் பிறமதங்களைத் தழுவியிருந்தவர்களை மீண்டும் இந்து மதத்திற்குள் கொண்டுவரும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார்.

இந்து மதத்தில் புத்தெழுச்சியை ஏற்படுத்த விரும்பிய இவர் வேதங்களே முக்கியம், அவையே போற்றிக் காக்கப்பட வேண்டும் என்று முழங்கிஞர். ஸ்மிருதி இலக்கியங்களும் இரண்டாவது இடமே தரப்பட வேண்டும் என்று கூறிஞர். கிரிஸ்வால்டு என்பவர் சுவாமி தயானந்தர் தாம் முதன் முதலாக இந்தியா இந்தியருக்கே என்ற முழக்கத்தை எழுப்பியவர் என்று கூறுகின்ருர். இந்து மதத்தில் புத்தெழுச்சியை ஏற்படுதத இவர் எடுத்த முயற்சிகளை மார்ட்டின் லூத்தருடைய சொல்திறத்தோடு ஒப்பிட்டுப் பேசுகிருர் கிரிஸ்வால்டு.[1]

சுவாமி தயானந்தரின் கொள்கையை இப்படிச் சுருக்கிக் கூறலாம்.

"மாற்ருன் தோட்டத்து மல்லிகையின் மணத்துக்குக் குறைந்ததல்ல என் வீட்டுச் சம்பங்கியின் மணம். அதை நான் பரப்புவேன்".

**இராமகிருஷ்ணர் இயக்கம்:** இராமகிருஷ்ணரும் தயாளந்தரைப் போலவே ஆங்கிலக் கல்வியறிவு இல்லாதவர். இவர் பெருங் காளி பக்தர். ஆன்மீக நெறியில் ஆழ்ந்து சென்று தாம் அனுபவத்தில் கண்டறிந்த உண்மைகளைத் தம் சீஷர்களுக்கும் மக்களுக்கும் இவர் வழங்கிஞர். மேஞட்டவர் மதத்திடம் இவர் காழ்ப்புக் காட்டவில்லை. கிறிஸ்துவையும் முகமது நபியையும் இவர் திருக்காட்சி நிலையில் கண்டதாகக் குறிப்பிடுகிருர். எல்லா மதங்களும் சமஅளவில் உண்மையானவை என்ற சமதர்ஸன, சமரச நோக்கினைப் பெருக்கியவர் இவர்.

சமரசக்கொள்கை இந்து மதத்திற்குள்ளாகவே செயற்பட்டு வந்தவொரு கொள்கை ஆகும். தமிழகத்தில் தாயுமாஞர்

1 இவ் வியக்கத்தைப் பற்றிய தனிக் கட்டுரை பின்வருகிறது.

இந் நெறியைச் சிறப்பித்தார். "ஆறு சமயங்கள் தோறும் வேறு வேறாகி விளையாடுவது நீயன்றோ பராபரமே" என அவர் பாடினார் இராமகிருஷ்ணர் இந்தக் கொள்கையை அகில உலக அளவில் விரிவுபடுத்தி அனைத்து மதங்களையும் இக் கொள்கைக்குள் அடக்கி நிறுத்தினர்.

இவருடைய கொள்கைகளுக்கு ஆக்கம் தேடித் தந்தவர் இவருடைய மாணவராகிய சுவாமி விவேகானந்தர் ஆவார். சமதர்ஸனக் கொள்கையோடு நவவேதாந்தக் கொள்கைகளையும் இவர் பரப்பி இந்து மதத்தினை ஒரு வாழ்க்கை நெறி என்றும் அது அனைத்து மதங்களின் நிலையையும் கடந்தது; எல்லா மதத்தவர்களையும் தன்பால் அரவணைக்கக் கூடியது என்றும் உலகின் பல நாடுகளில் முழங்கினர். இந்தக் கொள்கைத் தெளிவோடு இராமகிருஷ்ண மிஷன் இயங்கி வருகின்றது. இவ்வியக்கத்தில் புத்துணர்ச்சி நிலையைக் காணமுடிகின்றது. இவ்வியக்கம் உட்புறச் சக்திகளாலும் வெளிப்புறச் சக்திகளின் துணையாலும் உருப்பெற்று எழுந்து வளர்ந்து வருகின்றது.[1]

இராமகிருஷ்ணரின் கொள்கையை இப்படிச் சுருக்கிக் கூறலாம்:

"மாற்றான் தோட்டத்து மல்லிகையும் என் வீட்டுச் சம்பங்கியும் ஒன்றே. ஆழ்ந்து முகர்ந்தால் இரு மலர்களின் மணமும் ஒன்றே".

இராம் மோகனரையும் அவர் இயக்கத்தாரையும் **இந்து மிதவாதிகள்** எனலாம்.

தயானந்தரையும் அவர் வழித் தோன்றல்களையும் **இந்து தீவிரவாதிகள்** என்று கூறலாம்.

இராமகிருஷ்ணரையும் அவரைச் சார்ந்தவர்களையும் **இந்து சமரசவாதிகள்** எனலாம்.

புதுயுகத்தில் தோன்றிய மூன்று புனரமைப்பாளர்களில் ஒருவர் மிதவாதியாகவும், வேறொருவர் தீவிரவாதியாகவும், பிறிதொருவர் சமரசவாதியாகவும விளங்கக் காண்கிறோம். புதுயுகததின் முத்திரை பெற்ற அவர்கள் இயக்கங்களும் மூன்று வெவ்வேறான நோக்குடையவைகளாக உள்ளன.

இந்த இயக்கங்களைத் தொடர்ந்து இன்றளவும் நாட்டில் தோன்றியிருக்கும் இயக்கங்கள், கட்சிகள், கழகங்கள் யாவும் இம் மூன்று நோக்கங்களில் ஒன்றினைச் சிறப்பிக்கின்றவையாகவே உள்ளன. ஒரு சில இயக்கங்கள் இம் மூன்றினையுங் கடந்த புரட்சி இயக்கங்களாகத் தோன்றியுள்ளன.

---

1 இவ்வியக்கம் பற்றிய தனிக்கட்டுரை பின்வருகின்றது.

## இ. புதுயுகப் புனரமைப்பாளரும் இயேசு கிறிஸ்துவும்

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் அவரைப் பற்றிய நற்செய்தியும் புனரமைப்பாளர்கள் பலரைக் கவர்ந்துள்ளமை குறிப்பிடற்பாலதாகும். கிறிஸ்து உலக இரட்சகர். எல்லாருக்கும் உரியவர். அவர் கிறிஸ்தவர்களின் சொந்தச் சொத்து அல்ல. கிறிஸ்தவ நற்செய்தி ஆழம் பொருந்தியது; ஆற்றல் மிகுந்தது; எவருக்கும் அறைகூவல் விடுப்பது. ஆகவே, கிறிஸ்துவோடும் அவருடைய நற்செய்தியோடும் ஈடுபாடு கொண்டாகவேண்டிய சூழ்நிலை இந் நாட்டுச் சிந்தனையாளர்களுக்கும் சீர்திருத்தவாதிகளுக்கும் ஏற்பட்டது. அவர்களில் பலர் கிறிஸ்துவைப் பற்றிய தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள்.[1] இந்து மதப் பின்னணியோடு அவரை நோக்கியவர்கள் அவரை அவதார புருடராக, அன்பு நெறியாளராக, ஆயிரத்தில் ஒருவராகக் கண்டார்கள். கேசப் சந்திர சென் போன்றோர் அவரைத் தெய்வத் திருமகனாகவும் காண முன்வந்தார்கள். நவவேதாந்தக் கொள்கைகளில் ஊறித்திளைத்தவர்கள் அவரை ஒரு யோகியாகவும், முனிவராகவும் கண்டு மகிழ்ந்தார்கள். இந்தப் போக்கு இன்றும் நாட்டில் கற்றறிந்த இந்துப் பெருமக்களிடையே உள்ளது. கிறிஸ்து என்னும் சக்தியும் அதன் அறைகூவலும் திரைகளைக் கிழித்துச் செல்பவை; தடுப்புச் சுவர்களைத் தகர்ப்பவை; ஆழ்ந்தகன்று செயற்படுபவை எனக் கூறலாம்.

டாக்டர் தேவானந்தன் கூற்றுப்படி ஒவ்வொரு மதத்தினையும் மூன்று நிலைகளில் வைத்து ஆராயலாம்.[2] அவற்றை அவர் கோட்பாடு (Creed), வழிபாடு (Cultus), பண்பாடு (Culture) என விளக்குவார் மூல நிலையில் இருப்பது கோட்பாடு. அதைச் சுற்றி எழுவது வழிபாடு. அதனைச் சூழ எழும்புவது பண்பாடு. வேற்றுமதக் கருத்துக்களும் அறை கூவலும் முதலில் பண்பாடு என்னும் மதிற்சுவரைத் தாக்கும்; வழியும் வரவேற்பும் இருந்தால் அவை வழிபாட்டைத் தாக்க முன்வரும். இறுதியில் தான் அவை கோட்பாட்டை அணுக முடியும்.

கிறிஸ்தவ நற்செய்தி இந்து மதத்தை முகன்முதலில் பண்பாட்டு நிலையில் தாக்கியது. அதன் அறைகூவல் ஆற்றல் படைத்ததாக இருப்பதால் அது வழிபாடு கோட்பாடு ஆகிய நிலைகளையும் தொடும் சூழ்நிலைகள் பல ஏற்படலாயின. கிறிஸ்தவ நற்செய்தி இந்து மதத்தின் கோட்பாடுகளைத் தொடும் கட்டங்களில் இந்துப் பெரியார்கள் கொதித்தெழும்பியுள்ளார்

1 விரிவான விளக்கத்தை M. M. Thomas எழுதியுள்ள *The Ackwowledged Christ of the Indian Renaissance*, (CISRS, Bangalore, 1969) என்ற நூலில் காண்க. R.H.S. Boyd எழுதியுள்ள *An Introduction to Indian Christian Theology* (C.L.S., 1969) என்ற நூலில், *19-37; 58-62* பக்கங்கள் காண்க.

2 P. D. Devanandan, Resurgent Hinduism, p. 3.

கள்; அதன் சக்திக்கு அணைபோட்டு நிறுத்த முயன்றுள்ளார்கள். கிறிஸ்துவையும் கிறிஸ்தவ நற்செய்தியையும் இந்துமதக் கோட்பாட்டுக்குள்ளே அடக்கி நிறுத்திவிடவும் சிலர் முயன்றுள்ளார்கள்.

கிறிஸ்து உலக இரட்சகராகவும், மக்களுக்கு ஒளியாகவும் இருப்பதனால் மக்களும் மதங்களும் அவர் அறைகூவலுக்கு ஏதேனும் ஒரு பதிலைத் தராமல் இருக்க முடியாது. புனரமைப்புப் பணிகளிலும் புத்துணர்வின் வழிப்பட்ட ஆக்கவேலைகளிலும் ஈடுபடுவோர் இயேசு கிறிஸ்துவைப் பொருட்படுத்தாமல் இருக்க முடியாது. இதனை இந்தியாவின் புதுயுக வரலாறு விளக்கிக் காட்டுகிறது.

"இயேசு கிறிஸ்து உலகிற்கு வாழ்வளிப்பவர். மக்களுக்கு ஒளியாகத் திகழ்பவர். உலகில் எங்கெல்லாம் மக்கள் ஒளியைப் பெற்றுச்கொள்கிறார்களோ அங்கெல்லாம் அவர்கள் அதனை அவரிடமிருந்தே பெற்றுக்கொள்கிறார்கள். ஆகவே, எங்கெல்லாம் ஒளி சுடர் விடுகிறதோ அங்கெல்லாம் அது அவரை நோக்கியே ஒளிர்கின்றது'' என்று பேரறிஞர் நைல்ஸ் கூறுகிறார்.[1] இந்தத் தீர்க்கரின் கூற்று புதுயுகத்தையும் புனரமைப்பு இயக்கங்களையும் அடிப்படை நிலையில் அவை உள்ளவாறே நமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

**தூய ஆவியானவரின் இயக்கமும் புனரமைப்புப் பணியும்;** நம் நாட்டின் புதுயுகம் பிறந்து புனரமைப்பு இயக்கங்கள் தோன்றுவதற்கு மூலகாரணம் தூய ஆவியானவரின் இயக்கம் என்று துணிந்து கூறலாம்.

மிஷனெரி இயக்கங்கள் யாவும் புத்தெழுச்சியின் (Revival) விளைவாகவே எழுந்தன. இவ்வியக்கங்கள் அப் புத்தெழுச்சி வேகத்தோடுதான் பலப்பல நாடுகளில் செயலாற்ற ஆரம்பித்தன. டாக்டர் எட்வின் ஆர் தம்முடைய "இந்தியாவில் நற்செய்திப்பணியின் விழிப்புணர்ச்சி" (Evangelical Awakenings in India) என்ற நூலில் இவ்வுண்மையை விளக்கிக் காட்டுகிறார்.

மேனாடுகளில் புத்தெழுச்சிகள் ஏற்பட்டபோது தூய ஆவியானவர் பொழியப்பட்டார். மக்களிடையே பாவ உணர்ச்சி ஏற்பட்டது. பகிரங்கப் பாவ அறிக்கைகள் வெளிப்போந்தன. அதன் விளைவாகத் தனி மனிதர்களிடையே மனமாற்றம் (conversion) ஏற்பட்டது. இந்தத் தனிமனித மனமாற்றமே சமுதாய மாற்றங்களுக்கும் புனரமைப்புகளுக்கும் அடிப்படைக் காரணமாக அமைவதாயிற்று.

தூய ஆவியானவரின் பொழிவால் புது ஆற்றலும் புது வேகமும் பெற்றவர்கள்—மனமாற்றம் கொண்ட புது மனிதர்கள்

---

1 D. T. Niles, *Upon The Earth*, CLS., Madras, 1963, p. 224.

தாம் புது யுகத்துக்கு அடிகோலினர்கள். புது யுகத்தின் மாபெரும் சக்தியாக மிஷனெரி இயக்கம் எழுந்தது. அதன் விளைவாக எழுந்த புனரமைப்புப் பணிகளில் தூய ஆவியான வரின் தூண்டுதலையும் இயக்கத்தையும், அருளையும் ஆசியை யும் நாம் காணுமல் இருக்க முடியாது. புனரமைப்புப் பணிகள் கிறிஸ்தவர் அல்லாதோர் வட்டாரத்தில் எழுந்த நேரத்தில் தூய ஆவியானவரின் தூண்டுதல் அங்கே இல்லை என்று நாம் துணிந்து கூற முடியாது.

பத்தொன்பதாம் நூற்றுண்டோடு ஆரம்பமாகும் புதுயுகம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வருகைச் சிறப்பால் மலர்ந் துள்ள மாபெரும் புதுயுகத்தின்பாற்பட்டதே யாகும்.

"இப் புதுயுகத்தின் நடப்புகளிலே கடவுளின் வாக்குறுதி கள் நிறைவேறிக்கொண்டுதான் வருகின்றன. ஆம், கிறிஸ் தவப் பெருநம்பிக்கையோடு வாழ்கிறவர்கள் இதைப் புரிந்து கொள்ள முடியும். புதுயுகத்தின் வரலாறு இறந்த காலத் தின் நிறைவேற்றம் அன்று; அது வருங்காலத்தினைப் பற்றிய முன்னுணர்ச்சி அனுபவம்" என்று கூறுகிறூர் புதுயுகத் தீர்க்கருள் ஒருவராகத் திகழ்ந்த பேரறிஞர் தேவானந்தன்.[1]

திருக்காட்சியினைக் கண்ட பெரும் பக்தர் யோவானின் கூற்ருேடு இக் கட்டுரையை முடிக்கலாம்.

"பின்பு புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன். முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின. சமுத் திரமும் இல்லாமற் போயிற்று......... மேலும், சிங்காசனத்தி லிருந்து பெருஞ்சத்தம் உண்டாகக் கேட்டேன்: இதோ கடவு ளின் கூடாரம் மனிதரிடத்தில் இருக்கிறது; அவர்களிடத்தில் அவர் தங்குவார். அவர்கள் அவருடைய மக்களாயிருப்பார்கள்; கடவுள் தாமே அவர்களோடிருப்பார்......... சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவர்: இதோ நான் எல்லாவற்றையும் புதிதாக்கு கிறேன் என்றூர்".

**(தரி. 21: 1, 3, 5)**

---

1 P. D. Devanandan, '*The Resurgence of Non Christian Religions*, in '*The Theology of the Christian Mission*' Edited by G. H. Anderson, MGraw—Hill Book Company, 1961. pp. 156—157. Cf. *Preparation for Dialogue*, (By P. D. Devanandan, CISRS, 1964) p. 177.

## துணை நூல்கள்

1. Farquhar, J. N., *Modern Religious Mavements in India* Macmillan and Co Ltd., London, 1929.

2. Job, G V., 'The Christian Movement in India', in *Rethinking Christianity in India*, Ed. by D. M. Devasahayam and A. N. Sudarisanam, Madras, 1938.

3. Sarma, D S., *Hinduism through the Ages*, Bharatiya Vidya Bhavan, Bombay, 1957.

4. Devanandan, P. D., *The Gospel and Resurgent Hinduism* London, S.C.M. Press, 1959 (I.M.C. Research Pamphlets, No. 8.)

5. ,, , *Christian Concern in Hinduism*, Bangalore CISRS, 1964.

# 2

# இன்றைய இந்தியாவில் சமய, சமூக நிலைகள்

## து. போத்திராஜுலு

### அ. உலக சமூகத்தில் இந்திய சமூகம்

"இன்றைய இந்தியாவில்" எனக் கொடுக்கப்பட்ட பொருள் இந்தியாவைக் குறிப்பிட்டுக் காண்பிக்கின்றபடியால், யாம் கூற விழையும் செய்தியெல்லாம் இந்தியாவின் தனிப்பட்ட நிலையையே குறிக்கும் எனக் கொள்ளவியலாது. இன்றைய உலகில் எச் சமுதாயமும் உலக நிகழ்ச்சிகளினாலே தொடப் படுகின்றது. அதற்கேற்ப மக்களின் எண்ணமும், வாழ்க்கை முறைகளும், அமைப்புகளும் மாற்றமடைகின்றன. எச் சமுதாயமும் தனித்தியங்கவில்லை என்ற கருத்தில் செக்கொசுலவாக்கிய சபை சங்க அறிக்கையொன்று சமுதாய வளர்ச்சியும் மரபு காக்கும் மனப்போங்கும் இன்றைய சமுதாயங்கள் யாவற்றிற்கும் பொதுவானவை எனக் கூறுகின்றது. எனவே, இன்றைய இந்தியா உலக சமுதாயத்தினுள் ஒரு சமுதாயம் என்னும் அடிப்படையிலேயே நாம் இன்றைய இந்தியாவின் சமய, சமுதாய நிலைகளைக் காண முற்படுவோம.

பிறநாடுகளுடன் தொடர்புகொள்ளும் பழக்கம் தொன்று தொட்டே இந்தியாவில் இருந்துவந்திருக்கின்றது. நம் நாட்டு வணிகர் பிறநாடுகளுக்குச் சென்றனர் என்பதற்கும், பிறநாட்டுத் தூதுவர் நம்நாடு வந்தனர் என்பதற்கும் சான்றுகள் ஏராளமாக இருக்கின்றன. திருவள்ளுவர் காலத்திலேயே மேனாட்டுக் கிரேக்க யவனர் கப்பல் கப்பலாக நம் நாட்டில் மயிற்பீலி வாங்கிச் சென்றனர் என்றும், உள்நாட்டவர் அப் பீலிகளைப் பஞ்சுப் பொதியோல் வண்டியிலேற்றிக் கடற்கரை நகரங்கட்குச் சென்றனர் என்றும் வள்ளுவர் தம் குறட்பாவிலே காட்டுகின்றார். தொல்பொருள் ஆராய்ச்சியின்போது நம் நாட்டின் புதைந்த நகரங்களில் காணக் கிடைக்கும் பிறநாட்டு நாணயங்களும் இத் தொடர்பை எடுத்தியம்புகின்றன.

ஆனால், முற்காலத்தில் நாடுகளிடையே இருந்த தொடர்பு காரணமாக அவற்றின் சமய சமுதாய அமைபபுகள் மாறவில்லை. நூற்றாண்டுகள் பலவாகச் சமய சமுதாயங்களில் பெருமாற்றங்கள் ஏதுமின்றிச் சீராகச் சென்றுகொண்டிருந்தது என்ற உண்மையை இக் காலத்துப் பெருமாற்றங்களுடன் முற்காலத்தின் நிலையை ஒப்பிட்டுப் பார்த்தால் உணரலாம்.

முந்நாளின் இந்திய சமுதாயத்தின் அமைப்பை விவரிக்க வேண்டுமானால்—சமயம் அருள்நெறியைத் தந்தது, அறநெறியை

வகுத்தது, சமயம் தந்த அமைப்பிலே சமுதாயம் வளர்ந்தது எனக் கூறலாம். சமயம் சமுதாய அமைப்பைத் தந்தது என்பதற்கு எடுத்துக்காட்டாகக் குலத்தின் அடிப்படையில் தொழில்கள் பிரிக்கப்பட்டிருந்ததைக் கூறலாம். அறங்காப்போர் இன்னுரென்றும், போர்புரிவோர் இன்னுரென்றும், வணிகர் இன்னுரென்றும், வேளாண்மைத் தொழிலை மேற்கொள்வோர் இன்னர் என்றும் சமயமே சமுதாய அமைப்பைத் தந்தது. குலத்தொழிலை நிறைவேற்றுவது சமயத்திற்கு ஆற்றவேண்டிய கடமையாகவே கொள்ளப்பட்டது. சமுதாயத்தில் காணப்படும் நன்மைக்கும் தீமைக்கும் சமயமே பொறுப்பேற்றுக்கொண்டது.

இவ்வண்ணமாகச் சமயத்தைச் சார்ந்துநின்ற சமுதாயத்தின் சூழ்நிலை மாறி சமயச் சார்பற்ற சமுதாயத்தை வேண்டி நிற்கும் சூழ்நிலையே இன்றைய இந்தியாவின் நிலையாகும். இம் மாற்றம் குறிப்பிடத்தக்கது. குறுகிய காலத்தில் நிகழ்ந்தது. எனவே, இதன் காரணங்களையும் விளைவுகளையும் ஆராயவேண்டியது நமது கடமையாகும்.

**மாறிவரும் இந்திய சமூகம்:** இதுவரையில்லாத விரைவான மாற்றங்கள் இந்திய சமுதாயத்திலே இப்போது நிகழ்ந்து கொண்டிருக்கின்றனவென்றால் அதன் முதற் காரணம் விஞ்ஞான வளர்ச்சியும், தொழில்நுட்ப அறிவுப பெருக்கமுமேயாகும். இந்நாளின் விரைந்துசெல்லும் போக்குவரவுச் சாதனங்கள் இந்திய சமுதாயத்தைப் பிறநாட்டு மக்களின் கலாச்சார உறவுகளுக்கு உட்படுத்துவதுமட்டுமின்றி, இந்தியாவின் பல பகுதிகளிலும் வாழும் மக்களும் கலந்து உறவாடவும் வகைசெய்திருக்கின்றது. முன்னுல் ஒருவன் காசிக்குச் சென்று திரும்பி வர விரும்பினுல் அவன் தன் பயணத்தை முடிப்பதற்குள் அவன் வாழ்வும் முடிந்துவிடும் என்று கூறுவார்கள். இந்நாளிலோ காற்றுனும் கடுகிச் செல்லும் வான ஊர்திகள் நம்மை இந்தியாவின் எப்பகுதிகளும் சில மணிநேரங்களில் எடுத்துச் செல்லுகின்றன. ஏராளமான மக்கள் நிமிடந்தோறும் நாடு முழுவதும் இயங்கிக்கொண்டேயிருக்கின்றனர். இவ்வியக்கத்திற்கு ஒரு காரணம ஊர்திகள். மற்றொரு காரணம் தொழில் வாய்ப்பாகும். விஞ்ஞான—தொழில் நுட்ப அறிவு, தொழிற்சாலைகளின் பெருக்கத்திற்கு நம்மை அழைத்துச் செல்லுகின்றது. தொழிற்சாலைகளைச் சார்ந்து நகர்கள் எழும்புகின்றன. தொழில்வளம் நகர்ப் புறங்களில் காணப்படுவதால் கிராம மக்கள் வேலைவாய்ப்பைக் கருதியும், வணிக உறவுகள், கல்வி ஆகியவற்றைத் தேடியும் நகர்ப்புறம் நோக்கி இயங்க ஆரம்பித்துவிட்டனர்.

கிராம சமுதாயத்தில் மக்கள் தங்கள் பாதுகாப்பு, அறநெறி, கடமைகள், சமுதாய ஒருமைப்பாடு ஆகியவற்றைக் கண்

டனர். சமயம் இதற்கு உறுதுணையாய் நின்றது. ஆனால், தொழில்மயமான நகர்ப்புறச் சமுதாயம் இதனின்றும் மாறுபட்டது. இங்கு மக்களின் தேவைகளும் உறவுமுறைகளும பண்பாடும வேறுபட்டுக் காணபபடுகினறன. குடும்ப சமூகக் கட்டுப்பாடுகள் குறைவாகக் காணப்படுகின்றன. இங்குக் குடும்ப அங்கத்தினர் எப்போதும் சேர்ந்து வாழ இயலாதநிலை தோன்றியுள்ளது. குடும்ப அங்கத்தினர் ஒவ்வொருவரும் வேலை, கல்வி ஆகியவற்றின் காரணமாக வெகுதூரத்திற்குச் சென்றுவர வேண்டிய சூழ்நிலை உண்டு. தொழிற்சாலைகளில் வேலைநேரங்கள் ஒருநாளின் எந்த நேரத்திலும் இருக்கலாமாதலால் கணவன் ஒருநேரமும் மனைவி ஒருநேரமும் வேலைக்குச் சென்றுவிடுகின்றனர். அவர்கள் முழுக் குடும்பமாகச் சந்திக்கும் சமயங்கள் குறைந்துகொண்டேவருகின்றன. இந்நிலை சமுதாயப் பிரச்சனைகள் பலவற்றை உருவாக்கியிருக்கின்றது.

மேலும், தொழில்மயமான நகர்ப்புறச் சமுதாயம் வாழ்வின் எல்லாப் பகுதிகளையும் தொடுவதாகக் காணப்படுகின்றது. நகர்ப்புறச் சமுதாயம் கிராம சமுதாயத்தைப்போன்று ஜாதி அடிப்படையில் அமைக்கப்படவில்லை. ஆனால், அதற்குப் பதிலாக பல்வேறு தொழில்கள் புதிய மக்கட் சமுதாயங்களை உருவாக்குகின்றன. தொழிற் சங்கங்கள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இதில் பல சமயத்தவரும், பல மொழி பேசுவோரும், பல பண்பாட்டுப பின்னணியுடையோரும் ஒன்றுபடுகின்றனர். மேலும், தொழிலகங்களில் உற்பத்தியானது திறமையின் அடிப்படையில் இயங்குவதால் இங்குத் திறமைக்கேயன்றி ஜாதிக்கு இடமில்லை. இப் புதிய சமுதாய அமைப்பு கிராம சமுதாயத்தைப் போன்று சமயக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டதன்று. இங்குப் பொருளீட்டும நோக்கமும் வாழ்வின் பெருமிதமும் முதலிடம் கொள்ளுகின்றன. மக்கள் இடம்விட்டு இடம்பெயர்வதின் (mobility) காரணமாக நகர்ப்புற மக்களின் பழக்கவழக்கங்களும் எண்ணமும் கிராமங்களையும் சென்று அடைகின்றன. இதன்விளைவாகக் கிராம சமுதாய வாழ்வில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஆராய்ச்சிகள் புலப்படுத்தும் சில உண்மைகளை ஈண்டு தருவோம்:

1. குடும்ப வாழ்க்கை. இதில் கணவன் தனக்குரிய இடத்தையும் மனைவி தனக்குரிய இடத்தையும் பெறுகிறார்கள். பெண் குடும்ப நிருவாகத்தில் அதிக பொறுப்பேற்றுக்கொள்கின்றாள். கணவனால் பணிவுடன் நடத்தப்படுகின்றாள். மேலும், பெற்றோரும், மணமான மக்களும் அவர்கள் பிள்ளைகளும் சேர்ந்து கூட்டுக் குடும்பமாக வாழும் நிலை மாறித் தனித்தனியான குடும்பங்களாக வாழுகின்றனர். 2. கலப்புத் திருமணம் அதிகரித்து வருகின்றது. 3. ஓர் இனத்தவருக்கு ஒரு தொழில் என்னும் நிலை வேகமாக மாறிவருகின்றது. 4. உணவு உடை பழக்கவழக்கங்களும் மாறுகின்றன. இவற்றுடன் கிராமக் கட்

டுப்பாடு, கல்வியைப் பற்றிய மனநிலை, பெண்கள் கல்வி, திருமண வயது, வாழ்க்கையின் நோக்கம் ஆகிய அனைத்தும் மாற்றமடைந்துள்ளன. சுருங்கக்கூறினால் தேங்கிக் கிடந்த சமுதாயம் செயலாற்றும் சமுதாயமாக மாற்றம் கண்டுள்ளது எனக் கூறலாம்.

எனவே, கிராமப் புறமென்றாலும் நகர்ப்புறமென்றாலும் இன்றைய இந்திய சமுதாயம் வெகு விரைவான மாற்றத்தை அடைந்துவருகின்றது எனக் கூறுவது முற்றிலும் பொருந்தும்.

**பல்முனை இந்திய சமூகம்:** மாற்றங்களுக்கு உள்ளான சமுதாயம் எளிமையான சமுதாயமாக அல்ல, சிக்கலான சமுதாயமாக உருவாகியிருக்கின்றது. இச் சமுதாயத்தில் வெவ்வேறான சமயங்களும், கோட்பாடுகளும (ideological conceptions), தத்துவங்களும, பண்பாடுகளும் தனித்தியங்கி வருகின்றன. எனவே, அறிஞர் இதைப் பல்முனைச் சமுதாயம (pluralistic society) என்றழைக்கின்றனர். இப் பன்மைநிலை ஒவ்வொருவரும் தனக்குத் தேவையானதைத் தெரிந்துகொள்ளும் உரிமையைப் பெறுகின்றான் என்பதைக் காட்டுகின்றது.

ஆனால், உரிமையைப் பெற்ற மக்கள் அதைச் சரியான வழியில் பயன்படுத்துகின்றனரா என்ற வினாவை எழுப்பும்போது, "இல்லை" என விடை பகருகின்றார் உ. ৳. மேத்யு எனனும் உயர்நீதிமன்ற வழக்கறிஞர். தொழில் துறையில் காணப்படும் பெரிய முதலீடுகளை அவர் சுட்டிக் காண்பித்து, இச் சுதந்தரம் அரசியலமைப்பில் வழங்கப் பட்டிருப்பதால் மக்களின் பெரும்பான்மையோரிடமிருந்தும், பொருளாதாரத்தில் மத்திய வகுப்பைச் சார்ந்தவர்களிடமிருந்தும் செல்வம் பெரும் பணக்காரர்களிடம் சென்று விடுகின்றது எனக் குறிப்பிடுகின்றார். இதற்குக் காரணம, சமுதாயத்தில பன்மை நிலையை நாம ஏற்றுக் கொண்டதுதான் என்பது அவர் கருத்து.

பொருள் படைத்தோர் தங்கள் உரிமைகளைக் கடமை உணர்வோடு கைக்கொள்ளாததினால் ஏற்படும தீமை ஒருபுறமிருக்க, இத தீமையை எதிர்க்கும சமுதாயத்தில் மற்ற பிரிவினர் தங்கள் உரிமைகளையும சுதந்திரத்தையும் எவ்வாறு பயன படுத்துகின்றனர் என்ற கேள்விகளுக்கு இந் நாட்களின் செய்தித் தாள்களே விடையளிக்க வேண்டும்.

நாள் தவறாது, நக்ஸல்பாரிகளின் நாசவேலைகள் குறித்து செய்திகள் வந்தவண்ணமாகவேயுள்ளன. இவர்களது வன்முறைகளுக்கு வரம்பில்லை. சில நாட்களுக்கு முன்னர் கல்கத்தாவிலிருந்து வந்த செய்தி, இவர்கள், கல்வித் தாபனங்களையும், அரசாங்கக் கூட்டுறவுச் சங்க அலுவலகத்தையும, சுகாதார நிலையத்தையும், தபால் அலுவலகம மூன்றையும் தாக்கி

திராவக பல்புகளையும், குண்டுகளையும் வீசி, தஸ்தாவேஜுகளை எரித்ததாகக் கூறுகின்றது. மேலும், உயர் நிலைப்பள்ளி ஒன்றைத் தாக்கி விலையுயர்ந்த கருவிகளை உடைத்தெறிந்தனர் என்றும், பரீட்சை எழுதிக்கொண்டிருந்த மாணவர்களிடமிருந்து விடை விடைத் தாள்களைப் பறித்து கிழித்தனர் என்றும் மற்றொரு செய்தி கூறுகிறது.

இனி, தமிழ் நாட்டில், சாகுபடி செய்யக்கூடிய சுமார் 1,45,000 ஏக்கர் தரிசு நிலங்கள் நிலமற்ற ஏழைகளுக்கு 1970-71 இல் விநியோகிக்கப்படும் என்று அரசினர் அறிக்கையொன்று கூறுகின்றது. அதே வேளையில் நிலப்பறி இயக்கங்கள் பற்றிய செய்திகளும் வெளியாகின்றன.

அடுத்து, தொழிலாளர் சமுதாயத்தைப் பற்றிய செய்திகளைக் காணும் போது, அங்கு வேலை நிறுத்தங்கள் சாதாரணமாகக் காணப்படுகின்றன. இதன் விளைவு யாது? ஓர் உதாரணம் காண்போம். துர்க்காப்பூர் உருக்காலைத் தொழிலாளர் நிலைபற்றிக் கீழ்க்காணும் புள்ளி விவரம் கொடுக்கப்படுகின்றது. கடந்த 4 ஆண்டுகளில் இங்கு நடைபெற்ற கிளர்ச்சிகள் 49; 14 மாதங்களில் நடந்த சட்ட விரோத வேலை நிறுத்தம் 421; கேரோக்கள் 38; ஆர்ப்பாட்டங்கள் 183. மெத்தன வேலை சம்பவங்கள் 1,048. வேலை செய்ய மறுத்த நிலைகள் 4,318. ஒரு நாளைய வேலை நிறுத்தத்தில் அரசுக்குப் பலவகைகளிலும் 1 கோடி ரூபாய் நஷ்டமாகிறதென்று பத்திரிகைக் குறிப்புக் கூறுகிறது.

இந்த எடுத்துக்காட்டுகள் பாதுகாப்பற்ற சமுதாயத்தின் நிலையையும், வன்முறையில் நம்பிக்கை வைக்கும் மக்களின் நிலையையும், தீமையைத் தீமையினால் வெல்லும் மனப்போக்கையும், இவற்றினால் உண்டாகும் கேடுகளையும் நமக்குக் காண்பிக்கின்றன. இருப்பினும், இச் சம்பவங்களினூடே நீதிக்காக எழுப்பப்படும் குரல் ஒலிப்பதை எவரும் கேட்காமலோ அதற்காகக் கவலைப்படாமலோ இருக்கவியலாது.

நம் நாட்டு அரசியல் அமைப்பின் 38-ஆம் சட்டப் பிரிவு இந் நீதியைப் பற்றிக் கூறுகிறது. அது: "சமுதாய, பொருளாதார, அரசியல் நிலைகளில் நீதி காணப்படும் ஓர் சமுதாய அமைப்பைத் திறமையான முறையில் உருவாக்கவும் பாதுகாக்கவும் அரசு முயன்று மக்கள் நலம் தேடவேண்டும்" என்பதாகும். இதற்கேற்ப, சமுதாயத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் உள்ளன என்பதை அரசு உணர்ந்திருக்கின்றது. சமதரும (socialitic) சமுதாயத்தை அமைப்பதே இதற்குக் கழுவாய் எனவும் அது கூறுகின்றது. தத்தளித்துக் கொண்டிருக்கும் இந்திய சமுதாயத்திற்குப் புதிய அமைப்புத் தர அரசியல்வாதிகள் முன்வருகின்றனர். அவர்கள் மக்களைப் பார்த்து ஏற்றத் தாழ்வற்ற, சமூக நீதியை அடிப்படையாகக்கொண்ட சமுதாயத்தை உருவாக்

கப் போவதாக வாக்களிக்கின்றனர். பொருளாதார வளர்ச்சியே மக்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சியைக் கொண்டுவர முடியும் என்ற எண்ணத்தில் அவர்கள் செயல்படுகின்றனர். அரசியல் கட்சிகள் தரும் நம்பிக்கையும், அரசின் செயலாற்றலும், ஐந்தாண்டுத் திட்டங்களும், திட்டமிட்டப் பொருளாதார வளர்ச்சியும் இன்னும் சமுதாய நீதிக்கு வழிவகுக்கவில்லை. அதற்குப் பதிலாக உயிருக்கு ஆபத்தான நிலையில் இந்தியாவின் பல பாகங்களிலும் மக்கள் வாழுகின்ற பாதுகாப்பற்ற நிலை உருவாகியிருக்கின்றது.

நாம் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல இது இந்திய சமுதாயத்தின் தனிப்பட்ட நிலை அல்ல. உலகச் சமுதாயத்திலும் காணப்படும் நிலை இதுவன்றோ? பொருளாதார வளர்ச்சியடைந்த நாடுகளிலும் மக்கள் அமைதியோடும், மகிழ்ச்சியோடும் பாதுகாப்போடும், இன வேறுபாடின்றியும் நீதி நிறைந்த வாழ்க்கையை வாழ்ந்துவரவில்லையே!

## ஆ. சமயங்களுக்கு இந்திய சமூகம் விடுக்கும் அறைகூவல்

இதன் காரணம் என்ன? சமுதாய நிலையை நாம் முறைப்படிப் பிரித்து ஆராய்ந்துவிட்டோம். சமூகவியல் வல்லுநர்கள் (socialogists) இதில் நமக்குப் பேருதவி புரிந்திருக்கின்றனர். பெருமாற்றம் அடைந்து வரும் சமுதாய சூழ்நிலையிலே நாம் வாழுகின்றோம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் நமக்குத் தெளிவாய் விளக்குகின்றது. அரசும் அரசியல் கட்சிகளும், பல்வேறு துறைகளின் வல்லுநர்களும் நமது உதவிக்கு வந்தும் இன்னும் நீதியுள்ள சமுதாயம் என்னும் நமது நோக்கம் ஈடேறாமலிருப்பதின் உண்மையான காரணம் என்ன? என்று வினாக்கள் பலவற்றை நாம் எழுப்பும்போது, சமுதாய வாழ்விலே தன்னை ஈடுபடுத்தாத ஆற்றல் ஒன்று தனித்து விடப்பட்டுள்ளதோ என்ற ஐயம் எழுகின்றது. அத்தகு ஆற்றல் சமயத்தினிடமிருந்தேயன்றி வேறெங்கிருந்து வரமுடியும்? இவ்வுண்மையைப் பண்டிதர் ஜவஹர்லால் நேரு அவர்கள் உணர்ந்திருந்தார்கள்: "இன்றைய உலகம் மனித வாழ்வில் ஓர் புதிய கட்டத்தை அடைய, ஓர் சமநிலைக்கு வர நாடுகின்றது. ஆழமான ஆன்மீக வாழ்க்கையையும், அறநெறி பெலனையும் தன்னகத்தே பெற்ற மனிதன் மட்டுமே இக் கால சவால்களை ஏற்க முடியும். ஆன்மீக நிலையற்ற பொருளாதார வளர்ச்சி பெருங்கேடு விளைவிக்கும்'' என்றார் அவர்.

எனவே, குடியாட்சி, கும்பலின் ஆட்சியாகாதிருப்பதற்கும், தனிமனிதனின் உரிமை தனக்கு அடுத்தவனின் உரிமைகளைப் பாதிக்காமல் இருப்பதற்கும், பொருளாதார முன்னேற்றம் மனிதப் பண்பாட்டிற்கு ஊறு விளைவிக்காமல் இருப்பதற்கும் மனித

வாழ்க்கையிலே குறிப்பாகச் சமுதாய வாழ்க்கையிலே மனிதனுக்கு ஆன்மீக, அறநெறிச் சிந்தனைகள் இன்றியமையாதன எனக் காணுகின்றோம். இனி, இவ்வுண்மையைச் சமயத் தலைவர்கள் அறிந்துள்ளனரா என்ற வினாவை எழுப்புவோம். சமயச் சார்பற்ற சமுதாயம் அமைப்போம் என்று நமது அரசியலமைப்பு கூறுகிறபடியினால் சமயங்கள் சமுதாய வாழ்விலேயிருந்து அகற்றப்பெற்றன என்பது பொருளல்ல.

கேரளப் பல்கலைக் கழகப் பேராசிரியர் சாமுவேல் மத்தாய் அவர்கள் கூறினர்: "இன்றைய நமது தேவை என்னவென்றால் சமயச் சார்பற்ற அரசையும், சமுதாயத்தையும் விரும்பத் தக்கநிலையில் பெற்றிருப்பதோடு, மனிதவாழ்வின் வாழ்க்கையின் இலக்கைக் காண்பிக்கக்கூடிய ஆழ்ந்த ஆன்மீக அறநெறி நிலைகளை ஆதாரமாகக் கொள்வதை நாம் இழந்து போகாமல் இருப்பதே".

இக் கருத்துக்கள் இன்றைய இந்தியாவில் சமயங்களின் நிலை என்ன என்ற ஆராய்ச்சிக்கும் நம்மைத் தூண்டுகின்றன. சமுதாய நிலையில் இந்தியா உலக சமுதாயத்தின் ஓர் பகுதியாகவே இயங்குகின்றது என நாம் குறிப்பிட்டது சமயநிலைக்கும் பொருந்தும். உலகச் சமுதாயத்தில் சமயங்கள் ஒரே நிலையைப் பெற்றிருப்பினும், இந்திய வரலாற்றில் தனிப்பண்பாடுகளை வளர்த்த சமயங்களின் நிலையைத் தனித்தனியே காணுவதும் இங்குப் பொருந்தும். இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ சமயங்களை நாம் எடுத்துக்காட்டாகக் கொள்வோம்.

இந்து சமயத்தை அதன் எல்லா வடிவங்களிலும் விவரிப்பது இங்கு நமது நோக்கமல்ல. ஆனால், இந்து சமயம் என்பது பாமர மக்களின் நம்பிக்கைகளிலிருந்து கற்றுத் தேர்ந்த தத்துவ மேதைகளின் அனுபவங்கள் வரையும் தன்னகத்தே கொண்டது என்பதையும் ஒரு குறிப்பிட்ட சிந்தனை ஒழுங்குக்கு உட்பட்டது அல்ல என்பதையும் நினைவில் கொள்வது நலம். இன்றைய இந்தியாவில் சமயங்களின் நிலை என்ன என்ற வினாவை நாம் எழுப்பும்போது இன்றைய சமுதாய வாழ்வில் அவற்றின் ஈடுபாடு என்ன என்பதைக் காண முயல்வோம். ஏனென்றால் சமூக வாழ்விலிருந்து தன்னைப் பிரித்துக்கொள்ளும் ஓர் சமயம், சமுதாயத்தின் தேவைகளை ஈடுசெய்வது இயலாத காரியமாகும். இன்றைய இந்திய சமுதாயத்தில் இந்து சமயம் கொள்ளும் பங்கைக் காண சர்வோதயக் கொள்கையை ஓர் உதாரணமாகக் கொள்வோம். விநோபா பாவேயின் தலைமையில் அமைந்த சர்வோதய இயக்கத்தின் நோக்கம் "பொருளாதார ஏற்றத்தாழ்வு, ஜாதிப் பிரிவினை, எதிர்ப்புச் சக்திகள், ஆகியவை இல்லாத ஒரு சமுதாயத்தை அமைப்பதும் அதில் தனிப்பட்டவருக்கும் குழுக்களுக்கும் எல்லா வளர்ச்சியையும் பெற்றுக்கொள்ள வழிவகை கிடைக்கச் செய்வது

மாகும்". சமுதாயத்தில் இம்மாற்றத்தை ஏற்படுத்த அஹிம்சையும் உண்மையும் போதும் என அன்னார் நம்புகின்றனர் சர்வோதயம் ஓர் சமயம் அல்ல; ஓர் சமூகக் கொள்கை மட்டுமே. ஆனால் சமய அறநெறிக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டது. சற்குண பிரம்மனும் நிற்குண பிரம்மனும் ஒன்றே என்று உணரும் அத்துவைதக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டதே சர்வோதயம். சர்வோதயம் எல்லாச் சமயங்களும் சமமானவையே என்று கூறுவதினால் வகுப்புவாதத்திற்கு இடமளிக்கவில்லை.

சமயம் வாழ்க்கையோடு நெருங்கின தொடர்பு உடையது என்பதை இந்துக்கள் உணர்ந்து வருகிறார்கள். இக்கால இந்து சமயத்தில் இவ்வெண்ணம் இழையோடுவதைப் பேராசிரியர் டி எஸ். சர்மா இவ்வாறு கூறுகின்றார்: "பரந்த நோக்கில் சமயம் என்று சொல்லப்படுவது எந்த நாட்டிலும் அரசியல், பொருளாதாரம், சமூகம், நாடுகளின் உறவு ஆகியவற்றினின்றும் தனித்திருக்கமுடியாது. சமயத்தின் ஆவி தனி மனிதனுடைய செயல்களை மட்டுமல்ல நாடுகளையும் சமுதாயக் கூட்டங்களையும் உயிர்ப்பிக்க வேண்டும்". இதனால் இந்து சமயம் உலக வாழ்விலிருந்து மக்களை ஒதுங்கச் செய்கின்றது என்ற குற்றச்சாட்டு மறுக்கப்படுகின்றது.

பொதுவாக இந்து சமயத்தில் இருவித எண்ணங்களை நாம் காணுகின்றோம் ஒன்று ஜனசங்கம், *ராஷ்ட்ரீய சேவக் சங்கம் போன்ற வகுப்புவாதக் குழுக்களின் பிரிவினை மனப்பான்மை இந்து சமூக அமைப்புக்களை அப்படியே பாதுகாக்க விரும்புகின்றது. மற்றது மனித சமுதாயத்தின் பல்வேறு அமைப்புக்களுக்கும் இடம்தரும் பரந்த மனப்பான்மை. இது சமூகப் பிரிவினைகளுக்கும் ஊடே மனித உணர்வுகளுக்கு மதிப்புக்கொடுக்கும். சர்வோதயக் கொள்கை இம் மனப்பான்மையை அடிப்படையாகக் கொண்டதே. சமயச் சார்பற்ற இந்திய அரசியல் அமைப்பின் கீழ் இஸ்லாமும் ஏனைய சமயங்களைப் போன்றே யாதொரு தடையுமின்றி தனித்தியங்குகின்றது. நாம் முன்னர் குறிப்பிட்டபடி வகுப்புவாதக் கலவரங்கள் நிகழத்தான் செய்கின்றன. அரசாங்கக் குறிப்பின்படி 1969 இல் 96 ஜில்லாக்கள் வகுப்புக் கலவரத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. 1970 இல் முதல் ஐந்து மாதங்களில் மட்டும் 65 ஜில்லாக்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து இத் தீமை முன்னை விட வேகமாகப் பரவிவருகிறது என்பது தெளிவாகின்றது. வகுப்புவாதக் கலவரம் என்று கூறும்போது அது இன்றைய நிலையில் இந்தியாவில் இந்து—முஸ்லீம் மோதல்களையே குறிக்கும். ஆனால் இச் சம்பவங்களுக்குக் காரணம் பொறுப்

---

*இதுபற்றி இந் நூலில் சமயச் சார்புற்ற அரசியல் இயக்கங்கள் என்னும் கட்டுரை விரித்துரைக்கின்றது.

பற்ற சமூக விரோதிகளேயன்றி சமயமல்ல. வகுப்புவாதச் சமபவங்களுக்குக் காரணமாய் இருபபோரை அரசும சமுதாயமும் கண்டனம செய்துள்ளன.

அடுத்து இஸ்லாமின் தற்கால நிலை என்ன என்பதைக் கவனிப்போம. ''இஸ்லாமைக் குறித்த இக் கால நோக்கு'' (A Modern approach to islam) என்னும் நூலாசிரியர் ஃபிஸ்ஸி (A. A. Fyzee) இஸ்லாமிய சமயத்தில் மூன்று விதமாகச் சிந்திப்போர் உள்ளனர் என்கின்றார். முதல் பிரிவு: மரபு காப்போர் (the orthodox school). இச் சிந்தனை இபபோது வேகமாக ஆதரவு இழந்து வருகின்றது. மக்களின பொருளாதார நிலை, பொதுவுடமை வாதம, சிந்தனையாளரின் தனிப்பட்ட நிலை ஆகியவையே இதற்குக் காரணமாக அமைந்தன. இரண்டாவது பிரிவு: இகபால் கொளகையினர் எனப்படுவா. இச் சிந்தனையுடையோர் ஏராளமான மக்கள் இருக்கின்றனர் இவர்களுடைய சிந்தனையில் தத்துவம்மா இறையியலோ காணப்படுவதற்குப் பதிலாக உணர்ச்சி வசபபட்ட ஆழமற்ற நிலை காணபபடுகின்றது. மூன்றுவது பிரிவு: தற்கால சிந்தனையாளரைக் கொணடது (the modern school). இவர்கள் சிந்திக்கவும் சுதந்திரமாகப பேசவும நாடுகின்றனர். இஸலாமியச் சட்டங்களைத் திறனாய்வுக் கணணோட்டத்துடன நோக்குகின்றனர். பேராசிரியர் ஃபிஸ்ஸி அவர்களும் இததகு சிந்தனையாளரே.

மாறி வரும் சமுதாயத்தினால் இஸ்லாமிய கோட்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று பேராசிரியர் ஃபிஸ்ஸி கூறியுள்ளார். மேலும, தொழில்மயமான சமுதாய வளர்ச்சியினூடே சமயச் சாரபற்ற ஆட்சியில் வாழும் முஸலீம்கள் புனித சட்டத்திற்குப் புறம்பான புதிய சட்டங்களுக்குக் கீழ்ப்படியவும், புனித சட்டம இடமளிக்கும சில கோடபாடுகளை நியாயமற்றது என ஒப்புக்கொள்ளவும் சுதந்திரம் பெற்றிருக்க வேண்டும எனவும், புனித சட்டங்களில் மாறறம் செய்வது இஸலாமின் உணமையை அழிததுவிடாது எனவும்; எனவே, இக காலத் தலைமுறையினா இஸ்லாமில் நிலையானவை இவையென்றும், மாறுபவை இவையென்றும புதிதாகத் தீர்மானிகக வேண்டும என்றும் விளமபுகின்றார்.

ஹார்வர்டு பல்கலைக் கழகப் பேராசிரியர் W. C. ஸ்மித் என்பார் இஸ்லாமியத தலைவர்களுடன் தொடர்பு கொணடதன் காரணமாகப் பின்வரும் கருததை வெளியிடுகின்றார். ''எனது இஸ்லாமிய நணபர்களது நாட்டம வெறும் கல்வி முறைக்கடுத்ததல்ல. ஆனால் நம்முடைய இருபதாம் நூற்றாண்டில் காணப்படும் தொடர் மாற்றத்தினிடையே திகைபபூட்டும் புதிய நிலைகளில் இறைவனின வழி யாது எனக் கண்டு கொள்ளுமபடியான கடுமையான போராட்டமாக இருநதது.

புதுமை வாழ்விலும் எண்ணத்திலும் காணப்படும் சவால்களில் முஸ்லிமாக இருப்பது என்ருல் என்ன என்று அறிய நாட்டம் கொண்டிருந்தனர்'' என்கிருர்.

பேராசிரியரின் இக் கூற்று இஸ்லாமிய உலகிற்குப் பொதுவானதாயினும் இந்திய இஸ்லாமிய சமுதாயத்திற்கும் பொருத்தமுடையதாய் இருக்கின்றது. இஸ்லாமியர் இக் கால நிலையைக் கூர்ந்து நோக்குகின்றனர்.

இனி, கிறிஸ்துவ சமயத்தின் நிலை என்ன என்று காண்போம். பிற சமயங்களைப் போன்றே கிறிஸ்துவ சமயமும் சமுதாய மாற்றங்களினுல் வரும் சவால்களை ஏற்க வேண்டியதாய் இருக்கின்றது. இவ்வடிப்படையில் கிறிஸ்தவ சமயநிலையை ஆராய்வோம்.

சமுதாய நிலையில் சமயத்திற்குக் கவலை உண்டா என்ற கேள்வி பண்டிதர் பில்லிகிரகாம அவர்களிடம் கேட்கப்பட்டது. குறிப்பாக தொழில்மயமான சமுதாயத்திலே வாழும கிறிஸ்தவர்களுக்குத் தொழிற சங்கத்திலே சேரலாமா சேரக்கூடாதா; அதில் தங்களுக்குப் பங்கு உண்டா, இல்லையா என்ற ஐயங்கள தெரிவிக்கப்பட்டன. இது பற்றிப் பண்டிதர் பில்லிகிரகாம அவர்கள் பின் வருமாறு கூறினுர்: "திருமறை, நாம் அவிசுவாசிகளுடன் சேர்ந்து அவர்கள் பாவச் செயல்களில் பங்கு பெறுவதை எதிர்க்கின்றது. ஆனல், தொழிற் சங்கம் தனனிலே தீமையானது அல்ல. கிறிஸதவ தர்மததை ஆதரிப்பவரும், பண்புள்ளம படைத்த பொியவர்களும் அரசியலையும், தொழிற்சங்க நிர்வாகங்களையும் விட்டு விலகிக் கொள்வதால்தான இந்த அமைப்புகள் தீயவர் பிடிக்குள் சிக்கிக கொண்டன''. இரண்டாவதாக: "தறகாலத்தில கிறிஸ்தவர் தங்கள் பொறுப்புகளை உணர்நது வருகிருர்கள். சமூகததில் பொறுப்பான பதவிகளை, பொறுப்பற்றவர் ஏற்று நடததிவிடக் கூடாது என்று அறிந்து, தாங்களாக இப் பொறுப்புக்களை ஏற்க முன்வருகிருர்கள்'' என்ருர் மூன்ருவது: திருச்சபை சமுதாயததில் கவனம் செலுத்தவேண்டிய காரணததைக குறிப்பிட்டு அவர் கூறுவது: "மனுக்குலததின் வாழ்வில் கடவுள் அக்கறை காட்டுவதால், திருச்சபையும் சமுதாய நலனில் கவனம் கொள்ளவேண்டும். முக்கியமாக இந்தக் காலததில், அரசியல், சமூகம், பொருளாதாரம், தொழில் போன்ற வாழ்க்கையின் பல்வேறு துறையிலும கடவுளின் வழி முறைகளை அறிந்து நடக்க முயலவேண்டும்''.

இனி, உலகப் பெரும் கிறிஸ்தவ சங்கங்கள் இரண்டினைக் காண்போம்.

முதலாவது: இரண்டாம் வத்திக்கன் (Vatican) சங்கம் இன்றைய திருச்சபை குறித்து வெளியிட்ட அறிக்கையின் ஒரு

பகுதி இவ்வாறு கூறுகின்றது: "மனுக்குலமானது சிருஷ்டிப்பை மேலும் மேலும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும், கொண்டுவர வேண்டும் என்னும் நம்பிக்கை வளருகின்றது. அது மட்டுமல்ல, தனி மனிதருக்கும் குழுக்களுக்கும் சிறந்த முறையில் பயன்தரக் கூடியதும் அவரவர்க்குரிய கண்யத்தை வளர்ப்பதுமாகிய அரசியல், சமூக, பொருளாதார அமைப்பைத் தரவேண்டியதும் மனுக்குலத்தின் கடமையாகும்". அவரவருக்குரிய கண்யம் என்றது நிறவேறுபாடு. இனவேறுபாடு, பொருளாதார ஏற்றத் தாழ்வு ஆகிய அநீதிகளைக் கண்டிக்கும் சொல்லாகும். நம் யாவருக்கும் தந்தை கடவுளே என்ற இறையியல் கருத்தை இது ஆதாரமாகக் கொண்டது.

இதே செய்தியை உப்சாலாவில் கூடிய அனைத்துலகக் கிறிஸ்தவ சங்க மாநாடும் இறையியல் அடிப்படையோடு வெளியிடுகின்றது. மாநாட்டு அறிக்கையின் ஒரு பகுதி இவ்வாறு கூறுகின்றது: "மனிதர் மனிதரைக் கொள்ளையிடும் உலகத்திலே நாம் வாழுகின்றோம். பாவம் என்பது உண்மையானது என்பதையும் அது மனிதரை எவ்வளவு ஆழமாகப் பிடித்திருக்கின்றது என்பதையும் அறிவோம். அநீதியின் கொடுமையான சுமையினால் அரசியல் பொருளாதார அமைப்புகள் வேதனையுற்றிருக்கின்றன. ஆனால் இதைக் கண்டு நாம் நம்பிக்கையிழக்கவில்லை. ஏனென்றால், நாம் விதியின் குருட்டுப் பிடியிலே இல்லை என்பதை அறிந்திருக்கின்றோம். நமது உலகில் அதன் எல்லா அமைப்புக்களின் மத்தியிலே கடவுள் கிறிஸ்துவில் வந்து எல்லா வல்லமைகள் மீதும், அதிகாரங்கள் மீதும் வெற்றி சிறந்திருக்கிறார். அவருடைய அரசு அவருடைய நியாயத்தீர்ப்போடும் கிருபையோடும் வந்துகொண்டிருக்கிறது.........
கிறிஸ்தவர்கள், தங்கள் வேதத்திலிருந்து, எல்லா மனிதரும் கடவுளால் அவருடைய ரூபத்தில் படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், கிறிஸ்து யாவருக்காகவும் உயிர் நீத்தார் என்றும் அறிந்திருக்கிறபடியினாலே குறுகிய மனப்பான்மையுடன் கூடிய ஒருமைப்பாட்டை முறியடிக்க நாம் போராட்டத்தின் முன்னணியில் நின்று, யாவருக்கும் நீதி வழங்கும் பொறுப்புள்ள உலக சமுதாயத்தில் பங்குகொள்ளும் உணர்வை ஏற்படுத்த வேண்டும்" என்று கூறுகிறது. மேலும், "கோடிக்கணக்கான மக்களின் மேம்பட்ட சமூக நீதிக்கான போராட்டத்தில் கிறிஸ்தவர்கள் பங்குகொண்டு விரைந்து செயலாற்ற வேண்டும்" என்றும் இவ்வறிக்கை கூறுகின்றது.

இரண்டாம் வத்திக்கன் அறிக்கையும் உப்சாலா அறிக்கையும் அனைத்துலகக் கிறிஸ்தவ சமயத்தில் இன்றைய நிலையில் காணப்படும் எண்ணங்களைக் காட்டுகின்றன.

இன்றைய இந்தியாவில் சபை ஆற்றவேண்டிய திருத் தொண்டு பற்றி நஸ்ரபுரி மாநாட்டு அறிக்கை கூறும் ஓர் செய்தியையும் குறிப்பிடுகின்றேன்: இது, இந்திய கிறிஸ்தவத் தலைவர்களின் எண்ணத்தை வெளியிடுகின்றது. இதில் நீதிக் காகக் கேட்கப்படும் கூக்குரலுக்குக் காரணம் இயேசு கிறிஸ்து; அதற்கு வேண்டிய நம்பிக்கையைக் கொடுப்பவரும் அவரே என்ற செய்தியையும் நாம் காணலாம். அறிக்கையின் ஒரு பகுதி இவ்வாறு கூறுகின்றது:

"வரலாற்றில் குறிப்பிடத்தக்கவிதமாய், உரிமை மறுக்கப் பெற்ற மக்கள் கூட்டங்களாகிய 'ஹரிஜனங்கள்', மலங்குடி சார்ந்தோர், நிலமற்ற தொழிலாளர்த் தொகுதி ஆகியோரிடை யில் தோன்றியுள்ள எழுச்சி; எங்கும் ஊதிய உயர்வுக்காக வும் நல்ல வாழ்க்கை வசதிக்காகவும் அடிப்படை மனித உரிமை களுக்காகவும் எழுப்பும் கோரிக்கைகள்; செல்வந்தருக்கும் ஏழை களுக்கும் இடையிலுள்ள ஏற்றத்தாழ்வை நீக்குவதற்குச் செய் யப்படும் முயற்சிகள், எழுத்தறிவிற்காகவும் கல்விக்காகவும் செய்யப்படும் போராட்டம் ......... எல்லாவற்றிலும் சிறப்பாய், பொருளாதாரம் மற்றும் சமூக நீதிக்காய் இடும் கூக்குரலும், மனித கண்யத்திற்காய்ச் செய்யப்படும் இப் போராட்டத்தின் அம்சங்களாய் இருப்பதினால் உலகத்திற்குள் கிறிஸ்து செயல் புரிவதற்குச் சான்றுகளாய் இருக்கின்றன" என்கிறது.

மேலும், கிளர்ச்சிகளில் ஆக்க சக்தியையும் அழிவுச் சக்தி யையும் பிரித்துணரவேண்டும் என்று காட்டி, "அழித்துப் போடும் எதிர்ப்புச் சக்திகள் இருப்பதன் காரணமாய் நற்செய் தியை மீட்புச் செய்தியாய் எடுத்துரைப்பது அதிக அவசர மானதாகிறது. இவ்வாறு இயேசு கிறிஸ்து இப்புரட்சியின் பிறப் பிடமாய் இருப்பதன்றி இதற்கு நன்னம்பிக்கையாகவும் இருக் கிறார்" என்று இவ்வறிக்கை கூறுகின்றது.

கிளர்ச்சி, போராட்டம், புரட்சி என்ற சொற்களை கிறிஸ் தவ சங்கங்களும், தலைவர்களும் கையாளுவதினால் அவர்கள் அழிவுச் சக்திகளை, வன்முறைகளை, வெறிச்செயல்களை ஆதரிக் கின்றார்கள என்ற தவறான முடிவிற்கு நாம வந்துவிடக் கூடாது. கிளர்சசியும், போராட்டமும், புரட்சியும் ஆக்க முறை யிலே, அமைதியான முறையிலே நடைபெறமுடியும். ஆனால் இம்முறையிலே அபாயங்களையும் துன்பத்தையும் தவிர்க்கவிய லாது.

முந்நாளிலே "நற்குடி மகன்" என்பேன் யார் என்று கேட்டால் "நற்பண்புகள் நிறைந்தவன்" என்று சுருக்கமாகப் பதிலுரைப்பார்கள். ஆனால் இன்று, கிறிஸ்தவ பொருளாதார வல்லுநர், பண்டிதர் எஸ். எல். பார்மர் என்பார், நற்குடி

மகனின் இலக்கணத்தைக் கூறும்போது, "நற்பண்புகள் நிறைந்தோர் நற்குடி மக்கள் என்று கருதிய காலம் கடந்துவிட்டது; செயலாற்றும் வகையில் நற்குடி மகன் என்போன் அநீதியின் சக்திகளை எதிர்ப்பவனே" என்கின்றார்.

திருச்சபை சமுதாய வாழ்விலே நேரிடையாக ஈடுபட வேண்டும் என்னும் கருத்து ஒருபுறமிருக்க, மக்கள் இயேசுவைத் தங்கள் ஆண்டவராக ஏற்றுக்கொள்ளத் தூண்டுவதின் மூலம் சமுதாயத்தைத் திருத்தியமைக்க முடியும் என்னும் கருத்தும் கிறிஸ்தவ சமயத்தினிடையே நிலவுகின்றது.

அருள் திரு. ஜாண் பாத்கேட் என்னும் ஊழியர் பின்கண்டவாறு கூறுகின்றார்: "ஒவ்வொரு பணியும் மீட்கும் தன்மையுடையது. ஆனால், நற்செய்திப்பணி, மனிதரை இயேசு கிறிஸ்துவினிடம் தனிப்பட்ட விசுவாசத்திற்குள் வெல்லுகின்றது. நற்செய்தியின்மூலம் வாழ்க்கை முற்றிலும் மாறுபடுகின்றது. சபை ஏற்படுகின்றது. மனித வாழ்க்கையின் இலக்கும், பண்பாடுகளின் தன்மையும், வரலாற்றின் போங்கும் மாற்றப்படுகின்றன."

மக்களுடைய பொது வாழ்விலே திருச்சபை ஆற்றவேண்டிய பணி மக்களுடைய தனிவாழ்வைக் கிறிஸ்துவிற்கு நேரே திருப்புவதின் மூலம் நிறைவேறுகிறது என்னும் இக் கருத்தை யாம் மறுக்கவில்லை. ஏனென்றால், சமூக விரோதச் செயல்களிலே ஈடுபட்டிருக்கும் ஒருவன் தன் செயல்களை மாற்றிக் கொள்ளுகின்றான். அவன்மூலம் சமுதாயத்தில் நுழையக்கூடிய அநீதியும் தடுக்கப்படுகின்றது. அவன் கிறிஸ்துவிற்குத் தன்னை ஒப்படைப்பதின்மூலம் பொறுப்புள்ள முடிவுகளை எடுக்கும் தலைவனுகின்றான். எனவே, ஜாண் பாத்கேட் அவர்கள் கூற்று சரியானதே.

ஆனால், நிலையற்ற சமுதாயத்தில் புதிய உருவத்தை நாடிக்கொண்டிருக்கும் இன்றைய இந்திய சமுதாயத்தில் மக்களைக் கிறிஸ்துவண்டை வழிநடத்தும் பணியோடு, கிறிஸ்தவ சபை சமுதாய அமைப்புகளில் காணப்படும் அநீதியை அகற்ற நேரடியாகச் செயல்படுவதும் இன்றியமையாததாகும்.

பண்டிதர் பில்லி கிரகாம் அவர்கள் கூற்றை மீண்டும் கூற விரும்புகின்றேன். கிறிஸ்தவ செய்தியைப் பற்றி, பண்டிதர் இவ்வாறு கூறுகின்றார்: "கிறிஸ்தவம் தனிப்பட்டவரின் தேவைக்கும் சமுதாயத்தின் தேவைக்கும் பொருந்தியதாகும். அது மனிதர் ஒருவரோடொருவர் ஒப்புரவாகி, இறைவனுடன் நேர்முகத் தொடர்பு கொண்டு வாழத் தூண்டுகிறது. இப்படித் தனி ஆளின் இரட்சிப்பைப் பற்றி அறிவிப்பதோடு, சமுதாய நீதியையும் வற்புறுத்தத் தவறினால் கிறிஸ்தவம் நற்செய்திப் பணியை முழுமையாகச் செய்துமுடிப்பதாகக் கூறமுடியாது" என்கிறார்.

இக்கருத்து இராயனுடையதை இராயனுக்கும் தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்று கூறின நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் செய்திக்கு ஏற்றதுதானே.

எனவே, இன்றைய கிறிஸ்தவ சமயம், கிறிஸ்து திருச்சபைக்கு மட்டுமல்ல, படைப்பு முழுமைக்குமே ஆண்டவர் என்ற செய்தியைச் செயலில் காட்டும்படி, திருச்சபை மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றது. திருச்சபை கிறிஸ்துவினுல் ஆட்கொள்ளப்பட்டிருப்பதே அது சமுதாயத்தின்மேல் கவலை கொள்வதற்கு வேண்டிய முதல் தகுதியைப் பெற்றிருப்பதற்கு அடையாளமாகும். அதன் இரண்டாவது தகுதி: அது வெறும் கோட்பாடுகளை வைத்துக்கொண்டிருக்கும் ஓர் கூட்டமல்ல; சமுதாயத்தினுள் வாழுகின்ற ஓர் சமுதாயம். எனவே கிறிஸ்துவை வாழ்க்கையிலே காண்பிக்கமுடியும். திருச்சபை பெற்றுள்ள மூன்ருவது தகுதி: தன்னுடைய முடிவுகளில் கிறிஸ்துவிற்குப் பதில் சொல்லவேண்டிய கடன்பட்டிருப்பதே.

பிறசமயங்களுக்கும் கிறிஸ்தவத்திற்குமுள்ள பெரிய வேறுபாடு இதுதான் திருச்சபை பிறசமயங்களுடன் ஒத்துழைத்துக் கருத்தில் ஒன்றுபட்ட நிலையிலே பணிசெய்யலாம். ஆனுல், ஓர் கொள்கையை அல்ல, கிறிஸ்து என்னும் ஒருவரையே ஆதாரமாக வைத்துத் திருச்சபை செயலாற்றுகின்றது. இதன் செயலாற்றல்களுக்கு அவரே காரணம். கிறிஸ்தவம் அல்லாத பிறசமயங்களும் சமுதாய நிலை பற்றி விழிப்புணர்வு கொண்டதற்குக் காரணம் மேலைநாட்டு எண்ணங்களின் செல்வாக்கே (the impact of the West) என்று பண்டிதர் வான்லீவன் தமது ஆராய்ச்சி நூலாகிய "உலக வரலாற்றிலே கிறிஸ்தவ சமுதாயம்" என்னும் நூலில் குறிப்பிடுகின்ருர். இவ்வாறு, இன்று கிறிஸ்து எங்கும் செயலாற்றுகின்ருர் என்று காணலாம்.

இறுதியாக, இன்றைய இந்தியாவில், புதிய அமைப்பை நாடும் இன்றைய சமுதாய நிலையில், சமயங்கள் ஆன்ம அற நெறிச் சிந்தனைகளோடு சமுதாய வாழ்விலே ஈடுபடுவது சமயச் சார்பற்ற சமுதாயத்திற்கு முதுகெலும்புபோல் அமையும் என்று கூறினுல் அது மிகையாகாது.

# துணை நூற்கள்


1. Sarma, D S., *Hinduism Through the Ages*, Bharatiya Vidya Bhavan, Bombay, 1956.

2. Bathgate, John, *The Relation between Service and Evangelism*, in Religion and Society, Vol. VIII, No. 1, April 1961.

3. *A One-Day Seminar on Secularism*: *Reports* in Religion and Society, Vol. XI. No. 2, June 1964.

4. Doughlas. Ian H., *A modern Approach to Islam*, (in the above issue).

5. Abbott, Walter M., *The Documents of Vatican II*. Geoffrey Chapman, London, 1967.

6. Parmar, S. L,. *Towards Creative Instability*, in Religion and Society, Vol. XV, No. 2, June 1968.

7. Mathew, E. V., *People of God in a Pluralist Polity—The call to Polarisation*, in Religion and Society. Vol. XVII, No. 1, March 1970.

8. Smith, Wilfred Cautwell, *Perctecipation*: *The Changing Christian Role in other Cultures* (in the above issue).

9. Fernandes, Angelo, *Christian Involvement in Development*, in N. C. C. Review, Vol. XC, No. 4, April 1970.

இரண்டாம் பாகம்

# இந்து சமய இயக்கங்கள்

1. பிரம்ம சமாஜம்
2. ஆரிய சமாஜம்
3. இராம கிருஷ்ண இயக்கம்
4. பிரம்ம ஞான சபை
5. காஞ்சி காமகோடி பீடம்
6. வள்ளலாரும் சமரச சன்மார்க்க சங்கமும்
7. சின்மயாநந்தர் இயக்கம்
8. ஐயப்பர் வழிபாட்டு மறுமலர்ச்சி

1

# பிரம்ம சமாஜம்

## தி. தயானந்தன் பிரான்சிஸ்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுந்த சமய இயக்கங்கள் யாவற்றுள்ளும் பெருஞ் செல்வாக்குப் பெற்ற இயக்கம் பிரம்ம சமாஜமே என ஃபார்குவார்[1] கருதுகின்றார். இறைவனை உயர் திணையினராய்க் காணும் நெறியைச் சிறப்பித்து உருவ வழி பாட்டை அறவே ஒதுக்கித் தள்ளிச் சமுதாயச் சீரமைப்பில் பேரார்வம் காட்டிய பெரியார்களின் தொண்டினால் இவ்வியக் கம் வளம் பெறுவதாயிற்று. மேனாட்டவர் பண்பாடு, மொழி ஆகியவற்றோடு கிறிஸ்தவ மதத்தின் கோட்பாடுகள் ஒழுக்க நெறி முதலியவற்றுள்ளும் பயனுள்ளவைகளாகத் தோன்றிய வைகளைத் தயங்காமல் ஏற்கும் சிறப்பினைக் கொண்டதாக இவ்வியக்கம் எழுந்தது. அதற்கான பின்னணியை உருவாக்கி இவ்வியக்கத்தைத் தோற்றுவித்தவர் இராஜா ராம் மோகன் ராய் ஆவார். அவருடைய வாழ்க்கையும் பணியும் இங்குக் கருதத் தகுந்தவை ஆகும்.

### அ. இராஜாராம் மோகன் ராயும் பிரம்ம சமாஜமும்

இராம் மோகன் புத்துலகச் சிற்பி; புது யுகத்தின் தந்தை என்றெல்லாம் பாராட்டப் பெறுகின்றார். மதத் துறையிலும் சமூக நலம் கல்வி வளர்ச்சி ஆகியவற்றிலும் அவர் ஆற்றிய பணி அளவிடற் கரியது ஆகும். புனரமைப்பாளர்களுக் கெல் லாம் முன்னோடியாய் அவர் பல சீரமைப்புக்களைச் செய்துள் ளார். நாட்டு வரலாற்றில் தனக்கென ஒரு தனியிடத்தை அவர் தேடிக்கொண்டுள்ளார். இந்திய மக்கள் இப் பெருந் தகையாளர்க்கு என்றும் கட்டுப்பாடுடையவர்கள் ஆவார்கள்.

இராம் மோகன் 1772ஆம் ஆண்டில் பக்திநெறி நின்ற பிராமணக் குடும்பம் ஒன்றில் தோன்றினார். அவருடைய தந்தை யும் முன்னோரும் சைதன்யரின் அடியவர்களாய் வைணவம் தழுவியவர்கள்; தாயார் சக்தி வழிபாட்டில் திளைத்தவர். சிறு வயதிலேயே இராம் மோகனுக்கு அவர் பெற்றோர் திருமணம் செய்துவைத்தார்கள். ஆயின், அவருடைய மனைவி சிறுமி யாகவே இறந்துவிட்டாள். தொடர்ந்து அவருக்கு வேறு இரண்டு சிறுமிகளையும் மணமுடித்து வைத்தார்கள்.

பன்னிரண்டு வயதுச் சிறுவனாய் இருக்கும்போதே இராம் மோகனைப் பெற்றோர் கல்வி பயில்வதற்காகப் பாட்னாவுக்கு

---

1. J. N. Farquhar: *Modern Religious Movements in India*, p. 29.

அனுப்பினார்கள். அந் நகர் அக் காலத்தில் இஸ்லாமியக் கல்விக்குப் பேர்பெற்ற இடமாகத் திகழ்ந்தது. அக் காலத்தில் அரசாங்கப் பணி ஏற்பதற்கு அத்தகு கல்வி இன்றியமையாததாய் வேண்டப்பட்டது. இஸ்லாமியக கல்வி இராம மோகனைப் பேரளவுக்குக் கவர்ந்துவிட்டது. அவருடைய கருத்துக்களும் கொள்கைகளும் இஸ்லாமியக் கல்வியால் புது மெருகுப் பெறலாயின. குறிப்பாக, சூஃபிகளின் ஆன்மீக நூல்கள் அவர் உள்ளத்தைத் தொட்டன. இந்தச் செல்வாக்கு அவர் வாழ்க்கை முழுவதும் நிலைத்து நின்றது.

இராம் மோகன் வீடு திரும்பியபோது தந்தையாரின் மதக் கோட்பாடுகளுக்கும் தம்முடைய கொள்கைகளுக்கும் இடையே பெருத்த வேறுபாடு இருப்பதைக் கண்டார். உருவ வழிபாட்டை இனி அவரால் ஏற்க முடியவில்லை. இக் கருத்து வேறுபாடு காரணமாக அவர் வீட்டைவிட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டது.

இக் காலத்தில் அவர் திபெத்துக்குச் சென்று பௌத்தம் பயின்றதாகச் சிலர் கருதுகின்றனர். தந்தையார் அவரை வீடு திரும்பும்படி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர் இல்லம் திரும்பினார். பெற்றோரின் ஆணைப்படி காசிக்குச் சென்று கல்வி பயிலலானார். சமஸ்கிருதப் பெருநூல்கள் பலவற்றைப் படித்து இந்து மதததை ஊன்றிக் கறகும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

இராம் மோகன் தம்முடைய இருபத்தி நான்காவது வயதில் ஆங்கிலமும் கற்க ஆரம்பித்தார். ஆக, பல மொழிப் பயிற்சியும், பல சமயக் கருத்துக்களில் ஈடுபாடும் உடையவராய்த்—தம் உள்ளத்தில் மேலோங்கி நின்ற கொள்கைகளை மக்களுக்கு எடுத்தோதும் ஆர்வம் கொண்ட இளைஞராய் அவர் விளங்கினார்.

1804ஆம் ஆண்டில், **'கடவுளுண்மையில் நம்பிக்கையுள்ளோர்க்கொரு பரிசு'** என்ற தலைப்பினைக் கொண்ட சிறு நூல் ஒன்றைப் பாரசீக மொழியில் எழுதி வெளியிட்டார். இஸலாமியக் கொள்கைகள் அவரை எந்த அளவுக்கு ஆட்கொண்டிருந்தன என்பதை அச் சிறு நூல் தெளிவாக எடுத்துக்காட்டியது.

சிறிது காலத்திற்குப் பின் கிழக்கு இந்தியக் கம்பெனியாரிடம் அவர் வேலைக்கு அமர்ந்தார் ஜான் டிக்பி என்பாரிடம் அவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. ஆங்கிலக் கல்விப் பயிற்சிக்கு அவர் பல்லாற்றானும் இராம் மோகனுக்குத் துணை நின்றார்.

இராம் மோகன் பத்தாண்டுக் காலம் அரசாங்கத்தில் பணியாற்றினார். 1814இல் வேலையினின்றும் ஓய்வுபெற்றுக் கல்கத்

தாவில் குடியேறினர். அவர் கற்றுத் தெரிந்திருந்த மதக் கருத்துக்களைப் பலரும் அறியும்படி பரப்புவதில் அவர் பெரு நாட்டம் கொண்டிருந்ததின் விளைவாக 1815இல் ஆத்மீய சபா என்னும் பெயரில் ஒரு சங்கத்தைத் தோற்றுவித்தார். கிழமை தோறும் கூட்டங்கள் நடத்தப்பட்டன. ஆனால், இந்தச் சங்கக் கூட்டங்கள் நான்காண்டுகளுக்கு மேல் தொடர்ந்து நடைபெற வில்லை.

இக் காலத்தில் இராம் மோகன் உபநிடதங்களையும் வேதாந்தச் சூத்திரங்களையும் ஊன்றிக் கற்கலானார். வேதாந்தச் சூத்திரங்களின் சாரத்தை வங்காளியிலும், ஆங்கிலத்திலும் பெயர்த்து நூலாக வெளியிட்டார். உபநிடதங்கள் இறைவனை அஃறிணை நிலையில் அல்ல, உயர்திணையினராகவே அவரைப் போற்றிக் கொண்டாடுகின்றன; உருவ வழிபாடு பற்றிய குறிப்புக்கள் ஏதும் அவற்றில் இல்லை என்பவைகளை எடுத்துக்காட்டி, இப் பழம்பெரும் கொள்கையை யாவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். இதன் காரணமாக அவர் பலருடைய எதிர்ப்புக்கும் துன்புறுத்தலுக்கும் ஆளானார். வங்காள மாநிலத்தில் மட்டுமல்லாமல் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் எதிர்ப்புக் கிளம்பியது.

**கிறிஸ்தவ ஈடுபாடு:** இராம் மோகன் கல்கத்தாவில் குடியேறிய பிறகு சிராம்பூரில் பணியாற்றிக் கொண்டிருந்த மிஷனரிமாரோடு அவருக்குத் தொடர்பு ஏற்பட்டது கிறிஸ்தவத்தை அவர் ஆழ்ந்து அறிய விரும்பினர். அதற்கென்று கிரேக்கம், எபிரேயம் ஆகிய இரு மொழிகளையும் பயின்று விவிலியத்தை அம் மொழிகளில் படிக்கக் கற்றார். "கிறிஸ்துவின் கோட்பாடுகள் ஒழுக்க விதிகளுக்கு மிகவும் ஏற்றவைகளாக உள்ளன, பகுத்தறிவாளர்க்கு அவைபோன்று சிறந்த கோட்பாடுகள் வேறெங்கும் கிடைக்க முடியாது" என்னும் முடிவுக்கு வந்தார்.

இதனை யாவருக்கும் எடுத்துரைக்கும் நோக்கத்தோடு 1820ஆம் ஆண்டில் **இயேசுவின் போதனைகள் (The Precepts of Jesus, the Guide to Peace and Happiness)** என்ற நூலை எழுதி வெளியிட்டார் மத்தேயு லூக்கா அருட்செய்தி நூல்களிலிருந்து பெரும் பகுதிகளை அவர் இந் நூலில் பதிப்பித்துள்ளார்.

கிறிஸ்துவை ஒரு ஆசாரியராகவும், கடவுளின் செய்தியை இயம்பியவராகவும் மட்டுமே இராம் மோகன் கருதினர். 'தெய்வத் திருமைந்தர்' என அவரை ஏற்க அவர் மறுத்தார். 'மைந்தர்' என்ற தொடர் 'கடவுளால் அதி சிறந்ததாகப் படைக்கப்பட்ட கிறிஸ்துவின் தன்மையையே குறிப்பிடுவதாக அவர் கருதினர். திருமறையிலிருந்து பல பகுதிகளை எடுத்துக்

காட்டித் திருமைந்தர் தந்தையாருக்கு இணையானவர் அல்லர்; அவருக்குக் கீழ்ப்பட்டவர் என்று தம் கட்டுரை ஒன்றில் நிறுவ முனைகின்றார்.

இயேசு கிறிஸ்து கன்னியிடம் பிறந்தவர் என்பதை இராம் மோகன் ஏற்றுக்கொள்கிறார். ஆண்டவர் செய்திட்ட அற்புதச் செயல்கள் அனைத்தையும் உண்மை என ஏற்கவும் அவர் தயங்கவில்லை.

இயேசு கிறிஸ்துவின் மீட்புப் பணி அவருடைய போதனையில்தான் அடங்கிக் கிடக்கிறது என்பதும் இராம் மோகனின் நம்பிக்கை ஆகும். அவருடைய மரணத்தின் தனி மாண்பை அவர் காண மறுக்கிறார். பலருக்காக ஒருவர் பாடுபட்டுச் சாவதையும், அவர்கள் நல்வாழ்வுக்காகத் தம் உயிரை அவர் பலியாக வழங்குவதையும் புரிந்துகொள்ள அவர் விரும்பவில்லை.

பரிசுத்த ஆவியானவரை ஆளுடைமையுள்ளவராகக் காண மறுக்கிறார் இராம் மோகன். பரிசுத்த ஆவியைக் கடவுளின் செல்வாக்கைக் காட்டும் சக்தியாக மட்டுமே அவர் ஏற்கிறார். கடவுள் ஒருவரே என்ற கொள்கையில் ஊறித் திளைத்தவர் ஆதலால் திரித்துவக் கொள்கையை அவர் அறவே ஒதுக்கி விடுகிறார்.

கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. அவருடைய இயல்பையும் பண்பையும் அவர்கள் தெளிவாக அறியவில்லை. பயனற்றக் கொள்கைகளை அவருடைய இயல்பு, பண்பு ஆகியவற்றை விளக்கக் கையாளுகிறார்கள் என்று இராம் மோகன் கருதினர்.

இராம் மோகன் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைப் பற்றித் தம் நூலிலும் பேச்சிலும் பரப்பிவந்த கருத்துக்களுக்கு மறுப்புத் தரவேண்டிய இன்றியமையாமை சிராம்பூர் மிஷனெரிமாருக்கு ஏற்பட்டது. ஆகவே அவர்கள் மறுப்பு நூல்களை வெளியிட்டார்கள். இராம் மோகன் அவைகளுக்குப் பதிலளிக்கும் வகையில் சிறு நூல்களை எழுதினர். இந்தக் கருத்துவேறுபாடும், பகைமையும் நாளுக்குநாள் பெருகிக்கொண்டே போயின.

சிராம்பூர் மிஷனெரிமாருள் ஒருவரான **W.** ஆதம் என்பார் இராம் மோகனின் கருத்துக்களை ஏற்று ஒருமைவாதியாக **(Unitarian)** மாறி, இராம் மோகனுடன் சேர்ந்துகொண்டார். இந்து மதத்தின் போக்கிற்கு ஏற்ற வகையில் அவர்கள் இருவரும் ஆங்கிலத்தில் வழிபாடுகள் நடத்த ஆரம்பித்தார்கள். அச்சகம் ஒன்றையும் வேதாந்தக் கல்லூரி ஒன்றையும் நிறுவி இந்து மதத்திற்குள் ஒருமைவாதிகளைத் திரட்ட இருவரும் முயன்றனர். ஆயின், கருத்துவேறுபாடு காரணமாக இருவரும் பிரிய நேர்ந்தது. ஒருமைவாதப் பிரச்சாரம் கைவிடப்பட்டது.

**பிரம்ம சமாஜத்தின் தோற்றம்:** ஆங்கிலத்தில் நடத்தப் பட்ட வழிபாடு நிறுத்தப்பட்டதால், இராம் மோகன் வங்கா ளியில் இந்திய பண்பாட்டுப் பின்னணியோடு வழிபாட்டினை நடத்த ஆரம்பித்தார். முதல் கூட்டம் 1828 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 20 ஆம் நாள் நடத்தப்பட்டது. 'பிரம்ம சபா' என்ற பெயர் அச் சங்கத்துக்குத் தரப்பட்டது. பிறகு அப் பெயர் பிரம்ம சமாஜம் என்று மாற்றப்பட்டது.

இச் சமாஜத்தில் இராம் மோகனுக்குத் துணை நின்றவர் களுள் பலர் கற்றறிந்த பிராமணர்கள் ஆவார்கள். செல்வம் படைத்தோரின் ஆதரவும் சமாஜத்திற்கு கிடைத்தது. அவர் களுள் துவாரகநாத் தாகுர் என்பார் குறிப்பிடத்குந்தவர் ஆவார். சமாஜக் கூட்டங்கள் கிழமைதோறும் நடத்தப்பட்டன. வழி பாட்டில், உபநிடதப் பகுதிகள் வாசிக்கப்பட்டன. இரு மொழி களிலும் இராம் மோகனும் பிறரும் இயற்றிய பாடல்கள் பாடப் பட்டன. சமாஜத்துக்குக் கட்டுக்கோப்பான அமைப்போ, ஒரு நிறுவனத்துக்குரிய பலமோ இல்லாமல் இருந்தது. யாவருக்கும் பொதுவான ஒரு சமாஜம் என்று மட்டுமே இராம் மோகன் அதைப் பற்றிக் கூறிக்கொண்டார். இந்து மதத்தின் பழம்பெரும் புனித வழிபாட்டு நெறியை அவர் சமாஜத்தில் புதுப்பிப்பதாக நம்பினர். சமாஜத்திற்கென ஒரு தனிக் கட்டடம் எழுப்பப் பட்டது. அது 1803 ஆம் ஆண்டில் திறந்துவைக்கப்பட்டது.

அதே ஆண்டில் இராம் மோகன் இங்கிலாந்துக்குச் சென் றார். இந்தப் பயணத்தை மேற்கொள்ள அவர் பல காலமாகத் திட்டமிட்டிருந்தார். ஆங்கிலேயரின் அரசியல் நிர்வாகம், பண் பாட்டுச் சிறப்பு ஆகியவை மூலம் இந்திய நாட்டுக்குக் கிடைக் கப்பெற்ற நலன்களையும் கிறிஸ்தவ மதத்தின் தொடர்பால் நாட்டில் ஏற்பட்டிருந்த நல்ல பல மாறுதல்களையும் அவர் விரும்பி வரவேற்றவர். ஆதலால் இங்கிலாந்துப் பயணத்தைப் பெரிதும் விரும்பினர். அங்கு அவருக்குச் சிறந்த வரவேற்புக் கிடைத்தது. பல கூட்டங்களில் உரையாற்றினர். 1833 ஆம் ஆண்டில் எதிர்பாராதவிதமாய்ப் பிரிஸ்டல் நகரில் இராம் மோகன் காலமானர்.

**பெரும் புனரமைப்பாளர்:** பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மேனுடுகளோடு நம் நாட்டுக்குப் பண்பாட்டுத் தொடர்பு ஏற்படுவதற்குப் பெரும் பாலமாக இருந்து பணியாற் றிய பெரியார் இராம் மோகன் என்பது கருதத்தகுந்தது ஆகும். மேனாட்டவரை நம் நாட்டவர் புரிந்துகொள்வதற்கும், நம் நாட் டவரை அவர்கள் நன்கறிந்துகொள்வதற்கும் துணை செய்யும் வகையில் பணியாற்றிய பெருமை அவரைச் சாரும். தொடர்ந்து நாட்டில் புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டப் பெரியார்களுக்

கெல்லாம் பாதையை வகுத்துச் சென்ற சிறப்பை அவர் பெற்றுக்கொண்டுள்ளார்.

சமுதாயப் புனரமைப்பு வேலைகளிலும் கல்வி பரப்பும் ஆக்கப் பணியிலும் அவர் பேரார்வம் கொண்டவராக விளங்கினர். விதவையர் உடன்கட்டை ஏறும் கொடுமையையும். குழந்தைப் பலி, பலதார மணம் போன்ற பழக்க வழக்கங்களையும் நாட்டி விருந்து விரட்டுவதற்காகப் பெரும்பாடுபட்டவர் அவர். கல்வி பரப்பும் பணியில் ஸ்காட்லாந்துப் பெரியாரான அலெக்ஸாந்தர் டஃப் என்பாருக்கு ஊக்கமளித்து உறுதுணையாக இராம் மோகன் இருந்தார்.

இராம் மோகனின் அனைத்து ஆக்கப்பணிகளும் அவர் உள்ளத்தில் உரம்பெற்று நின்ற கடவுட் கொள்கைத் தெளிவினின்றும் எழுந்தவையே ஆகும். அந்தக் கொள்கைத் தெளிவின் காரணமாக அவர் அஞ்சாமல் இந்து மதத்தின் அடிப்படைக் கொள்கைகளான கர்ம வினை, புனர் ஜென்மம் ஆகியவற்றைக் கைவிட்டார். கிறிஸ்தவ மதத்தில் சிறந்தவையாகத் தோன்றியவைகளைச் சமாஜத்தில் நுழைக்க அவர் தயங்கவில்லை. உயர்திணையினராகிய கடவுளிடம் கொள்ளும் பற்றையும் அதன் வழிப்பட்ட ஒழுக்கநெறியையும் அவர் பெரிதும் நம்பினர்.

இயேசு கிறிஸ்துவைப் பற்றிய அவருடைய கொள்கைகள் ஏற்புடையவை அல்ல என்ருலும் அக்காலத்தில் கிறிஸ்துவின் அறைகூவலைக் கேட்டு அதற்குத் தம்மாலியன்ற முறையில் பணியும் அத்தகு நெறியை முதன்முதலாக எடுத்துக்காட்டியவர் அவரே என்பதை நாம் காணத் தவறுதல் கூடாது.

தீனபந்து சி. எஃப். ஆண்டுருஸ் அவர்கள் இராம் மோகனைப் பற்றி எழுதும்போது, ''வங்காளத்தில் தோன்றிய பெருங் கிறிஸ்தவர்களுள் சிலர் இராம் மோகன் எழுதிய **இயேசுவின் போதனைகள்** என்ற நூலின் மூலம் கிறிஸ்துவிடம் விசுவாசம் கொண்டதாகக் கூறுகிறார்கள்''[1] எனக் கூறுவது கருத்துக்கு உரியது ஆகும்.

## ஆ. தேபேந்திரநாத் தாகூரும் பிரம்ம சமாஜமும்

துவாரகாநாத் தாகுரின் மைந்தரான **தேபேந்திரநாத்** ஆன்மீக நெறி நின்றவர் ஆவார். **தத்துவபோதினி சபா** என்னும் பெயரில் அவர் ஒரு சமாஜம் தோற்றுவித்துக் கிழமைதோறும் கூட்டங்கள் நடத்திவந்தார். அக் கூட்டங்களில் வழிபாடும், மதச் சார்புடைய விவாதங்களும் இடம்பெற்றன.

1842 இல் தேபேந்திரரும் அவருடைய சபையைச் சேர்ந்த இளம் உறுப்பினர் பலரும் பிரம்ம சமாஜத்தில் சேர்ந்துகொண்

1. C. F. Andrews, *The Renaissance in India*, p. 113.

டார்கள். தத்துவபோதினி சபா கலைக்கப்படவில்லை. இரு சங்கங்களும் இணைந்து இயங்கின. தேபேந்திரர் பிரம்ம சமாஜத்தில் பெரும் செல்வாக்குப் பெற்றார். பிராமணராகிய அவர் சமாஜத்தின் ஆசாரியராக்கப்பட்டார். தத்துவபோதினி பத்திரிகை எனும் மாத இதழ் ஒன்றை அவர் நடத்தலானார். தத்துவபோதினி பாடசாலை ஒன்றும் துவக்கப்பட்டு பிரம்ம சமாஜப் பிரச்சாரகர்களைப் பயிற்றுவிக்கும் பள்ளியாக விளங்கலாயிற்று.

கல்கத்தாவில் டஃப் தலைமையில் கிறிஸ்தவம் பெருஞ் செல்வாக்குப் பெற்றுவந்ததைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்ற உணர்ச்சி சமாஜத்தில் ஏற்படலாயிற்று.

தேபேந்திரர் இராம்மோகனரைப்போல் இந்து மதத்தின் சாரம் உயர்திணையினராகிய ஒரே கடவுளை வழிபடுவதே என்னும் கொள்கையில் உறுதியுள்ளவர்தாம். ஆயின், இராம் மோகனரைப்போல கிறிஸ்துவிடம் பற்றுக் கொண்டவர் அல்லர். இந்திய மக்களுக்குக் கிறிஸ்தவம் தேவை இல்லை என்று அவர் நம்பினார். இராம்மோகனர் போன்று அவர் கிறிஸ்தவத் திருமறையை விரும்பிக் கற்றவரும் அல்லர்.

சமாஜத்தின் அமைப்புமுறையைப் பலப்படுத்துவதில் தேபேந்திரர் கவனம் செலுத்தினார். வெறும் வாரக் கூட்டமாக அது முடிந்துவிடாதபடி அதற்கெனப் பிரம்மப் பிரமாணம் எடுத்துக்கொள்வோர் மட்டுமே சமாஜ அங்கத்தினர்களாக இருக்கமுடியும் என்ற திட்டத்தைக் கொணர்ந்தார். இப் பிரமாணத்தைப் பெரிதும் விரும்பி ஏற்ற தத்துவபோதினி சபையோரால் சமாஜம் பலம் பெறுவதாயிற்று. பிரம்மோபாசனை என்ற பெயரில் தொழுகை முறைமையும் வெளியிடப்பட்டது. கடவுளைப் போற்றுதலும் அவரிடம் வேண்டுதல் செய்தலும் அம்முறையில் இடம்பெறலாயின. இது சமாஜத்தில் ஏற்பட்டதொரு முன்னேற்றம் என்றே கூறவேண்டும். இராம் மோகனர் இத்தகைய 'போற்றுதல்'. 'ஜெபம்' ஆகியவற்றில் கருத்தைச் செலுத்தவில்லை.

தேபேந்திரர் ஆழ்ந்த ஆன்மீக நெறியில் ஊன்றிப் பக்திப் பண்புகளில் திளைத்தவர் ஆதலால் தொழுகையில் அவ் வம்சங்களைச் சேர்த்தார். நான்கு வேதங்களும் பிழைகளே இல்லாதவை; வெளிப்பாட்டு நெறியால் இறைவனிடமிருந்து எழுந்தவை என்ற பழமைக் கொள்கை சமாஜத்தில் கைவிடப்பட்டது. உபநிடதப் பகுதிகளும் இந்து மத இலக்கியங்களிலிருந்துத் தேர்ந்தெடுக்கப்பட்டப் பகுதிகள் சிலவும சமாஜக் கூட்டங்களில் பயன்படுத்துவதற்காகத் தொகுத்து நூலாக வெளியிடப்பட்டன. அந் நூலுக்குப் பிரம்ம தர்மம் என்றும் பெயர் சூட்டப்பட்டது.

1857 இல் கெசுப் சந்திர சென் என்னும் பிராமணர் அல்லாத இளைஞர் ஒருவர் சமாஜத்தில் சேர்ந்தார். இரண்டாண்டுகளுக்குள் சமாஜத்தில் அவர் பெருஞ் செல்வாக்குப் பெற்றார். தேபேந்திரர் அவரிடம் பேரளவில் அன்புகாட்டி அவரைத் தம் மகனைப் போல பாவித்து நடத்திவந்தார்.

1860 இல் கெசுப் சங்கட் சபா என்னும் பெயரில் ஒரு சிறு இயக்கத்தைத் தோற்றுவித்தார். இச் சபையின் கூட்டங்களில் ஆத்மீகம், மதநெறி, சமுகப் புனரமைப்பு ஆகியவை பற்றிய விவாதங்கள் நடத்தப்பட்டன. அவையின் விளைவாகப் புரட்சிக் கருத்துக்களும் நடவடிக்கைகளும் வெளியிடப்படலாயின.

இந்து சமயத்தின் சம்ஸ்காரங்கள் உருவ வழிபாட்டைச் சார்ந்தவை என அவை ஒதுக்கப்பட்டன. சமாஜத்தாருக்கு ஏற்ற வகையில் சம்ஸ்காரங்கள் திருத்தியமைக்கப்பட்டன. தேபேந்திரர் அவை யாவைற்றையும் விளக்கி அனுஷ்டான பக்தி என்னும் நூலொன்றைச் சமாஜத்திற்கு எழுதியுதவினார். அதன்வழி வாழ முன்வந்த பிரம்மோக்கள் அனுஷ்டான பிரம்மோக்கள் என்ற பெயரைப் பெற்றார்கள். அவர்கள் காளி பூசை, சாதி வேறுபாடு, பூணூல் அணிதல் போன்றவற்றை ஒதுக்கி விட்டார்கள்.

கெசுப் சந்திர சென் கிறிஸ்தவத்தால் பெரிதும் கவரப் பெற்றவர் ஆவார். கிறிஸ்தவர்களைப் பின்பற்றிப் பஞ்சகாலத்தில் ஏழை எளியோரை உண்பிக்கும் பணியில் அவர் ஈடுபடலானார். இயேசு கிறிஸ்துவிடம் பேரன்பு கொண்டிருந்த கேசுப் ஒவ்வொரு நாளும் அவரை நெருங்கி வாழ முற்பட்டார். சமுதாயப் புரைமைப்புப் பணிகளில் நாட்டம் அற்றோர் உண்மையில் கடவுளின் அடியார்களாக இருக்க முடியாது என்ற தெளிவு அவர் உள்ளத்தில் உரம் பெறுவதாயிற்று.

கெசுப் ஆங்கிலக் கல்வி பயின்றவர். வங்காள வங்கி ஒன்றில் பணியாற்றிவந்தார். 1861 இல் அவரும் அவரைச் சேர்ந்தோர் சிலரும தங்கள் வேலைகளை விட்டுவிட்டுச் சமாஜத்தின் ஆக்கப் பணிகளையும் வளர்ச்சியையும் கவனிப்பதற்கென்றே தங்களை அர்ப்பணிததுக்கொண்டு முழுநேர உழைப்பாளர்களாகத் தொண்டாற்ற ஆரம்பித்தார்கள்.

கெசுப் சமாஜத்தின் தலைவராக ஆசாரியராக நியமனம் பெற்றார். அவருடைய அரிய முயற்சிகளால் பிரம்ம வித்யாலயா என்னும் பெயரில் இறையியற் பள்ளி ஒன்று தொடங்கப் பெற்றது. ஆங்கிலத்தில் மாதமிருமுறை இதழொன்றும் வெளியிடப் படலாயிற்று.

1864 இல் கெசுப் நாட்டின் பல இடங்களுக்கும் சென்று சமாஜப் பிரச்சாரம் செய்து அதற்குப் பலம் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டார். சென்னையிலும் பம்பாயிலும் அவருக்குப் பெருத்த வரவேற்புக் கிடைத்தது. சென்னையில் வேத சமாஜமும் பம்பாயில் பிரார்த்தனை சமாஜமும் ஏற்படுத்தப்பட்டன.

கெசுப் இளமைத் துடிப்புடையவராய் விளங்கினர். அவர் எழுத்திலும் பேச்சிலும் புரட்சிக் கருத்துக்கள் நிரம்பிக் கிடந்தன. அவருடைய இப் போக்குச் சமாஜத்திலிருந்த பழமை வாதிகளான முதியவர்களுக்கு ஏற்புடையவையாக இல்லை. ஆகவே, தேபேந்திரர் கேசுபைத் தம் மகனைக் கருதி வந்தார் என்றாலும், அவர் சமூகப் பணிகளில் பெருத்த நாட்டமுடையவராய் இருப்பதால் ஆன்மீக நெறிக்குச் சமாஜத்திலுள்ள சிறப்பையும் செல்வாக்கையும குலைத்து விடுவாரோ என அவர் அஞ்சினர்.

தேபேந்திரர் கலப்பு மணத்தையும் விதவை மணத்தையும் ஏற்க மறுத்தார். இவை இரண்டும் இந்து சமுதாயத்தின் புனரமைப்புக்கு இன்றியமையாதவை என உணர்ந்திருந்தார் கேசுப்.

இக் கருத்து வேறுபாட்டின் விளைவாகச் சமாஜத்தில் இரு கட்சிகள் ஏற்படலாயின.

1864 இலிருந்து தேபேந்திரர் சமாஜக் கூட்டங்களைத் தம் இல்லத்தில் நடத்த ஆரம்பித்தார். பூணூல் அணிந்த ஆசாரியர் மட்டுமே சமாஜக் கூட்டங்களை நடத்த அவர் அனுமதித்தார். கெசுபும் அவரைச் சேர்ந்தவர்களும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். தேபேந்திரர் தம் போக்கை மாற்றிக் கொள்ளாததால் கெசுப் கட்சியார் 1865 இல் பிரிந்து சென்றார்கள். தேபேந்திரர் கட்சியார் சமாஜ உடைமைகளுக்குரியவர்களாய் அதைத் தொடர்ந்து நடத்தினர்கள் இநதப் பிளவு ஏற்பட்டபோது பிரிந்துசென்ற கட்சித் தலைவர் கெசுபுக்கு வயது இருபத்தினன்கு.

பிளவுக்குப் பின்பு தேபேந்திரரின் கட்சி பேரளவுக்கு இந்து மதத்தைத் தழுவிய சமாஜமாகிவிட்டது. தேபேந்திரர் ஆன்மீக நெறியிலும் பக்தி வழிபாட்டிலும் பெருங்கவனம் செலுத்தினர். அவரைச் சமாஜத்தவரும் மக்களும் மகரிஷி எனக் கொண்டாடலானர்கள். ஆயின், காலத்தின் போக்கிற்கேற்ப இராம் மோகனர், கெசுப் ஆகியோரைப் போன்று புதுமைநெறி, புனரமைப்பு வேலை ஆகியவற்றில் நாட்டம் செலுத்தாத காரணத்தால் அவருடைய சமாஜம் மெள்ளமெள்ள செல்வாக்கை இழப்பதாயிற்று.

## இ. கேசுப் சந்திர சென்னும் சமாஜமும்

சமாஜத்தில் பிளவு ஏற்பட்டப் பிறகு கேசுப் சந்திர சென் கிறிஸ்தவத்தில் பெரிதும் ஈடுபாடு கொள்ளலானர். இயேசு கிறிஸ்துவைத் தம் இதய வேந்தராக அவர் கருதினர். அவர் மேனாட்டவர் அல்லர், ஆசியர்; யாவரினும் மேம்பட்டவர்; ஒழுக்கத்தில் உயர்ந்தவர் என்பவைகளை எங்கும் எவரிடமும் அவர் எடுத்துரைக்க அஞ்சவில்லை. 1866 இல் அவர் 'இயேசு கிறிஸ்து: ஐரோப்பாவும் ஆசியாவும்' என்ற தலைப்பில் ஆற்றியுள்ள உரையில் இதனை நன்கு காண முடிகின்றது. அந்த உரையின் முடிவில் யாவரையும் இயேசுவின் ஒழுக்க நெறியைப் பின் பற்றுமாறு அவர் வேண்டுகிறார். சென் கிறிஸ்தவராகி விடுவார் எனப் பலர் கருதினர்கள்.

கேசுபின் கட்சியைச் சேர்ந்தோர் பலர் இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிவதிலும் அவரைப் பின்பற்றுவதிலும் ஆர்வம் காட்டினர்கள்.

1886 இல் சென் இந்திய பிரம்ம சமாஜம் என்ற பெயரில் புது சமாஜம் ஒன்றை நிறுவி, நாடு முழுவதிலுமுள்ள பிரமமோக்களை அதில் சேர்ந்திடுமாறு அழைப்பு விடுத்தார். இளமைத் துடிப்பும் புதுமை நாட்டமும் கொண்டோர் பலர் அப்புது சமாஜத்தில் சேர்ந்தனர். தேபேந்திரர் தலைமையில் இயங்கிய சமாஜம் ஆதிசமாஜம் என்ற பெயரைப் பெறுவதாயிற்று.

கேசுப் தம் சமாஜத்திற்கு அமைப்பு முறை, திட்டங்கள் ஏதும் வகுக்காமல் தம் விருப்பம் போல் அதனை நடத்திச் சென்றார். தம் இல்லத்திலேயே கிழமைதோறும் சமாஜக் கூட்டங்களை நடத்தினர். ஸ்லோக சங்கிரகம் என்னும் பெயரில் ஒரு தொகுப்பு நூலை யாத்துச் சமாஜக் கூட்டங்களில் உபயோகிப்பதற்காக வெளியிட்டார். அதில் இந்து மதம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகியவற்றிலிருந்துத் தேர்ந்தெடுத்த பகுதிகள் பல இருந்தன. இக் காலத்தில் கேசுப் ஆன்மீகத்தில் ஆழ்ந்த அக்கறை காட்டினர். இறைவனிடம் வல்லமை வேண்டி நிற்பதும், அவரோடு கொள்ளும் உறவில் இன்பம் காண்பதும் அவருடைய அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகள் ஆயின.

சென் சைதன்யரின் வைணவ பக்தி நெறியிலும் கவனம் செலுத்தி அச் சமய நூல்களையும் சமாஜத்தில் அறிமுகப்படுத்தினர். அச் சமயத்திற்கே உரித்தான பஜனை முறைமையும் சமாஜத்தில் இடம் பெறலாயிற்று.

1869 இல் சமாஜத்திற்கென கட்டப்பட்ட இல்லம் திறக்கப்பட்டது. அக் காலக் கட்டத்தில் கேசுப் தாம் இங்கிலாந்து செல்லத் திட்டமிட்டிருப்பது பற்றி சமாஜத்தவர்க்கு அறிவித்

தார். அவர்களுக்கு இது வியப்பளிக்கும் செய்தியாக இருந்தது. எண்ணியவாறே சென் இங்கிலாந்து சென்று பெருத்த வரவேற்பினைப் பெற்று புகழோடு தாயகம் திரும்பினார்.

சமாஜத்திற்குள் பிளவு ஏற்படக்கூடிய சூழ்நிலை இருந்து வருவதைச் சென் அறிந்துகொண்டார். அவர் மிகவும் முற்போக்குடையவர் என்றாலும் பெண்களுக்கு ஆண்களுக்கிணையாக உயர் கல்வி தரப்படுவதை அவர் விரும்பவில்லை. ஆயின், இளம் பிரம்மோக்கள் தங்கள் பெண்கள் சிறந்த கல்வி பெற வேண்டுமென்று விரும்பினார்கள். கெசுபின் சர்வாதிகாரப் போக்கையும் அத்தகையோர் எதிர்க்க ஆரம்பித்தார்கள். தம்மைச் சமாஜத்தினர் இறைவனால் அனுப்பப்பட்டத் தலைவராகக் கருத வேண்டும் என்று சென் விரும்பினார். அவர் கூற்றுக்களை எதிர்ப்போரை மிகவும் இகழ்ந்து பேசிவந்தார். தமக்கு அவ்வப்போது கடவுளிடமிருந்து வெளிப்பாடு (ஆதேஸ்) கிடைப்பதாகச் சொல்லிவந்தார். சமாஜக் கொள்கைகளுக்குச் சற்றும் அடுக்காத வகையில் திருமண வயதடையாத தம் மகளைக் குச்பிஹார் இளவரசருக்கு மணமுடித்து வைத்தார். இது கடவுளின் வெளிப்பாட்டின்படிச் செய்யப்பட்டது எனக் கூறினார் அந்தத் திருமணம் இந்துப் பழமை வாதிகளின் சடங்குகளோடு நடத்தப்பட்டது.

இக் கட்டத்தில் கெசுபின் சமாஜத்திலிருந்து முற்போக்காளர் பலர் வெளியேறி விட்டார்கள். **சாதாரண பிரம்ம சமாஜம்** என்ற பெயரில் அவர்கள் இயங்க ஆரம்பித்தார்கள்.

**கெசுப் சென்னும் நவ விதானும்:** கடவுள் தம்மிடம் பேசி தம்மை ஒரு புதுச் சபையை நிறுவுமாறு கேட்பதாகக் கெசுப் உறுதியாய் நம்பினார். பல மதங்களையும் சமரசப்படுத்திக்-கிறிஸ்தவத்தை மையமாகக் கொண்டதாக அச் சபை எழ வேண்டும் எனக் கடவுள் கட்டளை பிறப்பித்ததாகவும் அவர் நம்பினார். அதன் விளைவாக 1881 ஆம் ஆண்டில் கெசுப் **நவ விதான்** என்ற பெயரில் ஒரு புதிய சபையை நிறுவினார். தம்மையும் தம் நண்பர்கள் பன்னிருவரையும் இச் சபையின் அப்போஸ்தலர்கள் என்று அறிமுகப்படுத்தினார். தெய்வீக வெளிப்பாடுகள் தமக்குக் கிடைத்து வருவதைக் குறிப்பிட்டு அனைவரையும் நவவிதானில் சேரும்படி வேண்டிக்கொண்டார்.

இக் காலத்தில் கெசுபுக்கு **இராம கிருஷ்ண பரம ஹம்சரோடு** நேர்த்தொடர்பு ஏற்பட்டிருந்தது. எல்லா மதங்களும் ஒன்றே என்னும் கொள்கைக்கு ஆக்கம் தேடும் வகையில் பல மதங்களின் சடங்குகளை நவவிதானத்தில் இடம்பெறும்படிச் செய்தார். கடவுளை 'அன்னை' எனக் கூறலும், ஹோமம் வளர்த்தலும் ஆரத்தி எடுத்தலும் அறிமுகப்படுத்தப்பட்டன. அதோடு, கங்கை, சந்திரன், அக்கினி ஆகியவை கடவுளின் படைப்பு

களாகக் கருதப்பட்டாலும் அவருடைய சக்தியையும் திட்பத்தையும் அவை வெளிப்படுத்துவதாகக் கூறி அவற்றுக்கு ஜெபங்கள் ஏற்றெடுக்கப்பட்டன.

கிறிஸ்தவ மதத்திலிருந்து திருமுழுக்கு திருவிருந்து ஆகியவைகளைக் கெசுப் நவவிதானத்தில் நுழைத்தார்.

கெசுப் சென் மதக் கருத்துக்களைக் குழப்பியவர் என்பதும் முன்னுக்குப் பின் முரணைப் பலவற்றைக் கூறியவர் என்பதும் உண்மையாயிருந்தும், கிறிஸ்துவிடம் அவருக்கிருந்த அளவு கடந்த அன்பும், படிப்படியாக அவர் கிறிஸ்துவை நெருங்கிய மாண்பும் கருதத் தக்கவை ஆகும். சென்னுடைய ஆன்மீக வாழ்வின் மையம் கிறிஸ்துவில் இருந்தது என்பதில் ஐயம் ஏதுமில்லை. இராம் மோகனரைப் போல் ஒருமை வாதியாக இராமல் அவர் திரித்துவத்தை ஏற்க முயன்றார். திரித்துவத்தைச் சத்து—சித்து—ஆனந்தம் ஆகியவற்றோடு ஒப்பிட்டு விளக்கினர்.

நானும் பிதாவும் ஒன்றே என ஆண்டவர் கூறிய வாசகத்தை இந்திய—இந்துப் பின்னணியோடு அவர் ஆழ்ந்து ஆராய முயன்றார். கிறிஸ்துவுக்கும் தந்தையாருக்கும் உள்ள தொடர்பு ஆழ்ந்த ஐக்கியத்தின்பாற்பட்டது என விளக்குகின்றார்.

கிறிஸ்து வழங்கும் மீட்பையும் ஊன்றி அறிவதில் அவர் ஆர்வம் காட்டியுள்ளார். முதலில் அவருடைய மீட்புப் பணி அவர் போதனையில் அடங்கிக் கிடப்பதாகக் கருதியவர் காலப் போக்கில், சிலுவை, ஒப்புரவு. பலி ஆகிய திருமறை விளக்கங்களால் அதைச் சரிவரப் புரிந்துகொள்ள முயன்றுள்ளார். கிறிஸ்து தனி மனிதர்களுக்கு மட்டுமல்ல, உலகம் முழுமைக்கும் உய்வினை வழங்குகிறார் என்ற உண்மையையும் சென் உணர்ந்து தெளிந்திருந்தார்.

திருச்சபையைப் பொறுத்தவரையில் அவர் இந்தியக் கிறிஸ்தவத் திருச்சபையை இந்தியப் பண்பாடு இல்லாததும் தேசிய உணர்வற்றதுமான சபையாகக் கருதினர். தாம் ஏற்படுத்திய நவவிதானம் மூன்றாவது முடிவான சபை என அவர் விளம்பரம் செய்தார். கடவுளின் முதல் ஈடுபாடும் இயக்கமும் இஸ்ரவேலரிடையே எழுந்தது; அது தந்தையாரின் இயக்கம்; இயேசு கிறிஸ்துவின் வருகையில் திருமைந்தரின் இயக்கம் இருந்தது; நவவிதானத்தில் தூய ஆவியானவரின் இயக்கம் உள்ளது என்று அவர் அறிவித்தார்.

இந்து மக்கள் பலர் அவரைக் கிறிஸ்தவர் என்றே கருதினர்கள். கிறிஸ்தவர்கள் அவரைப் பல மரங்களிலும் பழம் பறித்துண்பவராகக் கருதினர்கள். அவருடைய பேச்சிலும் எழுத்தி

லும் முரண்பாடுடைய கருத்துக்கள் இருக்கவேசெய்தன. ஆயின், அவரைத் தொடர்ந்து உபாத்தியாயா, வி. சக்கரை, செஞ்சையா, பரேக், ஃபகீர் பாய், ரேமாண்டு பணிக்கர் போன்ற இந்திய கிறிஸ்தவர்கள் நம் நாட்டுப் பின்னணியோடு கிறிஸ்தவ இறையியலை விளக்கம் செய்வதற்கான தூண்டுதல்களை அவர்களுக்களிக்கும் வகையில் கெசுப் சென் அவர்களுக்கெல்லாம் ஒரு முன்னோடியாக விளங்கினார் என்பதில் ஐயமேதும் இல்லை. அவர் கிறிஸ்துவின் பிடிப்புக்கு ஆளானவர்[1] என்பதும் உண்மையே. கெசுப் சென் மேலும் சில ஆண்டுகள் வாழ்ந்திருந்தால் அவர் கிறிஸ்தவராகித் திருச்சபையில் சேர்ந்திருப்பார் என்று பிரம்மபந்தாப் உபாத்தியாயா கருதுகின்றார். இராபின் பாய்டு அவரைப் பற்றி எழுதும்போது, "விலையுயர்ந்த முத்தினைக் கண்ட பின்பும் உடைமைகளை எல்லாம் விற்று அதை வாங்கிக்கொள்ளத் தயங்கித் தவறிய இந்துப் பெரியார்களின் கூட்டத்தைச் சேர்ந்தவர் அவர்"[2] என்று கூறுகிறார்.

கெசுப் சென் 1884ஆம் ஆண்டில் தம்முடைய நாற்பத்தியாரும் வயதில் காலமானார். அவருடைய மரணத்துக்குப் பின் பிரம்ம சமாஜத்தின் செல்வாக்கு நாட்டில் குறையலாயிற்று. தேபேந்திரரின் ஆதி சமாஜமும், முற்போக்காளர்களின் சாதாரண சமாஜமும் தொடர்ந்து இயங்கின.

## ஈ. சாதாரண பிரம்ம சமாஜம்

இது 1878இல் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து நல்ல செல்வாக்குப் பெற்று வளரலாயிற்று. இச் சமாஜம் முன்னைய சமாஜங்களைப் போலல்லாமல் சங்க அமைப்புமுறையில் திட்டமிட்டுச் செயற்பட்டுவந்தது. நாடெங்கும் கிளைச் சங்கங்கள் ஏற்படலாயின. 1911ஆம் ஆண்டில் 183 கிளைகள் இருந்தன. சமாஜத்தின் கொள்கைகள் ஒன்பது அம்சங்களைக் கொண்டதாக எழுதப்பட்டு வெளியிடப்பெற்றது. அவ்வாறே சமாஜத்தின் வாக்குறுதிப் பிரமாணம் ஒன்பது அம்சங்களைக் கொண்டதாக வெளியிடப்பட்டது. அப் பிரமாணத்தில் கடவுள், ஆன்மா, ஆன்மீக விதி, ஒழுக்க விதி, மறைகள், தீர்க்கர்கள், திருச்சபை ஆகியவை பேசப்படுகின்றன. கடைசி அம்சம் பிரமாணத்தின் சாரமாக அமைந்துள்ளது. அது வருமாறு:

"என் வாழ்க்கைப் பிரமாணம் கடவுளை அடுத்த இயலை ஒட்டியதாகும். அவ்வியல் யாவர்க்கும் ஒளிதரும் இயலாகும். கடவுளின் அன்பே நான் கூறும் நற்செய்தி. அது அனைவரை

---

1. S. Estborn, *Gripped by Christ*, pp. 9—20.

1. Robin Boyd, Indian Christian Theology, 1969, p. 27.

யும் உய்விக்கின்றது. கடவுளுக்குட்பட்ட நிலையில் வாழும் வாழ்க்கையே எனக்கு மோட்சம். அது எவர்க்கும் கிட்டுவ தாகும். என்னுடைய சபை கடவுளின் இராச்சியமே ஆகும். அதில் அனைத்துச் சத்தியமும், அன்பும், தூய்மையும் அடங்கும்''.

இச் சமாஜம் இன்றும் நம் நாட்டில் இயங்கி வருகின்றது. ஆயின், இந் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இதற்கிருந்த செல்வாக்கு இதற்கு இப்போது இல்லை.

கெசுப் சந்திர சென்னைத் தொடர்ந்து அவரைப் போன்று கிறிஸ்தவத்தில் ஈடுபாடு கொண்டவராய்ச் சென்னுடைய கருத்துக்களுக்கும் கொள்கைகளுக்கும் ஆக்கம் தேடியவர் P C மஜீம்தார் என்பார் ஆவார். 'கெசுபின் வாழ்க்கை, போதனை' என்ற தலைப்பில் ஒரு நூலும் 'பிரம்ம சமாஜத்தின் கொள்கைகளும் வளர்ச்சியும்' என்ற தலைப்பில் ஒரு நூலும் 'கீழ் நாட்டவராகிய கிறிஸ்து' என்ற தலைப்பில் ஒரு நூலும் அவர் எழுதியுள்ளார். இவரைத் தவிர்த்து வேறு எவரும் பிரம்ம சமாஜத்தில் கிறிஸ்துவிடம் ஈடுபாடு கொள்ள முற்படவில்லை.

சமாஜத்தின் தொழுகைக் கூட்டங்களில் கிறிஸ்தவத் திருமறையிலிருந்து சில பகுதிகளை வாசிக்க சென் செய்த ஏற்பாடு இன்றளவும் இடம்பெற்று வருகின்றது. பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்தவர்கள் பொதுவாக இராம் மோகனரைப் போல் கிறிஸ்துவை உயர்ந்த அறநெறியாளராக ஏற்கின்றார்களே தவிர, கெசுப் சென்னைப் போல் அவரை நெருங்கிக் காண முற்படுவதில்லை. அவருடைய வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் விளங்கும் மீட்பைப் பற்றி அறியும் ஆர்வம் அவர்களிடையே காணப்படவில்லை என்கிறார் சந்த்ராம்.[1]

## உ. பிரார்த்தனை சமாஜம்

பிரம்ம சமாஜத்தின் வரலாற்றை ஆராயும்போது மராட்டிய மாநிலத்தில் அதன் கிளையாகத் தோன்றிய பிரார்த்தனை சமாஜத்தைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. 1864இல் கெசுப் முதன் முறையாகப் பம்பாய்க்குச் சென்று சமாஜப் பிரச்சாரம் செய்தார். கற்றறிந்த பெரியோர்கள் வட்டாரத்தில் பெருத்த எழுச்சி ஏற்பட்டது. அதன் விளைவாகப் பம்பாயில் 1867இல் பிரார்த்தனை சமாஜம் தோற்றுவிக்கப்பட்டது. ஆத்மாராம் பாண்டுரங் என்பார் அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றார். ஆர். ஜி. பண்டாரகர், இரானடே போன்ற பெரியோர்கள் அதில் சேர்ந்து அதன் வளர்ச்சியில் ஆர்வங் காட்டினார்கள்.

1822இல் மஜீம்தார் கல்கத்தாவினின்றும் பம்பாய்க்கு வந்து சமாஜத்தின் வளர்ச்சிக்குத் துணையாகப் பிரச்சாரம்

---

1. Philip J. Santram, 'Christ of the Brahmo Samaj Movement' in *Religion and Society* Vol. XI, No. 3. September 1964, pp. 11—12.

செய்தார். இராப் பள்ளிக்கூடங்கள் துவக்கப்பட்டன. பண்டித இராமா பாய் கிறிஸ்தவராவதற்கு முன்பு இச் சமாஜத்தின் மூலம் பெண்களிடையே அரும்பணி ஆற்றினர் (1882—1883). ஆரிய மஹிலா சமாஜம் என்ற பெயரில் பெண்களுக்கென அவர் ஒரு சமாஜம் நிறுவினர்.

பிரார்த்தனை சமாஜத்தில் பிரம்ம சமாஜம் போன்று மிஷனரிமார் அதிகமாக எழவில்லை. ஒரு சிலரே பணியாற்றும் தொண்டர்களாக விளங்கினர்கள். மராட்டிய மாநிலத்தில் ஒரு சில இடங்களில் மட்டுமே கிளைச் சமாஜங்கள் தோன்றின. பிரம்ம சமாஜத்தினரைப் போன்று பிரார்த்தனை சமாஜத்தினர் பேரளவில் நூல்களை வெளியிடவில்லை.

பிரார்த்தனை சமாஜத்தின் கொள்கைகள் சாதாரண பிரம்ம சமாஜத்தின் கொள்கைகளிலின்றும் மாறுபட்டவை அல்ல. ஆயின், சாதி வேறுபாடுகளை வங்காளத்துப் பிரம்ம சமாஜத்தினர் களைந்தொதுக்கியதைப்போல் மராட்டிய சமாஜத்தவர் ஒதுக்கவில்லை.

கிறிஸ்தவத் திருச்சபையையும் அதைச் சார்ந்த இளைஞர், மாணவர் இயக்கங்களையும் பின்பற்றி இச் சமாஜத்தினர் கூட்டங்கள் நடத்துவதிலும் விழாககள் கொண்டாடுவதிலும் சமுதாயப் புனரமைப்புப பணிகளில் ஈடுபடுவதிலும் பெருங்கவனம் செலுத்தினர்கள்.

## துணை நூற்கள்


1. Ram Mohan Roy, *The Precepts of Jesus*, Calcutta, 1820.

2. P. C. Mozoomdar, *The Life and Teachings of Keshub Chunder Sen*, Calcutta, 1887.

3. ,, , *The Oriental Christ*, Boston, 1898.

4. Keshub Chunder Sen, *Lectures in India*, The Brahmo Samaj, Cassell, London, 1909.

5. Parek, M. C., *Brahmarshi Keshub Chunder Sen*, Rajkot, 1926.

6. Parekh M. C., *Rajarshi Ram Mohan Roy*, Rajkot, 1927.

7. Farquhar, J. N., *Modern Religious Movements in India*, Macmillan and Co., Ltd. London, 1929

8. சு. லலிதாம்பாள், இராசாராம் மோகன் ராய், வானதி பதிப்பகம், சென்னை - 7, 1968.

2

# ஆரிய சமாஜம்

## ஞான இருபின்சன்

### அ. சுவாமி தயானந்த சரஸ்வதியும் ஆரிய சமாஜத்தின் தோற்றமும்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் எழுந்த முக்கிய சமய இயக்கங்களுள் ஆரிய சமாஜம் ஒன்றாகும். இதைத் தோற்றுவித்தவர் சுவாமி தயானந்த சரஸ்வதி என்பவராகும். இவருடைய இயற்பெயர் மூல சங்கரன். இவர் 1825 இல் குஜராத் நாட்டில் டங்காரா என்ற கிராமத்தில் சைவப் பிராமண குலத்தில் பிறந்தார் சிறு பருவத்திலிருந்தே இவருக்குப் பாரம்பரிய சைவ சமயக் கொள்கைகளில் பல சந்தேகங்கள் தோன்றின. இவர் மார்க்க சம்பந்தமான அலுவல்களில் ஈடுபடவேண்டுமென்ற நோக்கத்துடன் இவரது பெற்றோர் இவருக்கு அதற்கேற்ற கல்விகளைப் புகட்டினர். இவர் தமது 14 வயது பருவத்திலேயே வேதத்தின் மிகுதியான பாகங்களையும் மனப்பாடம் செய்துள்ளார் என்பது பாரம்பரியம். வேதங்களை நன்றாக ஆராய்ந்தார். பல சந்தேகங்கள் எழும்பின. பலரிடம் கேட்டும் அவருக்குத் திருப்தியளிக்கும் விடைகள் கிடைக்கவில்லை. சிலை வணக்கத்தில் வெறுப்புகொண்டார். இவருடைய 18 ஆம் வயதில் இவர் சகோதரி மரிக்கவே இவருக்குத் தம் மரணத்தைக் குறித்த திகிலும், மரணத்திற்குப் பின் வாழ்வு உண்டோ என்னும் ஐயமும் எழலாயிற்று. இந் நிலையில் இல்லற வாழ்க்கையைப் பற்றிய விருப்பம் அற்றவராகக் காணப்பட்டார். தமது 22 ஆம் வயதில் பெற்றோர் திருமணத்திற்கான ஒழுங்குகளைச் செய்யவே வீட்டைவிட்டே ஓடிப்போனார். பின் சிலகாலம் வீடு வாசல் அற்றவராய்க் காடுகளில் சுற்றித் திரிந்து கடைசியாக மத்திய இந்தியாவில் நர்மதை ஆற்று ஓரத்திற்கு வந்து சேர்ந்தார். அங்குப் பரமானந்தர் என்னும் ஓர் துறவியைக் கண்டு அவருக்குச் சீடராகி அமர்ந்தார். அங்குவைத்து ஜீவான்மாவும் பரமான்மாவும் ஒன்றுதான் என்ற உபதேசத்தை ஒப்புக்கொண்டார் அதன்படி துறவு வாழ்க்கையையும் மேற்கொண்டார். இதனால் பரமானந்தர் இவரையும் தம் குழுவில் சேர்த்து இவருக்குத் தயானந்த சரஸ்வதி என்ற புதுப் பெயரைச் சூட்டினார் இதிலிருந்து இவர் இப் பெயராலேயே அறியப்பட்டார்.

இந் நிலையில் ஜீவான்மாவும் பரமான்மாவும் ஒன்றுதான் என்ற வேதாந்தக் கொள்கையிலும் அவருக்கு ஐயம் எழுந்தது. உலகம் மாயை, கடவுள் நிர்குணர், ஆள் தத்துவமற்றவர் என்ற கொள்கை இவருக்குச் சரியாய்த் தோன்றவில்லை.

இதன்பின் பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டார். கடவுளை யோக முறைகளில் அறிந்துகொள்ளலாம் என்றெண்ணி யோகாப்பியாசங்களைக் கற்ருர் இதுவும் அவருக்குத் திருப்தியளிக்கவில்லை. ஆகையால் தனக்குச் சரியான போதனையைத் தரக்கூடிய ஆசிரியரைத் தேடியலைந்தார். இறுதியில் வட இந்தியாவில் மதுராபுரி என்னுமிடத்தில் விரஜானந்தர் என்னும் பிறவிக் குருடரான துறவியைச் சந்தித்தார். இத் துறவி இவருக்கு நான்கு வேதங்களின் பொருளைக் காட்டி, அதுவே உலகத்தை மீட்க வல்லது என்று போதித்தார். உலக மக்கள் எல்லோரும் ஒரே சமுதாயமாக வாழவேண்டுமென்ற உண்மையையும் புகட்டினர். இவருடைய போதனையை மனமார ஏற்றுக்கொண்ட தயானந்தர் பம்பாயில் வைத்து 1875 இல் ஆரிய சமாஜத்தை நிறுவினர். இதைப் பலப்படுத்தி இதன் கிளைகளை நிறுவ ஆறு ஆண்டுகளாய்ச் சுற்றித் திரிந்தார். இந்தியா முழுவதும் ஆரியமயமாகவேண்டும் என்பது இவரது ஆவல். இதற்கு இடையூருக இருந்த கிறிஸ்தவத்தையும், இஸ்லாமையும் இவர் தம் நூல்கள் மூலமாகவும் சொற்பொழிவுகள் மூலமாகவும் தாக்கினர்.

இவர் ஆரிய சமாஜத்தைக் கிறிஸ்தவ சமயத்தைப்போல் அமைக்க விரும்பினர். கிறிஸ்தவர்களுடைய விசுவாசப் பிரமாணத்தைப்போல ஒரு விசுவாசப் பிரமாணம் கொடுக்கப்பட்டது. அதில் பத்து அம்சங்கள் காணப்பட்டன. இந்து மார்க்கத்தில் பல சீர்திருத்தங்களையும் செய்தார். சடங்குகளில், குறிப்பாகப் புண்ணிய பயணங்களில் பயனில்லை என்ருர். ஜாதி பேதமின்றி யாவரும் வேதங்களைப் படிக்கலாமென்ருர். ஒரே கடவுளைச் சிலையின்றி வழிபட மக்களைத் தூண்டினர். விதவை மறுமணத்தை ஆதரித்தார்.

1877 இல் சில நண்பர்கள் இவரைப் பஞ்சாபிற்கு விரும்பி அழைத்தனர். அங்குச் சென்ற இவர் அங்கும் ஆரிய சமாஜத்தை நிறுவினர். ஆரிய சமாஜம் அங்கு மிகுந்த வெற்றியடைந்தது. இதன் வெற்றியில் பம்பாய் ஆரிய சமாஜத்தின் முக்கியத்துவம் குறைந்து காணப்பட்டது.

தயானந்தர் தமது காலத்தில், அக் காலத்தில் புகழ்பெற்றிருந்த பிரம்ம சமாஜம், பிரார்த்தனை சமாஜம், பிரம்ம ஞான சபை (Theosophical Society) ஆகியவற்றுடனும் முதலில் தொடர்பு கொண்டு பின்னல் விலகிச் சென்ருர்.

1872 இல் இவர் கல்கத்தா சென்றபோது தேபேந்திரநாத் தாகூரும், கெசுப் சந்தர் சென்னும் இவரை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். இவர் சமஸ்கிருதத்தில் அடைந்திருந்த தேர்ச்சியும், ஜாதி வேறுபாடு, சிலை வணக்கம் ஆகியவற்றைக் குறித்துக் கொண்டிருந்த சீர்திருத்தக் கருத்துக்களும் அன்னரை வெகுவாய்க் கவர்ந்தன. ஆனல் வேதங்கள் குறையற்றவை

என்றும், மறுபிறவி உண்டென்றும் தயானந்தர் கொண்டிருந்த கருத்துக்களுடன் அவர்களால் இணங்கக் கூடவில்லை. ஆயினும் பிரம்ம சமாஜத் தலைவர்களின் செல்வாக்கு தயானந்தரில் பெரு மளவில் காணப்பட்டது. கெசுப் சந்தர் சென்னின் ஆலோசனை யின்பேரில்தான் தயானந்தர் சமஸ்கிருதத்தில் உரையாற்று வதை விடுத்து, ஹிந்தியில் சொற்பொழிவுகள் நிகழ்த்தத் தொடங்கினர். இதனல் இவர் பொதுமக்களுடன் நேரடித் தொடர்புகொள்ள, அவர் போதனை பரம்பலாயிற்று. 1874 இல் இவர் பிரார்த்தனை சமாஜத் தலைவர்களைச் சந்தித்தார். இவர் கள் பிரம்ம சமாஜத்துடன் தொடர்புள்ளவர்கள் ஆதலால் இவர் களுடனும் இவர் ஒத்துழைக்க முடியவில்லை. 1877 இல் பிரம்ம ஞான சபையின் தாபகர்களான கர்னல் ஓல்காட் (Colonel Olcott), மேடம் பிளவாட்ஸ்கி (Madame Blavatsky) ஆகியோர் இந்தியாவுக்கு வந்து தயானந்தரைச் சந்தித்தனர். தயானந் தரது நோக்கம் தங்கள் நோக்கத்துடன் ஒத்திருப்பதால் அவர் தம்மோடு இணைந்துவிட வேண்டுமென்றனர். தயானந்தரும் இதற்கு ஒப்புக்கொண்டார். ஆனல் ஓரிரு ஆண்டுகளுக்குள் இரண்டிற்கிடையிலும் கருத்து வேறுபாடுகள் தோன்றி 1881 இல் இறுதியான பிளவு ஏற்பட்டது.

இவர் 1883 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30 ஆம் நாள் மறுமை எய்தினர்.

## ஆ. தயானந்தர் போதனைகள்

சுவாமி தயானந்தர் சத்யார்த்தப் பிரகாசா (*Satyartha Prakasha*) என்னும் தம் நூலின் இறுதியில் தம்முடைய நம்பிக்கைகளைத் தொகுத்துத் தருகிருர். இதில் 51 விசுவாச அம்சங்கள் அடங்கி யுள்ளன. இவற்றைப் பின் வரும் தலைப்புகளின்கீழ் பாகு படுத்திக் கூறுகிருர் பேராசிரியர் D. S. சர்மா [1].

**1. அதிகாரப்பூர்வமான அவர் ஆதாரங்கள்:** வேதங்கள் நான்கும் கடவுளுடைய வாக்கு. அவற்றில் எந்தவிதத் தவறும் கிடையாது. இதர மறை நூல்கள் யாவும் வேதங்களின் விளக்கங்களே.

**2. அவர் தத்துவம்:** பிரம்மன், உன்னதமானவர், பர மாத்மன், உன்னத ஆவி என்றெல்லாம் அறியப்படுபவர் ஆளி யல்புபெற்ற சத்-சித்-ஆனந்தா ஆகும். இவர் எல்லாம் காண் கிறவர், எங்கும் நிறைந்தவர், உருவமற்றவர், பிறவாதவர், நித்தியர், சர்வ வல்லவர், நீதியும் இரக்கமுமுள்ளவர். இவர் பிரபஞ்சத்தைப் பாதுகாக்கவும் அழிக்கவும் செய்கிருர். பூரண நீதியின் அடிப்படையில் ஆத்துமாக்களுக்கு அதனதன் கிரியை யின் அடிப்படையில் பலனளிக்கிருர். அவரே மகாதேவன்.

1. D. S. Sarma, *Hinduism Through the Ages*, pp. 92 ff.

கடவுளும் ஆன்மாவும் இயல்பாலும், பண்புகளாலும் வேறுபட்டுள்ளனர். ஆயினும் ஆட்கொண்டவர், ஆட்கொள்ளப்பட்டவர் என்ற நிலையில் இருவரும் பிரிக்க இயலாதவர். ஒரு இடத்திற்கும் அந்த இடத்தில் வைக்கப்பட்டப் பொருளுக்கும் உள்ள உறவைப்போன்றதாகும் கடவுளுக்கும் ஆன்மாவுக்குமிடையிலுள்ள உறவு. பிரபஞ்சத்தின் பருப்பொருளை இயங்கச் செய்வது பிரக்ரிதியாகும் (Prakriti) கடவுள், ஆன்மா, பிரக்ரிதி ஆகிய மூன்றும் தொடக்கமற்றவை (யோக தத்துவம் இதையே கூறுகின்றது). உலகைக் கடவுள் பிரக்ரிதியிலிருந்து படைத்தார். ஆன்மா அறிவீனத்தினால் இப் பிரபஞ்சத்தில் அடிமைப்பட்டுள்ளது. மீட்பு இந்த அறிவீனத்திலிருந்து ஆன்மா விடுபட்டு எங்கும் நிரம்பியிருக்கும் கடவுளில் சிறிது காலம் சுயாதீனமடைந்து மீண்டும் மண்ணுலக வாழ்க்கையைத் தொடங்குவதாகும்.

3 **அவர் அறநெறி:** தர்மம் என்பது நீதியைச் செய்து, சொல்லிலும் செயலிலும் நினைவிலும் உண்மையாயிருப்பதைக் குறிக்கிறது. நேர்மையாய்ப் பெற்ற செல்வம் அர்த்தா (*artha*) எனப்பட்டது. தவறாக ஈட்டப்பட்டச் செல்வம் அனர்த்தா (*anartha*) எனப்பட்டது. நேர்மையான இன்பங்களை அனுபவிப்பது காமா (*kama*) எனப்பட்டது. ஜாதி (*varna*), ஜாதிக்குரிய தொழில் (*ashrama*) என்பனவையெல்லாம் ஒருவனது பண்பை அடிப்படையாகக்கொண்டு அமையவேண்டுவன. கற்ற ஞானிகள் தேவர்கள்; கல்லாத மூடர் அசுரர்கள், துன்மார்க்கர் இராட்சதர்கள்; தங்கள் நடக்கைகளில் அழுக்காறடைந்தவர் பிசாகர் (*pisachas*). திருமணம் என்பது ஆண் பெண் இருவர் கருத்தொருமித்து வேதங்கள், சாஸ்திரங்கள் விதித்த நெயிறின்படி ஒன்றாக இணைவதாகும்.

4. **மீட்பின் மார்க்கங்கள்** (*sadhanas*): வழிபாடு, நீதியான செயல்கள், பிரம்மச்சாரியத்தின் மூலம் மெய்யறிவை அடைதல் முதலியன. வழிபாட்டில் துதி (*stuti*), மன்றாட்டு (*prarthana*), தியானம் (*upasana*) என்று மூன்று நிலைகள் உள்ளன.

5. **ஆசாரங்கள்** (*samstaras*): மனிதனின் உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றின் விருத்திக்கான சடங்குகள். கரு உருவாதல் முதல் இடுகாடடையும்வரை செய்யவேண்டிய 18 சடங்குகள் உண்டு. இவற்றை எல்லோரும் ஆசரித்தாக வேண்டும்.

தயானந்தர் இஸ்லாமையும் கிறிஸ்தவத்தையும் அடியோடு வெறுத்தார். ஆங்கில அறிவு அவருக்கு இல்லையாதலால் அவர் முழுக்க முழுக்க இந்தியச் சூழ்நிலைகளிலிருந்து எடுத்துப் பேசினதினால் பெருவாரியான மக்களைக் கவர்ந்தார்.

தயானந்தரின் இப் போதனையின் அடிப்படையில்தான் ஆரிய சமாஜத்தின் விசுவாச அறிக்கை உருவாக்கப்பட்டது. பம்பாயில் 1875 இல் சமாஜம் தோற்றுவிக்கப்பட்டது. இந்த அறிக்கையில் 28 நியதிகள் இருந்தன. 1877 இல் லாகூரில் வைத்து இது மீண்டும் பரிசீலிக்கப்பட்டு 10 நியதிகளாகச் சுருக்கப்பட்டது. அவைகளாவன:

1 எல்லாவற்றிற்கும் காரணர் கடவுளே.

2 கடவுள் முழு உண்மை, முழு ஞானம், உருவற்றவர், சர்வ வல்லவர்......

3 வேதங்களே உண்மையானவை.

4 உண்மையைக்கொண்டு பொய்யை மறக்கவேண்டும்.

5 மக்களின் சரீர ஆன்மீக வளர்ச்சிக்கு உதவவேண்டும்.

6 எல்லோரையும் அன்போடும் நீதியோடும் அவரவரின் திறமைக்குத் தகுந்த மரியாதையோடும் நடத்தவேண்டும்.

7 அறிவீனத்தை அகற்றி அறிவைப் புகட்டவேண்டும்.

8 தமக்குக் கிடைக்கும் நன்மையை மாத்திரம் எதிர்பாராது மற்றவர்களின் நலனையும் எதிர்பார்த்துச் செயல்களை நடப்பிக்கவேண்டும்.

9 பொது வாழ்வுக்கானவைகளில் எண்ண வேற்றுமையின்றி ஒத்துப் போகவேண்டும். தமக்கானவைகளில் சொந்த எண்ணம் கொள்ள உரிமையுண்டு.

சமாஜத்தில் அங்கமாக விரும்பும் எவரும் மேற்கூறிய இந்த விதிகளைக் கடைப்பிடித்தொழுகுவதாக உறுதியளிக்கவேண்டும். இவற்றில் எட்டு நியதிகள் பொதுவானவை, எல்லோராலும் ஒப்புக்கொள்ளக்கூடியவை. கடவுள் ஒருவரே, அவர் ஒருவருக்கே உருவமின்றி வழிபாடு செய்யவேண்டும் என்பதும், வேதங்களே முடிவான அதிகாரமுடையவை என்பதும் கருத்து வேற்றுமைகளுக்கு இடங்கொடுப்பவையாகும்.

## இ. தயானந்தருக்குப்பின் ஆரிய சமாஜம்

தயானந்தர் இறந்து பத்தே ஆண்டுகளுக்குள் தயானந்தரின் சொற்கள் எவ்வளவு தூரத்திற்குச் சமாஜத்தரைக் கட்டுப்படுத்தும் என்ற ஒரு பிரச்சனை எழுந்தது. சமாஜத்தின் பழமைப் பற்றுள்ளோர் வேதங்களைப்போலவே தயானந்தரின் சொற்களும் தங்களைக் கட்டுப்படுத்தும் என்று கொண்டனர். ஆனால் முன்னேக்கவாதிகள் தயானந்தரின் சொற்கள் தங்களைக் கட்டுப்படுத்தமாட்டா என்றும், சமாஜத்தின் பத்து விதிகளுக்கும் புறம்பே அங்கத்தினர் தங்கள் தீர்மானங்களைக் கொண்டு

செயலாற்ற அவர்களுக்குச் சுயாதீனம் உண்டு என்றும் கொண்டனர். இந்தக் கருத்து வேறுபாடு குறிப்பாக இரு காரியங்களில் வெளிப்பட்டது: (1) 1886 இல் தொடங்கப்பட்ட தயானந்தா ஆங்கில வேத கல்லூரியின் Dayananda Anglo-Vedic College பயிற்சி நவீன முறைப்படி அமையவேண்டுமா? அல்லது வைதீக இந்து முறைப்படி அமையவேண்டுமா? (2) ஆரிய சமாஜ அங்கத்தினர் புலால் உண்ணுதவர்களாகத்தான் இருக்க வேண்டுமா? அப்பொழுது தலைவராயிருந்த முல்ராஜ் (Mulraj) என்பவர் முன்னேக்கவாதியாக இருந்ததால், தம்முடைய கருத்துக்களை அங்கத்தினர்மேல் திணிப்பது தயானந்தர் நோக்கமல்ல என்ருர். ஆயினும், வைதீகத்தில் ஊறிப்போன பொது மக்களை மாற்ற இயலாததால், தயானந்தரின் போதனைகளும் சமாஜத்தின் போதனைகளுடன் அதிகாரமுடையனவாகக் கொள்ளப்பட்டன. இப்படியாகச் சமாஜம் வேதங்களின் அதிகாரத்தை மட்டுமல்ல, கர்மா-மறுபிறவி, பசுவின் புனிதம், ஆசாரங்கள், ஆகியவற்றையும் வலியுறுத்தினது. விக்கிரக வழிபாடு, மிருக பலி, முன்னேர் வழிபாடு, புண்ணிய பயணம், மந்திரவாதம், ஜாதிபேதம், தீண்டாமை, பால்ய விவாகம் முதலானவற்றை வன்மையாகக் கண்டித்தது. வேதத்தை ஆதாரமாகக்கொண்ட ஒரு அனைத்துலகச் சபையை அது தன் இலக்காகக் கொண்டது.

தயானந்தர் உபநிஷத்துக்களையும் கீதையையும் தமது விசுவாச அறிக்கையில் கொண்டுவந்திருந்தால் ஒருவேளை அவர் அதிக வெற்றியை அடைந்திருக்கலாம். ஆனல் அவர் தம் அதிகாரத்தின் ஆதாரத்தைக் கட்டுப்படுத்தினதினல் தாம் மேற்கொண்டச் சமயச் சீர்திருத்தத்தைத் தீவிரமாகவும் வெற்றியாகவும் செய்ய முடிந்தது அவர் இந்து சமயத்திற்குச் செய்துள்ள சேவையை யாரும் மறுக்கமுடியாது.

சமாஜம் "சுத்தி" (*shuddhi*) என்னும் சடங்கின்மூலம் இந்துக்கள் அல்லாதாரை இந்து மதத்திற்குள் கொண்டுவந்தது. தாழ்த்தப்பட்டோரையும், தீண்டாதோரையும் இச் சடங்கின் மூலம் புனித நூல் தரிக்கச் செய்து இதர இந்துக்களுடன் சம அந்தஸ்துள்ளவராக்குகிறது.

சங்காதன் (*shangatan*) என்ருல் ஒருமைப்பாடு என்று பொருள். தற்பாதுகாப்புக்காக இந்துக்கள் ஒருமைப்படவேண்டுமென்பதும் சமாஜத்தின் திட்டங்களில் ஒன்ருகும். இந்துக்கள் ஒன்றுசேர்ந்து எதிரியைத் தாக்கவேண்டும். இந்த அடிப்படையில் தயானந்தரைப் பின்பற்றிச் சமாஜம் இஸ்லாமியரையும், கிறிஸ்தவரையும் கடுமையாகத் தாக்கினது. கிறிஸ்தவர்களான இந்துக்களை மீண்டும் இந்துக்களாக்க முயன்றது. இவ்வாறு ஆரிய சமாஜம் அந்நிய ஆளுகைகளுக்குள் மழுங்கிப்போயிருந்த இந்து சமூக உணர்ச்சியை உசுப்பி எழுப்பி உரமூட்டினது என்கிருர் சர்மா[1].

---

1. Op. cit. p. 99.

மேலும், சமாஜம் தன் விசுவாச அறிக்கையின் எட்டாவது விதிக்கிணங்கக் கல்வித் தாபனங்களை நிறுவி அறிவீனத்தை அகற்றப் பாடுபட்டுவருகிறது. லாகூரிலுள்ள தாயனந்த ஆங்கில—வேத கல்லூரியும், காங்க்ரியிலுள்ள குருகுலாவும் இரண்டு முக்கிய கல்வி நிறுவனங்களாகும். இவை இரண்டும் ஆரிய சமாஜத்தில் எழுந்த இரு கட்சிகளைக் குறிப்பிட்டன. முன்னது கல்லூரிக் கட்சி என்றும், பின்னது குருகுலக் கட்சியென்றும் அறியப்பட்டன. இவை தம்மில் கருத்து வேறுபாடுகள் கொண்டிருப்பினும் வெளி எதிர்ப்புகள் ஏற்படும் போது ஒன்று சேர்ந்து எதிர்ப்புக்களைச் சமாளித்தன. இப்படியாக 1897 இல் பண்டித் லெக் ராம் (Pandit Lekh Ram) முஸ்லீம் ஒருவனால் கொல்லப்பட்டபோது, 1903 இல் கிறிஸ்தவர்கள் பஞ்ச நிவாரணத்தின் மூலம் மதமாற்றம் செய்ய முயன்றபோது, 1922, 23 இல் பலவந்தமாக இஸ்லாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட 2,000 குடும்பங்களை மீண்டும் இந்துக்களாக்கினபோது, இன்னும் பல வேளைகளில் இரு கட்சிகளும் ஒன்றுகச் செயல்பட்டு அமோக வெற்றி கண்டன.

இந்த நூற்றுண்டின் தொடக்க காலம் ஆரிய சமாஜத்திற்குச் சோதனை நிறைந்த காலமாயிருந்தது. சமாஜம் மலபார், இராஜ்புட்டான் ஆகிய பல இடங்களில் இஸ்லாமாக்கப்பட்ட இந்துக்களை மீண்டும் இந்துக்களாக்கிச் "சுத்தி" செய்த்து இஸ்லாமியருடைய கோபத்தைக் கிளறினது. இந்து முஸ்லீம் ஒருமைப் பாட்டுக்காகப் பாடுபட்டோர் ஆரிய சமாஜத்தின் பிரச்சாரங்களைக் கண்டித்து அதனையே குறை கூறினர். ஆகையால் சமாஜத்தினர் பலர் நிலைமையைத் தெளிவாக்கித் தங்கள் உரிமைகளை உறுதிப்படுத்த விழைந்தனர்.

இவ் வேளையில் அகில நாட்டு ஆரியர் சங்கம் (International-Aryan League) அனைத்திந்திய ஆரியர் காங்கிரசை (All India Aryan Congress) 1927 இல் டெல்லியில் கூட்டினது. ஆரிய சமாஜத்தாருக்குப் பல சூழ்நிலைகளில் சமய சுதந்திரம் வழங்கப் படாதது பற்றி விவாதிக்கப்பட்டது. சத்தியாக்கிரகத்தின் மூலம் எதிர்ப்பைத் தெரிவிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால் உடனடியாக அது நிறைவேற்றப்படவில்லை. ஆனால் 1939 இல் ஹைதரபாத்தில் சமாஜத்தினர் பணி தடை செய்யப் பட்டபோது 12,000 பேர் சத்தியாக்கிரகம் செய்து பலர் சிறைக்குச் சென்றனர். சிறையில் இருபதுக் கதிகமான பேர் மாண்டனர். இறுதியில் நிசாம், சமாஜத்தினர் கோரிக்கைகளுக்கு விட்டுக் கொடுக்க நேர்ந்தது. இந்த வெற்றி நீடிக்கவில்லை. இது நடந்து ஒரு மாதத்திற்குள் இரண்டாம் உலக யுத்தம் மூண்டது. இந்த யுத்தம் இந்து முஸ்லீம் வெறுப்பைக் கிளறிவிட்டது. (இந்த வெறுப்பே இந்தியா பாகிஸ்தான் பாகுபாட்டில் சென்று முடிந்தது). ஆங்கிலேயருடைய பிரித்து ஆளும் போங்கும் இந்த வெறுப்புக்குத் தூபமிட்டது. சமாஜத்

தினர் பல தாக்குதல்களுக்கு ஆளாயினர். 1943 இல் சிந்துவில் வெளியிடப்பட்ட சத்தியார்த்தா பிரகாஸ் என்னும் தயானந்தரின் நூல்மேல் சிந்து இஸ்லாமிய அரசு தடை விதித்தது. நூலின் 14 ஆம் அதிகாரம் அகற்றப்படாமல் நூலை யாரும் வைத்திருக்கக்கூடாது என்றது. சமாஜத்தினர் எதிர்ப்புத் தெரிவித்தும் பயனென்றுமில்லை.

இவ் வேளையில் யுத்தம் ஓய்ந்தது. அகில இந்திய காங்கிரசிலுள்ள இந்துத் தலைவர்கள் ஒன்றாகச் சுதந்திரப் போராட்டத்தை நடத்துவதற்காக முஸ்லீம் தலைவர்களைப் பிரீதிப்படுத்த முயன்றுகொண்டிருந்தனர். ஆதலால் சமாஜத்தினர் இக்காலத்தில் பொறுமையாக இருப்பதேயல்லாமல் ஒன்றும் செய்ய முடியவில்லை. இந்த நிலைமையைப் பயன்படுத்தி சிந்து அரசு ஒருபடி முன்னேறி அப்புத்தகத்தை அச்சிட்டு வெளியிடுவதையே தடை செய்தது. காங்கிரசாரிடமிருந்து தங்களுக்கு நன்மை ஏதும் வராது என்று கண்ட சமாஜத்தினர் 1947, ஜூன் 14 இல் சத்தியாக்கிரகம் செய்யலாயினர். அத் தடையை மீறி வெற்றி கண்டனர்.

ஆனால் இந்த வெற்றியைத் தொடர்ந்து ஒரு பெரிய அதிர்ச்சி ஏற்பட்டது. இந்த அதிர்ச்சியிலிருந்து சமாஜத்தினர் இன்னமும் விடுபடவில்லை. அதே ஆண்டில் சமாஜத்தின் இருதயம் போன்ற லாகூர் தலைமைத்தானம் இந்திய பாகிஸ்தான் பாகுபாட்டின்போது பாகிஸ்தானுக்குச் சென்றது. இதைத் தொடர்ந்து விவரிக்கவொண்ணு தீங்குகள் ஏற்பட்டன. பல கோடிரூபாய் பெறுமானமுள்ள சமாஜத்தின் சொத்துக்களும், நிறுவனங்களும் பறிபோயின. ஆயிரக்கணக்கான சமாஜத்தினர் பலியாயினர். இப்பொழுது சமாஜம் தன் தலைத்தானத்தை டெல்லியில் அமைத்து 1947-'48 இல் ஏற்பட்ட அழிவிலிருந்து மீள முயன்றுகொண்டிருக்கிறது.

## ஈ. முடிவுரை

இந்து சமயத்தின் ஆற்றல் மிக்க சபை ஆரிய சமாஜம் எனலாம். இதன் தத்துவங்களும் போதனைகளும குறைபாடுடையனவாக இருக்கலாம், ஆனால் இந்து சமயம் சுததீகரிக்கப் படவும் பலப்படுததப்படவும பெருமளவில் இது காரணமாயிருந்துள்ளது என்பதை யாரும் மறுக்கமுடியாது. இந்து சமயத்தின உரிமைகளைக் காப்பதையே இது தன் இலக்காகக் கொண்டுள்ளதெனலாம்.

இன்று காணப்படும் சமயச்சார்புள்ள அரசியல் கட்சிகள் சிலவற்றின் வேர்களை ஆரிய சமாஜததில் காணலாம் என்ருல் அது மிகையாகாது. இந்தியா முழுவதும் ஆரியமயமாக வேண்டுமென்பது தயானந்தர் அவா. இராம இராஜ்யமே இந்தியா

விற்கு ஏற்றது என்பது சமாஜத்தார் நம்பிக்கை. இதையே இந்திய தந்தை காந்தியடிகளும் (வெறியுணர்ச்சியின்றி) கூறினர்.

இன்று இந்துக்களின் உரிமைகளை எல்லாத் துறைகளிலும் காக்கும் நோக்கத்துடன் எழுந்துள்ள ஹிந்துமஹாசபை, ராஷ்டிரிய சுயம் சேவா சங்கம், ஜனசங்கம் என்னும் அரசியல் கட்சிகள் தங்கள் ஊக்கத்தையும், நோக்கத்தையும் ஆரிய சமாஜத்திடமிருந்தே பெற்றுள்ளன எனலாம். இந்தியா இந்துக்களுக்கே என்பது இவர்கள் பொதுவான கோரிக்கை இது வெறியாக மாறி பல வேளைகளிலும் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கே உலைவைக்கும் ஆபத்து அடிக்கடித் தலைதூக்குவதை நாம் நடைமுறையில் காண்கிறோம்.

இந்துக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நிலையில், அன்றைடையில் காணப்பட்ட தீங்குகளை அகற்றும் வகையில் சமாஜம் ஆற்றிய தொண்டுகளைப் பாராட்டுகிறோம்; அதே வேளையில் பிறமக்களோடு சகோதர மனப்பான்மையுடன் வாழ தம் சமயத்தவரைத் தூண்டாது பிரிவினையுணர்ச்சியைக் கிளறும் அதன் கொடுக்கை நினைத்து வருந்துகிறோம். இந்தக் கொடுக்கு அகற்றப்படுமானல் இச் சமாஜம் இந்தியாவில் வாழும் பெருவாரியான இந்து சகோதரர்களிடை நற்பணியாற்ற முடியும் என்பதில் ஐயமில்லை.

## துணை நூற்கள்


1. Farquhar, J. N , *Modern Religious Movements in India*, Mecmillan & co., London, 1924.

2. Sarma, D. S., *Hinduism Through the Ages*, Bharatiya Vidya Bhavan, Bombay, 1956.

3. *தங்கையா, ஜே.,* **இந்தியாவிலுள்ள தற்கால மார்க்க இயக்கங்கள்,** *அத்தியட்சாதின நூல் நிலயம், பாளையங்கோட்டை, 1961.*

4. *ராஜரீகம், தே.,* **இந்துமத வரலாறு,** *கிறிஸ்தவ இறையியல் இலக்கியக் குழு,* C.L.S , *சென்னை-3, 1963.*

# 3

# இராம கிருஷ்ண இயக்கம்

### வி. பா. கா. சுந்தரம்

## அ. முன்னுரை

பத்தொன்பதாம் நூற்றுண்டில் தோன்றிய இந்து மதச் சீர்திருத்த இயக்கங்களுக்குள்ளே, இராம கிருஷ்ண இயக்கம் மிக்க ஆற்றலும் பெருமையும் வாய்ந்தது. அது பெரிதும் வளர்ந்து வருகிறது பல பெரிய மடங்களை நிறுவியுள்ளது. துறவு நெறியினர் பலரைக் கொண்டுள்ள சங்கங்களை ஆங்காங்கே நிறுவியுள்ளது.

இராமகிருஷ்ண இயக்கத்தின் தலைமை அலுவலகம் வட இந்தியாவில் பேலூரில் உள்ளது. இது ஒரு பெரிய மடம். இதன் 1958ஆம் ஆண்டு அறிக்கையின்படி, இன்று இந்தியாவில் 86 மடங்களும, கடல் கடந்த நாடுகளில் 31 மடங்களும் இதன் சார்பில் பணி புரிகின்றன. அதாவது; அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, தென் அமெரிக்கா முதலிய நாடுகளில் இராம கிருஷ்ண மடங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இராம கிருஷ்ண இயக்கத்தின் திருப் பணிகள் நான்கு வகைப்படும். அவை: (1) கல்வி, (2) மருத்துவ உதவி, (3) துன்பம நீக்கும் பணிகள், (4) மதம், கலை பரப்பல் முதலியவையாகும்.

கோயம்பத்தூர், கல்கத்தா, சென்னை முதலிய பெருநகரங்களில் பல்வேறு வகை நிறுவனங்களை அமைத்து நற்பணிகள் புரிநதுவருகிறது. இந்த இராமகிருஷ்ண இயக்கத்தின் 1957ஆம் ஆண்டு அறிககைப பின்வரும் விவரங்களைத் தருகிறது. இதன் சார்பில் இன்று இயங்கிவரும் நிறுவனங்களாவன: (1) 58 மாணவர் இல்லங்கள், (2) இரு கல்லூரிகள், (3) இரு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், (4) 3 பொறியியற் கல்லூரிகள், (5) ஒரு உழவியல் கல்விக் கூடம், (6) 35 உயர்நிலைப் பள்ளிகள், (7) 127 உயர் தொடககப் பள்ளிகள், (8) 12 சிறு மருத்துவ இல்லங்கள், (9) 67 பெரிய மருத்துவ நிலையங்கள்.

இவை தவிர பஞ்சம், வறுமை, வெள்ளம், பெருமழையின் அழிவு, கொடியகொள்ளை நோய்கள், தீ விபத்து முதலிய பேரிடர்கள் வந்துற்ற போதெல்லாம் அருள் உள்ளம் கொண்ட தொண்டர்களும துறவியர்களும் நற்பணிகள் செய்துள்ளனர். எனவே இராம கிருஷ்ண இயக்கம் செய்துவரும் நற்பணிகளை நாடு அறிந்து அதறகுப் பேராதரவு தந்துவருகிறது. இவ்வளவு நல்ல பணிகளைத் திட்டமிட்டுச் செய்யும் இராம கிருஷ்ண

இயக்கத்தைத் தொடங்கியவர் சுவாமி விவேகானந்தர். இவர், தமது குருவாகிய இராம கிருஷ்ண பரம ஹம்சரிடமிருந்து, திருவருளைப் பெற்று இந்த இயக்கத்தைத் தொடங்கினர். பெருமை மிகுந்த தம் குருவின் பெயரையே இயக்கத்திற்குச் சூட்டி அதனை இயக்கினர். எனவே, இராம கிருஷ்ணரைப் பற்றி இனி அறிந்துகொள்வோம்.

## ஆ. இராம கிருஷ்ண பரம ஹம்சர்

**வாழ்க்கை:** *1836ஆம் ஆண்டு, ஒரு எளிய பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். வங்காள மொழியைத் தொடக்கப் பள்ளியில் மட்டும் படித்தறிந்தார். தந்தை இறந்த பின்னர், **கல்கத்தாவிற்கு** அருகில் **தக்கிணேசுவரம்** என்னும் ஊரில், புதிதாகக் கட்டிய காளி தேவி கோயில் பூசாரியாகப் பணிபுரிந்தார். இவரது இயற்பெயர் சுதாதரர். இவர் தமது வாலிப வயதில் அம்பிகை காளிக்குப் பூசை செய்துவந்தார்; அது வியப்பான பூசை. மரபு நெறிக்கு முரணானது. மந்திரங்களைச் சொல்லிப் பூசை புரிவதோடு அவர் அமைதிகொள்வதில்லை. காளியின் திருக் காட்சியைப் பெற முயன்று தம்மையே காளிக்குப் படைத்தார். உடலை மறந்தார்; உணவைத் துறந்தார்; ஒருமை நினைப்பிலே ஊன்றி அமர்ந்தார். பலமணி நேரம் இறைமைச் சிந்தனையிலே கழிப்பார்; "அம்மா உண்ணு" என்று திருவமுதை ஊட்டுவார். அம்பிகையின் முந்தானையைப் பிடித்துக்கொண்டு சுற்றிச் சுற்றி, பாடி ஓடி விளையாடுவார். கோயிலிருந்தே பிற பணியாளர்கள் இவரைப் 'பித்தர்' என்றும் 'பேயர்' என்றும் இகழ்ந்தனர். பலநாள் இரவு பகலாக உண்ணாது தன்னை மறந்து தவநெறி நின்று, சிந்தனையில் மூழ்கிக் கிடந்து, இறுதியில் அன்னை காளியின் அருட் காட்சி கிடைக்கப் பெற்றார். இது பரம ஹம்சரின் வாழ்க்கையில் நிகழ்ந்த மிக முக்கியமான நிகழ்ச்சி; காளியின் காட்சி அவரது அகத்தில் என்றும் நின்றது. அவருடைய பல்வேறு கோட்பாடுகட்கும் நெறிமுறைகட்கும் இக் காட்சியே அடிப்படையாக இருந்தது எனக் கூறலாம். இவ்வாறு அகக் காட்சி கண்டது போன்றே பின்னர் பல்வேறு "சாதன" முறைகளால் முகமது நபி, இயேசுகிறிஸ்து முதலியோரையும் அகத் தொளியில் அவர் கண்டு களித்து இன்புற்றார் எனப்படுகிறது.*

*"கண்ணால் அவர் கண்ட இயற்கைப் பொருட்களில் எல்லாம் கடவுள் காட்சியையே அவர் கண்டார். அவைகளில் பல அவரது மனத்தைத் திடீரென்று அதீத நிலைக்கு எடுத்துச் சென்றுவிடும். பிள்ளைப் பருவத்திலிருந்தே அவருடைய இயல்பு அத்தகையதாயிருந்தது. பாலனாக இருந்தபோது, அவர் ஒரு நெல் வயலில் போய்க்கொண்டிருந்தார். கண்ணுக்கெட்டும்வரையில் பச்சைக் கம்பளம் விரித்ததுபோன்ற காட்சி, நீல வானத்தின் கீழ்க் கார்மேகம் படலம் படலமாகத் திரண்டு வந்தது,*

அம் மேகத்தின் கீழ் வெண் கொக்குக் கூட்டம் ஒன்று பறந்து வந்தது.........தெய்வீக உள்ளம் படைத்திருந்த இளைஞனுக்கு அக் காட்சி சமாதிநிலையை உண்டுபண்ணிற்று. முதல் முதல் அவருக்குண்டாயிருந்த சமாதி நிலையும் அதுவேயாகும். பின்பு ஒரு காலத்தில், கள்குடியர் குடித்து வெறித்து இன்புற்றிருந்ததைக் கண்டார். அக் காட்சி கூட அவருக்குச் சமாதி நிலையை உண்டுபண்ணிவிட்டது."[1] இவை போன்ற எண்ணிறந்த நிகழ்ச்சிகள் அவர் வாழ்க்கையில் சமாதி நிலையை உண்டாக்கின. இவ்வாறு இறை உணர்வில் மூழ்கிச் சமாதி அடைந்தபோதெல்லாம் பரம ஹம்சரை மீண்டும் உலக நினைவுக்குக் கொண்டுவருதல் மிகவும் கடினமாயிருந்தது. இந்தப் பக்தி நெறிகளைப் பற்றிப் பின்னால் காண்போம்.

**பரம ஹம்சரின் திருமண வாழ்க்கை:** அவர் தம்முடைய 23ஆம் வயதில் சாரதா என்னும் ஐந்து வயதுக் குழந்தையைத் திருமணம் புரிந்தார். பதிமூன்று ஆண்டுகள் கழித்த பின்னர் அவர்கள் கூடிவாழத் தொடங்கினார்கள். சாரதா தேவி என்னும் தம் மனைவியைத் தாம் ஒரு அன்னையாகவும் தெய்வமாகவும் எண்ணியிருப்பதாக சாரதா தேவிக்கு அறிவித்தார். அவளைச் சக்தி தேவியாகவே நினைத்து ஒருமுறை சாரதா தேவியை முன் அமர்த்தி, விதி முறைப்படி பூசைகள் புரிந்து திருவடியில் வீழ்ந்து வணங்கினார். எவ்வித உடல் உறவும் இல்லாமலே இருவரும் இறுதிவரை வாழ்ந்துவந்தனர். இவ்வாறு இளம் மனைவியோடு உடனிருந்து வாழ்ந்துவந்தாலும், தூய துறவு நிலையிலிருந்து திகழ்வது அரிதிலும் அரிது.

பெண் உறவு கொள்ளுபவர்களுக்கு முக்திப் பேறு கிட்டாது என்பது அவர் கொள்கை. ஒரு தண்ணீர்க் குடத்தில் சிறிய ஓட்டை இருந்ததென்றால், அதன் வழியாக அனைத்துத் தண்ணீரும் ஒழுகிவிடும். அதுபோன்று உலகப் பற்று சிறிது இருந்தாலும், பக்தனின் கடும் முயற்சிகள் எல்லாம் வீணாகும்.

பெண்ணின் மீதும், பொன்னின் மீதும் கொண்ட பற்றினை அவித்தாலொழிய கடவுளைக் காணமுடியாது என்பதே அவரது கொள்கை.[2]

**பரம ஹம்சரும் செல்வமும்:** பணத்தைக் கண்டால் கண்டாலே பரம ஹம்சரின் உடல் நடுங்கும். பாம்பைக் கண்டு பயந்து ஓடுவதுபோல் ஓடிவிடுவார். அவருக்குப் பக்தர் கூட்டத்தினர் நிறையக் காணிக்கையைப் படைத்தனர். அப்பொருளை எல்லாம் பரம ஹம்சரின் மாணவருள் ஒருவர், ஒழுங்குறக் கணக்கு வைத்து அற நிலையங்களுக்கும் மருத்துவ நிலை

---

1. ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர், **பரம ஹம்சரின் பெருமை**, பக். 98.
2. Rama Krishna Math, *Sayings of Sri Rama Krishna*, pp. 76, 78, 86

யங்களுக்கும் செலவிட்டார். எனவே, பணத்தின் மேலும் பெண்ணின் மேலும் பற்றுதல் கொள்ளாது, வாழ்க்கையை நடத்துதல் இறைவனை அடைய உதவிபுரிவது எனத் தாமே நடந்து காட்டினார்.

**பரம ஹம்சர் கண்ட கிறிஸ்துக் காட்சி:** பரம ஹம்சர், கிறிஸ்துவை ஒரு விருப்ப தெய்வமாகக் கொண்டு, அவர் உருவத்தை மட்டும் யோகப் பயிற்சி முறையில் கண்டார். இது, கிறிஸ்துவை அவர் வெறுக்கவில்லை என்பதைக் காட்டுகிறது. கிறிஸ்துவை மெய்யாகக் காண்பது என்பது—கிறிஸ்து காட்டிய ஆன்மீக நெறிகளையும் அருள்நெறிப் பண்பாடுகளையும், சிலுவை குறிக்கும் மீட்பு நெறிச் செம்பொருளையும் கற்றறிந்து கிறிஸ்துவைப் பின்பற்றுவதேயாகும். கோட்பாடுகளிலே இந்து மதத்திற்கும் கிறித்துவ மதத்திற்கும் வேறுபாடுகள் இருந்தாலும், இராம கிருஷ்ண பரம ஹம்சர் உணர்த்துவது என்னவென்றால் —வெறுப்புணர்ச்சி கொள்ளாத உறவு மனப்பான்மையே ஆகும். இதனைக் கிறிஸ்தவ உலகம் இராம கிருஷ்ண பரம ஹம்சரிடம் கற்றுக்கொள்ள கடமைப்பட்டுள்ளது.

## இ. போதனைகள்

**1. பக்திப் பயிற்சி நெறிகள்:** இவற்றைச் சாதன வகைகள் என்பர். இவை பல வகைப்படும்; இவற்றுள் இராம கிருஷ்ணர் விரும்பிப் போற்றிய சிலவற்றை மட்டும் இங்குச் சுருக்கமாகக் காண்போம். 1861ஆம் ஆண்டு யோகீசுவரி பைரவியார் என்னும் ஓர் வைணவ பிராமணப் பெண் துறவியார் தாந்திர சாதனம் எனும் முறையை இவருக்குக் கற்பித்தார். இப் பயிற்சியின் பயனைத் தட்சிணேசுவர காளி கோயிலில் அவர் கண்ட காட்சியை அவரே பின்வருமாறு வர்ணிக்கிறார். "சித் சக்தி, அறையில் எங்கும் நிறைந்து ஊடுருவிக் கலந்திருந்து; அறையிலிருந்த சிலையும், கதவும், பாண்டங்களும் சித் சக்தியாகவே விளங்கக் கண்டேன். காளி கோயிலின் முன்னிலையில் தீயோன் ஒருவனையும் கண்டேன். ஆனால் அவனுள்ளும் தேவியின் வல்லமை, அதிர்ந்தியங்குவதைக் கண்டேன்".[1]

ஒருவன் உலகில் வாழும்பொழுது, அவன் கொள்ளும் உறவு முறைகள் வெவ்வேறு; அவன், தன் பெற்றோரோடும், நண்பரோடும், மனைவியோடும், மைந்தரோடும், ஏவலாளோடும் கொள்ளும் உறவு வெவ்வேறாகும். இது போன்றே, கடவுளை ஒருவன் நண்பராகவும், தந்தையாகவும் கொண்டு, நெருங்கி உறவும் பற்றும் பூண்டு வரலாகும். இதனை வடவர் 'பாவனை' என்பர். இத்தகைய பாவனைகள் பலவற்றைப் பரம ஹம்சர் மேற்கொண்டுள்ளார். அவற்றைக் கீழே காண்போம்.

---

1. Swami Nihilanandah, *The Gospel of Sri Rama Krishna*, p. 270.

(அ) **பாராட்டும் நெறி.** இதனை வடவர்கள் **சாந்த பாவனை** என்று சொல்லுவார்கள். போற்றுதற்குரிய ஒரு பொருளினிடத்து நாம் அன்பு பூண்டு, அதன் அழகையும் மாட்சிமையையும் பாராட்டுகிறோம். ஒரு மலரின் அழகைப் பாராட்டுகிறோம். அதனிடமிருந்து ஒன்றும் எதிர்பார்ப்பதில்லை. அது போன்று, பரம்பொருளின் மாட்சிமையும், பேராற்றலையும் பாராட்டுகிறோம். இதில் பரமனைப் பணிந்து பரவுவது ஒன்றே போதும்; வேறு ஒன்றும் வேண்டாம் என்ற மனநிலை வற்புறுத்தப்படுகிறது.

(ஆ) **அடியவர் நெறி:** இறைவனை ஆண்டவனாகக் கொண்டு அவனுக்கு அடிமையாகித் தொண்டு செய்து கிடப்பதே பேரின்பம் என்ற கோட்பாடு. இதனை வடவர் **தாஸ்ய பாவனை** என்பர்.

(இ) **தோழமை நெறி:** கடவுளை நண்பனாகக் கருதி வழிபட்டு மகிழ்வது ஒரு முறையாகும். இறைவனுக்கும் பக்தனுக்கும் இடையே சம உரிமை நிலவும். இதனைச் **'சாக்ய பாவனை'** என்பர் வடவர். தாமன் எனும் கோகுல வாழுநன் ஒருவன், இனிய கனி தின்றுகொண்டிருந்தான். அவன், தன்னிடம் வந்த கண்ணபிரானுக்கு எச்சில் மாங்கனியைக் கொடுக்க, அவனும் அன்புடன் வாங்கி உண்டான். பின்வரும் கவியைக் காண்க:

சரணம்

தின்னப் பழங்கொண்டு தருவான்—அதைத்
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்
என்னப்பன் என்னையன் என்றால்—அதனை
எச்சிற் படுத்தி கடித்துக் கொடுப்பான்.

பல்லவி

தீராத விளையாட்டுப் பிள்ளை - கண்ணன்
தெருவிலே பெண்களுக் கோயாத தொல்லை

சரணம்

பின்னலைப் பின்னின் றிழுப்பான்—தலை
பின்னே திரும்பும் முன்னே சென்று மறைவான்
வன்னப் புதுச் சேலை தனிலே—புழுதி
வாரி சொறிந்தே வருந்திக் குலைப்பான்.

இது கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் பாடியது—இப் பாடல் தோழமை நெறி எனும் துறையில் அமைந்தது. கவிஞர் சுப்பிரமணிய பாரதியார், இராமகிருஷ்ணர் அனுபவித்துக் கைக்கொண்டுவந்த பல்வேறு பக்தி நெறித் துறைகளிலும் பாடல்கள் பாடியுள்ளார்.

(ஈ) **தாயெனப் பேணும் நெறி:** கடவுளைக் குழந்தையாகக் கொண்டு, ஒரு குழந்தையைப் பேணி வளர்ப்பதன் பொருட்

டுத் தாய் கொள்ளும் துன்பம், கவலை, கருத்து யாவற்றையும் ஒரு அடியான் கொள்ளுவது ஒரு நிலையாகும் துவாரகையில் பாலகிருஷ்ணனை வளர்த்த யசோதை தன் குழந்தை, இறைவன் என அறியாது, ஒரு சிறு குழந்தையாகவே மட்டும் நினைத்துக் கரிசனையுடன், கவலையுடன் காத்துப் பேணி வளர்த்து வந்தாள் இந்நிலையைச் சமஸ்கிருதத்தில் "வாத்—ஸல்ய பாவனை" என்பர். இதனைத் தமிழில் கூறும்போது பொருள் எளிதில் விளங்கிவிடும். அதாவது தாய் போலப் பேணும் நெறி.

(உ) நாயகன் நாயகி நெறி: கடவுளை வழிபடும் பக்தன் தன்னை மனைவியின் நிலையில் அல்லது கணவன் நிலையில் வைத்து வழிபடுகிறான். இராதை கிருஷ்ண பகவானிடம் கொண்டிருந்த அன்புறவு இத்தகைய காதல் நெறியில் அமைந்துள்ளது. வடவர் இதனை "மதுர பாவனை" எனக் குறிப்பிடுவர். இராம கிருஷ்ண பரம ஹம்சர், தன்னைத்தானே பெண்ணாகக் கருதிக்கொண்டு பெண்போல ஆடை உடுத்திக்கொண்டு, கண்ணனை நினைத்துக் காதலித்து வருந்துவார். பிரிவின் துன்ப நிலை (பாலை), நேரில் கண்டு புணர்ந்து மகிழ்ந்தின்புறும் நிலை (குறிஞ்சி) முதலிய ஐந்திணை ஒழுக்க இன்ப நிலைகளுடன் தான் துய்த்தற்பொருட்டு அவ்வாறு மதுர பாவனையில் மூழ்குவாராம். ஒருநாள் இராம கிருஷ்ணர் ஒரு மலரைப் பறித்துத் தன் அடியவருக்குக் காட்டி மதுர பாவனையில் திளைத்தபோது, அம் மலரின் நிறத்தவனாகக் கிருஷ்ண பகவானைத் தான் கண்டதாகக் கூறினார். இதனின்றும் அவர் கிருஷ்ணனுடைய உருவத்தை அகக் கண்ணால் கண்டு இன்புற்றார் என அறியலாம்.

(ஊ) பெரு நெறி: மேற்கூறிய ஐநெறி நிலைகள் தவிர, பரம ஹம்சர் மகா பாவம் எனும் நிலையையும் வற்புறுத்தியுள்ளார். இந் நிலையில், கடவுள் வேறு — 'நான்' வேறு எனும் இரு நிலைகளும் மாறி ஒன்றித்து ஒருமை நிலையை ஒரு பக்தன் அடைகின்றான். இத்தகைய நிலை, ஒருவனிடம் முதிர்ந்த பக்குவ நிலையில் மட்டும் மலர்கின்றது; இதனைப் பரம ஹம்சர் இனிய எடுத்துக்காட்டுகளால் விளக்குகின்றார். மஞ்சக் காமாலை கண்டவன் கண்ணுக்கு அனைத்துமே மஞ்சளாகத் தோன்றும். இராதைக்கு அனைத்துப் பொருளுமே கிருஷ்ண பகவானாகத் தோன்றின. ஒரு ஈயத் துண்டை பாதரசத்துள் பொதிந்து, சிலநாள் வைத்திருப்பின் அந்தத் துண்டு, இறுதியில் பாதரசமாக மாறிவிடுகிறது. இதுபோன்று பக்தன், இறைமைச் சிந்தனையில் அடிக்கடி மூழ்கிமூழ்கித் தொடர்ந்து பயிற்சி செய்து வருவானாகில், "தான்" என்பது அழிந்துவிடுகிறது. 'இறைவன் அவனே' என்றும் 'அவனே இறைவன்' என்றும் ஆகி விடுகிறான்.

பக்தி நெறி விளக்கத்திலே சங்கரர், இராமானுஜர். அகிய இருவருக்கும் பரம ஹம்சருக்கும் சிறிது வேறுபாடு உண்டு. சங்கரர் பக்திவழிப் பயிற்சியோடு, பிம்ரமத்தைப் பற்றி அறியும் ஞானமும் தேவையென வற்புறுத்துவர். பரம ஹம்சர், பக்தி நெறிப் பயிற்சி ஒன்றினாலேயே இறைவனோடு வேறுபாடற்று ஒன்றிய நிலையை எய்துவிடலாம் என விளக்குவார்.

இராமானுஜர் இவ்வாறு விளக்குவார்: "பக்தி யோகப் பயிற்சிகள் மூலம் பந்தபாசம் அறுத்து விடும் நிலையை எய்தி விடலாம். ஆனால் இறுதிப் பெருநிலையிலும் தனி முதற் பொருளில்நின்றும் சிவன், வேறுபட்டே நிற்கும்."

சமாதி என்பது என்ன? தன்னையும், தன் உடலையும், தான் வாழும் உலகையும் மறந்த நிலையே சமாதி எனப்படும். சமாதி நிலை எய்தியுள்ளவரின் வாயினுள் பாலை ஊற்றினால், பால் வெளியில் வந்துவிடும். சமாதியில் ஒருவர் 21 நாட்கள் இருக்கலாம் அப்போது மூச்சு அடங்கி ஒடுங்கிக் கிடக்கும். தமிழில் இதனைத் துறக்க நிலை என்பர். துறக்க நிலை எய்தி விட்டபின்னர் மீண்டும் உலக நிலைக்குச் சமாதியினர் வருவதின் நோக்கம் என்ன? 'அடியவருடன் கூடி வாழவும் இறைவன் அன்பைத் துய்க்கவுமே' என்று கூறுகின்றனர்.

பரம ஹம்சர் தம் காட்சிகளில் இறைவனை ஓர் வடிவமுடையவனாகவேக் கண்டார். பின்னர் பயிற்சியின் பயனாய் வடிவமில்லாத முழுமுதற் பரம்பொருளை அவர் காண இயன்றது.[1]

**2. நிர் விகற்ப சமாதி:** பஞ்சாப் நாட்டினின்று தோத்தா பூரி எனும் துறவியார் ஒருவர் தட்சணேஸ்வரம் வந்தார். பதினொரு மாதங்கள் அங்குத் தங்கினார். இவர் தந்த பயிற்சியால், சமாதிநிலையின் உன்னத நிலையைப் பரம ஹமசர் அடைந்தார். இதுவரை இவர் சமாதிநிலையில், கடவுளோடு வேறுபாடற்று ஒன்றித்துவிடாது — பக்தன் என்ற நிலையினின்று, கடவுளின் பெயர், வடிவம் முதலியவற்றுள் மூழ்கி சமாதி எய்திவந்தார். தோத்தாபூரித் துறவியார் அளித்த பயிற்சியின் பயனால்—காளிதேவியின் வடிவம், பெயர் இவற்றைக் கடந்து நின்ற பரம்பொருளை மட்டும் உணர்ந்து தன்னை மறந்து இருக்கும் நிலையைப் பரம ஹம்சர் அடைந்தார்.

**3. கிறிஸ்தவ சாதனம்:** கடவுளை அடைவதற்குப் பல மார்க்கங்கள் உண்டு. பல வழிகள் உண்டு; எல்லா மதங்களும் உண்மையானவைகளே. வீட்டின் மேல் மாடியை அடைவது தான் முக்கியம். கல்லுப் படிக்கட்டு மூலமாகவோ, மூங்கில் ஏணி மூலமாகவோ, கயிற்று ஏணி மூலமாகவோ மேல் மாடியை

1. Swami Nihilanandah, *The Gospel of Sri Rama Krishna*, p. 156.

அடையலாம் என்பது இராம கிருஷ்ண பரம ஹம்சரின் கோட்பாடு. மேலும் அவர் கூறியுள்ளார்: "மூட நம்பிக்கைகளும் குற்றங்களும் மற்றொரு மதத்திலிருப்பதாக நீ கூறலாம். ஆனல் நான் கூறுவேன், ஒவ்வொரு மதத்திலும் குறைபாடுகள் உள்ளன. கடவுள் மீது கொள்ளும் பக்தி—பற்றுணர்வு ஒன்றே போதும்"[1] என்று. இக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே அவர் இயேசுகிறிஸ்துவைக் காண முயன்ருர்.

இயேசுபெருமானை இஷ்ட தெய்வமாகப் பரம ஹம்சர் ஏற்றதும் அவரைச் சாதன முறையால், அகக் காட்சியில் கண்டார். கிறிஸ்தவப் பேருண்மைகளையும் இறையியல் கோட்பாடுகளையும் ஒரு கிறிஸ்தவ மதப் பெரியாரிடமிருந்தோ நூல்கள் மூலமாகவோ பரம ஹம்சர் கற்றுக்கொள்ளவில்லை. தம்முடைய பக்திநெறிப் பயிற்சி முறையால் கிறிஸ்து பெருமான், தன்பால் வந்து தன்னேடு கலந்துவிட்டதாக அகக் காட்சி கண்டார். கிறிஸ்தவர்களையும், கிறிஸ்தவ மதத்தையும் இராம கிருஷ்ணர் இணக்கமுறு மனப்பான்மையுடன் கண்டார்.

மேலும் இவர் முஸ்லீம் போல உடை உடுத்தி அல்லாவை ஓதி, முகம்மது நபி நாயகம் அவர்களின் திருப் பெயரை மந்திரமாக ஜெபித்துவந்தார். பன்முறை ஜெபித்து உறுதிப்பாடு கொண்ட பின்னரே—காளி தேவியை மறந்து நின்ற நிலையில் முகம்மது நபி நாயகம் நீண்ட தாடியுடனும ஒளிவீசும் முகத்துடனும் காட்சியளித்தார் என்று கூறபபடுகிறது.[2]

## ஈ. விவேகானந்தரும் இராம கிருஷ்ண இயக்கமும்

இவருக்குப் பெற்ருேர் இட்ட பெயர் நரேந்திர நாத் என்பது. கல்கத்தாவில் கிறிஸதவக் கல்விக்கூடம் ஒன்றில் பயின்று பட்டம் பெற்ருர். வாலிபப் பருவத்தில் சமய ஆராய்ச்சியில் ஆர்வங்காட்டினர். கல்கத்தா பகுதிகளில் பெரிதும் செல்வாக்குப்பெற்று விளங்கிய, பிரம்ம சமாஜத்தில் உறுப்பினராக இருந்துவந்தார். 1881ஆம் ஆண்டு, பரம ஹம்சரைக் காணும் பேறுபெற்ருர் கண்ட நேரந்தொட்டு இருவரிடையே, நட்பும் அன்பும வளர்ந்தோங்கின. இறை உண்மையை விவேகானந்தரின் அகத்தில் ஒளிருமாறு பரம ஹம்சர் அருளினர். ஆதலால் விவேகானந்தர், இராம கிருஷ்ணரின் பன்னிரு சீடருள் ஒருவரானர். பரம ஹம்சர் இறக்கும்போது, 'நரேந்த், நீ மற்றவர்களுக்கு அறிவு ஒளி பரப்பவேண்டும" என்று எழுதிக் காட்டினர். எனவே, அவர் இறந்தபின்னர் 1886ஆம் ஆண்டு இவர் இயக்கத்தின் தலைவராகி இராம கிருஷ்ண இயக்கத்தை அமைத்து நடத்தினர்

1. Swami Nihilananda, *op. cit.* p 38.
2. Devadoss Nalini, ***Sri Rama Krishna***, p. 25.

விவேகானந்தர் தேசப் பற்றும் மதப் பற்றும் பூண்டவர். எளியோருக்கு இரங்கி உதவுவது இறைவனை வழிபடுவது என எண்ணிவந்தார். இவர் இருமுறை அமெரிக்கா சென்று அங்கே இந்து மதத்தைப் பரப்பினார். இராம கிருஷ்ண இயக்கக் கிளைகள் பலவற்றை நிறுவினார். 1901ஆம் ஆண்டு இறைவன் திருவடி நிழல் எய்தினார்.

பரம ஹம்சரின் அடியவர்களுள் தலைசிறந்தவர் இவர். பரம ஹம்சர் இறந்தபின்னர் இந்துமதச் சீர்திருத்தக் கருத்துக்களை இந்தியா முழுமையும் சென்று பரப்பி புத்துணர்வு ஊட்டி, விழிப்பு நிலையை நாட்டியவர். இந்தியாவின் பண்பாட்டு மாட்சிமையையும், ஆன்மீகச் செல்வத்தையும் மக்களுக்கு எடுத்துக் காட்டினார். மாந்தர் படும் துன்பங்களைப் போக்க மருத்துவ, கல்வி நிறுவனங்களை நாட்டினார்.

இந்த நல்ல இறை பற்றினரால் நாட்டில் மறுமலர்ச்சிக் கருத்துக்கள் தழைத்ததால், நாடு அவருக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. இன்று குமரி முனையில் கடலினுள் உள்ள பாறை ஒன்றின்மேல் விவேகானந்தர் நினைவுச் சிலை எழுப்பப்பட்டிருப்பது இதற்கு எடுத்துக்காட்டாகும். விவேகானந்தர் அப் பாறையின் மேல் அமர்ந்து தியானம் செய்தார் என்பது பாரம்பரியம்.

## உ. இராம கிருஷ்ண இயக்கத்தின் கோட்பாடுகள் பற்றிய ஆராய்ச்சி

1. எல்லா மதங்களும் உண்மையானவைகளே. அவைகள் கடவுளை அடைவதற்குப் பல்வேறு வழிகள். இது பரம ஹம்சர் கண்ட உயர்ந்த கோட்பாடு. இத்தகைய நெறியானது—ஒரு மதத்தினர் மற்ற மதத்தினரை இகழாது எள்ளாது நட்புறவு பூண்டு வாழத் தூண்டும் என்பது அவர் கருத்து. ஆனால், இராம கிருஷ்ண பரம ஹம்சர் தம் சாதனை முறைகளைப் படிப்படியாக உயர்த்திக்கொண்டே சென்று இறுதியில் நிர்விகற்ப நிலையே யாவினும் உயர்ந்தது என்ற நிலையைக் காண்கிறார். வடிவமில்லாத ஒரு பெயரற்ற மூல முழுமுதற் பொருளைக் காண முயலுங்கால், நிர்விகற்ப சமாதி நிலையில், முதலில் தோன்றிய காளியின் வடிவத்தை அவர், அறிவு எனும் வாளால் வெட்டி அகற்றுவதை அறியலாகும்.[1] இதனின்றும் உருவ வழிபாட்டினைக் காட்டிலும் உருவில்லாத கடவுளை உருவமின்றியே வழிபடுவது சிறந்தது என்பது புலனாகும்.

2. "குருட்டு நம்பிக்கைகளும் தப்பும் தவறுதல்களும் உண்மையிலேயே சில மதங்களில் புகுந்திருக்கின்றன என

1. *Great Master*, p. 255.

வைத்துக் கொள்ளுவோம். அதனால் கேடு ஒன்றும் வந்து விடாது'' என்று கூறியுள்ளார்.[1]

கிறிஸ்தவ சமயம் தன்னிடத்துக்கொண்ட கோட்பாடுகளுள் தவறானவை எவை, கிறிஸ்துவின் சிந்தனைக்குப் பொருந்தாதவை எவை எனக் கண்டு அவற்றை விலக்கி நன்னெறி காண முயன்றுவந்திருக்கிறது. இராசாராம் மோஹன் ராய் உடன் கட்டை ஏறுதல், மனிதன் மனிதனை இழிவுபடுத்தும் சாதி முறை, முதலிய குருட்டு நம்பிக்கைகளால் சமுதாயம் பட்ட இன்னல்களையெல்லாம் அகற்றினர். அவர் கண்ட திருவருள் நெறிமூலம் கேடுகள் விலக்கப்பட்டன. அருட் பெருஞ்சோதி வள்ளலார் "கண்மூடி வழக்கங்கள் எல்லாம் மண்மூடிப் போக" வேண்டும் என்று பாடினர். ஓ. இ. சேம்சு எனும் பேரறிஞர் எழுதிய "மதங்களின் தோற்றம்" எனும் நூலில்—மனிதன் இறைவனை அறியும் அறிவில் எவ்வாறு படிப்படியாய் வளர்ந்து வந்துள்ளான் என்றும், தொன்மை காலத்தில் காட்டில் வாழ்ந்துவந்த மனிதனிடம் காணப்பட்ட கொடுமை மிக்கச் செயல்கள் எவ்வாறு படிப்படியாய் நீங்கப்பெற்று நாகரீக நன்னிலைக்கு அவன் வந்துள்ளான் என்பதையும தெள்ளத் தெளிவாய் விளக்குகின்றார். சீர்திருத்தம் செய்து வளர்ந்து கொண்டேவராத சமயம் நாளடைவில் இறந்துபடும் என்பது வரலாறு கண்ட உண்மை. எனவே தீய பழக்கங்களை நீக்கப் பாடுபடுதல் வேண்டும். "அல்லவை தேய அறம் பெருகும்"

(குறள்)

**3. சக்தியின் இரு கூறுபாடுகள்:** அன்னை பராசக்தியே அனைத்துச் செயலுக்கும் மூல காரணமாகின்றாள். ஆதலால் அவளுக்கு "மூலப் பிரகிருதி" என்றும், "மாயா சக்தி" என்றும் பெயர். மாயா சக்தியிடம் இரு கூறுபாடுகள் இருக்கின்றன. வித்யா மாயை ஒன்று; மற்றொன்று, அவித்யா மாயை. பக்தி, அறிவு, இரக்கம் முதலிய நற்குணங்கள் வித்யா மாயையைச் சார்ந்தவை. மண், பெண், பொன்னாசைகளும் தீய இழி குணங்களும் அவித்யா மாயையைச் சார்ந்தவை. நன்மையாகிய வித்யா மாயைக்கும் தீமையாகிய அவித்யா மாயைக்கும் இருப்பிடம் பராசக்தியே. வேறு வகையில் கூறினல், அஞ்ஞானமும் ஞானமும் சேர்ந்த வடிவமே மாயை எனலாம். அவ்வாறாயின், அறிவொளி எவ்வாறு பெறுவது. "அவ்வித்யா மாயை வடிவமாகிய தாயே வித்யா மாயைதனை அருளுவாய் என வேண்டுதல்புரிந்துவந்தால்—அறிவொளி பெறலாம்"—என்று பரமஹம்சர் புகட்டிய பெருநெறி விளக்கம் விளக்குகின்றது.[2]

---

1. சுவாமி சித்பவானந்தர்: பெரு நெறி விளக்கம், 1ஆம் பாகம், பக். 146.
2. Ibid பக். 185.

ஒரே தெய்வம் நன்மைக்கும் தீமைக்கும் இருப்பிடம் என்பதைக் கிறிஸ்தவ சமயம் ஒப்புக்கொள்வதில்லை. ஒளியுள்ள இடத்தில் இருள் இருக்க இயலாது எனக் கிறிஸ்தவம் கூறும்.

**4. உலகின் அமைப்பு:** உலகம் என்பது காலமும் இடமும், காரணமாம் தன்மையும் உடையது. இராம கிருஷ்ணப் பெருநெறியின் அத்துவைதக் கோட்பாட்டின்படி உலகம் மாயைத் தத்துவத்தில் அடங்கும் அது நிலையற்றது. உலகம் என்பது வெறும் பொய்மைத் தோற்றமே. இதுவே அத்துவைதத்தின் சுருக்கமான விளக்கம். ஆனால் உலகம் ஒரு தொடக்கம் உடையது. அதை இறைவன் ஆண்டு நடத்துவதால் அது இயங்குகின்றது; அது பரந்த இடமுடையது; ஒரு காலத்துப் படைக்கப்பட்டது. எனவே, காலமும் இடமும் உடையது. பலவற்றை விளைவிக்கச் செய்யும் தன்மை உடையது. எனவே உலகம் என்பது பொருளற்ற, தேவையற்ற, பயனற்ற வெறுமையான பொய்மையான ஒன்று என்று இகழ்தல் ஏற்றற்குரியது.

கிறிஸ்தவத் திருமறை உலகத்தைப்பற்றி அறிவிக்கும் கருத்துக்கள் வருமாறு: (1) உலகம் கடவுளினின்றும் தோன்றியதன்று, கடவுளால் படைக்கப்பட்டது. (2) கடவுள் உலகைப் படைத்த தலைவன்; உலகமோ அவரது படைப்புப் பொருள். இறைவன் ஆவி மயம், உலகம் பருப் பொருள். (3) தாம் படைத்த உலகைக் கடவுள் ஆண்டு நடத்தி வருகிறார். (4) உலகம் கடவுளின் ஒரு பகுதியன்று (5) உலகம் தீமையானதன்று நன்மையானதே; இயற்கையின் ஒழுங்குப்படியே நிலநடுக்கம், வெள்ளம் முதலியன தோன்றுகின்றன. அவற்றை முன்னறியும் திறமும் அடக்கி ஆளும் ஆற்றலும் மனிதனுக்குண்டு. (6) கடவுள் நித்தியர்; உலகம் அநித்தியமானது. ஆயினும் பொய்மையும் மாயையுமானதன்று. இத்தகைய கொள்கைகளைக் கிறிஸ்தவ சமயம் வற்புறுத்தும்.

# துணை நூற்கள்


1. Max Muller, F., *Ramakrishna, His Life and Sayings,* Longmans, London, 1910.

2. Swami Vivekananda, *My Master.* Udbodhan Office, Calcutta, 1911.

3. Farquhar, J. N., *Modern Religious Movements*, Macmillan and Co., London, 1924.

4. Swami Saradananda, *Sri. Ramakrishna, The Great Master*, Ramakrishna Math, Madras-4.

5. Swami Nikhilananda, *Sri. Ramakrishna,* Sri. Ramakrishna Math, Madras 4, 1953

6. *சுவாமி சித்பவானந்தர்,* **பரமஹம்சர் காட்டிய பெருநெறி விளக்கம்,** *முதலாம் பாகம், இராமகிருஷ்ண மடம், சென்னை-4, 1958.*

7. *சுவாமி சித்பவானந்தர்,* **பரம ஹம்சரின் பெருமை,** *இராமகிருஷ்ண மடம், சென்னை-4. 1959.*

8. Davadoss Nalini, *Sri. Ramakrishna*, C.I.S.R.S., Bangalore-6. 1966.

# 4

# பிரம்ம ஞான சபை

## (Theosophical Society)

### ஞான இருபின்சன்

## அ. முகவுரை

ஆங்கிலத்தில் இது "தியோசோஃபி" எனப்படும். இச்சொல் கிரேக்க கடினச் சொற்களான தியாஸ் = (கடவுள்), சோஃபியா = (ஞானம்) என்ற சொற்களிலிருந்து எழுந்தது. ஆகையால் இது "பிரம்ம ஞானம்" என்று தமிழில் அறியப்படுகிறது. இதனைப் பரப்பும் சபை "பிரம்ம ஞான சபை" எனப்படுகிறது. பண்டிதர் பார்குவர் (J. N. Farquhar) பிரம்ம ஞான சபையைக் குறித்து இவ்வாறு கூறுகிறார்: "இது, சமயம், விஞ்ஞானம், நடைமுறை வாழ்க்கை யாவற்றையும் குறித்த ஒரு அமைப்பு. மேடம் பிளவாட்ஸ்கி என்பார் முதன்முதலில் இதைப் பற்றிய போதனையைத் தந்தார். பின்னால் அவரும் கர்னல் ஆல்காட் என்பவரும் சேர்ந்து 1875இல் நியுயார்க் நகரில் இச் சபையைத் தாபித்தனர். ஆனால், திருமதி பெசன்ட் அம்மையாரும் லீட் பீட்டர் என்பாரும் இதனை அதிகமாய் பரப்பினர்".[1] பிரம்ம ஞான சபை அனைத்துலகிற்குமுரிய முடிவான உண்மையைத் தன்னுள் கொண்டுள்ளதாக உரிமை கொண்டாடுகிறது. இதன் போதனை பல நாடுகளிலும் பரவினது. இதன்மூலம் திரளான இலக்கியங்கள் வெளிவந்துள்ளன. கடந்த நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவில் இந்து சமயம் புத்துணர்ச்சி பெறக் காரணமாயிருந்த இயக்கங்களில் இதுவும் ஒன்றெனலாம்.

இவ் வியக்கத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் முறையே காரணமாயிருந்த இரு மாதரைப் பற்றி நாம் இங்குச் சுருங்கக் காண்போம்:

## ஆ. மேடம் பிளவாட்ஸ்கியும் பிரம்ம ஞான சபையின் தோற்றமும்

பிரம்ம ஞான சபையின் தோற்றம் பிளவாட்ஸ்கி (Helena Petrovna Blavatsky) என்னும் ருஷ்ய பெண்ணின் பெயருடன் தொடர்புபடுத்தப்படுகிறது. இவர் ஓர் உயரிய குடும்பத்தில் 1831, ஆகஸ்டு திங்கள் பிறந்தார். சிறுமியாயிருக்கையிலேயே இவருக்குப் புலன் கடந்த அனுபவங்கள் (occult experience) ஏற்படுவதுண்டாம். இவரது பதினேழாவது வயதில் (1848இல்) இவருக்குத் திருமணமானது. ஆனால் இவர் கணவனுடன் மூன்று மாதங்கள்தான் வாழ்ந்தார். அதற்குப் பின் வீட்டை

1. Farquhar, J. N., *Modern Religious Movements in India*, P. 208.

விட்டு வெளியேறி பல இடங்களில் சுற்றியலைந்தார். 1848 முதல் 1872 வரையுள்ள காலத்தில் இவரது வாழ்க்கையைப் பற்றித் திட்டவட்டமாக ஒன்றும் தெரியாது. ஆனால் இவரது கடிதங்களிலிருந்தும் இவர் உறவினர் குறிப்புகளிலிருந்தும் இக்காலத்தில் இவர் மிகவும் கேவலமான வாழ்க்கை நடத்திவந்ததாகத் தெரிகிறது. 1853இல் இவர் ருஷ்யாவுக்குத் திரும்பி வந்ததாக அறியப்படுகிறது. 1872இல் கெய்ரோவில் சென்று அங்குச் சிலகாலம் வாழ்ந்தார். 1873இல் நியுயார்க் வந்தார். அங்கு ஆவியுலக உறவாளர்களுடன் (Spiritualists) தொடர்பு கொண்டார்.

பிளவாட்ஸ்கி சென்ற இடமெல்லாம் புலனுணர்வுக்கு அப்பாற்பட்ட அனுபவங்கள் தம்மைத் தொடர்ந்து சென்றதாகக் குறிப்பிடுகின்றார். இந்தியா, எகிப்து, வேறு கிழக்கு நாடுகள் பலவற்றில் ஆவியுலக உறவாளர் பலரிடமிருந்து பல இரகசியங்களைத் தாம் அறிந்து கொண்டதாகவும் குறிப்பிடுகிறார். திபெத்திலுள்ள குருவாட்சி முதல்வர்கள் (Hierarchy of Masters) தன்னைத் தெரிந்துகொண்டதாகவும், அன்னார் ஆணைப்படியே தான் செயல்படுவதாகவும் கூறினார். புலனறிவுக்கு அப்பாற்பட்ட தன் ஆவேச சக்தி விஞ்ஞானத்திற்குட்பட்டதெனக் கொண்டு, அதனைப் புலனறிவுக்கப்பாற்பட்ட விஞ்ஞானம் (Occult Science) என்றார். அருள்திரு. J. சங்கையா இதனைக் "குப்த ஞானம்" என்று மொழிபெயர்க்கின்றார்.[1] இந்த ஞானத்தைப் பெற்றோர் இறந்து போனவர்களோடு உறவாட முடியும் என்றும், அவர்களுக்குப் பரம ஞானம் கிடைக்கும் என்றும் கூறினார். இதைப் பத்திரிகைகள் வாயிலாக விளம்பரப்படுத்தினார்.

இக் காலத்தில் ஆல்காட் என்ற பத்திரிகை நிருபரின் (Henry Steel Olcott) நட்பு இவருக்குக் கிடைத்தது. இவர் முன்னால் படையில் பணியாற்றியதால் கர்னல் ஆல்காட் என்று அறியப்பட்டார். பிளவாட்ஸ்கியின் கருத்துக்களால் கவரப்பட்ட ஆல்காட் அக் கருத்துக்களைப் பரவச் செய்வதில் அவருக்குப் பக்கபலமாக இருந்தார். பிரம்ம ஞான சபையினை நிறுவுவதற்கான ஆலோசனையைத் தந்தவர் இவரே.

1875, நவம்பர் திங்கள் 17ஆம் நாள் **பிரம்ம ஞான சபை** நியுயார்க் நகரில் நிறுவப்பட்டது. இச் சபையின் அடிப்படை **அனைத்துலகச் சகோதரத்துவம்** என்பது. இதுவே எல்லோரையும் கட்டுப்படுத்துவது. இச் சபையின் நோக்கங்கள் மூன்று: **முதலாவது,** மனுக்குலத்தின் அனைத்துலகச் சகோதரத்துவத்தின் தொடக்கமாக அமைந்து செயலாற்றுவது. இன, நிற, கொள்கை, பால், ஜாதி வேறுபாடுகள் எதுவும் காணப்படக் கூடாது. **இரண்டாவது,** சமயங்களை ஒப்பிட்டுக் கற்பதையும்,

1. J. தங்கையா, **இந்தியாவிலுள்ள தற்கால மார்க்க இயக்கங்கள்,** பக், 40.

தத்துவ ஞானம், விஞ்ஞானம் முதலானவற்றைக் கற்பதையும் ஊக்குவிப்பது. மூன்றாவது, விளக்கவொண்ணாத இயற்கையின் நியதிகளையும், அவற்றில் அடங்கியிருக்கும் ஆற்றல்களையும் ஆராய்வது. திபெத்திலுள்ள குருவாட்சித் தலைவர்கள் ஆணைப் படியே தாம் பிரம்ம ஞான சபையை நிறுவினதாகக் கூறினார் பிளவாட்ஸ்கி.

முதல் மூன்று ஆண்டுகள் பிரம்ம ஞான சபை குறிப்பாக எதையும் சாதிக்கவில்லை. 1878 ஆம் ஆண்டின் இறுதியில் இந்தியா சென்று பணியாற்றுமாறு குருவாட்சித் தலைவர்களிட மிருந்து ஆணை வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது இதன்படி 1879இல் இக் குழுவினர் இந்தியா புறப்பட்டனர். ஆரிய சமாஜத்தினர் இவர்களை வரவேற்றனர்.

வந்ததுமே ஆல்காட் இந்தியாவில் கிறிஸ்தவ மிஷனரிக ளின் செல்வாக்கைக் குறைப்பதற்கான வழிவகைகளை வகுக்க லானார். இதற்காக பம்பாயில் நடந்த மாநாடு ஒன்றில் இந்திய கல்வி முறையைச் சீர்திருத்தவும், சமஸ்கிருத பயிற்சி யைப் பரப்பவும், இந்திய கலைகளைப் பிரபல்லியப்படுத்தவும் அழைப்பு விடுக்கப்பட்டது.

அடுத்த ஆண்டு இலங்கையிலுள்ள புத்த பிச்சுக்களின் அழைப்பின்பேரில் பிளவாட்ஸ்கியும் ஆல்காட்டும் இலங்கை சென்றனர். அங்குத் தங்களைப் புத்தர்கள் என்று கூறி புத்த சமயப் போதனைகளைப் பிரபல்லியப்படுத்தலாயினர்.

1882 இல் சென்னையிலுள்ள அடயார் என்னுமிடம் பிரம்ம ஞான சபையின் தலைமைத் தானமானது. உற்சாகமுள்ள பலர் இங்கு வந்து கூடினர். பிளவாட்ஸ்கி தன் ஆவியுலக அனு பவங்களில் கவனம் செலுத்த, ஆல்காட் நிருவாகத்தைக் கவ னித்துக்கொண்டார். பிளவாட்ஸ்கி எப்பொழுதும் திபெத்தி லுள்ள குருவாட்சித் தலைவர்களுடன் தொடர்பு கொண்டுள்ள தாகக் கூறப்படுகிறது. அத் தலைவர்களின் அற்புதங்களைச் செய் யும் ஆற்றல்கள் பல—எழுத்துக்களைச் சேர்த்தல், இல்லாமை யிலிருந்து பொருள்களை வரவழைத்தல், கடிதங்களையும் செய்தி களையும் வருவித்தல் முதலானவை—பிளவாட்ஸ்கிக்கும் அரு ளப்பட்டதாக நம்பப்படுகிறது. பிரம்ம ஞான சபை அங்கத் தினர் இவற்றை நம்பினர். ஆனால் வெளியிலுள்ளோர் இவற் றைச் சந்தேகித்தனர்.

ஆகையால் லண்டனிலுள்ள உளவியல் ஆய்வுச் சங்கம் (Society for Psychical Research) இதைப் பற்றி ஆராய்ந்து அறிக்கை அனுப்பும் பொருட்டு ரிச்சர்டு ஹாட்க்ஸன் (Richard Hodgson) என்வரை இந்தியாவுக்கு அனுப்பினது. ஹாட்க்ஸன் தன் ஆராய்ச்சிகளுக்குப்பின் பிளவாட்ஸ்கி யின் கூற்றுகள்

யானும் சுத்த ஏமாற்று என்று தெரிவித்தார். இது பிரம்ம ஞான சபைக்குப் பேரிடியாக வந்தது.

இவ்வேளையில் பிளவாட்ஸ்கி நோயுறவே இந்தியாவை விட்டுப் புறப்படவேண்டியதாயிற்று. இலண்டனுக்குச் சென்ற இவர் 1887 இல் "இரகசிய கோட்பாடு" என்னும் நூலை எழுதி வெளியிட்டார். இந் நூல் பிரசித்தி பெறலாயிற்று. பத்திரிகை ஒன்று இந்த நூலுக்கு விமரிசனம் எழுதும்படி திருமதி அனி பெசன்ட் என்பவரைக் கேட்டுக்கொண்டது. இந் நூலைப் படித்த பெசன்ட் பிளவாட்ஸ்கியின் கருத்துக்களால் கவரப்பட்டார். இதுவரை நாத்திக நம்பிக்கை கொண்டிருந்த பெசன்ட் இதிலிருந்து பிரம்ம ஞான நம்பிக்கையுடையவரானார். பிளவாட்ஸ்கி 1891 இல் மரித்தார். அதன் பின் பிரம்மஞான சபை பரவுவதற்குக் காரணமாயிருந்தது பெசன்ட் ஆகும்.

### இ. அனி பெசன்ட் அம்மையாரும் பிரம்ம ஞான சபையின் வளர்ச்சியும்.

அனி பெசன்ட் ஆங்கில சபைப் பாரம்பரிய குரு ஒருவரது மனைவியாகும். குடும்பத்தில் ஏற்பட்ட சில துன்பங்கள் காரணமாகக் கணவனையும் கைவிட்டுக் கடவுளையும் மறந்து, நாத்திக நம்பிக்கையுடன் வாழ்ந்தார். இக் காலத்தில் மேற்கண்டவாறு மேடம் பிளவாட்ஸ்கியின் சீஷி ஆனார்.

1892 இல் இந்தியாவில் நடந்த பிரம்ம ஞான சபை மாநாட்டில் கலந்துகொள்ளும்படி பெசன்ட் அழைக்கப்பட்டார். 1893, நவம்பர் திங்கள் இந்தியா வந்து சேர்ந்தார், அதன்பின் இந்தியாவையே தன் தாய்நாடாக ஆக்கிக்கொண்டார். இந்திய உடைகளை அணிந்து இந்து மதத்தின் மறுமலர்ச்சிக்காவும், இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டுக்காகவும், வளர்ச்சிக்காகவும் அடுத்த நாற்பது ஆண்டுகள் பாடுபட்டார். தாம் ஒரு இந்து என்று சொல்லிக்கொண்டார். எனினும் பிரம்ம ஞான சபைக்காக அரும்பாடுபட்டு உழைத்தார். இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, பிரம்ம ஞனத்தைப் பற்றி அறிவுரைகள் நடத்திப் புதுக்கிளைகளைத் தோற்றுவித்துப் பழைய கிளைகளைப் பலப்படுத்திவந்தார். இவருடைய பெரு முயற்சியால் ஒரு இந்துக் கல்லூரியைத் தோற்றுவித்தார் (Central Hindu College—பின்னால் வரணசியில் எழுந்த இந்துப் பல்கலைக் கழகத்தின் ஆரம்பம் இதுவே). மேலும் பகவத் கீதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து மேல் நாட்டார் அதனை அறியும்படிச் செய்தார். மேலும் அநேக சமூக சீர்திருத்தங்களையும் மேற்கொண்டார். தன் வருவாய் அனைத்தையும் மக்கள் நலனுக்காகவே செலவிட்டார்.

1884 இல் ஆங்கில சபையின் குருவாயிருந்த லீட் பீட்டர் பிரம்ம ஞான சபையைச் சேர்ந்து பெசன்டுக்கு உதவியாயி

ருந்தார். பிளவாட்ஸ்கி மரித்தபின் இவர்கள் இருவரும் இந்த இயக்கத்தின தலைவர்களாக ஒப்புக்கொள்ளப்பட்டனர். இவர்கள் இருவரும் சேர்ந்து அநேக மறைபொருட்களை அறிய முயன்றார்கள். கடந்தகால வருங்கால இரகசியங்கள் தங்களுக்கு வெளிப்படுத்தப்படுவதாகக் கூறினர். இப்படியாக இயேசுவும் கிறிஸ்துவும் வெவ்வேறு நபர்கள், வெறும் மானிடர்களே என்றும், இயேசு கி.மு. 105 இல் பிறந்தார் என்றும் பல புரளிகளைக் கிளப்பினர். இப் புரளிகளில் முக்கியமானது பின்வருவது:

பெசன்ட் 13 வயதுச் சிறுவனை கிருஷ்ணமூர்த்தி என்பவனை வளர்த்துவந்தார். திடீரென்று இந்தக் கிருஷ்ணமூர்த்தியில் கிறிஸ்து வெளிப்படப் போவதாகக் கூறினர். இச் சிறுவனுக்குத் தெய்வீக மரியாதைகள் செலுத்தப்பட்டன. இது பெரும் பரபரப்பை உண்டாக்கினது. சபைக்கு உள்ளும் புறம்பும் பலரின் அதிருப்தியைச் சம்பாதித்தது. பையனின் தந்தை பெசன்டுக்கு எதிராய் வழக்குத் தொடர்ந்தார். சென்னை உயர் நீதிமன்றம் பெசன்டுக்கு எதிராய்த் தீர்ப்பு வழங்கினது. ஆனால் பெசன்ட் உயரவைக்கு (Privy Council) மனு செய்து தனக்குச் சாதகமான தீர்ப்பைப் பெற்றுக்கொண்டார். கிருஷ்ணமூர்த்தியையும் அவன் சகோதரன் நித்யானந்தாவையும் வைத்துக்கொள்ள அவருக்கு உரிமையளிக்கப்பட்டது. வழக்கு ஜெயித்தபோதிலும், இதன் மூலம் பிரம்ம ஞான சபை பெரிதும் வீழ்ச்சியடைந்தது.

இதிலிருந்து பெசன்ட் இந்திய அரசியலில் கவனம் செலுத்தலானார். பல சீர்திருத்தக் கருத்துக்களைத் தூவினார். தொடக்கத்தில் வர்ணசிரமத்தை ஆதரித்த இவர் 1913இல் அதை எதிர்க்க ஆரம்பித்தார். 1914இல் *The Common Weal* என்னும் ஒரு வார இதழைத் தொடங்கினர். சில மாதங்களுக்குப்பின் *New India* என்னும் ஒரு தினசரியை ஆரம்பித்தார். இந்தப் பத்திரிகைகள் மூலம் 'சுயாட்சி' (Home Rule) எண்ணத்தை மக்களிடையே பரப்பினார். இது இந்தியரிடையில் இவருக்கு மிகுந்த செல்வாக்கைத் தேடித் தந்தது.

1917இல் சென்னை அரசு இவரைச் சிறைச்செய்தது. இது பொதுமக்களின் நல்லெண்ணத்தை பெசன்ட் அம்மையாருக்கு இன்னும் கூடுதலாகத் தேடித் தந்தது; மக்கள் ஆர்ப்பாட்டம் செய்ய அரசு, பெசன்டை விடுதலை செய்தது. இவருடைய தியாகத்தைப் பாராட்டும் வகையில் மக்கள் இவரை 1917இல் இந்திய தேசீய காங்கிரசின் தலைவராக்கினர்.

ஆனால் இந்தச் செல்வாக்கு அதிக நாள் நீடிக்கவில்லை. 1919இல் காந்திஜி சுதந்திரப் போராட்டத்தில் இறங்கி, ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினர். பெசன்ட் இதை

ஆதரிக்கவில்லை. ஆகையால் இதிலிருந்து இவர் செல்வாக்கு மங்கத் தொடங்கிற்று. 1933இல் இவர் மரணமடைந்தார்.

அனி பெசன்ட் அம்மையார் இந்தியாவுக்கு ஆற்றியுள்ள சேவையைப் பாராட்டாதோர் இல்லை. ஐரோப்பிய தோலின் கீழ் பெசன்ட் இந்திய இதயத்தைக் கொண்டிருந்தார் என்கிறார் பேராசிரியர் சர்மா[1].

## ஈ. பிரம்ம ஞான சபையின் கொள்கைகள்

பிரம்ம ஞான சபையின் போதனைகளை அருள்திரு. J. தங்கையா பின்வருமாறு தொகுத்துத் தருகிறார்[2].

1. கடவுள் என்றழைக்கப்படும் பரப்பிரம்மப் பொருள் ஒன்று உண்டு. அப்பொருள் எங்கும் பரவியிருக்கிறது. அது அழியாதது. அதற்கு அப்பால் அதைப் பற்றி ஒன்றும் கூற முடியாது.

2. இப் பரப்பிரம்மப் பொருளுக்குள் ஏராளமான அண்ட சராசரங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு சராசரத்திலும் பல சூரிய மண்டலங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு சூரிய மண்டலமும் வார்த்தை (Logos) அல்லது ஈஸ்வரன் என்பவரால் உருவாக்கப்பட்டது. இந்த வார்த்தைதான் சூரிய மண்டலத்தை ஆண்டு பாதுகாக்கிறது. மனிதன் அந்த வார்த்தையிலிருந்து தோன்றியவன். ஈஸ்வரனின் பொறி மனித உள்ளத்தில் இருக்கிறது. மனிதன் ஈஸ்வரனிலிருந்து வந்ததால் கடைசியில் அவரிடத்திற்கே திரும்பவேண்டும்.

3. ஈஸ்வரனுக்குக் கீழ் ஏழு மந்திரிகள் உண்டு. இவர்கள் ஈஸ்வரனின் அம்சங்கள். மந்திரிகள் ஒவ்வொருவருக்கும் கீழ் ஏழு தேவதூதர்கள் உள்ளனர். இவர்கள் ஏழுஆவிகள்.

4. பூமியாகிய இந்த உலகில் ஏழு உலகங்கள் இருக்கின்றன.

5. இந்த உலகம் ஏழு மந்திரிகளில் ஒருவனின் ஆளுகைகையின் கீழ் இருக்கிறது. இவனுக்குக் கீழ் பல மந்திரிகள் உண்டு.

6. எல்லா மார்க்கங்களிலும் சில உண்மைகள் உண்டு. ஆகையால் ஒன்று மற்றொன்றைவிடச் சிறந்தது என்று கூற முடியாது.

7. உலகம் உண்டானது முதல் உலக மக்களின் உயர்வுக்காகப் பாடுபடும் வெள்ளியம்பலம் (The great white brotherhood and lodge—இது திபெத்தில் இருப்பதாக நம்பப்பட்டது) ஒன்று இருக்கிறது. பாவ மாசு இல்லாதவர் இந்த அம்

---

1. Sarma, D. S., *Hinduism Through the Ages*, P. 116.
2. Op. cit., p. 41.

பலத்தில் உறுப்பினராய் இருக்கலாம். உலகில் நீதி குன்றி அநீதி உயரும்போது இதிலிருந்து ஒருவர் மனித அவதாரம் எடுத்து நீதியை உலகில் நிலைநாட்டுவார். தம் வேலை முடிந்தபின் மீண்டும் வெள்ளியம்பலத்திற்குச் சென்றுவிடுவர். இவர்கள் முன்னால் உலகில் பிறர்நலம் கருதி பாடுபட்டுப் பரீட்சையால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். எல்லோரும் இவ்வாறு பாடுபட அழைக்கப்படுகின்றனர்.

இச் சபை அங்கத்தினருக்குத் தாம் விரும்பினதை நம்பவும், செய்யவும் சுயாதீனமுண்டு. எந்த மதத்தையும் சார்ந்திருக்கலாம். தான் சார்ந்திருக்கும் மதத்தை உறுதியாகப் பற்றிக்கொண்டால் அவன் அதனால் நற்பலன் அடைவான். பிரம்மா ஞான போதனையை அவன் தன் நம்பிக்கைக்கேற்ப அமைத்துக்கொள்ளலாம். ஆனால் தன் நம்பிக்கையைப் பிறர் மேல் திணிக்க முயலக் கூடாது.

எல்லாச் சமயத்தவருக்கும் பொதுவான ஒரு அமைப்பைக் காண விழைவது சிறப்பானதே. ஆனால் அதில் பல பிரச்சனைகள் உண்டு. கருத்து வேறுபாடுகளும், போட்டிகளும் ஏற்கெனவே சபையிலும் எழுந்துள்ளன.

உலகாயதத்தில் (Materialism) மூழ்கிப் போகவிருந்த உலகை அதினின்று மீட்பதற்காக வெள்ளியம்பலம் (White Brotherhood) பிரம்ம ஞான சபையை நிறுவியதாகவும், பிளவாட்ஸ்கி இந்த வெள்ளியம்பலத் தூதர் என்றும் குறிப்பிடுகிறார் பெசன்ட்.

இவ்வாறு, பிரம்ம ஞான சபை ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு காலம் இயங்கி, பல ஏற்றத் தாழ்வுகளைக் கண்டு, இன்று ஒரு வகையான பலவீன நிலையில் காணப்படுகிறது. இதன் தலைவர்களான பிளவாட்ஸ்கி, பெசன்ட் ஆகியோர் உரிமை கொண்டாடிய பல காரணங்கள் பொய்யென்று நிரூபிக்கப்பட்டது இதற்கு முக்கிய காரணமாகும். குறைகள் அநேகம் இவ்வியக்கத்தில் காணப்படினும், இந்திய சமயங்களுள் சகோதர மனப்பான்மையை வளர்க்கவும், சமூகத் தீங்குகள் அகலவும் இவ்வியக்கம் ஆற்றிய சேவையைப் பாராட்டாமற் இருக்க முடியாது.

## துணை நூற்கள்


1. Annie Besant, *Theosophy*, T. C. & E. Jack, New York, 1913.

2. Farquhar, J. N., *Modern Religious Movements in India*, Macmillan & Co., London, 1924.

3. Sarma D. S., *Hinduism Through the Ages*, Bharatiya Vidya Bhavan, Bombay, 1956.

4. *தங்கையா*, J., **இந்தியாவிலுள்ள தற்கால மார்க்க இயக்கங்கள்**, *அத்தியட்சாதீன நூலகம், பாளையங்கோட்டை, 1961.*

5

# காஞ்சி காமகோடி பீடம்

## வி. சாம் ஜெயசிங்

### அ. ஆதிசங்கரரும் ஆச்சார்ய மடங்களின் தோற்றமும்

காஞ்சி காமகோடி பீடத்தின் நிறுவனர் ஆதி சங்கரர் என்றழைக்கப்படும் சங்கராச்சாரிய ஸ்வாமிகள் ஆவர். இவர் வாழ்ந்த காலம் கி.பி. 788-820 என்று தற்கால அறிஞர் கருதுகின்றனர். மலபாரிலுள்ள காளத்தி என்ற இடத்தில் பிறந்தார். விளையும் பயிர் முளையிலே தெரியுமென்ற முதுரைக்கேற்ப பிள்ளைப் பருவத்திலிருந்தே அவர் சாத்திரங்களிலும், வேதங்களிலும், தத்துவ அறிவிலும் விற்பன்னராகத் திகழ்ந்தார். எட்டு வயதிலேயே நால்வகை வேதங்களிலும் வித்தகராக விளங்கினாரென்பதினின்றே அவர் தம் நுண்மதியையும், மனத்திட்பத்தையும், நுண்மான் நுழைபுலத்தினையும், பக்தி முயற்சியினையும் நாம் அறிந்துகொள்ள முடியும். பன்னிரண்டாவது வயதில் அவர் கரை காணாத சாத்திரங்களே இல. பகவத் கீதையிலும் உபநிடதங்களிலும், பிரம்ம சூத்திரங்களிலும் அறிவுத் திறமையில் அவருக்கு நிகர் அவரே. வேதங்களில் அவர்க்கு தக்க பயிற்சியளித்து, புலமையூட்டியவர் கௌதபாதாச்சாரியராவர்.

இவர் கௌதபாதாச்சார்யரிடம் விடைப்பெற்றுக்கொண்டு காளத்திக்குத் திரும்பினார். அதுகாறும் மரணப்படுக்கையிலிருந்து வந்த அவரது அன்னையாரான ஆர்யாம்பாள் அம்மையார் சிறப்புலகெய்திடவே சங்கரர் ஈமக்கிரியைகளைச் செய்து நிறைவேற்றிவிட்டு, அங்கேயே ஒரு மடம் அமைத்து, சன்யாசத்தில் அமர்ந்திருக்க நாட்டங் கொண்டார். அது போழ்து நர்மதை நதிக்கரையில் அமைந்துள்ள ஓம்கார்சேத்திரத்தில் எழுந்தருளியிருந்த கோவிந்த பகவத் பாதரிடமிருந்து அவருக்கு அவசர அழைப்பு வந்தது. சங்கரரும் உடனடியாக அவண் விரைந்தார். இருவரும் ஒருவரையொருவர் கட்டித் தழுவிக் கொண்டனர். சங்கரருக்கு தமது ஆசிகளை வழங்கி முடித்ததும், கோவிந்த பகவத் பாதர் முக்தி நிலையெய்தினர்.

குருவின் ஆணைகட்கிணங்க சங்கரர் ஆன்மீகப் பணிகளை முழுமுச்சுடன் நிறைவேற்றிடலானர். துவாரகை சென்று, துவாரகா மடம் நிறுவினர். பின்னர் பாதாரிகாஸ்ரமம் சென்று ஜோதிர் மடத்தையும், கிழக்குக் கடற்கரைப் பகுதியில் கோவர்த்தன மடத்தையும், தென்மேற்குப் பகுதியில் சிருங்கேரி மடத்தையும், இறுதியில் காஞ்சியில் காம கோடி பீடத்தையும் அமைத்து முடித்தார். அவரது வாழ்க்கையின் எஞ்சிய பகுதி முழுவதையும் காஞ்சி

காமகோடி பீடத்திலேயே செலவிட்டார். அவரது வாழ்க்கையை ஒரு தியாக வேள்வியென்று கூறிடல் தகும். இந்து சமய ஆச்சார்யருள் சங்கரர் மிக முக்கிய இடம் வகிக்கின்றார்.

அத்வைத வேத வளர்ச்சிக்கு ஆதி சங்கரர் ஆற்றிய பணி இமாலயச் சிறப்புடையது. இந்து சமய தர்மத்துக்கு முரண் பட்டு நிற்கும் கொள்கைகளையும், சமய நெறிகளையும் இவர் தாக்கினார். அத்வைத வேத கருத்துக்களை தத்வார்த்த ரீதியில் சுவைப்பட எழுதிவைத்தார். பகவத் கீதையைப் பற்றியும், உப நிடதங்களைப் பற்றியும் பிரம்மசூத்திரங்களைப் பற்றியும் தமது விளக்கங்களையும் கருத்துக்களையும் தொகுத்துரைத்துக் கொடுத் துள்ளார் அத்வைதப் பாணி இறைவணக்கத்தை நிலைநாட்டிய பெருமை இவரையே சேரும். இந்து சமயத்தை நன்னெறிப் படுத் துவதில் இவர் ஓர் சீர்திருத்தச் செம்மலாயிருந்ததுடன், தான் சென்ற இடங்களிலெல்லாம் சிஷ்ய பரம்பரையை ஏற்படுத்தித் தமது கொள்கைகள் மீண்டும் பாழ்ப்பட்டுப் போகாதபடி யாது காக்கப்பட திட்டங்கள் தீட்டி அமுல்படுத்தினார். இந்தியா முழுவதிலும் மடங்களை நிறுவி, இந்து சமயப் பாரம்பரியங்களை யும் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும், மரபுகளையும் கட்டிக் காத்த காவலர் இவர்.

சங்கரர் நேபாளத்துக்குச் சென்று புத்த சமயக் கொள்கை களை வேரற வெட்டி வீழ்த்தி, அங்கு வேதாந்தத் தீபம் பிர காசிக்கச் செய்தார். அவரிடம் அளப்பரிய அற்புத ஆற்றல் அமைந்திருந்தது, இந்து சமயத்தை விரோதிகளின் சதிகளி னின்றும் காப்பாற்றுவதும், அதனை அவனியெங்கும் பிரச்சாரம் செய்து வளர்ச்சியெய்திடச் செய்வதும், அதன் பல்வேறு பிரிவு களை ஒற்றுமைப்படுத்தி ஒரு கட்டுக் கோப்பான அமைப்பை உருவாக்குவதுமே இவரது முக்கிய இலட்சியங்கள். கைலா சத்தினின்று அவர் கொண்டுவந்த 5 படிகங்களிலிருந்தும் பெறப் பட்ட யோக லிங்கத்தை வைத்து காம கோடி மடத்தில் பூசை நடத்தினார். இதுவே காமகோடி பீடத்தின் மகிமையாகும். அவர் இறுதியில் சமாதி நிலையடைந்ததும் இங்கேயாம்: காஞ்சி யிலுள்ள காமாட்சி கோவில், ஏகாம்பரேஸ்வரர் கோவில், வரதராசர் கோவில்களிலும், திருவொற்றியூர் கோவிலிலும் அவரது உருவங்களைப் பார்க்க முடிகின்றது.

சங்கரரின் நாட்டுப்பற்று கருத்தூன்றிக் கவனித்தாற்பாலது. அன்னபூரணி தேவிக்குச் சமர்ப்பணம் செய்யப்பட்ட பாடலொன் றில், "பார்வதி தேவி எனது அன்னையார், சிவபெருமானே என் நேச பிதா, அவனது சிஷ்யகோடிகளனைவரும் எனது உற்றார் உறவினர், இப்பிரபஞ்சமே என் பிறந்தகமெனக் கனல் தெறிக் கப் பாடி. கவியாழை மீட்டுகின்றார். நாட்டைப் பற்றிய சிந்தனை யின்றி வீட்டைப் பற்றியே எண்ணுபவன் நடைபிணமே. மானி டரனைவரையும் அண்ணன் தம்பியாரெனக் கருதிடும் மாண்பு

சிலிச் சிறந்தது. தேசப்பற்றும், மக்கள் நேசமும் ஒன்றோ டொன்று தொடர்புடையன. உலக நன்மை (லோக க்ஷேமம்) எனும் கீதையின் கருத்தை அடியொற்றியதே சங்கரரின் இச் சன்மார்க்கக் கொள்கையுமெனக் காண்கின்றோம். உலக மேம் பாடு, மனித மேம்பாடென்று அல்லும் பகலும் சிந்திப்பவன் பாவங்கட்கு அப்பாற் பட்டவன், வானுறையும் தெய்வம்.

கல்வியின் தலையாய நோக்கம் கடவுளைக் காண்பதுவே எனச் சங்கரர் சங்க நாதம் எழுப்பினார். கடவுட்பற்றை நீக்கி விட்டால் கல்வி கவைக்குதவாது எனப் பறைசாற்றிடலானார். அன்பு, தூய்மை, பயமின்மை, தொண்டுணர்வு முதலிய உயர் நோக்கங்கள் கல்வியோடு இயைந்து நிற்றல் வேண்டும். தூய் மையைக் காத்து நடந்திடலே தலையறம். ஒழுக்கம், தெய்வ பக்தி, தேசபக்தி, நெஞ்சத் துணிவு, கல்வி முதிர்ச்சி யாவு மின்றேல் சமுதாய மேம்பாடு பகற் கனவாகவேயிருக்கும்.

காமகோடி பீடத்தைத் தவிர வேறு பல மடங்களையும் ஆதி சங்கரர் அமைத்துள்ளார். அவற்றில் சிலவற்றை இங்குக் காண்போம்.

ஆதிசங்கரர் அமைத்துள்ள மடங்களுள் முதன்முதலாக உருவாகிய மடம் துவாரகாமடமாகும். மேற்குக் குஜராத்தில் இஃது அமைந்துள்ளது. கி.மு. 491 இல் இது நிறுவப்பட்டது. இதன் முதல் அதிபர் யாரென்பதைத் திட்டவட்டமாக வரைய றுத்துக் கூறிட முடியவில்லை. அஸ்தமாலகர், பத்மபாதர், சுரேஸ்வரர் என்ற ஆச்சார்ய சுவாமிகளுள் எவர் முதலில் இம்மடத்தின் பொறுப்பேற்றவரென்பது புலப்படவில்லை. ஏனெ னில் இம்மூவருமே இதனையமைக்க உறுதுணையாயிருந்திருக் கின்றனர். முதலில் பொறுப்பேற்ற மடாதிபதிகள் நீண்ட ஆயுள் பெற்றிருந்தனர், காஞ்சி மடத்துக்கும் இதற்குமிடையே யுள்ள பெரிய ஒற்றுமை இது. காஞ்சி மடத்தைப் போலவே இங்கும் 65க்கும் மேற்பட்ட ஆச்சார்ய சுவாமிகள் மடாதிபதி களாயிருந்துள்ளனர். இஃது காலச் சுழலில் சிக்கி அழிந்து விடாமல் இன்றளவும் நன்கு இயங்கி வருகின்றது.

அடுத்து அமைக்கப்பட்டது ஜோதிர் மடமாகும். இது கி.மு. 486 இல் தொட்டகாச்சார்யாரை மடாதிபதியாகக் கொண்டு இமயமலையடிவாரத்தில் அமைக்கப்பட்ட சமயக் கேந்திரமாகும். கிரி, பர்வதம் அல்லது சாகரம் என்பது இம் மடாதிபதிக ளின் பட்டங்கள். பாதாரி நாருயணனே ஈண்டு கோயில் கொண்டுள்ள தெய்வம். பூரணகிரி ஈண்டு குடிகொண்டுள்ள தேவதை. அதர்வண வேதத்தை அடிப்படையாகக் கொண்டு இந் நிறுவனம் அமைக்கப்பட்டது. இப்போது இம் மடம் அழிக்கப்பட்டுவிட்டது.

கோவர்த்தனமடம் அடுத்து இவ் வரிசையில் இடம் பெறுகின்றது. இது நிறுவப்பட்ட ஆண்டு கி.மு. 485 ஆகும். பத்மபாகாச்சார்யரே இதன் முதலதிபர். ஜகன்னாத சுவாமி இங்கு உறைந்துள்ளதாக ஐதீகம். இருக்கு வேதத்தை இம் மடம் தழுவி நிற்கின்றது. இந் நாள் வரை 144 பேருக்கு மேல் இதில் தலைமை வகித்துள்ளனர். இன்று வரை இது சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகிறது. பூரியில் மேலும் சங்கரானந்த மடம், சிவதீர்த்த மடம், கோபால தீர்த்த மடம் முதலிய மடங்களும் நடந்து வருகின்றன. இதன் ஆச்சார்ய பரம்பரையின் எண்ணிக்கை மிகவும் கூடுதல் என்பது இதன் தனிச் சிறப்புகளிலொன்று.

சிருங்கேரி மடம் பலவகையில் உயர் தனிச் சிறப்புடைத்து. இது மைசூரில் நிறுவப்பட்டுள்ளது. இதுவரை 35 மடாதிபதிகளே இதில் தலைமைப் பொறுப்பேற்று நடத்தியுள்ளனர். இந்த மடத்தைச் சேர்ந்த பல மடாதிபதிகள் ஆதிசங்கரர் கி.பி. 788 முதல் 820 வரை வாழ்ந்தாரென்ற கருத்துக்கு ஆக்கமளித்துள்ளனர். இம் மடம் வத்திக்கன் அரண்மனையை நிகர்த்தது. மாமன்னர்களின் மான்யம் இதற்குத் தட்டின்றிக் கிடைத்து வந்துள்ளமையால் ஒரு அரசு போன்றே இஃது நிர்வகிக்கப்பட்டு வருகிறது. போப்பாண்டவர் அனைத்துலகக் கத்தோலிக்கரின் தலைவராகத் திகழ்வது போன்று இதன் தலைவர் பாரத கண்டத்தின் கண்ணுள்ள அத்தனை சீடர் பரம்பரைகளின் மீதும் ஆதிக்கம் செலுத்திவருகிறார். சரஸ்வதி, பூரி, பாரதி முதலிய பட்டங்களை சிருங்கேரி மடாதிபதிகள் தரித்துக்கொள்கின்றனர். யஜுர் வேதமே இதன் வேதம். கி.மு. 484 இல் இது உருவாக்கப்பட்டது. கும்பகோணம், திருசைலம், அம்னி, சங்கேஸ்வரம், கூடாலி, புட்பகிரி, விருபட்சி முதலிய இடங்களிலெல்லாம் இதற்குக் கிளை மடங்களுள்ளன.

துவாரகா பீடம் மகாராட்டிரம், சௌராட்டிரம், சிந்து பிரதேசங்களிலும், அவற்றை ஒட்டியுள்ள இடங்களிலும் வாழ்கின்ற மக்கட்குரியது. கோவர்த்தன மடமானது அங்கநாடு, வங்காளம், கலிங்கம், மகதம், உத்கல் முதலிய பிரதேசங்கட்குரியது. தெற்கு மாநிலங்களான கேரளம், தமிழ் நாடு, மைசூர், ஆந்திரம் முதலியன சிருங்கேரி மடத்துக்கு கட்டுப்பட்டவை. காஷ்மீரமும், பிற வடக்கு மாநிலங்களும் ஜோதிர் மடத்தின் அதிகார வரம்புக் குட்பட்டவை. இதுதவிர இந்து சமயம் 6 பெரும் பிரிவுகளாக வகுக்கப்பட்டு (சைவம்) வைணவம் முதலியன வெவ்வேறு சீடரின் கண்காணிப்புக்குட்படுத்தப்பட்டிருந்தது.

## ஆ. ஆச்சார்யர் மடங்களின் அடிப்படைப் போதனை: அத்வைதம்

ஜீவாத்மாவும் பரமத்மாவும் ஒன்றெனகிறது அத்வைதம். ஆத்மா நித்யமானது, யாண்டும் உறைந்திருப்பது, மாறுதிருப்

பது, அசைவற்றது என்பது ஒரு கருத்து. பெருவிரல் ஆள் காட்டி விரலைத் தொடுவது அத்வைதம். ஞானம் பரிபூரணம டையும்போது உலகம் ஒரு மாறுபட்ட, பிரிந்து நிற்கின்ற சக்தியாக அன்று, பிரம்மனாகவே—சச்சிதானந்தமாகவே திக ழும். மாயா சக்தியானவளே மகிதலத்தை இயக்குகின்றாள். நித்ய பரம்பொருளைப் பல்வேறு உருவங்களாகக் காட்டி நிற்ப வளிவளே. மாய்கையை வென்றுவிட்டால் மனிதனும் இறை வனும் இரண்டறக் கலந்து, ஒன்றாகி விடுகின்றனர். இதுவே அத்வைதத்தின் சாரம். மனிதன் வெறும் உடலோ, உயிரோ மட்டுமன்று; அல்லது இறைவன் உறையும் ஆலயம் மட்டு மன்று; மனிதனே இறைவன், இறைவன் எப்பொருளிலுமுள் ளான்; அனைத்தும் அவனே. இத்தகைய ஐக்கிய போதமே அத் வைதம். கௌணாத்துமம் இல்லறத்தில் பற்றுக்கொண்டிருத் தலைக்குறிக்கும். மித்யாத்மம் உடலுடன் இணைந்து நிற்றலைச் சுட்டி நிற்கும். முக்யாத்மாவே பிரம்ம ஐக்யம்.

பிரம்மனிலிருந்தே பிரபஞ்சம் உருவாக்கப்பட்டது. பிரபஞ் சத் தோற்றத்தினால் இறைவன் பாதிக்கப்படப்போவதில்லை. பிரபஞ்சம்=பிரம்மன்+மாயா. மாயா=0. பிரம்மன்+மாயா= நித்ய பிரபஞ்சப் பரம்பொருள்.

$\frac{1}{0}=\frac{2}{0}=\frac{3}{0}=$ நித்யம் (Infinity). நித்யம் (Infinity) $\times 0 = 1, 2, 3, 4 - -$. எனவே உலகில் மாயையின் ஆற்றல் மிகுந்து தோன் றுகிறது. சங்கரர் உலகை ஒரு பொய்யென வர்ணிக்கவில்லை. உலகம் ஒரு உண்மை; மெய்ஞான அத்வைதப் போதமே அதனை புனிதப்படுத்தும்—பூரணப்படுத்தும் என்கின்றார்.

அத்வைதம் அனைத்துச் சமயங்கட்கும் ஆதரவு நல்கி நிற் கின்றது. மனிதன் மகிபனுடன் ஒன்றாகிவிடுகின்றானென்பதை எல்லாச் சமயங்களும் ஒத்துக்கொள்வது இல்லை. சிவன், பிரம்மா, விஷ்ணுவெனும் திருமூர்த்திகளும் பிரம்மனின் வெவ் வேறு உருவங்கள்தாம். பிரம்மாவுக்கு நிர்குண பிரம்மன், சற் குண பிரம்மனென்று வெவ்வேறு உருவங்கள் உள. விஷ்ணு வும் அப்படியே. தட்சிணாமூர்த்தியென்றும் பிற உருவங்களாக வும் சிவபெருமான் தோன்றுவதில்லையா? அனைத்தும் பரப் பிரம்மம். அத்வைதம் இவ்விதம் இந்து சமயம் பல தேவர்களை வழிபடும் சமயமன்று; ஒரே தேவனை வழிபடும் சமயமென்று சாதிக்கின்றது.

அத்வைதம் இந்து சமயத்தின் மகிமைக்குப் பரணி பாடு கின்றது. உலகம் பெரும் சமயமாக அதனை வாழ்த்துகிறது. எல்லாச் சமயங்களும் இறைவனையே நமக்குக் காட்டுகின்றன எனச் சுட்டிக்காட்டுகின்றது. பிரபஞ்சத்தின் மூல ஆற்றல் இறைவனே; இறைவனே இவ்வுலகைப் படைத்தார்; இறைவ னில் எல்லா ஆற்றல்களும் அடக்கம் என்ற அத்வைத நெறி

கள் விஞ்ஞான தத்துவங்களென்றும், ஐன்ஸ்டீனின் கொள்கை விளக்கங்களென்றும் வாதிடுவோருளர். (Advaita is the only philosophy which can be justified on the basis of modern science which postulates one universal energy without name or form. It is in harmony with the Einsteinian Theory of Relativity).

## இ. காஞ்சி காமகோடி பீடமும் அதன் பணிகளும்

சந்திரசேகர சரஸ்வதி சாமிகள் இப்போது இந்த மாபெரும் நிறுவனத்தின் தலைவர். இவர் தம் காலத்தில் இப்பீடத்தின் மகிமை பன்மடங்கு உயர்ந்துள்ளது; இன்னமும் வளர்பிறையாயுள்ளது என ஐயந்திரிபறக் கூறவியலும். முந்திய ஆச்சாரியரின் பணிகளை இவர் தீவிரப்படுத்தி, ஒரு ஞானியாகவும், தபசியாகவும் ஒளிருகின்றார். 13 வயதிலேயே இவர் இந்த அரிய பொறுப்பினை ஏற்று நடத்தவேண்டிவந்தது. வயதில் குறைந்தவராயினும் அறிவுக் கடலாய்—ஆற்றலின் இமயமாய்—பக்தியின் கொடுமுடியாய் விளங்கி, கற்றோரையும் கல்லாதாரையும் காந்தம்போன்று கவர்ந்துநின்றார்.

இப் பீடம் அமைக்கப்பட்ட நாள்தொட்டு எல்லா மடாதிபதிகளும் பக்தி நூல்களியற்றுவதிலும், கோயில் திருப்பணி வேலைகளைக் கவனிப்பதிலும் சிறப்புக் கவனம் செலுத்தி வந்தனர். அவர்கள் எழுதியுள்ள தோத்திரங்கள் இன்றும் பக்திச் சுவையும், காவியச் சிறப்பும், கருத்துச் செறிவும் கொண்டு விளங்குகின்றன. திருஞானசம்பந்தரும், வாகீசரும், சுந்தரமூர்த்தி நாயனாரும், மாணிக்கவாசகரும், ஆழ்வார்களும் பக்திப் பாடல்களைப் பாடி, இறைவனை இறைஞ்சி நின்று, மக்களின் இதயக் கழனியில் பக்தி விதைகளை விதைத்து, ஆன்மீகப் பயிர் வளர்த்துப் போதிய அறுவடையும் பெற்று மகிழ்ந்ததின் மூலகாரணம் காமகோடி பீடாதிபதிகளின் முதல் முயற்சிகளாகும். ஐந்தாவது சங்கரர் எனும் சுவாமிகள் காஷ்மீருக்குத் திக்குவிஜயம் செய்து, அங்கிருந்த அரசவைப் புலவரை வாய் வீச்சிலே வென்று அங்கு அத்வைதக் கருத்துக்களைப் பரப்பிடலானார். 13ஆம் நூற்றாண்டிலிருந்த வித்யாதீர்த்தர் என்பவர் கோவாவை மையமாகக்கொண்டு ரோமன் கத்தோலிக்க சபையினர் செய்துவந்த சமயத் தொண்டுகளைத் தடுத்து நிறுத்துவதற்காகவேண்டி, ஆங்காங்கே புதிய மடங்களை நிறுவி, சூறாவளிச் சுற்றுப்பிரயாணம் செய்து, பிரசங்கக் கர்ச்சனை புரிந்தார்.

நான்காவது சந்திரசேகர சுவாமிகள் தஞ்சை மன்னர்பிரான் பிரதாபசிம்மனின் வேண்டுகோட்கிசைய தஞ்சாவூரைக் காமகோடி பீடத்தின் தலைமையிடமாக மாற்றிக்கொண்டார். கர்னாடகப் போர்களின் காரணமாக காஞ்சி அல்லோலகல்

லோலப்பட்டுவிட்டது. எனவேதான் தலைமையிடத்தைத் தெற்கு நோக்கி மாற்றிக்கொண்டு செல்லவேண்டிய அவசியமேற்பட்டது. பங்காரு காமாட்சியின் தங்க விக்கிரகம் இவ்விதம் உடையான்பாளயத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டுப் பின்னர் நிரந்தரமாகத் தஞ்சையில் வைக்கப்பட்டுவிட்டது. தஞ்சையை விடக் காவேரிப்படுகையிலுள்ள குடந்தை நகர் மிக்க வசதியாகத் தெரிந்ததினால் மடம் அங்கு மாற்றப்பட்டு, கும்பகோணம் மடம் என்று அழைக்கப்படலாயிற்று.

1911இல் இப்போதைய சுவாமிகளால் கும்பகோணத்தில் உள்ள கட்டடங்கள் சீரமைக்கப்பட்டன. 1922இல் திருவானைக் கோயில் மடம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. 25-2-1944 ஆம் நாள் காஞ்சி காமாட்சி கோயிலிலும், 1941இலும் 1963இலும் தஞ்சையிலுள்ள பங்காரு காமாட்சி கோயிலிலும் கும்பாபிஷேக மேழா நடத்தப்பட்டது. 1962இல் காஞ்சியிலுள்ள கோயில் கட்டடங்கள் பழுதுபார்க்கப்பட்டு, செப்பம் செய்யப் பட்டுள்ளன.

1963இல் ராமேஸ்வரத்தில் அக்கினித் தீர்த்தத்தினருகில் ஒரு மண்டபம் அமைக்கப்பட்டது. அதே ஆண்டில் திருவிடைமருதூரில் பாதுகாமண்டபம் கட்டப்பட்டது. மகாலிங்க மூர்த்தியால் அத்வைத வேதாந்தத்தின் பீடுடைச் சிறப்பு நிருபணம் செய்யப்பட்டு, நிலைநாட்டப்பட்ட இடம் இஃதேயாம். அண்மையில் மேற்கு மாம்பலத்தில் ஒரு கோயில் எழுப்பப்பட்டுள்ளது. கன்னியாகுமரியிலும், குருட்சேத்திரத்திலும், இரிசிகேசத்திலும், பாதாரியிலும், திருச்சைலத்திலும் கட்டப்பட்டுள்ள மண்டபங்கள் காமகோடி பீடத்தின் அழியாச் சின்னங்கள்; எழிற் பெட்டகங்கள்; அத்வைத ஒளி சுடர்விட்டொளிரும் கலங்கரை விளக்கங்கள்.

அத்வைத சபை 1895இல் குடந்தையில் நிறுவப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் இச் சபையின் ஆதரவில் மாநாடுகள் நடத்தப்படுகின்றன; ஆன்ம ஞானச் செம்மல்களால் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படுகின்றன. விவாத அரங்கு சமஸ்கிருதத்திலும், சொற்பொழிவுகள் தமிழிலும் நடைபெறும். அத்வைதப் பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன; தகுதி படைத்தோர் பரிசுபெற்றுச் செல்கின்றனர். இத்தகைய மாநாடுகள் குடந்தையில் மட்டுமல்லாது சென்னை, மதுரை, பாலக்காடு, சீர்காழி, கோனேரிராஜபுரம், முடிகொண்டான், ஆனதாண்டவபுரம் முதலிய வரலாற்றுச் சிறப்புப் படைத்த புண்ணிய தலங்களிலும் நடத்தப்பட்டுள்ளன.

தினசரி பயிற்சி வகுப்புகள் இக் கேந்திரத்தின் முக்கிய அம்சம். சமயாச் சார்யர், சான்றோர், அறிஞர் பெருமக்களைக் கொண்டு முக்கிய நகர்களில் சிறப்புரையாற்ற ஏற்பாடு செய்

தல் இதன் இன்னொரு தலையாய பணி. 1955இலிருந்து மயி லாப்பூரில் இதன் நிலையமொன்றமைக்கப்பட்டு, அங்கும் சமயக் கல்வி புகட்டப்படுகின்றது. ஒரு சமஸ்கிருத இதழொன்று 1949-ம் ஆண்டிலிருந்து துவக்கப்பட்டுள்ளது. சமஸ்கிருதத்தி லும், தமிழிலும் சிந்தனையைக் கிளறும் சீரிய கட்டுரைகள் இதில் வெளிவருகின்றன. பக்திச் சுவைச் சொட்டிடும் இனிய கருத்துக்கள் அத்வைத சித்தாந்தத்தைத் தெள்ளத் தெளிய நமக்கு எடுத்தோதுகின்றன.

**முத்ராதிகாரிச் சங்கம்:** பாரத நாடு கிராமங்களை முது கெலும்பாகக் கொண்டுள்ள பழம்பெரும்நாடு. பாரெங்கும் பக்திக்கு வித்தூன்றிய பூமி. பல்வேறு சமய தாபகர்களை ஈன்றெடுத்த பொன்னாடு. சமயப்பணிகள் ஈண்டு கிராமங்களி லேயே ஆரம்பிக்கப்படவேண்டும். சமயத் தலைவர்கட்கான வரிசை கிராமங்களிலேயே அமையவேண்டும். இதுவே முத் ராதிகாரிச் சங்கத்தின் அடிப்படைத் தத்துவம்.

காமகோடி பீடத்தின் சீடர்கள் இந்தச் சங்கத்தின் அங் கங்களாக கிராமங்களிலும், நகரங்களிலும் பணியாற்றுவர். மடத் தையும், சைவ, வைணவ குடும்பங்களையும் இணைக்கும் கருவி கள் இவர்கள். இவர்கள் குறிப்பிட்ட நாட்களில் அந்தந்த இடங்களில் கூட்டம்கூட்டி, மடத்தின் கொள்கைகள், செயல் முறைகள், மேம்பாடு முதலியனவற்றை விளக்குவர். இவர்கள் உண்மையிலேயே ஆன்ம வழிகாட்டிகளாயிருப்பர். ஒழுக்கத் தின் உறைவிடமாய் — மாசில்லா மாணிக்கங்களாய் — தலை கொடுத்தேனும் தர்மத்தைக் காத்திடத் துடிக்கும் தலைமகன் களாக உள்ளோரே இப்பொறுப்பில் ஈடுபடுத்தப்படுவர்.

பொதுவாக, முத்ராதிகாரியின் பணிகள் பதினொரு வகைப் படும்.

1. ஏகாதசி நாள்தோறும் மகாபாரதம், பெரியபுராணம் பக்த விசயம் முதலிய புராணங்களிலுள்ள பகுதிகளைக் கூடி யிருக்கும் மக்களுக்குப் படித்துக்காட்டி விளக்குதல்.

2. மடத்தின் உரிய அறிவிப்புகளை அவ்வப்போது மக்கள் மன்றத்தின் முன் வைத்தல்.

3. ஏகாதசி நாள்தோறும் கோயில் நிலங்களில் களை பிடுங்கி, பூமியைப் புனிதப்படுத்தல்.

4. கசாப்புக் கடைகளுக்கு ஆடு, மாடுகள் விற்கப்படு தலைத் தடுத்தல்; கிழட்டு மாடுகளையும், ஆடுகளையும் கிராம வாசிகள் உதவியுடன் பராமரித்துவரல்.

5. பிற சமயங்களுக்கு இந்துக்கள் மாற்றம் செய்யப்படு வதை அறிவுரைகளின் மூலமாகவும், அமைதி வழிகளின் மூல மாகவும் தடுத்தல்.

6. ஒவ்வொரு இல்லத்தினின்றும் கொஞ்சம் பசு நெய் காணிக்கையாகப் பெற்றுத் தங்கள் வட்டாரத்திலுள்ள எல்லாக் கோயில்களிலும் வெள்ளியன்று தீபார்ச்சனை செய்தல்.

7. கோயில்கள், அறவழிகளுக்காக ஒதுக்கப்பட்ட சொத்துக்கள், கண்மாய்களின் பட்டியல் தயாரிப்பு.

8. ஒவ்வொரு குடும்பத்தினின்றும் இரண்டு படி நெல் பெற்று, விற்பனை செய்து, மொத்தத் தொகையை மடத்துக்கனுப்பி வைப்பது.

9. உழைப்புத் தானம் மூலம் மக்களை ஒன்றுபடுத்தி, கண்மாய் வெட்டுதல், கிணறு தோண்டுதல் முதலிய பொதுப் பணிகளை ஊக்குவித்தல்.

10. ஏழைகட்குதவுதல்.

11. ஜீவகாருண்ணியம்.

**தர்மத்தொண்டு சபை:** 1945இல் இந்தச் சபை அமைக்கப்பட்டது. முத்ராதிகாரி சங்கத்துடன் அது இணைந்து செயலாற்றியது. கைப்பிரதிகள் அச்சிட்டு கிராமங்களில் வினியோகம் செய்வது இதன் சிறப்புப் பணி. தாளின் விலையேற்றம், அச்சடிப்புச் செலவுப்பளு ..... இன்னபல ஏதுக்களை முன்னிட்டு இது நான்கைந்து ஆண்டுகட்கு முன் மூடப்பட்டுவிட்டது.

**காமகோடி இதழ்:** இது காமகோடி பீடத்தின் அதிகாரப் பூர்வமான இதழ். ஆண்டுச் சந்தா ரூ. 3. 1942இல் இச் சஞ்சிகை துவக்கப்பட்டது. ஆசிரியர் திரு ஏ. கோபாலய்யர். கும்பகோணத்திலிருந்து வெளிவரும் இப்பத்திரிகை நெய், தேன் முதலிய வழிபாட்டுப் பொருட்களைக் காணிக்கையாகப் படைக்கும் பக்தருக்கு இலவசமாகக் கிடைக்கின்றது. திருப்பாவை—திருவெம்பாவை, கழகப்பணிகள், முத்ராதிகாரிகளின் தொண்டு பற்றிய விளக்கச் செய்திகள் இதில் முக்கிய இடம்பெறும்.

**ஜீவாத்ம கைங்கர்ய சங்கம்:** மக்கட்பணியைக் கருத்திற் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இச் சங்கத்தின் முக்கிய வேலைத் திட்டங்களாவன:

1. இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் சிறைச்சாலைகளிலோ, மருத்துவமனைகளிலோ அனாதைகளாக இறந்துவிடின் அன்னாரின் ஈமக் கிரியைகளை நிறைவேற்றுதல்.

2. வாரமொருமுறை மருத்துவமனைகளில் நோயாளிகளைச் சந்தித்து, சுவாமிகள் அருளுகின்ற பிரசாதமும், பக்தி நூல்களும் வழங்கிவரல்.

3. மரணத்தின் விளிம்பிலே மலமொடிந்து, சாந்தியின்றித் தவிக்கும் பாவ ஆத்மாக்கட்கு துளசியும், கங்கா தீர்த்தமும ளித்து, மற்றும் ராமநாமத்தை அன்னர் முன் உச்சரித்துக் கொண்டிருந்து, அன்னருக்குச் சாந்தி கிடைக்கச் செய்தல்.

4. சிறைக் கைதிகளின் முன் சொற்பொழிவுகள் நிகழ்த்தி நன்னெறியைக் கடைப்பிடிக்கவேண்டியதின் தேவையை வலி யுறுத்தல்.

**தெய்வ வழிபாட்டுச் சங்கம்.** சுவாமிஜியின் அருளுடன் இச் சங்கம் 1958 இல் மைலாப்பூரில் நிறுவப்பட்டது.

ஜீவாத்ம கைங்கர்ய சங்கத்தின் பணிகளை இந்த நிறுவ னம் நன்கு நிறைவேற்றி வருகிறது. சென்னையிலுள்ள ஸ்டான்லி, ராயப்பேட்டை பொதுமருத்துவமனைகளிலும், தாம்பரம் டி. பி. மருத்துவமனை, மனநோய் மருத்துவமனைகளிலும் நோயாளிகளைச் சந்தித்து மேற்படி பணிகளைத் திறம்படச் செய்து வருகிறது.

**காம கோடி பீடத்தின் பிற சேவை**

1. 1950 இல் வார வழிபாட்டு சங்கம் அமைக்கப்பட்டது. இதன் மூலம் வாரத்திற்கொருமுறை கோவிலை வலம் வந்து பக்தி வழிபாடியற்றும் வழக்கம் அமுலுக்கு வந்தது.

2. திருவிழாக் காலங்களில் சிறப்புச் சொற்பொழிவுகள், கதாகாலட்சேபங்கட்கு ஏற்பாடு செய்தல்.

3. 1962இல் எட்டுக் கிரகங்கள் ஒன்றுசேர்ந்த அந்த நெருக்கடியான நாட்களில் உலகினுக்கு ஊறு நேராதிருக்கும் வண்ணம் கோவில்களில் விசேட அர்ச்சனைகள் நடத்தப்பட் டன. திருஞானசம்பந்தரின் கவிதைகள் மக்களால் மிக உருக் கத்துடன் பாடப்பட்டன,

4. 1962இல் சைனாவின் படையெடுப்பின்போது ராமபிரா னுக்குப் போரில் உறுதுணையாயிருந்த பக்த அனுமானைச் சிறப் பிக்கும் பதிகங்களியற்றி கோவில்கள் தோறும் படிக்கச்செய் யப்பட்டது.

5. சிற்பக்கலை, பரத நாட்டியம், வில்லுப்பாட்டு, பொம் மலாட்டம், கரகம், கதகளி, வேத இதிகாசங்களை அபிவிருத்தி செய்தல்...மேற்படி கலைகளில் கலைஞர்களுக்கு பயிற்சியளிக்கும் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்றுவருகிறது.

6. பி.ஜி. பால் அன்ட் கம்பெனி என்ற பெயரில் ஒரு நூல் வெளியீட்டுக் கம்பெனி அமைக்கப்பட்டது. புராண நூல் களை மலிவு விலைக்கு வெளியிட்டும், சமஸ்கிருதத்தினின்று தெய்வ வழிபாட்டு நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட் டும் இந்த நிறுவனம் அரும்பெரும் பணியாற்றி வருகிறது.

7. காமகோடி பிரதீபம் என்றொரு மாத இதழ் வெளியாகின்றது. காமகோடி பீடத்தின் பணிகளை எளிய, இனிய உரை நடையில் மக்கள் மன்றத்தில் வைத்தலும், உலகில் ஆன்மீக மறுமலர்ச்சி ஏற்படவேண்டி தெய்வீகக் கருத்துக்களை மக்கட்கு அள்ளி அள்ளி வழங்குதலும், புராணங்களின் பெருமைகளையும், இதிகாசங்களின் ஈடிணையில்லாக் கருத்துக்களையும், அறநெறிகளையும் பிரச்சாரம் செய்தலுமாகிய நோக்கங்களை இம் மாத இதழ் தாங்கி வெளிவருகிறது.

8. பட்டதாரி மாணவர்க்கு சமயப் பயிற்சியும், விருதும் வழங்க, குருச்சேத்திரத்தில் கேந்திரமொன்றமைக்க முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. அண்மையில் குருச்சேத்திரத்தில் கண்ணபிரான் காண்டீபனுக்குக் கீதோபதேசம் செய்த காட்சியைச் சித்தரித்துக் காட்டுகின்ற ஒரு சிற்பத்தை மடாதிபதியவர்கள் திறந்து வைத்தது தெரிந்ததே.

9. திருப்பாவை—திருவெம்பாவை இயக்கம். இதன் மத்திய கமிட்டி மாயவரத்தில் அமைந்துள்ளது. பாவை மாநாடுகள்; அம்பாள் பக்திப்பாடல்களைக் குறிப்பாக மார்கழித் திங்களில் பஜனை செய்தல் முதலிய கைங்கரியங்களை இந்த இயக்கம் செய்துவருகிறது.

10. சமஸ்கிருத வளர்ச்சி: திருச்சி தேசிய கல்லூரியிலும் பிற அமைப்புகளிலும் சமஸ்கிருதப் படிப்புக்கென சிறப்பு வகுப்புக்கள் நடை பெறுகின்றன. மற்றும், "வேத சாத்திர பரிபாலன சபை," "கலவைப் பிருந்தாவனம் வேதவித்யா சங்கம்," "சஷ்டியப்த பூர்த்தி உபயம்," "சாமவேத பாதாசாலா டிரஸ்ட்." ஏழைப்பெண்களின் திருமண ஏற்பாட்டுக்காக "கன்னிகா தான டிரஸ்ட்," "அகில பாரத தர்ம பீடசங்கம்" முதலியனவும் நன்கு இயங்கி வருகின்றன.

## ஈ. திறனாய்வு

காஞ்சி உலகினுக்கே மையம்—தெய்வத் திருப்பணியைப் பொறுத்தவரையில் நடுநாயகம் எனக் கருதப்படுகிறது. ரோமன் கத்தோலிக்கச் சபையினர் ரோமாபுரியைத் திருத்தலமாக வியந்தேத்துவது போன்று காஞ்சியைக் காம கோடிபீடமும், அதன் கிளையமைப்புகளும், சிஷ்ய கோடிகளும் தொழுகின்றனர்.

அடுத்து, சமஸ்கிருத மொழிக்கு மிகையான மதிப்பு அழிக்கப்படுகின்றது. ஒரு மொழி என்ற முறையில் சமஸ்கிருதத்தைக் கற்பது நன்று, எனினும் தெய்வபக்தி ஒரு குறிப்பிட்ட மொழியையே தழுவி நிற்பதுபோன்று அறிஞர் பெருமக்களும் கருத்துரையாற்றுவது விந்தையிலும் விந்தையன்றோ!! பிரதேச மொழிகளின் வளர்ச்சியில் அரசுகள் கண்ணும் கருத்துமாயிருக்கும் இக்காலத்தில் இறைவனின் பெயரைச் சொல்லி ஒரு

சாதாரண மொழியை—இலக்கிய வளமற்ற மொழியை—தூக்கிப் பிடிப்பது அம்மொழிக்கோ, சம்பந்தப்பட்ட தத்துவங்கட்கோ பெருமையளிப்பதாக ஆகாது. தெய்வம் மொழி, இனம், காலம், நாடு முதலிய எல்லா எல்லைகளையும் கடந்து நிற்கின்றார் என்பதனை அனைத்துச் சமயங்களும் உணர்த்தல் வேண்டும்.

பொதுவாக இந்தச் சமய அமைப்பைப் பொறுத்தவரையில் பிராமணருக்கே முதலிடம் நல்கப்படுகின்றது. நிறுவனங்களின் அமைப்பாளர்கள், செயலாளர்கள், வித்யாபீட மாணவர்கள் பட்டியலைப் படித்துப் பார்ப்பின் இவ்வுண்மை அங்கை நெல்லிக்கனி. இனி வரவர இந்நிலையை மாற்றி, "எல்லாரும் ஓரினம், எல்லாரும் ஓர் குலம்; எல்லாரும் இந்நாட்டு மக்கள்" என்றபடி சமத்துவ நோக்கும், சமதர்ம நெறிமரபும் கடைப்பிடிக்கப்படுதல் நன்று.

மதமாற்றம் ஒரு சாபக்கேடென எண்ணப்படுகின்றது. இந்து சமயத்தவர் மேனாடுகளிலெல்லாம் சமயப் பிரச்சாரம் செய்கின்றனர்; பக்தர்களைச் சேர்த்துக்கொள்கின்றனர் என்பதுவும் உண்மையன்றோ!! எல்லாச் சமயத்தவர்க்கும் தத்தம் சமய நெறிகளைப் பிரச்சாரம் செய்ய முழு உரிமையளிக்கப் படல்வேண்டும். சமய முயற்சிகட்கு ஊறு விளைவித்தல் நன்றன்று. அரசியல் சாசனத்தில் எல்லாச் சமயத்தவர்க்கும் சம உரிமை உறுதியளிக்கப்பட்டுள்ளது. சிறுபான்மைச் சமயங்களை அடக்கி ஒடுக்க எண்ணுதல் ஒருவகை பலாத்காரமே. ஆக்கப் பணிகள், அறச் செய்கைகள், அன்பு வழிகள், பகுத்தறிவு முயற்சிகள் மூலம் சமயத்தை மேம்பாடடையச் செய்தல் வேண்டும்.

மனிதன் இன்னொரு மனிதன்முன் மண்டியிடுவது தகாது. ஆண்டவன்முன் அத்தனை மனிதரும் சமம். இறையருளைப் பெற்றிட இடைத் தரகர்கள் ஏன்? மனிதரை தேவனின் பிரதிநிதிகளாகக் கருதி தொழுதல் ஒரு குறைபாடேயாம். பாமாலை பாடி, தோத்திரக் கீதம் இசைத்து, பிரார்த்தனை செய்து, வேதம் பயின்று, ஏழைகட்குதவி, பக்தி முயற்சிகட்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து நாம் நேரடியாகவே இறையருளைப் பெற்றிட முடியும். காமகோடி பீடத்தின் தெய்வத் தொண்டு பாராட்டற்குரியது. ஆனால் மனிதனுக்குத் துதிபாடுதலைக் குறைத்துக்கொள்வது நலமென்பதுவே ஈண்டு சுட்டிக்காட்டப்படுகின்றது.

இல்லறமே நல்லறம் என்பது உலக வழக்கு. இல்லறத்திலிருந்தே இறைவனுக்குத் தொண்டு புரிந்து, நல்வாழ்வு வாழ்ந்திட முடியும். துறவறத்தை ஊக்குவிப்பது நாத்திகப் பிரச்சாரத்துக்குத் துணை புரிகின்றது மடங்கள், ஆசிரமங்கள், பர்ணசாலைகள், பீடங்கள் என்று சொல்லப்படும்போது அது உலகத்தினின்றும் மாறுபட்ட ஒரு அமைப்பாக—ஒரு ஒதுக்குப்

புறமாக— எட்டாத தொலைவிலிருக்கும் நிறுவனமாகவே தெரிகின்றது. வாழ்க்கையோடியைந்த முறையில் கடவுட் தொண்டு புரிவது சாலச்சிறந்தது. விஞ்ஞான யுகம் சமயத்தை வரவேற்க அதுவே உகந்த வழி.

மனிதனே கடவுள், மனிதனும் கடவுளும் ஒன்று என்கின்றது அத்வைதம். மனிதன் வேறு; தேவன் வேறு. மனிதனும் கடவுளும் ஒன்ருகவேயிருப்பதாக தத்துவம் பேசினல் மனிதன் பாவம் செய்யின் கடவுளும் பாவம் செய்வதாக பொருளா? மனிதன் இறக்கும்போது தேவனும் இறக்கின்ருரா? மனித உடல் தேவன் உறையும் ஆலயம் என்று கூறுவோம். ஆன்மா ஆண்டவனின் இருப்பிடமென்று சொல்லுவோம். தத்துவ ரீதியாக, மனிதனும் கடவுளும் ஒன்றே என்றும்; அத்வைத பாணியில் "இரண்டாவது" என்ற பேச்சுக்கே இடமில்லையென்றும் ஏகத்தாளமாக பேசுவது புரியாத புதிர்; நகைப்புக்கிடமும்கூட. சார்ல்ஸ் ஜான்சன் (Charles Johnson) என்பவர் சங்கரரைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்ருர்:

'சங்கரர் புண்ய தீர்த்தங்களைப் பாதுகாத்திடும் புருடர்; உபநிடத்துக்கள், கீதை சூத்திரங்கள் யாவையும் தமது விளக்கவுரைகளால் தெள்ளத் தெளிய மக்கட்கு ஓதியருளிய ஞானச் செம்மல், அறிவின் ஊற்று; வற்ருத அருட்பெருக்கு; ஆத்திகர்க்கோர் அணிகலன்; விழிப்புணர்ச்சி; ஏற்படுத்த வல்ல விழுமியர்..." என்றெல்லம போற்றபபடுகிருர். தெய்வத் திருப்பணிக்காகவே தங்சள் வாழ்வை அர்ப்பணம் செய்து வாழும் காமகோடி மடாதிபதிகளை ஜனாதிபதிகூட காலில் வீழ்ந்து தொழுது கொள்வதைப் பார்க்கிருேம். நிர்வாண தத்துவம் முதலியவற்றுக்கு மக்கள் தலைவணங்குகின்றனர். எனவே இம் மடத்தின் கண்ணுள்ள நிதிகள், கல்வி, மருத்துவம் முதலிய காரியங்கட்காக செலவிடப்படுதல் வேண்டும். சாதி மத பேத மற்ற முறையில் சேவை அமைய வேண்டும். பிராமண இளைஞர், இந்து பெண்கள், இந்து சமயத்தவர் என்று பாகுபாடு கற்பித்து நாம் அறச்செயல் புரிவது நாத்திகருக்குப் பக்கபலமாக அமையும்.

பொதுவாக, காஞ்சி காமகோடி பீடம் சங்கரரின் கொள்கைகளைச் சங்கநாதம் செய்து, அவை வாழையடி வாழையாக வையகத்தில் வளர்ந்தோங்க சிறப்புறு சேவை செய்து வருகின்றதென்பதும், இந்து சமயத்தின் ஒரு வளர்ப்பும் பண்ணையாக—மூலகேந்திரமாக—சேவாதளமாக, கலாச்சார நிலையமாக திகழ்கின்றதென்பதும் வெள்ளிடைமலை. இவ்வியக்கம் திருச்சபையின் பணிக்கு ஒரு அறைகூவலாக அமைந்துள்ளது.

# துணை நூற்கள்


1. Sankaranarayanan, P., *The Call of the Jagadguru—Sri Sankaracharya of Kanchi*, Ganesh & Co., Madras 17, 1958.

2. *ஆசாரிய ஸ்வாமிகள் உபந்நியாசங்கள், 1957-'58 கலைமகள் காரியலயம், சென்னை-4.*

3. Gurusamy Aiyer, M. G., *Divinity in Flesh and Blood*, The Liberty Press, Madras, 1960.

4. Ramaswami Sastri, K. S., *His Holiness in Madras 1957-1960*, The Golden Jubilee Committee, Madras, 1960.

5. Mahadevan, T. M. P., *The Sage of Kanchi*, Sri Kanchi Kamakoti Sankara, Mandir. Secunderabad, 1967

6. Chandrasekharendra Saraswati, H. H. Sri., *Sixty Years of Glorious Ministry*, on The Kanchi Saukaracharya Peetham, Ramaprasad Press, Madras, 1968.

7. *Sri Sankara and Sankarite Institutions*, Kamakodi Peetham Publication.

# 6

# வள்ளலாரும் சமரச சன்மார்க்க சங்கமும்

## தி. தயானந்தன் பிரான்சிஸ்

### அ. வள்ளலார் என்னும் ஆற்றல்

இன்று தமிழகத்தில் வளம் பெற்றுவரும் ஆக்கச் சக்திகளுள் வள்ளலாரின் சக்தியும் ஒன்று எனக் கூறலாம். 'அருட்பெருஞ் சோதி! தனிப்பெருங் கருணை!' என்ற அவருடைய வாசகத்தை இன்று நாடெங்கும் கேட்கமுடிகின்றது. ஆன்மீகம், இலக்கியம் சமூகவியல் ஆகியவற்றை அலசி ஆராய்கின்றவர்கள் வள்ளலாரைக் குறிப்பிடாமல் இருப்பதில்லை; அவருடைய அழகுப் பாக்களை எடுத்துரைக்காமல் இருப்பதில்லை. அரசியல்வாதிகளும் அவரிடம் அளவுகடந்த அன்பு வைத்திருக்கின்றார்கள். தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் அவரைப் பற்றி அரிய பல சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார். 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்னும் நூலினை எழுதி ஜனாதிபதி பரிசும் பெற்றுள்ளார். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. என். மஹாலிங்கம் வள்ளலார் பக்தர் சமரச சன்மார்க்க சங்கத்தின் தலைவர்களில் ஒருவர். மக்கள் எழுத்தாளர் தமிழ்வாணன் வள்ளலாரிடம் தனி அன்புகொண்டு அவர் புகழ் பரப்பிவருபவர் ஆவார். குஜராத் மாநிலத்தில் பிறந்து தமிழகம் போந்து தமிழும் தமிழ்நெறியும் பயின்று வள்ளலாரின் சுத்த சமரஸப் பெருநோக்கினுக்கு ஆளாகி இன்று நாடெங்கும் அருட்பா அருளுரை ஆற்றி வருகின்றார் திரு. கிரிதாரி பிரசாத். தமிழ் மக்களின் தனி மதிப்பைப் பெற்றுள்ள திருமுருக கிருபானந்தவாரியார் வள்ளலாரையும் அவர் நெறியையும் சிரமேற் வைத்துப் போற்றுகின்றவர் ஆவார். வடலூரில் உள்ள சத்திய ஞான சபையைப் பெருத்த பணச்செலவில் புதுப்பித்த பெருமை அவரைச் சாரும். ஏறக்குறைய நாற்பதாண்டுகளுக்கு முன்பே டாக்டர் சவரிராயன் ஏசுதாசன் தாம் பதிப்பித்த ஆசிரமப் பாமலையில் வள்ளலாரின் பாக்கள் சிலவற்றைச் சேர்த்துள்ளார்.

வள்ளலார் யுகத் திருப்பத்தை ஏற்படுத்திய பெரியவர்களின் வரிசையில் வருபவர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இராம மோகனர், தயானந்தர், இராமகிருஷ்ணர் ஆகியோரின் சமகாலத்தவராக வாழ்ந்தவர். வடக்கே தோன்றிய அம் மூவரும் பிராமணர்கள். வள்ளலார் பிராமணர் அல்லர்.

தமிழகத்தில் சைவ சமயத்தில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்திய பெருமை வள்ளலாரையே சாரும் பழமை வாதிகளின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் சைவ சித்தாந்தம் எதனை அதி சிறந்தது எனச் சிறப்பிக்கின்றதோ அதற்கும்

அப்பால் சிறந்தோங்கி நிற்பது சுத்த சன்மார்க்கம் என அவர் துணிவுடன் எடுத்துரைத்தார். ஆன்ம பக்குவம் உள்ளவர்களுக்கு மட்டுமே விளங்குவனவாகவும் கிட்டுவனவாகவும் சைவம் கூறுகின்றவைகளை மக்கள் யாவருக்குமே உரியனவாகவும் கிட்டுகின்றவையாகவும் எடுத்துரைத்தவர் அவர். அவருடைய மென்மையான உள்ளத்தினின்றும் இனிய பாடல்கள் பல எழுந்துள்ளன. அவற்றுள்ளே பல பாடல்கள் புரட்சிக் கருத்துக்களை உள்ளடக்கியவையாக உள்ளன.

வள்ளலார் எனப்பெறும் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் பக்தர்கள் கூட்டத்தில் ஒரு சித்தராகவும் சித்தர்கள் குழுவில் ஒரு சீர்திருத்தச் செம்மலாகவும் விளங்குகின்றார்.

இராமலிங்கரைப் போல சாதிக் கொடுமைகளையும் மதத்தின்பேரால் நடைபெற்ற அட்டூழியங்களையும் சாடியவர் எவருமே இல்லை எனலாம். பெரியார் ஈ. வே. ராவுக்கு இராமலிங்கரின் எழுத்துக்கள் பேரளவுக்கு ஊக்கமளித்தன. வள்ளலாரின் அன்புள்ளத்தையும் அதினின்று எழும் ஆழ்ந்தகன்ற கருத்துக்களையும் அவர் நிறுவிய சங்கத்தின் சிறப்பியல்புகளையும் புரிந்துகொள்வதற்குச் சிறந்த பின்னணியாக இருப்பது அவர் வாழ்க்கை வரலாறு ஆகும். முதன்முதலில் அவருடைய வாழ்க்கை வரலாற்றினைத் தொகுத்தெழுதியவர் அவருடைய மாணவருள் ஒருவரான தொழுவூர் வேலாயுத முதலியார் ஆவார். அவரைத் தொடர்ந்து பலர் அவர் வாழ்க்கை வரலாற்றினையும் போதனைகளையும் நூல் வடிவிலே தந்துள்ளார்கள்.[1]

## ஆ. வள்ளலார் வாழ்க்கைப் பின்னணி

இராமலிங்கர் 1823இல் தென் ஆர்காடு மாவட்டத்தில் தில்லைக்கருகிலுள்ள மருதூர் என்னும் சிற்றூரில் தோன்றினார். அவர் பிறப்பதற்கு முன்பே சிவயோகி ஒருவர் அவர் தாயிடம், "உனக்குப் பிறக்கும் மகன் ஒரு மஹாநுகை விளங்குவான், உலகத்தாரின் நலனுக்காகச் சன்மார்க்க நெறியை நிறுவுவான்" என்று கூறியதாக ஒரு குறிப்பு உள்ளது. அவருடைய ஜாதகத்தில், "இவர் தம்முடைய பத்தாவது வயதில் தம்மிடம்

---

1. கீழ்க்காணும் நூல்கள் குறிப்பிடத் தகுந்தன:

**1. திருவருட்பிரகாச வள்ளலார் திவ்விய சரித்திரம்.** பாலகிருஷ்ண பிள்ளை, வள்ளலார் பதிப்பகம், சென்னை-7.

**2. அருட்சோதி வள்ளலார்.** சுவாமி சுத்தானந்த பாரதி, சமரஸ சுத்த சன்மார்க்க சங்கம், சென்னை.

**3 வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு** ம. பொ. சிவஞானம், இன்ப நிலையம், சென்னை.

**4. அடிகளார் அருள் வாழ்க்கை.** கு. சிரிராமன், வள்ளலார் தயா நிலையம், மேட்டுக்குப்பம்.

5. *The Life of St Ramalingar* (English). P. Mutharasu, Samarasa Sanmarga Sangam, Tirunelveli-6.

புனரமைப்பாளர்க்கான பண்புகள் இருப்பதைச் சக்தியின் துணையால் அறிந்துகொள்வார். முப்பது வயதில் பிறவித் துன்பம் நீங்கப்பெற்று நாற்பதாவது ஆண்டில் கைவல்ய நிலை அடைவார். ஐம்பதாவது வயதில் அழிவில்லா உடலினைப் பெற்று ஒரு சித்தராக விளங்குவார்" எனக் கூறப்பட்டிருந்தது.

இராமலிங்கர் தம்முடைய பிறப்பைப் பற்றியும் அதன் நோக்கத்தைப் பற்றியும் பேசும்போது,

"அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்
திருந்த வுலக ரனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத் தடைவித் திடஅவரும்
இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந்
திடுதற் கென்றே யென்னையிந்த
யுகத்தே இறைவன் வருவிக்க
வுற்றேன் அருளைப் பெற்றேனே"

என்று கூறுகிறார்.

குழந்தையாயிருந்தபோது அவரைப் பெற்றோர் சிதம்பரத்திலுள்ள ஆலயத்துக்கு எடுத்துச் சென்றனர். நடராசரின் பொலிவினைக் கண்ட அளவில் குழந்தை இராமலிங்கம் குலுங்கக் குலுங்கச் சிரித்தாராம்.

சிறு வயதிலேயே இராமலிங்கர் தந்தையை இழந்தார். சென்னைக் கருகிலுள்ள பொன்னேரியில் தமயனார் சபாபதியின் பொறுப்பில் இருந்துவந்தார். படிப்பில் கவனம் செலுத்தாமல் கந்தர் கோட்டத்தில் காலங்கழித்தார். முருகனிடம் நீங்கா அன்புகொண்டு பக்திப் பாடல்கள் பலவற்றை எழுதிக் குவித்தார். அவருடைய ஆசிரியரே வியந்து பாராட்டுகின்ற அளவுக்கு அவருடைய பாடல்கள் இனிமையாகவும் கருத்தாழம் கொண்டவையாகவும் இருந்தன.

"ஒருமையுடன் நினது திரு மலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும்; பொய்மை
பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டுமத மானபேய்
பிடியா திருக்க வேண்டும்
மருவுபெண் ணாசையை மறக்கவே வேண்டும்; உனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும்; நோயற்ற
வாழ்வினுல் வாழ வேண்டும்

தருமமிகு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே"

என்ற பாடல் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இத்தகு ஆற்றல் படைத்த ஒருவரை மாணவராக வைத்துக்கொண்டு அவருக்குப் பாடங் கற்பிக்க அவருடைய ஆசிரியர் தயங்கினார். இராமலிங்கர் ஓதாது உணர்ந்தவர் ஆவார்.

"ஓதாது உணர்ந்திட ஒளியளித் தெனக்கே
ஆதாரமாகிய அருட்பெருஞ்சோதி"

என்று பாடுகிறார். ஞானசம்பந்தரை அவர் தம் குருவாக ஏற்றார்.

இராமலிங்கர் தமயனார் வீட்டில் மாடியறை ஒன்றில் தங்கி வாழ்ந்தார். அவ்வறையை அவர் மலர்களால் அலங்கரித்து ஒரு நிலைக்கண்ணாடியை அங்கு வைத்து அதற்கு எதிரே விளக்கேற்றி வைப்பார். கண்ணாடியில் சுடரொளியின் தோற்றம் முருகப் பெருமானின் வேலாயுதத்தின் முகடுபோல் காட்சி தரும். அதனைக் காணும்போதெல்லாம் இராமலிங்கரின் உள்ளம் உருகும். இவ்வாறு கண்ணாடியில் கந்தப் பெருமானை இராமலிங்கர் காண முயன்றபோது அவர்க்கு வயது ஒன்பதுதான். சிலபல ஆண்டுகளுக்குப் பின் அவர் வடலூரில் நிறுவிய சத்திய ஞான சபையிலும் இதேவண்ணம்தான் மூலத்தலத்தில் அவர் நிலைக் கண்ணாடியையும் விளக்கையும் வைக்கச் செய்துள்ளார். இன்றளவும் அவை உள்ளன. அவற்றை ஏழு திரைகள் மறைத்துக்கொண்டுள்ளன. ஆண்டுதோறும் தைப் பூசத்தன்று அவ்வேழு திரைகள் நீக்கப்படுகின்றன. அப்போது மக்களுக்கு 'ஜோதி தரிசனம்' கிட்டுகிறது.

இராமலிங்கர் சிறுவராயிருந்தபோதே புராணப் பிரசங்கம் செய்யும் அருளைப் பெற்றிருந்தார். தமயனார்க்குப் பதில் அவர் அருளுரை ஆற்றவேண்டிய அவசியம் ஏற்பட்டபோது அவருடைய அரிய ஆற்றல் வெளிப்பட்டது. அதுவரை அறையிலே கிடந்தவர்—பாடல்களை இயற்றிப் பாடி மகிழ்ந்துகொண்டிருந்தவர் அப்போது அம்பலம் ஏறிவிட்டார். இது அவர் வாழ்க்கையில் ஓர் திருப்ப நிகழ்ச்சி எனக் கூறலாம்.

இராமலிங்கருக்கு மண ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆயின், அவர்க்கு அதில் நாட்டம் சிறிதும் இல்லை. துறவு வாழ்க்கையை ஏற்றார். பணத்திலும் பகட்டான பட்டண வாழ்க்கையிலும் அவர்க்கு விருப்பம் கிடையாது. பலமுறை அவர் காசுகளைக் கிணற்றில் எறிந்ததாகவும் பாதையில் வீசியெறிந்ததாகவும் தம் பாடல் ஒன்றில் கூறுகிறார். அமைதியும்

அடக்கமும் நிரம்பியவராக அவர் விளங்கினர். எளிய வாழ்க்கை நடத்தினர்.

ஒருமுறை ஒரு திருமணத்திற்கு அவருக்கு அழைப்பு வந்திருந்தது. அது செல்வந்தர் வீட்டுத் திருமணம், ஆதலால் தலைப்பாகையும் பகட்டான உடையும் அணிந்தோரை மட்டுமே வாயிற்காப்போன் அனுமதித்தான். இராமலிங்கர் எதிர் வீட்டுத் திண்ணையிலேயே அமர்ந்துவிட்டார். அவர் வருகையைத் திருமண வீட்டாருக்குத் தெரிவிக்க விரைந்தோரிடம்,

"சோடில்லை மேல்வெள்ளைச் சொக்கயில்லை நல்ல
சோமனில்லை
பாடில்லை கையிற் பணமில்லை தேசப்பருமனில்லை
ஈடில்லை யாதொரு வீறாப்புமில்லை விவாகமது
நாடில்லை நீநெஞ்சமே யெந்தவா றினிநண்ணுவையே"

என்னும் பாடலை அவர் வரைந்து கொடுத்தனுப்பியதாக ஒரு குறிப்பு உள்ளது.

இராமலிங்கர் தமிழகத்தில் உள்ள தலங்களைத் தரிசிக்க விரும்பினர் நண்பர்களுடன் பாதயாத்திரை ஆரம்பித்தார். காஞ்சி, தில்லை, சீர்காழி போன்ற இடங்களைத் தரிசித்து மகிழ்ந்தார். இறுதியில் தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள கருங்குழி என்னும் இடத்துக்கு வந்தார். அது தில்லைக்கருகிலுள்ள ஒரு சிற்றூர் ஆகும்.

அங்கு இராமலிங்கர் பதினெட்டு ஆண்டுகள் தங்கியிருந்தார். அக்காலத்தில் அவர் ஆயிரக்கணக்கான பாடல்களை எழுதிக் குவித்தார். மாணவர்க்கும் மக்களுக்கும் அரிய பல உரைகள் ஆற்றினர். ஜீவகாருண்ய ஒழுக்கத்தின் சிறப்பைப் பலபட எடுத்து விளக்கினர். புலால் உண்டலை விடுத்து இறைவனிடம் பக்தி செய்யவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசினர்.

கற்றறிந்த பெருமக்களும் பழுத்த சைவப் பெரியார்கள் சிலரும் அவரிடம் வாத விவாதங்களில் ஈடுபட்டார்கள். அவருடைய அறிவுத் திறனையும் அருளுள்ளத்தையும் அவர்கள் வியந்து பாராட்டினர்கள்.

இராமலிங்கர் குட்டையாக இருப்பார். மெலிந்த உருவம். முகத்தில் எப்போதும் துயரக்குறிகள் இருக்கும். வெள்ளாடை தரித்திருப்பார். காவி உடையை அவர் அணிந்ததில்லை. அவர்க்குப் 'பொன்னுடல்' அல்லது 'சுவர்ணதேகம்' கிட்டிவிட்டதாகக் குறிப்புக்கள் கூறுகின்றன. அவரைப் புகைப்படம் எடுக்க எட்டு முறை முயன்றும் அது கைகூடி வரவில்லை என்று கூறப்படுகின்றது.

இராமலிங்கர் சித்தர்களின் வரிசையில் வருபவர். சித்தாடல் அவர்க்குக் கைகூடியிருந்தது. அற்புதங்கள் பலவற்றை அவர் நிகழ்த்திக் காட்டியதாக அவர் வரலாற்றினை எழுதியிருப்போர் குறிப்பிடுவர். ஒரு சிலவற்றைக் கீழே தருகின்றோம்.

“ஒருகால் வள்ளற்பெருமான் திருவதிகைக்குத் தரிசனார்த்தம சென்றபொழுது, தன்னைத் தரிசிக்கப் பெருங்கூட்டம் வந்து சூழ்ந்து நெருக்கம் ஏறபடவே பல இடங்களிலும் தன் திருவுருவம் தோன்ற நின்று தரிசனந்தந்து அன்பர்களை மகிழ்வித்தனர்”.

“நமது பெருமான் ஆலப்பாக்கம் நாயினுரெட்டியார் வேண்டுகோளுக்கிணங்கி, அவ்விடம் சென்று அவர் மனைவிக்குள்ள சங்க தோஷம நிவர்த்தியாகும்படி விபூதி கொடுத்தருளனர். ரெட்டியாருக்கு ரச வாதத்திலுள்ள இச்சையை அறிந்து தண்ணீருள்ள குவளையில் மணலிட்டு சிறிதுநேரம் கையால் மூடி வைத்திருந்து வீதியில் எறிய அமமணல் பொன் துகளாய் வழுந்தது. இச்சையற்றார்கு மண்ணும பொன்னுமென்றறிவித்து அவர் இச்சையை மாற்றினார்.”

“தருமச் சாலையில் ஒருநாள் இரவில் அன்னமிடும் சமயத்தில் திடீரென நூறுபேர் வந்தனர். வேலூர ஷண்முகம் பிள்ளை என்பவர் வள்ளற் பெருமானிடம் அணுகி உணவு மிகச் சிறிதே உள்ளது என அறிவிக்க, உடனே எழுந்து “இலை போடும்” என்று கூறித தமது திருக்கரத்தால் எல்லாருக்கும் பரிமாறினர். சாபபிட்ட பிறகும சமைதத உணவு குறையாது அபபடியே இருநதது”[1].

**சமரஸ சுத்த சன்மார்க்க சங்கத்தின் தோற்றம்:** ஆன்ம நேய ஒருமைபபாட்டினையும் ஜீவகாருணய ஒழுககத்தினையும் மையமாகக் கொண்ட அருட் செய்தியை உலகத்தவர்க்கு எடுத்தோதுவதற்கு ஒரு சஙகம் தேவை என்பதை வள்ளலார் உணர்ந்தார். 1865 இல் சமரஸ சுதத சன்மார்க்க சங்கம என்ற பெயரில் ஒரு சஙகததினை நிறுவினர். ஜீவகாருண்ய நோக்குடையோர்—உயிர்க்கொலை தவிர்த்தார்—புலால் மறந்தோர் யாவரும் அதில் உறுப்பினர் ஆக வாய்ப்புத் தரப்பட்டது. அவர் எம்மதத்தினராகவும் எச் சாதியினராகவும் இருக்கலாம். அத்தோடு புலால் உண்போர் புற அங்கத்தினராக இருப்பதற்கும வாய்பபளிக்கபபட்டது.

சங்கத்தின் தலைவர் இறைவனே என்று வள்ளலார் ஒரு துண்டுப் பிரசுரத்தில் அறிவிததார். அதோடு, ‘அருள்’ உடை

---

1 இவையும் இன்னும் பல குறிப்புக்களும் ‘**திருவருட் பிரகாச வள்ளலார் திவ்விய சரிதம்**, என்ற நூலில் உள்ளன.

யோர் யாவரும் அதில் அங்கத்தினர்; 'அருள்' தான் சங்கத்துக்குச் சந்தா என்றும் அவர் அதில் குறிப்பிட்டிருந்தார். சங்கத்தின் முக்கிய நோக்கங்களாக நான்கினை அவர் சிறப்பித்திருந்தார். அவை வருமாறு:

1. ஜீவகாருண்ய போதனையும் சாதனையும்.

2. புலால் மறத்தல். உயிர்க்கொலை தவிர்த்தல். மூடப் பழக்க வழக்கங்களை விட்டுவிடுதல்.

3. சாதி—வருண பேதம் ஒழித்தல்.

4. மரணமில்லாப் பெருவாழ்வினைப் பற்றி அறிவித்தல்.

1866 இல் இராமலிங்கர் பார்வதிபுரம் என்ற சிற்றூர்க்குச் சென்று அங்கிருந்து கொண்டு சங்கத்தின் அலுவல்களைக் கவனித்தார். அவ்வூரே வடலூர் என்ற பெயரினைப் பெறுவதாயிற்று.

இச் சங்கத்தினைப் பற்றிப் பேசும்போது வள்ளலார்,

' தங்கமே அனையார் கூடிய ஞான
சமரச சுத்த சன்மார்க்கச்
சங்கமே கண்டு களிக்கவும் சங்கம்
சார திருக்கோயில் கண்டிடவும்
துங்கமே பெறும்சற் சங்கநீடூழி
துலங்கவும் சங்கத்தில் அடியேன்
அங்கமே குளிர நின்றனைப்பாடி
ஆடவும் இச்சைகாண் எந்தாய்" என உருக்கமாகப் பாடுகிறார்.

அறநிலையங்கள் நிறுவுதல்: வள்ளலார் 1867 இல் வடலூரில் ஒரு அறச்சாலையும் நிறுவினர். அதற்குச் சத்திய தருமச் சாலை என்று பெயர் சூட்டினர். மூன்று நாட்கள் பதினயிரம் பேருக்கு அன்னதானம் செய்விக்கப்பட்டது. செல்வந்தர்களான சில நண்பர்களின் உதவியால் இது தொடர்ந்து நடத்தப் படுவதாயிற்று எப்போதும் தருமச்சாலையின் அடுப்புப் புகைந்து கொண்டே இருக்க வேண்டுமென்று வள்ளலார் விரும்பினர். அவ்வாறு ஆணையும் பிறப்பித்தார். இன்றளவும் அவ்வறச் சாலையில் ஏழைகளுக்கு உணவளிக்கப்பட்டுவருகின்றது.

வள்ளலார் சமரஸ வேத பாடசாலை என்ற பெயரில் பயிற்சிப்பள்ளி ஒன்றினைத் துவக்கினர். அதோடு சமரஸ சாஸ்திரப் பாடசாலை ஒன்றினையும் துவக்கிச் சிறுவர்க்குத் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிக் கல்விக்கு ஏற்பாடுகள் செய்தார்.

அங்கத்தின் ஆதரவில் அடுத்த ஆண்டு அவருடைய பாடல்களின் முதல் திரட்டு நண்பர்களின் துணையோடு பதிப்பிக்கப்

பட்டது. பாடற்றிரட்டின் பிற்பகுதிப் பாடல்களை வள்ளலார் வெளியிட விரும்பவில்லை அவற்றில் உள்ளவை யாவும் பண்பட்ட சன்மார்க்கத்தாருக்கு மட்டுமே உரியவை; பொதுமக்களுக்கு அல்ல என்று அவர் நம்பினர்.

சத்திய ஞான சபையின் தோற்றம்: இராமலிங்கர் தொழுகை இல்லம் ஒன்றினைக் கட்டப் பெரிதும் விரும்பினர். அவரே அதன் அமைப்பு வடிவத்தினை வரைந்து கொடுத்து அதன்படி கட்டுமாறு பணித்தார். 1871 இல் அது கட்டி முடிக்கப்பட்டது. சத்திய ஞான சபை என்ற பெயர் அதற்குச் சூட்டப்பட்டது.

சபை தாமரை வடிவில் கட்டப்பெற்றது. ஐந்தடி உயரக் கண்ணடி சென்னையிலிருந்து வரவழைக்கப்பட்டது. அதனையும் அகண்ட தீபம் ஒன்றினையும் சபையில் பொருத்துவிக்கும்படி செய்தார் வள்ளலார். அகண்ட தீபத்துக்கு முன்னே ஏழு திரைகள் இடப்பெற்றன. அவை ஏழு நிறங்களில் அமைக்கப்பட்டன. ஏழு நிறங்களும் மாயையின் ஏழு வடிவங்களைக் காட்டுவனவாக அமைந்தன: கறுப்பு—அசுத்த மாயை; நீலம்—சுத்தா சுத்தம்; பச்சை—கிரியா சக்தி எனும் சுத்த மாயை; செம்மை—பராசக்தி; பொன்மை—இச்சா சக்தி; வெண்மை—ஞான சக்தி; கலப்பு—ஆதி சக்தி. இவ்வேழு திரைகளும் ஆன்மப் பிரகாசத்தைக் காண வொட்டாமல் தடுப்பவை; ஞான நிறைவைக் குறிக்கும் தைப்பூச நாளில் ஏழு திரைகளும் நீங்கப்பெற்று அருட்பெருஞ்சோதி தரிசனம் வேண்டி நின்ருல் அனைத்து நலன்களும் கிட்டும் என்று வள்ளலார் மக்களுக்கு விளக்கினர்.

முதல் ஜோதி தரிசனம் 25-1-1872 (தை மாதம் 28 ஆம் நாள்) அன்று வழங்கப்பட்டது. ஜோதி தரிசனம் தைப்பூசத்தில் ஆறு காலம் நடக்கும். மாத பூசங்களின் போது இரவு எட்டு மணிக்கு ஜோதி தரிசனம். கடைசியில் உள்ள யாதி திரை இருக்க மற்ற ஆறு திரைகளும் நீக்கப்பெற்று தரிசனஞ் செய்விக்கப் பெறுவது இன்றும் வழக்கமாக நிகழ்ந்து வருகின்றது.

அடிகளார் சிறு கட்டுரை ஒன்றினை எழுதி ஜோதி தரிசனத்தின் அவசியத்தை மக்களுக்கு விளக்கிக் காட்டினர். அதில், "கடவுளை ஜீவர்கள் அறிந்து அன்பு செய்து அருளை அடைந்து அழிவில்லாத வாழ்வில் வாழாமல் பல்வேறு கற்பனைகளால் பல்வேறு சமயங்கள், மதங்கள், மார்க்கங்களில் பல்வேறு இலட்சியங்களைக் கொண்டு பிறந்து பிறந்து அவஸ்தை வசத்தர்களாகி சிற்றறிவுமின்றி பல்வேறு ஆபத்துக்களினுல் இறந்திறந்து வீண்போகிருர்கள்" எனவும்,

"எல்லாச் சமயங்களுக்கும் எல்லா மதங்களுக்கும்......... உண்மைப் பொதுநெறியாகி விளங்கும் சுத்த சன்மார்க்கத்தைப் பெற்றுப் பேரின்ப சித்திப் பெருவாழ்வில் பெருஞ் சுகத்தையும் பெருங்களிப்பையும் அடைந்து வாழும்பொருட்டு கடவுள் தாமே திருவுள்ளங்கொண்டு சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய இலட்சியமாகிய உண்மை விளக்கஞ் செய்கின்ற ஒரு ஞானசபையை இங்கே தமது திருவருட் சம்மதத்தால் இயற்றுவித்து, 'இக்காலம் தொடங்கி அளவு குறிக்கப்படாத நெடுங்காலம் அளவு குறிக்கப்படாத அற்புத சித்திகளெல்லாம் விளங்க யாமே அமர்ந்து விளையாடுகின்றோம்'' என்றும் திருக்குறிப்பை வெளிபடுத்தி அருட்பெருஞ் சோதியராய் வீற்றிருக்கிறார்'' என்றும்.

"அடியிற் குறித்த தருணந் தொடங்கி வந்து வந்து தரிசிக்கப் பெறுவீர்களாயின் கருதிய வண்ணம் பெருங்களிப்படைவீர்கள். அதோடு, இறந்தவர் உயிர் பெற்றெழுதல், மூப்பினர் இளமை பெற்று நிற்றல், முதலிய பலவகை அற்புதங்களைக் கண்டு பெருங்களிப்பும் அடைவீர்கள்'' என்றும் எழுதியுள்ளார்.

வழிபாட்டுக்கு வேண்டிய பாக்களையும் பாடல்களையும் எழுதிக் குவித்தார். அருள்நெறியை ஆங்கு வந்தோர்க்கெல்லாம் எடுத்தியம்பியபடியே இருந்தார்.

**அருட்பாவுக்கு எதிர்ப்பு:** இராமலிங்கரின் புகழ் தமிழ் நாடெங்கும் பரவலாயிற்று. மக்கள் பலப்பல இடங்களிலிருந்தும் வந்து அவரைத் தரிசித்து மகிழ்ந்தார்கள். அந்த சமயத்தில், பழுத்த சைவர்களும் பழமை விரும்பிகளும் அவரிடம் பெருத்த வெறுப்புக் காட்டினார்கள். பகையுணர்ச்சியைப் பல்லாற்றானும் வெளிப்படுத்திக் காட்டினார்கள். இராமலிங்கரின் பாடற்றிரட்டு 'திருவருட்பா' என்ற பெயரில் வெளியாகியிருந்ததை அவர்கள் மாபெரும் குற்றம் என்றார்கள். பன்னிரு திருமுறைகளுக்கு மட்டுமே உரிய அடைமொழி இராமலிங்கரின் சாதாரணப் பாடற்றிரட்டிற்குத் தரப்படக் கூடாது என்று கொதித்தெழுந்தார்கள். இராமலிங்கரைப் பலவாறாக ஏசினார்கள். ஆனால் இல்லங்களிலும் ஆலயங்களிலும் பள்ளிகளிலும் திருவருட்பா நாடோறும் முழங்கப்பட்டது.

எதிர்ப்புகள் பெரும்பாலும் திருவாடுதுறை, திருவண்ணாமலை, தாவாபுரம் போன்ற இடங்களில் இருந்த மடாதிபதிகளிடமிருந்து வந்தன.

ஈழத்துப் புலவரான ஆறுமுக நாவலரைக் கொண்டு மடாதிபதிகள் மருட்பா போர் தொடுத்தார்கள். அவர் இராமலிங்கரைப் பலவாறாகத் தூற்றி எழுத ஆரம்பித்தார். அடிகளாருக்கு எதிராக வழக்குத் தொடுத்து அவரை வழக்குமன்றத்

தில் நிறுத்தினர். வள்ளலார் தமக்காகத் தாமே வாதாடி வெற்றிபெற்றார். என்றாலும் திருவருட்பாவை மருட்பா எனக் குறை கூறியோரின் பிரசாரம் அடங்கவில்லை.

இராமலிங்கர் பெரிதும் மனத்துயரமுற்றார். அருட்பா—மருட்பா போராட்டத்தில் ஈடுபட்டது குறித்து வருந்தினர். பகைவர்க்குப் பணிவுடன் ஓர் அன்பழைப்பு விடுக்கும் வகையில் இப்படி ஒரு பாடலை எழுதினர்:

'வாது பேசிய மனிதர்காள் ஒரு
வார்த்தை கேண்மின்கள் வந்துநும்
போது போவதன் முன்னரே அருட்
பொதுவிலே நடம் போற்றுவீர்
தீதுபேசினர் என்றிடாது நும்மைத்
திருவுளங் கொளுங் காண்மினோ
சூதுபேசிலன் நன்மை சொல்கின்றேன்
சுறறம் என்பது பற்றியே"

இன்னொரு பாடலில்,

"நானுரைக்கும் வார்த்தையெலாம் நாயகன் சொல் வார்த்தையன்றி
நானுரைக்கும் வார்த்தையன்று"

என்று அவர்களுக்குக் கூறிக்காட்டினர்.

**மகானைப் புரிந்துகொள்ளாத மக்கள்:** இராமலிங்க அடிகளாரின் சித்தாடல் திறனை மக்கள் தவருகப் புரிந்துகொண்டார்கள். செத்தாரை எழுப்புதலைப் பற்றி அவர்தம் பாடல்களில் பேசுகிறார். "செத்தாரை எழுப்பியிடல் வேண்டும்; திருச்சபைக்கே ஆளாக்கிவிட வேண்டும்" என்பது அவர் பாடல். செத்தாரை உயிரோடெழுப்புதல் இறைவனின் செயல் என்றும் அவர் கூறுகிறார். அது தமக்குக் கைகூட வேண்டுமென்பது அவர் விண்ணப்பமாக இருந்தது. அந்நிலை அடைந்துவிட்டாற்போன்ற பெருமகிழ்ச்சியோடு அவர் சில பாடல்களை இயற்றியுள்ளார்:

"மருட்சார்பு தீர்ந்தேன் என்றறையப்பா முரசு
மரணந் தவிர்ந்தேன் என்றறையப்பா முரசு"

'செத்தாரெழுந்தனர் சுத்த சன்மார்க்கஞ் சிறந்தது நான்
ஒத்தா ருயர்ந்தவ ரில்லா ஒருவனை உற்றடைந்தேன்;
சித்தாடுகின்றனன் சாகாவரமும் பெற்றேன்
இத்தாரணியில் எனக்கிணை யாரென்றியம்புவனே".

வள்ளலாரின் வாக்கினைப்—அகன் ஆழத்தையும் அறைகூவலையும்—புரிந்துகொள்ளமுடியாதவர்கள் பல பிணக்குகளை அவரிடம் கொண்டுவர ஆரம்பித்தார்கள். இதையொட்டி அவரு

டைய சீடர்கள் சிலர் பொதுமக்களிடமிருந்து பணம் வசூலிக்கவும் ஆரம்பித்துவிட்டார்கள்.

சி. ஆக்ஸ் என்ற டேனிஷ் மிஷனெரி 1871 இல் வடலூரைப் பார்த்தபோது இவ்வாருக ஒரு குறிபபு எழுதியுள்ளார்:

"ஏமாற்று வித்தைக்காரன் ஒருவன் வடலூர் வட்டாரத்தில் உலவுகின்ருன். செத்தாரை எழுப்பப் போவதாகப் பறை சாற்றுகின்ருன். மக்கள் சென்னை போன்ற இடங்களிலிருந்து வந்தபடி இருக்கிருர்கள். அண்மையில் கள்ளர் அவன் திரட்டி வைத்திருந்த செல்வத்தைச் சூறையாடிச் சென்றனர். ஆகவே இப்போது பணம் திரட்ட இப் புது வழியைக் கண்டுபிடித்திருக்கிருன்".[1]

இறுதி நாட்களில் வள்ளலார் பெருமான் பெருத்த ஏமாற்றங்கள் அடைந்தார். மக்கள் தம்மைத் தவருகப் புரிந்துகொண்டு பிரச்சாரம் செய்வதையும் அடியார்கள் நெறி பிறழ்ந்து நடப்பதையும் கண்டு மனம் வருந்திஞர். அவரை மககள் கடவுளாகக கருதி வழிபடுவதையும் கண்டு பெரிதும் வருந்திஞர். ஒரு பாடலில்,

'சன்மார்க்கச் சங்கத்தீர் சிற்றடியேனுமது
   தாள்வணங்கிச் சாற்றுகின்றேன் தயவினெடுங் கேட்பீர்
என்மார்க்கத் தெனை நுமக்குள் ஒருவனெனக் கொள்வீர்
   எல்லாஞ்செய் வல்லபம திறைவனையே தொழுவீர்
புன்மார்க்கத் தவர் போல வேறுசில புகன்றே
   புந்திமயக் கடையாதீர்; பூரணமெய்ச் சுகமாய்த்
தன்மார்க்க மாய்விளங்கும் சுத்தசிவ மொன்றே
   தன்னை என்னை சார்ந்தறிமின் ஈண்டே"

என்று அத்தகையோர்க்கு ஒரு விண்ணப்பம் விடுக்கின்ருர்.

1873 இல் ஞானசபையின் கதவு பூட்டப்பட வேண்டுமென்று வள்ளலார் உத்தரவு பிறப்பித்துத் திறவு கோலைத் தம்மிடம் வைத்துக்கொண்டார். தம்மைச் சூழ இருந்தவர்களைப் பார்த்து,

"சங்கத்தின் அங்கத்தினராக இருக்கும் தகுதி உங்களுக்கு இல்லை. சங்கத்தின் உண்மையான அங்கத்தினர்கள் வெகு தொலைவில் வடக்கே உள்ளார்கள்......விரைவிலேயே இரஷ்யாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும், பிற நாடுகளிலிருந்தும் சிலர் வருவார்கள். நான் அறிவித்த அதே செய்தியை—ஜீவ காருண்ய ஒழுக்கத்தை—ஆன்ம நேய ஒருமைப்பாட்டை உங்களுக்கு அறிவிப்பார்கள். அப்போது, நான் உங்களுக்குக் கூறிவந்த செய்தியின் உண்மைப் பொருளை அறிந்துகொள்விர்கள் என்று கூறிஞர்.

---

1. இக்குறிப்பினை டேனிஷ் மிஷனெரி தீபிகையினின்றும் மொழிபெயர்த்து உதவியவர் டாக்டர் காய் பாகோ என்பார் ஆவார்.

ஞானசபையை அடைத்துவிட்டபிறகு இராமலிங்கர் மேட்டுக்குப்பம் என்னும் சிற்றூரில் தங்கினர். தாம் வாழ்ந்த சிறு குடிலுக்குச் சித்தி வளாகம் எனப் பெயர் சூட்டினர்.

திருக்காப்பு: யோகநித்திரை: வள்ளலார் யோக நித்திரையில் ஆழ ஆர்வம் கொண்டார். 1874ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முப்பதாம் நாளன்று தம் அடியார்களுக்கு இவ்விறுதியுரையை ஆற்றினர்:

"கடை விரித்தேன்; கொள்வாரில்லை. ஆகவே, மூடிவிட்டேன். நான் உங்கள் கண்களுக்குச் சிலகாலம் புலப்படமாட்டேன். என்றாலும் நான் உலகம் முழுவதிலும் நிறைந்து நிற்பேன் என்னுடைய அழியாத உடல் உயிர் ராசிகள் யாவற்றின் உடலினுள்ளும் நுழைந்துகொள்ளும். பிற நாடுகளில் என் செய்தியைக் கூறி முடித்த பிறகு நான் மீண்டும் இங்குத் தோன்றுவேன். அதுவரை நீங்கள் ஜீவகாருண்ய ஒழுக்க நெறியில் நிற்றல் வேண்டும். இறைவனை ஒளிவடிவில் வழிபட்டு உய்வு பெறுங்கள்"

ஒரு அறையில் அவர் தம்மை அடைத்துக்கொண்டார். அறையை வெளிப்புறம் பூட்டிவிடச் செய்தார். அந்த அறையைத் திறந்து பார்த்து ஏமாற வேண்டாம்; நான் உங்கள் கண்ணுக்குப் புலனாக மாட்டேன் என்று ஏற்கெனவே தம் நண்பர்களுக்குக் கூறியிருந்தார். அரசியலார் அதைத் திறக்க நேர்ந்தாலும் அஞ்சுவதற்கொன்றும் இல்லை. இறைவன் அருளால் அங்கு ஏதும் தோன்றாது என்றும் கூறியிருந்தார்.

இராமலிங்கர் இவ்வாறு மறைந்துவிட்ட செய்தி நாடெங்கும் பரவலாயிற்று. அக் காலத்தில் தென் ஆற்காடு மாவட்டத்திற்குக் கலெக்டராக இருந்த J. H காரிஸ்டின் I.C.S. என்பார் விசாரணைகள் நடத்தினர். அந்த அறை திறக்கப்படும்படி அவர் உத்தரவிடவில்லை. வள்ளலார் நினைவாக நடத்தப்பட்ட தரும விருந்துக்கு ரூ. 2000 நன்கொடையாகத் தந்து சென்றார். அவர் 1878ஆம் ஆண்டில் 'South Arcot District Manual' என்ற நூலில் இவ்வாறு எழுதினர்:

"1874இல் ஒரு அறைக்குள் தாளிட்டுக்கொண்டார் அதற்குப் பிறகு அவர் காணப்படவில்லை. அந்த அறை இன்னும் பூட்டப்பட்டிருக்கிறது. அவர் இறைவனோடு இரண்டறக் கலந்துவிட்டார் என்று அவருடைய அடியார்கள் நம்புகிறார்கள். அவர் மீண்டும் வருவார் என்பதும் அவர்களுடைய நம்பிக்கையாக இருக்கிறது"

காட்சிப் பேறு: இராமலிங்கர் யோக நித்திரையில் ஆழ்ந்த பிறகு சில காலம் தம் சீடர்கள் பலருக்குக் காட்சிப் பேறு அருளியதாகக் குறிப்புகள் உள்ளன. ஒரு குறிப்பினைக் கீழே தருகின்றோம்:

"நாகூரிலிருந்து சாமிநாத செட்டியார்.........ஓர்கால் வந்து திரும்பும்போது இடையில் திருடர் பயமுள்ள இடத்தில் வந்த நேரத்தில் 16 வயதுடைய சிறுவர் போல் வண்டியின் பின் புறம் வள்ளலார் வந்து அவர் கேட்டபோது மருதூர் என்றுரைத்து மறைந்தனர். உடனே வந்தவர் வள்ளல் என்றுணர்ந்து மகிழ்ந்தனர்".

சுத்தானந்த பாரதியார் தம்முடைய 'அருட்சோதி வள்ளலார்' என்ற நூலில் இவ்வாறு எழுதுகின்றார்:

"இம்மகானின் வரலாற்றையும் தீர்க்கதரிசனத்தையும் அறிந்த பிளாவட்ஸ்கி அம்மையார் 1882இல் (Hints on Esoteric Theosophyயில்) எழுதியதன் சாரமாவது: தியாசாபிகல் சபை ஆரம்பிக்க எங்களுக்குக் கட்டளையிட்ட மஹாத்மாக்களுள் யோகி இராமலிங்கம் நிச்சயமாகவே சம்பந்தப்பட்டிருக்கிறார் என ஊகிக்கவல்லது. 1873ஆம் ஆண்டு பாரிசுக்குப் போக உத்தரவு கிடைத்தது. ஜூனில் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குப் போகக் கட்டளைப் பிறக்கவே, ஜூலையில் சென்றேன். இச் சமயமே இராமலிங்கம் இனிவரும் சம்பவங்களைச் சொல்லிக்கொண்டிருந்தார். 1875ஆம் வருஷம் நவம்பர் மாதம் பிரம்மஞான சபை ஏற்பட்டது. 1879ஆம் வருஷம் பிப்ரவரியில் பம்பாய்க்குக் காரியாலயம் மாறியது. பிறகு அடையாற்றுக்கு வந்தது". (பக்கம் 108). பிரம்மஞான சபையினர்க்கு வள்ளலாரைப் பற்றிய குறிப்புகளைத் தந்துதவியவர் தொழுவூர் வேலாயுதர் ஆவார் அக் குறிப்பில் அவர்,

இவர், பிறருடைய மனத்தில் நிகழுபவைகளைப் பார்க்க வல்லவர். ......இவர் அடிக்கடித் தம் சீடர்கள் அறியாவண்ணம் மறைந்திருப்பதுண்டு. இவர் எங்குச் சென்றார் என்பதை அறிவார் எவருமிலர் இப்படி வெகுநாள் மறைந்திருப்பார்...இவர் கடும் நிராகாரத் தபசி போலிருந்தார். இவர் இளைப்பாறினதாக எவரும் அறியமாட்டார். இரண்டு அல்லது மூன்று நாளைக்கொரு முறை உண்பார்...இரண்டு மூன்று மாத காலம் வரை உபவாச விரதம் எடுப்பார்...இவர் ஐம்பத்தொரு வயதை அடைந்தபோது தாம் உலகைவிட்டுப் போவதாகச் சொல்லி, சீடர்களுடைய மனதை, ஒருவகை ஆறுதலுக்குக் கொண்டுவர ஆரம்பித்தார். இவர், 1873ஆம் ஆண்டில் ஆறுமாத காலமாக மன்பதை யுலகுக்குள்ள சகோதர ஒற்றுமையைப் பற்றி வெகுவிமரிசையாகப் போதித்தார்......1874ஆம் ஆண்டில், ஜனவரி மாதக் கடைசியில் பேசத் தொடங்கி இனி நடக்கப்போகும் விஷயங்களை எச்சரிக்கையாகக் கொடுத்தார். இவர் ஞானதிருஷ்டியில் கண்டுசொன்ன விஷயங்கள் யாவும் தவறாமல் நிறைவேறின" என எழுதியுள்ளார்.

மக்கள் கவிஞர்—புரட்சிப் பாவலர்: தமிழ்க் கவிஞர் வரிசையில் வள்ளலார்க்கு ஒரு தனியிடம் உண்டு. வள்ளுவரை

யடுத்து மக்களைப் பெருவாரியான அளவில் கவர்கின்ற வகை யில் எளிய இனிய நடையில் அரிய கருத்துக்களைப் பாக்க ளாக அமைத்து வழங்கிய பெருமை அவரைச் சாரும். ஏழா யிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை அவர் பாடியிருக்கிறார். அவருடைய கீர்த்தனைகள் கருத்தாழம் பொதிந்தவை ஆகும். அவை ஒரு நூற்றாண்டு காலமாக வழக்கில் இருந்துவரு கின்றன.

வள்ளலாரின் பாக்களிலே மணிவாசகர், நம்மாழ்வார் போன் றோரின் பக்திநெறியை ஓரளவுக்குக் காணலாம். அவருடைய பக்தியுள்ளம் மென்மையானது; குழந்தையுள்ளம் போன்றது; அப்பழுக்கில்லாதது எனக் கூறலாம். அதனை எடுத்துக்காட் டும் ஆயிரமாயிரம் பாக்களில் ஒரு சிலவற்றை மட்டும் இங் குத் தருகின்றோம்:

'எத்துணையும் பேதமுறா தெவ்வுயிருந்
தம்முயிர்போ லெண்ணி யுள்ளே
ஒத்துரிமை யுடையவராய் உவக்கின்றார்
யாவர்அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் யெம்பெருமான் நடம்புரியும்
இடமெனநான் தெரிந்தேன்; அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடவென்
சிந்தைமிக விழைந்த தாலோ''.
''பெற்ற தாய்தனை மக மறந்தாலும்
பிள்ளையைப் பெறும் தாய் மறந்தாலும்
உற்ற தேகத்தை உடல் மறந்தாலும்
உயிரை மேவிய உடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும
கண்கள் நின்றிமைப்பது மறந்தாலும்
நற்றவத்தவர் உள்ளிருந் தோங்கும்
நமச்சிவாயத்தை நான் மறவேனே''
''பொய்யுடையே னெனினும் உன்
பொன்னருளை வேண்டுமொரு
மெய்யுடையேன் காண்............''
''.........என்னை அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்
அம்மையப்பா இனி ஆற்றேன்''
''வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன்; பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோரென்
நேருறக் கண்டுளம் துடித்தேன்
ஈடில் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்சு
இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்''

வள்ளலாரின் பாடல்களில் அவருடைய புரட்சியுள்ளத்தை யும் காணமுடியும். எடுத்துக்காட்டுக்குச் சில பாடல்கள்:

"கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும்
கண்மூடிப் பழக்கமெலாம் மண்மூடிப் போக!"
"சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்றீர் உலகீர்
அலைந்தலைந்து வீணே நீர் அழிதல் அழகலவே"

"பித்துலகீரே! கட்டோடே கனத்தோடே பட்டோடே மணியோடே வாழ்கின்றோமென்று செருக்குரைப்பீர்; பசியோடு வந்தவர் முகம் பாரீர்; காமாந்தகாரத்தில் கண்மூடித் திரிகின் றீர்; அற்ப மகிழ்ச்சி பெற்றீர்; பின் படுதீமையில் முன்படு கின்றீர்; துன்மார்க்க நடையிடைத் தூங்குகின்றீர்; பண்ணாத தீமைகள் பண்ணுகின்றீர்"

இந் நூற்றாண்டில் பெரும் புரட்சிப் பாவலர்களாய்த் திகழ்ந்த பாரதியாருக்கும் பாரதிதாசனுக்கும் கடந்த நூற் றாண்டில் முன்னோடியாக இருந்தவர் வள்ளலார் என்று துணிந்து கூறலாம்.

வள்ளலார் உரைநடையிலும் சில அரிய செல்வங்களை அளித்துச் சென்றுள்ளார். மனுநீதிச் சோழன் கதையைக் கூறும் மனுநீதி கண்ட வாசகம் ஒரு சிறந்த உரைநடை நூல் ஆகும். ஜீவகாருண்ய ஒழுக்கம் என்ற தலைப்பில் அவர் எழுதி யுள்ள கட்டுரை சொற்செறிவும் பொருளாழமும் கொண்டதாகும்.

## இ. வள்ளலாரின் போதனைகள்

வள்ளலாரின் போதனைகளை மூன்று தலைப்புக்களின் கீழ் ஆராயலாம்:

1. ஜீவ காருண்ய ஒழுக்கம்.
2. சுத்த சன்மார்க்கம்.
3. மரணமிலாப் பெருவாழ்வு.

**1. ஜீவகாருண்யஒழுக்கம்:** அடிகளாரின் அருளுரை அனைத் தின் சாரமும ஜீவகாருண்யம் எனக் கூறலாம். மக்கள் யாவ ரிடத்தும் செலுத்தும அன்பும் நல்லெண்ணமுமே ஜீவகாருண் யம் என அவர் கூறுகின்றார். வள்ளலார் கூறும் ஜீவகாருண் யத்தினைப் புத்தரின் 'கருணை'யோடும் காந்தியடிகளின் 'அஹிம்ஸை'க் கொள்கையோடும் அறிஞர் ஒப்பிடுவர்.

ஜீவகாருண்யம் பற்றிய கட்டுரையில் வள்ளலார் இவ்வாறு எழுதுகிறார்:

"புண்ணிய மென்பது ஜீவகாருண்யம் ஒன்றே; பாவம் என்பது ஜீவகாருண்யம் இன்மையே. ஜீவகாருண்யத்தாலேயே கடவுளின் இயற்கை விளக்கமான அருளை அடைய முடியும். ஜீவர்களெல்லாம் சர்வ சக்தியுள்ள கடவுளால் படைக்கப் பட்ட ஓர் உரிமையுள்ள சகோதரரே ஆவர். உயிரிரக்கம் உள்ளோர் சுகம் பெறுவர். அஃதின்றி அறிவும் அன்பும் அருள் விளக்கமும் தோன்ற......... பசி நீக்கலும் கொலை நீக்கலும் விசேஷமான உயிரிரக்கம். மரம், புல், நெல் முதலியவற்றின் வித்து, காய், கனி, தழை முதலியவை உண்ணல் உயிரிரக் கத்திற்கு விரோதமில்லை... .. ... தாவரங்களுக்கு அந்தக்கரண விருத்தியில்லை...........எல்லா ஜீவர்களிடமும் கடவுள் விளக் கம் பொதுவாக விளங்குவதை யறிந்து சன்மார்க்கத்துக்கு ஒத்த சத்துவ ஆகாரத்தால் பொது நோக்குடன் பசி தவிர்க்க வேண்டும்......... ஆன்ம உருக்கம் உண்டாக அந்த ஆன்மாவி னுள்ளிருக்கும் கடவுள் விளக்கமாகிய அருள் வெளிப்பட்டு விளங்கும் அத்திருவருள் விளக்கத்தால் கடவுள் இன்பம் அனுபவமாகி ஜீவர்கள் பூரணமாகும் ஜீவகாருண்யம் ஆன்ம வுரிமை என்றறிக".

ஜீவகாருண்யத்தோடு வள்ளலார் ஆன்ம நேய ஒருமைப் பாட்டினையும் வலியுறுத்துகின்றார் (The Brotherhood of all Men). ஜீவகாருண்யம் என்னும் உயிரிரக்கமும் ஆன்ம நேயத் தினை அடிப்படையாகக் கொண்ட ஒருமைப்பாட்டு நெறியும் மக்களிடையே பரவுவதற்குத் தடைகளாக இருப்பவை ஆசா ரங்கள், ஆசிரம தர்மங்கள், சாதிச் சண்டைகள் என அவர் கூறுகின்றார். இவைகளினின்று மக்கள் விடுபட வேண்டுமென் பதே அவர் முழக்கமாக அமைந்தது. சுத்த சன்மார்க்க நெறி என அவர் சிறப்பித்துக் காட்டிய நெறியினுக்கு உயிரிரக்கம் வாயில் போன்று அமைந்துள்ளது.

வள்ளலாரின் உயிரிரக்கம், ஆன்ம ஒருமைப்பாட்டுணர்ச்சி ஆகிய கொள்கைகள் புனரமைப்புப் பணிகளுக்குத் தூண்டுதல் களாக உள்ளமை குறிப்பிடற்பாலதாகும். முதன்முதலாக அவர் வடலூரில் செய்த ஆக்கப்பணி சத்திய தருமச் சாலையினைத் திறந்து வைத்ததாகும். திறப்பு விழாவின்போதுதான் அவர் தம்முடைய 'ஜீவகாருண்ய ஒழுக்கம்' என்னும் கட்டுரையை வாசித் தளித்து வெளியிட்டார். நாட்டில் பசிப்பிணியும் வறுமையும் தொலையவேண்டும் என்று அவர் விரும்பினர். சுவாமி விவேகா னந்தர் நம் நாடு முழுவதும் சுற்றிப் பார்த்த பிறகு "இந் நாட்டு மக்களுக்கு முதன் முதலாகத் தேவைப்படுவது 'அன்ன பிரம்மம்' தான் எனக் கூறினர் 'ஏழைகள் படும் பாட்டைக் கண்டு எவன் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றானே, அவனே

மஹாத்மா; மற்றவர்கள் துராத்மாக்கள்'' எனவும் முழங்கினர். வள்ளலார் பெருமான் ஏழை எளியோரைக் கண்டபோதுமட்டு மல்லாமல் வாடிய பயிரைக் கண்டபோதும் வாடிய அருளாள ராகத் திகழ்ந்து உயிரிரக்க நெறியையும் பசி நீக்கப் பண்பினை யும் சிரமேற்கொண்டு ஒழுகினர். உயிரிரக்க நெறியினை 'அதி சிறந்த வழி'யாக உலகிற்கு வழங்கினர்.

2. சுத்த சன்மார்க்கம்: இராமலிங்கர் சைவராகத் தோன்றி யவர். சைவத்தில் ஊறியவர். ஞானசம்பந்தர் தமக்குக் குருவாக அமைந்தார் என எடுத்துக்கூறியவர். ஆயின், சைவ சித்தாந் தமும் சைவ சமய ஒழுக்கமும் அவரை வேலிபோட்டு நிறுத்த முடியவில்லை. சைவத்தின் உச்சநிலைக்கும் மேம்பட்ட நிலையில் அவர் கவனம் சென்றது. சமயங் கடந்த அந்நிலையை—'சுத்த' நெறியை அவர் காணத் துடித்தார். அதைக் கண்டுவிட்டதா கவும் பறை சாற்றுகிறார்.

சன்மார்க்கக் கொடியினை ஏற்றுவித்து அவர் அருளிய அரிய உரையில் இவ்வாறு கூறியுள்ளார்:

"......சைவம், வைணவம் முதலிய சமயங்களிலும், வேதாந் தம், சித்தாந்தம் முதலிய மதங்களிலும் லட்சியம் வைக்க வேண் டாம். அவற்றில் தெய்வத்தைப் பற்றிக் குழூஉக் குறியாகக் குறித்திருக்கிறதேயன்றிப் புறங்கவியச் செல்லவில்லை...... அவை களில் அற்பப் பிரயோஜனம் பெற்றுக்கொள்ளக் கூடுமேயல் லது ஒப்பற்ற பெரிய வாழ்வாகிய...... ஆன்மானுபவத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது...... நான் சைவ சமயத்தில் லட்சியம் வைத்துக்கொண்டிருந்தது இவ்வளவென்று அளவு சொல்ல முடியாது...... ஏன் அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு அப்போது இருந் தது என்றால், அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது.

"இப்போது ஆண்டவர் என்னை ஏறாத நிலைமேல் ஏற்றி யிருக்கிறார்...... என்னை இந்த இடத்துக்குத் தூக்கிவிட்டது யாதெனில்...... தயவு என்னும் கருணைதான் என்னைத் தூக்கி விட்டது......'' (திவ்விய சரித்திரம் பக்கம், 141, 143)

சைவ சித்தாந்தம் 'ஷடாந்தங்கள்' என ஆறு அந்தங்க ளைப் பற்றிப் பேசுகின்றது. அவை வருமாறு: யோகாந்தம், கலாந்தம், நாதாந்தம், போதாந்தம், வேதாந்தம், சித்தாந்தம். இவற்றுள் சித்தாந்தம் அல்லது 'சுத்தாது விதநிலை'யே சிறந் தது எனச் சைவசித்தாந்தம் கூறும்.

யோகாந்தம் தியான யோகத்தின் மூலம் கிட்டும்; கலாந்த நிலை ஏற்படும். அப்போது சன்மார்க்க (சித்தாந்தம் கூறும் நான்கு மார்க்கங்களில் உயர்ந்தது) அறிவு கைகூடி வரும். அடுத்து வரும் நாதாந்த நிலையில் சிவன் ஓங்காரமாக உண

ரப்படுவான். அதையடுத்த போதாந்த நிலையில் சிவன் ஒளி வடிவினனாகக் காட்சி தருவான். (இந்நிலையே ஜோதி தரிசனம் காணும் நிலை) இந்நிலை கடந்த அளவில் வேதாந்தம் நிலை தோன்றும். அங்குச் சிவன் ஞானவடிவினனாகக் காட்சி தருவான். இறுதி நிலையாகிய சித்தாந்த நிலையில் சுத்த அத்துவித நிலை ('ஏகம் இரண்டு என்னாமல் சும்மாவிரு' என்ற தெளிவு நிலை) புலனாகும். இதற்கும் மேம்பட்ட நிலையையே வள்ளலார் ஷடாந்த சன்மார்க்கம் என்கிறார்.

வள்ளலார் உயிரிரக்கம்—ஒருமையுணர்வு ஆகியவற்றின் மேல் நிறுவும் நெறியினைச் சுத்த சன்மார்க்கம் என்கின்றார். சித்தாந்தத்தில் கூறப்படும் உயர்நெறியாகிய சன்மார்க்கத்தினையும் அது கடந்தது என விளக்குகிறார்.

அதனைச் சுத்த சமரஸம் என்றும் கூறுகிறார். தாயுமானாரின், 'ஆறாறு சமயங்கள் தோறும் வேறு வேறாகி விளையாடும்' இறைவனைக் காண்கின்ற சமரஸத்தினுக்கு அது மேம்பட்டது. என நிறுவுகின்றார். மதம்—சமயம்—சாதி என்ற பேதமே இல்லாத உயர்நெறி அது என அவர் விளக்குகிறார்.

இச் சுத்த சமரஸ சன்மார்க்கத்தினை, ஷடாந்த சுத்த சமரஸ சன்மார்க்கம் எனவும் அவர் கூறுகின்றார். இந்நெறி சைவத்தின் அந்தங்களுக்கும் மார்க்கங்களுக்கும் உட்பட்டது அல்ல. அவை யாவற்றையும் கடந்தது என்பதைப் பெற வைக்கின்றார்.

இவ்வுயர் நெறியை மிக எளிதில் எவரும் அடைய முடியும் என்றும் முழங்கினார். இதனைத் தம் அனுபவத்தின் மூலம் உயிரிரக்கம், ஒருமை ஆகியவற்றின் துணையால் கண்டிருப்பதாகக் கூறுகிறார்.

"......தயவு வந்தால் தான் பெரிய நிலைமேல் ஏறலாம். இப்போது என்னுடைய அறிவு அண்டாண்டங்களுக்கு அப்பாலும் கடந்திருக்கிறது. அது அந்த ஒருமையினாலே தான் வந்தது. நீங்களும் என்னைப் போல் ஒருமையுடன் இருங்கள் ......" (திவ்விய சரித்திரம் பக்கம் 143)

தயவு, ஒருமை என்ற சொற்களால் அவர் கூறவரும் உயர் நெறியை இவ்வாறு எளிய முறையில் விளக்கிக் காட்டுகிறார்:

"என்னிடத்தில் ஒருவன் வசப்படாத முரட்டுத் தனமாய் எப்படியிருந்தாலும்",

"1. அவனுக்கு நல்ல வார்த்தை சொல்லுவேன்

2. மிரட்டிச் சொல்லுவேன்

3. தெண்டன் விழுந்து சொல்லுவேன்

4. அல்லது பொருளைக் கொடுத்து வசப்படுத்துவேன்.

5. அல்லது ஆண்டவரை நினைத்து பிரார்த்தனை செய்வேன்.''

''இப்படி எந்த விதத்திலாவது நல்ல வழிக்கு வரச்செய்து விடுவேன். நீங்கள் எல்லாவரும் இப்படியே செய்தல் வேண்டும்....எல்லாவரும் சகோதரர்களாதலாலும்; இயற்கை யுண்மை யேகதேசங்களாதலாலும், ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை வைத்துக்கொண்டிருக்கிறேன் ''

வள்ளலாரின் இவ்வுயர் நெறியினுக்கு ஆக்கமளித்து உலகெலாம் அதனைப் பரப்புதற்கு அவர்க்கு ஒரு விவேகானந்தர் கிடைக்கவில்லை. இந்நெறியினை இடையறாது காத்துப் போற்றுவாரின் கூட்டமாக ஒரு பலம் பொருந்திய இயக்கமும் தமிழ் நாட்டில் எழவில்லை. தங்கள் தங்கள் கொள்கை, கட்சி ஆகியவற்றுக்கு ஏற்றவையாக உள்ள வள்ளலார் பாக்களை மட்டுமே மதித்துப் போற்றுகிறவர்கள் தாம் தமிழகத்தில் மலிந்துள்ளார்கள். அவருடைய புரட்சி நெறியினை—சைவமும் சமயமும் கடந்த பெருநெறியினை—ஏற்போரும் பரப்புவோரும் ஒரு சிலரே ஆவர்.

3. மரணமிலாப் பெருவாழ்வு இராமலிங்கர் உடலுக்குப் பெருமதிப்பு அளித்தவர் ஆவார்.

"உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்
வள்ளற் பிரானுர்க்கு வாய்க் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு ஜீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காண மணி விளக்கே".

என மொழிந்த திருமூவர் பெருமானின் வழித்தோற்றலாக—சித்தர்கள் வரிசையிலே வந்தவர் அவர்.

சுத்த சன்மார்க்க நெறியினை அடைவதற்கு உடல் ஒரு சாதனமாக இருப்பதனை அவர் உணர்ந்தார். மூவகை உடல்களைப் பற்றி அவர் பேசுகின்றார். அவை, அன்புடல், அருளுடல், இன்புடல் ஆகியவை ஆம். அன்புடல் ஜீவகாருண்யத்தால் கிட்டுவது; அருளுடல் தியானம், யோகம் ஆகியவற்றால் கிடைப்பது. இன்புடல்—'பொன்னுடல்' எனப்பெறும். 'சுவர்ண தேகம்' அதிமுதிர்ந்த நிலையில் வாய்க்கப் பெறுவதாகும். அது அழியாத உடல்.

பொன்னுடலைப் பெற்று மரணமிலாப் பெருவாழ்வு வாழ விரும்புவார்க்கு வள்ளலார் மூன்று நெறிகளைத் தருகின்றார். அவை பசித்திரு—தனித்திரு—விழித்திரு என்பவை ஆகும். பெருந்தீனியைக் குறைப்பதே பசித்திருத்தல்; உயிர் வாழ்வதற்கு மட்டுமே உணவை உடகொள்ளும் நிலை. அதிமுதிர்ந்த நிலையிலுள்ளோர்க்கு மட்டுமே வள்ளலார் இந்நெறியை வழங்குகின்றார்.

'தனித்திரு' என்பது தியானத்தையும், 'விழித்திரு' என்பது துயிற் நீங்கப்பெற்று 'அறிதுயில்' கொள்ளும் நிலையையும் காட்டும்

வள்ளலார் இந் நிலைகளை அனுபவித்திருந்தார்.

"பிச்சுலகர் மெச்சப் பிதற்றிநின்ற பேதையனேன்
இச்சையெலா மெய்த விசைந்தருளிச் செய்தனையே;
அச்சமெலாந் தீர்ந்தே னாளமுத முண்கின்றேன்;
நிச்சலும்பே ரானந்த நித்திரைசெய் கின்றேனே."

என்பது அவருடைய இறுதிப் பாடல்; திருக்காபிட்டுக் கொள்வதற்கு முன்பு அவர் பாடிய பாட்டு.

ஜீவகாருண்ய ஒழுக்கநெறி ஏற்று ஒழுகுகின்றவர்கள் மரணமிலாப் பெரு வாழ்வினைப் பெற்றுககொள்ள முடியும் என்று வள்ளலார் நம்பினார். அதனைத் தம் பாடல்கள் பலவற்றிலே தெரிவித்து மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். உதாரணத்துக்கு ஒரு பாடல்:

வையகத்தீர் வானகத்தீர் மற்றகத்தீர் நுமது
  வாழ்க்கையெலாம் வாழ்க்கையென மதித்து மயங்காதீர்
மையகத்தே யுறுமரண வாதனையைத் தவிர்த்த
  வாழ்க்கையதே வாழ்க்கையென மதித்ததனைப் பெறவே
மெய்யகத்தே விரும்பியிங்கே வந்திடுமி னெனது
  மெய்ப்பொருளாந் தனித்தந்தை யித்தருணந் தனிலே
செய்யகத்தே வளர்ஞான சித்திபுரந் தனிலே
  சித்தாடல் புரிகின்றார் திண்ணமிது தானே".

## சீர்தூக்கல்

வள்ளலார் தம் அருளுரையில் மக்களுக்குக் கடவுளைப் பற்றிய விசாரம் இருக்கவேண்டியதன் அவசியத்தை விளக்குகின்றார்: "நம்முடைய நிலை எப்படிப்பட்டது? நமக்குமேல் நம்மை அதிஷ்டிக்கின்ற தெய்வத்தினுடைய நிலை எப்படிப்பட்டது? என்று விசாரிக்கவேண்டியது ......ஆண்டவர் நமக்கு உண்மை தெரிவிக்க வேண்டுமென்கிற முயற்சியுடனிருந்தால், தெரிய வேண்டியதைத் தெரிந்துகொள்ளலாம்". ஆன்மீக வாழ்க்கையில் நன்முயற்சி இடம்பெற வேண்டும் என்பதனையும் அவர் மக்களுக்கு உணர்த்திடக் காட்டியுள்ளார்: "நன்முயற்சி செய்தே மேலேற வேண்டியது......நாம் எல்லாரும் இததருணம் இப்போதே விசேஷ நன்முயற்சியுடனே இருந்தால், ஆண்டவர் வருகிறபோது நம் கீழ்ப்பாகத்திலுள்ள அசுத்த மாயா திரையோடு கூடி மேற்பாகத்திலிருக்கிற சுத்த மாயையினுடைய திரையும் நீங்கிப் போய்விடும்......" எனத் தன் அருளுரையில் கூறுகின்றார்.

வள்ளலார் பக்தி, தியானம் ஆகியவை பற்றியும் மக்களுக்கு அறவுரைகள் கூறியுள்ளார். அவை அன்பு—உயிரிரக்கம் ஆதியவற்றை மையமாகக் கொண்ட விளக்கங்களேயாகும்.

"பக்தி என்பது: மன நெகிழ்ச்சி; மன உருக்கம். அன்பு என்பது ஆன்ம நெகிழ்ச்சி; ஆன்ம உருக்கம். எல்லா உயிர்களிடத்தும் கடவுள் வியாபித்து இருப்பதை அறிதலே ஈசுர பக்தியாம். அந்தக் கரண சுத்தியின் பிரயோசனம் பக்தியை விளைவிப்பது, ஜீவ காருண்யம் உண்டானல் அருள் உண்டாகும். அருள் உண்டானல் அன்பு உண்டாகும். அன்பு உண்டானல் சிவானுபவம் உண்டாகும்".

தியானம் பற்றிப் பேசும்போது, "இந்தத் தேகத்தின் புருவ மத்தியில் நமது ஆன்ம அறிவு என்கிற கற்பூரத்தில் கடவுள் அருள் என்கிற தீபம் விளங்குவதாகப் பாவித்துப் பார்த்து, அதில் பழகிப் பழகிக் கடவுளிடத்தே உண்மையாகிய அன்பையும், ஜீவர்களிடத்தே உண்மையாகிய காருண்யத்தையும் இடைவிடாமல் வைத்து ஓங்கார பஞ்சாட்சர ஞாபகம் செய்தல் வேண்டும்......" எனக் கூறுகின்றார்.

ஆண்டவர் தமக்கு அருளிய திருமந்திரமாக அவர் ஒரு வாசகத்தைத் தம் அடியார்க்கு வழங்கியுள்ளார்:

"......நமது ஆண்டவர் கட்டளையிட்டது யாதெனில், நமது முன் சாதனம் கருணையானதினலே, ஆண்டவர் முதற்சாதனமாக,

'அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி'

என்னும் திருமந்திரத்தை வெளிப்படையாக எடுத்துக்கொண்டார்".

சுத்த சமரச சன்மார்க்க காலம் தம் காலத்தோடு ஆரம்பித்துவிட்டதாக விளக்கம் தந்துள்ளார்:

"மேலும், இதுகாறும் தெய்வத்தின் உண்மையைத் தெரியவொட்டாது. அசுத்த மாயாகாரிகளாகிய சித்தர்கள் மறைந்து விட்டார்கள். சுத்த மாயா காரியாகிய தெரிந்த பெரியோரும் இல்லை. சன்மார்க்கம் இருந்தால், அனுபவித்தறியாத அனுபவமும், கேட்டறியாத கேள்வியும் நாம் கேட்டிருப்போம். மேலும், இறந்தவர்கள் மீளவும் எழுந்து வந்திருப்பார்கள். ஆதலால். கேட்டறியாத கேள்விகளைக் கேட்கும்படி ஆண்டவர் செய்தது இத்தருணமே. ஆதலால் இத்தருணம், இக்காலமே சன்மார்க்கக் காலம்".

தமிழகத்தில் சைவப் பின்னணியோடு தோன்றிச் சைவத்தையும் சாதி, மத பாகுபாடுகளையும் கடந்து சமுதாயத்தைச்

சீர்திருத்தப் புரட்சிக் கருத்துக்களை அள்ளி வீசிய பெரியார் வள்ளலார் ஆவார். அன்புநெறி, ஒருமையுணர்வு ஆகியவற்றின் ஆழங்காண முயன்றவர் வள்ளலார். அவர் மக்களின் பாவலராகவும் நண்பராகவும் அமைந்தொழுகியவர் ஆவார்.

இருபதாம் நூற்றாண்டில் நம்நாட்டில் தோன்றிய இயக்கங்களுக்கும், அரிய புனரமைப்பாளர்களாக, புரட்சியாளர்களாகத் தோன்றிய பெரியார்களுக்கும் அவர் முன்னோடியாக விளங்குகின்றார்.

யோகி சுத்தானந்த பாரதி, பிரம்மஞான சபை (Theosophical Society) இராமலிங்கரின் ஆன்ம நேய ஒருமைப்பாட்டுக் கொள்கையின் வழித்தோன்றிய நிறுவனம் என்கிறார். அவ்வாறே அரவிந்தரின் 'தெய்வீக வாழ்வு' கொள்கையும், பூர்ணயோகமும் இராமலிங்கர் எடுத்துரைத்த அரிய பல உண்மைகளை விளக்குகின்றன என அவர் கூறுகின்றார். இராமலிங்கரிடம் மேலோங்கி நின்ற அஹிம்ஸை வேட்கையைக் காந்தியடிகளார் ஏற்று இயங்கினார் எனவும் அவர் எழுதுகின்றார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய இராம் மோகனர், கேசுப் சந்திரசென் இராமகிருஷ்ணர் போன்ற புனரமைப்பாளர்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவைப்பற்றித் தங்களுடைய கருத்துக்களைப் பலவற்றாலும் வெளியிட்டுள்ளார்கள். ஆயின் வள்ளலார் இயேசுவைப் பற்றியோ, கிறிஸ்தவ நற்செய்தியைப் பற்றியோ, கிறிஸ்தவர்களைப் பற்றியோ ஏதுஞ் சொல்கின்றாரில்லை.

அவர் சென்னையிலும் கருங்குழியிலும் வாழ்ந்த காலத்தில் பல கிறிஸ்தவப் பணியாளர்கள் அவ் வட்டாரங்களில் இருக்கவே செய்தனர். வள்ளலாரோடு கிறிஸ்தவர்கள் ஈடுபாடு கொண்டார்களா, அருட்செய்தி நூல்கள் அவர்க்கு வழங்கப்பட்டனவா, அதன் விளைவாக உரையாடல்கள் எழுந்தனவா என்பவை யாவும் விளங்காத புதிர்களாகவே உள்ளன.

இராமலிங்க அடிகளார் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கிறிஸ்தவராயிருந்தால் தமிழகத்தின் ஒரு சிறந்த கவிஞர் – புரட்சியாளர்—அருளாளர் கிறிஸ்தவத் திருச்சபைக்குக் கிடைத்திருப்பார். வேதநாயகம் சாஸ்திரியார், கிருஷ்ணப் பிள்ளை ஆகியோரைப் போலப் பணியாற்றியிருப்பார்.

"எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான்சென்றே
ஏகனின் அருட்புகழை இயம்பிட வேண்டும்"

என்று பாடியிருப்பார்.

"நவநோக்குத் தந்தாரென்று ஊதூது சங்கே—அவர்
நாதன் ஏசுக் கிறிஸ்தென்று ஊதூது சங்கே"

என முழங்கியிருப்பார்.

ஆனல், கடவுளின் திருச்சித்தமும் திட்டமும் நமது அறிவுக்கும் சிந்தனைக்கும் பன்மடங்கு மேம்பட்ட நிலையில் இயங்குகின்றன. தமிழகத்தில் கிறிஸ்தவ நற்செய்திக்குப் பாதையைப் பண்படுத்துகிறவராக — சைவப் புரட்சியாளராக — தீர்க்கராக வள்ளலாரைக் கடவுள் நமக்கு அளித்தார் என்று நாம் எண்ணி மகிழ வேண்டியுள்ளது.

## ஈ. சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் இன்றைய நிலை

சங்கம் ஆரம்பிக்கப்பட்டு நூறுண்டுகளுக்கு மேலாகிவிட்டது. 1965ஆம ஆண்டில், தமிழகத்தில் பல இடங்களில் இதன் நூற்றுண்டு விழா கொண்டாடப்பட்டது.

சங்கத்தின் ஆரம்ப காலத்தைப் பற்றிக் கூறும்போது தொழுவூர் வேலாயுதர், 'சுவாமிகளால் ஸ்தாபிக்கப்பட்ட 'சமரச சுத்த சன்மார்க்க சங்கம்' ஐந்தாறு வருடந்தான், அங்கு இருந்தது. (பிறகு உலக முழுதும் பரவிக்கொண்டேயிருக்கிறது) அதுபோது, அநேக ஏழைகளுக்கும், தேகந்தளர்ந்த பலவீனர்களுககும் அன்னமும் உடையும் அளிக்கப்பட்டு வந்தது" என எழுதுகின்றார் மூடப்பட்டுக் கிடந்த சபையைத் திறப்பதில் சங்கத் தலைவர்கள் ஆர்வம் காட்டியதாகவும் 1873இல் அதனை மறுபடியும் திறந்துவைத்ததாகவும் குறிப்புக்கள் உள்ளன.

ஆலய வழிபாடு, ஏழைகளுக்கு உணவளித்தல், ஆகியவற்றேடு சங்கத்தின் நடவடிக்கைகள் அக்காலத்தில் நின்றுவிட்டன. இராமலிங்கரின் அருட்செய்தியையும் புரட்சிக் கருத்துக்களையும் நாட்டில் பரப்புவதற்காக முயற்சிகள் எதும் எடுக்கபபட்டதாகத் தெரியவில்லை.

இந் நூற்றுண்டின் ஆரம்ப ஆண்டுகளில் சங்கத்திற்கு மறைமலையடிகள், திரு. வி. க. போன்ற தமிழ்ப் பெரியார்களின் ஆதரவு கிடைத்தது. இவ்விருவரும் அவரைப் பற்றி உரைகள் ஆற்றியுள்ளார்கள். நூல்களும எழுதியுள்ளார்கள் 1929 இல் திரு வி. க. சங்கத்தின் ஆணடுவிழாவில் ஆற்றிய தலைமைப் பேருரை "இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்' என்ற பெயரில் நூலாக வெளியிடப்பட்டது. அது அடிகளாரின் உள்ளக் கருத்துக்களை மிகச் சிறந்த முறையில் விளக்கிக் காட்டும் நூலாக அமைந்தது.

1946இல், இச் சங்கம் 'சமரஸ சுத்த சன்மார்க்க சங்கம்' என்ற பெயரில் அரசாங்கத்திடம் பதிவு செய்யப்பட்டது. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இச் சங்கம் இயங்கி வருகின்

றது. ஆனல் நாட்டில் வள்ளலாரின் சக்தி பரவிப் பெருகியுள்ள அளவுக்குச் சங்கத்தின் செல்வாக்குப் பெருகவில்லை.

வள்ளலார் விரும்பிய வகையில் சங்கம் இயங்கியிருந்தால், தமிழகத்தில் சுயமரியாதைக் கட்சியும், திராவிடர் கழகமும் அதன் தனிப்பெரும் தலைவருமான பெரியார் ஈ. வே. ராவும் சீர்திருத்தப் போராட்டங்கள் நடத்தியிருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. வள்ளலார் விருமபிய முறையில் சங்கம் இயங்கி இருந்தால் — புரட்சியாளர்களின் இயக்கமாக அது பணியாற்றியிருந்தால், சைவ, வைணவ மதங்களில் பெருத்தப் புத்துணர்ச்சியும் புரட்சியும் ஏற்பட்டிருக்கும்.

மாறாக, இவ் வாண்டுகளில் சங்கம் இருக்கும் இடம் தெரியாத வகையில் இயங்கிவந்துள்ளது. அதன் இயக்கம் பெரும்பாலும் ஒரு புத்தி இயக்கத்தின் போக்கிலேயே இருந்து வந்துள்ளது. அருட்செய்திப் பிரசாரம், சமுதாய ஆக்க நலப் பணிகள் முதலியவற்றில் சங்கம் ஒரு சில ஆண்டுகளாகத்தான் பெருத்த கவனம் செலுத்திவருகின்றது.

இத்துறைகளில் சங்கம் வளர்ச்சி காண்பதற்குப் பெரிதும் துணையாக இருந்த பெரியார்களுள் O. P. இராமசாமி ரெட்டியார், பெருமாள் செட்டியார், திருமுருக கிருபானந்தவாரியார் ஆகியோர் குறிப்பிடத் தகுந்தவர்கள் ஆவார்கள்.

இராமசாமி ரெட்டியாரும், பெருமாள் செட்டியாரும் வடலூரில் ஏழை மாணவர்க்கு இல்லங்கள் அமைத்து உணவளிப்பதில் பெருத்த கவனம் செலுத்தியுள்ளார்கள். வடலூரில் ஐந்து மாணவர் விடுதிகள் இயங்கிவருகின்றன. சத்திய ஞான சபையைப் பெருத்த பணச் செலவில் புதுப்பிக்கும் பணியை ஏற்று அதனைச் சிறப்புறச் செய்து முடித்தவர் கிருபானந்த வாரியார் ஆவார்.

வள்ளலாரின் கொள்கைகளை நாட்டில் பரப்புவதிலும், சமுதாய, கல்வித் துறைகள் ஆக்கப்பணிகள் நடந்தேறும்படி செய்வதிலும் நீதிபதி கடிகாசலம், மஹாலிங்கம், தமிழ்வாணன் போன்றோர் கவனம் செலுத்தி வருகின்றார்கள்.

இன்று வள்ளலாரின் புகழ் பரப்பும் வேலையில் நான்கு மிஷனெரி சங்கங்கள் ஈடுபட்டுள்ளன. அவை, காஞ்சி இராமலிங்கா மிஷன்; திருவாச்சியூர் இராமலிங்கா மிஷன்; தமிழ் நாடு இராமலிங்கா மிஷன்; அருட்சோதி இராமலிங்கா மிஷன் ஆகியவை ஆகும். இவற்றுள் முன்னையவை இரண்டும் வடலூரில் உள்ள தலைமைச் சங்கத்தோடு தொடர்புடையனவையாகும். பிற இரண்டு மிஷன்களும் தாமாகவே இயங்கி வருகின்றன.

1950 இல் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் நாடு இராமலிங்கா மிஷன் சென்னையிலுள்ள வடபழனியில் ஒரு பள்ளிக்கூடம் நடத்திவருகின்றது. அருட்சோதி இராமலிங்கா மிஷன் திரு. வி. எம். கடிகாசலம் அவர்களின் முயற்சியால் தொடங்கப்பட்டு இயங்கி வருகின்றது. இதனைச் சேர்ந்த தொண்டர்கள் பலர் பாதயாத்திரை ஏற்றுத் தமிழகத்திலுள்ள கிராமங்கள் பலவற்றுக்குச் சென்று வள்ளலாரின் அருளுரைகளை வழங்கியுள்ளார்கள்.

குஜராத் மாநிலத்தில் பிறந்து தமிழகம் போந்து தமிழ் கற்று வள்ளலார்க்கு ஆட்பட்டு அவர் புகழ் பரப்பி வரும் திரு. கிரிதாரி பிரசாத் அவர்களை, 'வள்ளலார்க்கு வாய்த்த விவேகானந்தர்' எனத் தமிழ்வாணன் பாராட்டியுள்ளார். திரு. பிரசாத் திருவருட்பாவை ஆழ்ந்து கற்றுள்ளார். அழகிய சொற்பொழிவுகள் நடத்தும் ஆற்றல் பெற்றவராக விளங்குகின்றார். தமிழகம் முழுவதிலும் மட்டுமல்லாது, மலேயா, பர்மா, இலங்கை, ஜப்பான் ஆகிய நாடுகளிலும் அவர் வள்ளலாரின் புகழ் மணம் பரப்பியுள்ளார். வள்ளலாரின் செய்தியை மேனாடுகளில் பரப்பவும் திட்டமிட்டுள்ளார்.

## முடிவுரை

சமரஸ சுத்த சன்மார்க்க சங்கமும் மிஷனெரிச் சங்கங்களும் திட்டமிட்ட ஒத்துழைப்போடு ஆக்கச் செயல்களில் ஈடுபட்டால் நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெறமுடியும். வள்ளலாரின் நெறியையும் அறை கூவலையும் நாட்டவர்க்கெல்லாம் எடுத்துரைக்க முடியும்.

அடிகளாரின் பக்திப் பாடல்களைப் பாடி மகிழ்வதில் மட்டும் அவர் அடியவர்கள் ஆர்வம் காட்டி நின்றால் அவர் புகழ் திக்கெட்டும் பரவ முடியாது; அவர் கனவுகள் நனவாக முடியாது. அவர் செய்தியை எடுத்துரைப்போர் அவரைப் போலவே அனைத்தினுக்கும் மேம்பட்ட உயர்நிலையினைக் காண்பதில் ஆர்வம் காட்டும் உளப்பங்குடையோராகவும், புரட்சிக் கருத்துக்களை வரவேற்பவர்களாகவும் புனரமைப்புப் பெருநோக்குடையோராகவும் பணியாற்றினால் தமிழகத்தில் பண்பட்ட மத விசாரமும் வேட்கையும் மக்களிடையே எழ முடியும்.

அத்தகு சூழ்நிலை கிறிஸ்தவப் பணியாளர்க்கும் சுத்த சன்மார்க்கத்தினர்க்கும் பயன் தரக்கூடிய உரையாடல்களுக்கான சூழ்நிலையாக அமையும். உரையாடல்களின் மூலம் இரு தரப்பினைச் சேர்ந்தவர்களும் தங்கள் அடிப்படைக் கொள்கைகளைச் சரிவரப் புரிந்துகொள்ள முடியும். இருதரப்பினரும் புரட்சியாளர்களே ஆவார்கள். யூத மதத்தின் கட்டுத் திட்டங்களைக் கடந்து சென்று உயர் நெறியைக் காட்டியவரை ஆண்டவராகக் கொண்டவர்கள் கிறிஸ்தவர்கள். சைவ சமயத்தின் எல்

லைக் கோட்டினைத் தாண்டிச் சென்று உயர்நெறி ஒன்றினைக் கண்டவரின் சீடர்கள் சுத்த சன்மார்க்கிகள்.

உயிரிரக்கம், கொல்லாமை, பசிதீர்த்தல் ஆகியவற்றைச் சிறப்பிக்கின்றோரிடையே—மரணமிலாப் பெருவாழ்வில் நாட்டமுடையோரிடையே, உயிரிரக்கத்தின் உச்ச கட்டத்தைத் தன்னையே வழங்கும் சிலுவை அன்பின் மூலம் உலகிற்கு உணர்த்தியவரை, உயிர்த்தெழுதலையும் நித்தியப் பெருவாழ்வினையும் வழங்குகின்றவரை நாம் காணாமல் இருக்க முடியாது. 'மறைந்து கிடக்கும் கிறிஸ்துவாக'[1] அவர் அத்தகையோரிடையே உள்ளார் உரையாடலின் உயர் கட்டத்தில், 'மறைந்து கிடப்பவர்' தம்மை வெளிப்படுத்திவிடுவார்.

இராபின் பாய்டு என்பார், இந்தியக் கிறிஸ்தவ இறையியலுக்கோர் அணிந்துரையாக எழுதியுள்ள ஆராய்ச்சி நூலின்[2] இறுதியுரையில் கூறியிருப்பவைகளை எடுத்துரைத்து இக்கட்டுரையை முடிப்பது பொருத்தமாக இருக்கும்.

'இந்து மதத்திற்குள்ளே 'அறியப்படாத கிறிஸ்து' இருக்கவே செய்கின்றார். அவர் பல ஆசிகளை வழங்கியுள்ளார். என்றாலும் அவர் பெயர் அங்கே அறிமுகமாகவில்லை; அவர் முகத்துக்குத் திரை நீக்கப்படவில்லை இந்து மதத்தின் பல்வேறு அம்சங்களில் அவர் இருக்கின்றார். அவரைப் பற்றிய அறிவு இல்லாத நிலையில் அம்மத போதனைகள் முழுமையானவை அல்ல; அவை மெய்ப்பொருளைப் பற்றிய சிறு குறிப்புகளே என்பதை எடுத்துக்காட்ட அவர் காத்து நிற்கின்றார்...''[1].

1. உரையாடல்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் கருத்துக்களை வழங்கி வரும் நம் நாட்டுக் கிறிஸ்தவ இறையியல் அறிஞர்களின் கூற்றுக்கள் இந்த உண்மையை வலியுறுத்துகின்றன விளக்கத்தை, R. H. S. Boyd எழுதியுள்ள *An Introduction to Indian Christian Theology* என்ற நூலில் காண்க. (பக்கம் 206—227) C L S., Madras, 1969.

2. மேற்கூறிப்பிட்ட நூல் பக்கம் 264.

## துணைநூற்கள்


பாலகிருஷ்ண பிள்ளை, **திருவருட்பிரகாச வள்ளலார் திவ்விய சரித்திரம்,** வள்ளலார் பதிப்பகம், 53,54 பெரம்பூர் பாரக்ஸ் ரோட், சென்னை-7.

2. சுத்தானந்த பாரதியார், **அருட்சோதி வள்ளலார்** சென்னை சமரச சுத்த சன்மார்க்க சங்கம், 8,99 அம்மன்கோவில் தெரு, சென்னை-1.

3. திரு. வி. கல்யாண சுந்தர முதலியார், **இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்,** சாது அச்சுக்கூடம், மைலாப்பூர், சென்னை-4.

4. ம. பொ. சிவஞானம், **வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு,** இன்ப நிலையம், மயிலாப்பூர், சென்னை-4.

5. கு. சிரிராமன், **அடிகளார் அருள் வாழ்க்கை,** வள்ளலார், தயா நிலையம், மேட்டுக்குப்பம்.

6. P. Mutharasu, *The Life of St. Ramalingar*, Samarasa Sanmarga Sangam, Tirunelveli.

7. சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள், **திருவருட்பா,** சமரஸ சன்மார்க்க சங்கம், சென்னை.

8. ஏ. எஸ். வழித்துணை ராமன், **வள்ளலரும் வாசகரும்,** வாசு பிரசுரம் 32, லாயிட்ஸ்ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14.


---

# 7

# சுவாமி சின்மயாநந்தர் இயக்கம்

## மா. அசரியா

### அ. முன்னுரை

இந்து சமயத்தில் பல வேகமான மாறுதல்களையுண்டாக்கி மக்களிடையே விழிப்புணர்ச்சியையும், மத உணர்ச்சியையும் ஏற்படுத்திவரும் அண்மைக் கால இயக்கங்களில் முன்னணியில் நிற்பது 'சின்மயா' இயக்கமாகும். பம்பாயைத் தளமாகக் கொண்டு பாரதீய வித்யா பவனும், வாரணசியை மையமாகக் கொண்டு இந்து பல்கலைக் கழகமும் மதபோதனைக்கான ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டுவருகின்றன. வேதாந்தக் கருத்துக்களை இந்துக்களுக்கு மட்டுமல்ல உலகம் முழுமைக்குமான ஆன்மீக மதமாக வழங்கும் பணியில் மேற்கூறப்பட்ட நிறுவனங்களைவிட அதிக செல்வாக்குடன், பெரும்பாலோர் காதிலும், கருத்திலும் படும்வண்ணம் பரம்பிவரும் சிறப்பு 'சின்மயா' இயக்கத்தினையே சாரும்.

இவ்வியக்கத்தின் 'மூலகர்த்தா' உத்திரகாசியிலிருந்து தவக் கோலம் பூண்டு, 'தன்னுணர்வு' அறிவின் தத்துவத்தைத் தாரணி எங்கும் அறியச்செய்திடும் தாகத்தால் 1951-ஆம் ஆண்டிலிருந்து பாரத நாட்டின் பன்னகரங்களையும வலம் வந்து கொண்டிருக்கும் சுவாமி சின்மயாநந்தர் ஆவார். எட்டாம் நூற்றாண்டில் எழுந்த ஆதி சங்கரர் போலவும, முந்திய நூற்றாண்டின் முடிவில் எழுந்த சுவாமி விவேகானந்தர் போலவும், நமது காலத்திலே நாட்டின் அரசியல் துறையிலும், அயல் நாடுகளின் அறிவு மன்றங்களிலும் அதிக புகழ்பெற்று விளங்கிடும் டாக்டர் இராதாகிருஷ்ணன் போலவும், அத்துவைத வேதாந்தச் சாரத்தினை ஊர்தோறும் சென்று ஓதி பரப்பிவரும் சின்மயாநந்தரைப் பற்றி அவசியம் அறிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. அப் பெருமகனாரைச் சூழ்ந்து அமைந்துள்ள அவ்வியக்கத்தின் குறிப்பிட்ட நோக்கந்தான் என்ன?

அம் மாபெருங் குருவின் தனிப் பெருஞ் சீடரான சுவாமி தயானந்தர் பின்வருமாறு பதில் கூறுகிறார்: "இந்து மதம், இந்து சமயத்தின்பண்பாடு இவற்றுக்குப் புத்துணர்வூட்டி, இவை மறுமலர்ச்சியடையச் செய்வது; இன்று விடாய்த்து நிற்கும் பாரத நாட்டின் ஆத்ம தாகம தணியும வகையில் இந் நாடு தனது ஒப்பற்ற பழம்பெரு நலங்களின் உயர்வினை உணரச் செய்வது: இந்துமத வேத நூல்களின் கருத்துக் கருவூலங்களை நாடெங்கிலும் பரப்பி இதில் வெற்றி காணச்செய்வது; இவைதான்

சின்மயா இயக்கத்தின் அடிப்படை நோக்கங்கள்" மேலும், "மனிதன் ஒவ்வொருவனும் தன் உள் நிலையை உள்ளவாறு கண்டறியச் செய்து, மனிதன் தான் தெய்வீகமுடையவன் என்றும், தெய்வீகத்துடன் தான் ஒன்றித் திகழ்பவன் என்றும் உணர்வதால் பெருவாழ்வு பெறச் செய்தலே எம் நோக்கம். இதற்கு ஆதாரமாகத்தான் சின்மயா மிஷன் நிலையங்கள் மூலமாக வேதாந்தம், கீதை இவற்றின் சுவிசேஷத்தினைப் பரப்பிட முனைகிறோம்" என்பார். இவற்றோடு நில்லாமல், "உலகின் பல்வேறு மதங்களின் வேதங்களுக்கும் பொதுக் கருத்தான, தனியான் புனரமைப்பின் மூலமே உலகனைத்தின் புனரமைப்பு என்ற கோஷத்தை எங்கெணும் முழக்கிடுவது எமது நோக்கம்" என்பார் சுவாமி சின்மயாநந்தர்

## ஆ. சுவாமி சின்மயாநந்தர்

இவர் தமது 55-ஆவது பிறந்த தினத்தைக் கடந்த மே மாதம் 14-ஆம் நாள் பம்பாயில் வியாதிப் படுக்கையிலிருந்தவாறு கொண்டாடினார். கடந்த 1970 ஜனுவரி 6-ஆம் நாள் சென்னையில் ஒரு கருத்தரங்கில் உரையாற்றிக்கொண்டிருக்கும் போதே மயங்கி விழுந்தார். தொடர்ந்து அவருக்கு இருதய நோய் என்று முடிவுகொண்டனர். அவரது பிறந்த நாளன்று நாட்டின் பல மிஷன் நிலையங்களிலும் அவரது சுகநலனுக்காக விசேஷ பிரார்த்தனைகள் ஏற்றெடுக்கப்பட்டன ஜூலை மாதம் வெளிவந்த "தபோவன் பிரசாத்" இதழில் "சுவாமிகள் துரிதமாய்ச் சுகமடைந்து வருகிறார்; தொடர்ந்து மன்றாடுங்கள்" என்று இரண்டாம் தலைவர் சுவாமி தயானந்தர் வாசகரை கேட்டுக்கொண்டிருக்கிறார்.

சுவாமி சின்மயா கேரளத்தில் தோன்றியவர். ஆங்கில இலக்கியத்தில் எம்.ஏ. வரைப் படித்தவர். பத்திரிகைத் துறையில் பயிற்சிபெற்று பணியாற்றிவருங்கால், ஒரு முறை வடநாட்டிலுள்ள ரிஷிகேஷத்துச் சுவாமி சிவானந்தர் அவர்களின் "தெய்வீக வாழ்வுச் சபை" (Divine Life Society) பற்றிச் செய்திகள் சேர்த்திடச் சென்றிருந்தார். அந்தச் சந்திப்பு முதல் சின்மையாவின் இளம் உள்ளத்தில் பெருந் திருப்பம் ஏற்பட்டது. துறவு பூண்டிட வேண்டிநின்றார். இவரது அறிவு நுட்பத்தையும், வேத ஞான வேட்கையையும் கண்டுகொண்ட சிவானந்தர், அந் நாட்களில் இந்துவேதக் கேள்விகளில் வித்தகம் பெற்று விளங்கிய சுவாமி தபோவன் என்பவரிடம், உத்தர காசிக்குச் சின்மையாவை அனுப்பினார். அது முதல் சுவாமி சின்மயாநந்தர் தபோவனரின் அடிகளில் அமர்ந்து இந்துமத நெறியின் எல்லா வேதங்களையும் கற்றுத் தேர்ந்தார் யோக நெறிகளிலும் முதிர்வு கண்டார். பன்னிரண்டு ஆண்டுகளின் பின்னர், 1951-ஆம் ஆண்டில், தமது 'ஞானயக்ஞங்கள்' மூலமாகப் பாரதத்தின் பண்பாட்டு மேன்மையையும், இந்து மத

வேத சாரங்களின் மகத்துவங்களையும் பறைசாற்றி, மக்களைத் தட்டி எழுப்பிடும் அரும்பணியில் ஈடுபடலானார்.

ஆறு அடிக்கும் சற்று உயர்ந்து நிற்கும் சுவாமிகள் ஆஜானு பாகுவான அழகுருவம் கொண்டவர், மாநிறத்தவர், அகன்று பரந்த நெற்றியும், நேரிய மூக்கும், ஒளிவிடும் கண்களும், மகிழ்ச்சி பொங்கும் மலர்ந்த முகமும் கொண்டவர். எப்போதும் காவி யாடையும் உத்திராட்சமும் அணிந்த காட்சியுடையார். அவர் திருவாய்மலர்ந்தருளும் மொழிகள், மடைதிறந்தாற்போல் தொடர்ந்து வந்து கேட்போரின் செவிக்கும் சிந்தைக்கும் விருந் தாயமைகின்றன. ஆங்கில மொழியில்தான் பேசுவார். அவ ரது சொல்நயமும், நகைச்சுவையும், உவமை நயமும் சிறு கதைச் சொல்வதில் சீரிய திறனும் அவர் கூறும் செய் திக்கு அரண்களாய் அமைகின்றன. அவற்றைக் கேட்கும் உள்ளங்களில் கிளர்ச்சி ஏற்படாமலிருக்காது. இவர் உரை களில் இவரது அன்புக் குணமும் அறிவாற்றலும் தெள்ளென விளங்கும்.

இந்தியாவின் நகரங்கள் பலவும் உலாவி வந்து ஆயிரக் கணக்கான மக்களின் உள்ளங்களைத் தொட்டுவந்ததோடு, அயல் நாடுகளுக்கும் போய்வந்தவர் சின்மயாநந்தர். அமெரிக்கா, பிரிட் டன் நாடுகளுக்கு இரு முறை சென்றிருக்கிறார் கயானா போன்ற மேற்கிந்திய தீவுகளுக்கும் மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளுக் கும் சென்று வேதாந்த ஞானக்குரல் முழக்கித் திரும்பியுள்ளார். விவேகானந்தரைப்போல் வெற்றிகளை இன்னும் காணவிடினும், எதிர்காலம் அவற்றை உறுதியாய்ப் பெற்றுத்தரும் என்ற நம் பிக்கை தமக்கிருப்பதாக அவரே கூறியிருக்கிறார்.

தமது வேதாந்த உரைகளைக் கேட்டு மேற்கொண்டு ஆராய்ச்சியிலீடுபடும் பல அன்பர்கள் தம்முடன் கடிதப்போக்கு வரத்து வைத்துக்கொள்ள எப்போதும் அழைப்புவிடும் சுவாமி கள், வந்த கடிதத்திற்கு உடனுக்குடன் பதில்தந்து, அன்பும், வாழ்த்தும் கூறி நட்புறவில் அவர்களை நிறுத்திக் கொள் வதில் பெருங் கவனங் காட்டிவருகிறார். இத்தகு தொடர் புகளினால் எழுந்த கடிதங்களின் தொகுப்பினை, கடிதங்கள் மூலம் வேதாந்தம் (Vedantha Through Letters) என்ற நூல் வடிவில் வெளியிட்டுள்ளார். இதனை வாசிக்கையில் வேத ஞானக் கருத்துக்களையும், அத்தோடு அவரது அன்பையும், பெருமையையும் நட்புணர்ச்சியையும் கண்டுகொள்ள முடிகிறது

## II சின்மயா இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

**ஞானயக்ஞங்கள்:** இமயச் சாரலின் இனிய சூழலில் பன்னி ரண்டுகாலம் பரம்பொருள் தியானத்திலும், வேதங்களின் ஞான வித்தைகளில் ஆழ்ந்தெழுவதிலும் கழித்துவிட்டு, 1951ஆம்

ஆண்டில் பூனா நகரில் தமது முதலாம் "ஞானயக்ஞம்" துவங்கி, வேதாந்த உரைகளை வழங்கினார் சுவாமி சின்மயானந்தர். ஆயினும், 1953இல் சென்னையில் நடந்த ஞான யக்ஞத்தின் விளைவாகத்தான் இவ்வியக்கத்தின் முதலாம் மிஷன் நிலையம் பிறந்தது. தொடர்ந்து நகரநகரோறும் சென்று பாரத நாட்டின் பல திக்கிலும் பணியாற்றி, இவ்வியக்கத்திற்குப் புதுப்புது கிளைகளைச் சுவாமிகள் நிறுவினார். இன்று 17 ஆண்டுகளுக்குப் பின்னர் ஏறக்குறைய 150 சின்மயா மிஷன் நிலையங்கள் இயங்கிவருகின்றன. ஒவ்வொரு கிளையிலும் சராசரி சுமார் 300 பேர் மாதம் ரூ. 10 செலுத்தி சங்காதாராகி மிஷன் நிகழ்ச்சிகளில் பங்கேற்றுப் பணியாற்றிவருகின்றனர். உதாரணத்திற்குச் சொல்வேன்: சென்னை மிஷன் நிலையத்தில் சுமார் 800 அங்கத்தினர் உள்ளனர். சுவாமிகள் இதுவரையில் 213 ஞானயக்ஞங்களையும், அவரது ஒரே சீடரான சுவாமி தயானந்தர் இதுவரையில் 46 ஞானயஞ்ஞங்களையும் இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் நடத்தியுள்ளனர். இவற்றின் மூலம், ஆயிரமாயிரமானவர் வேதாந்தக் கருத்துக்களை விரும்பிக் கேட்டு வருகின்றனர். யக்ஞசாலைக்கு வருகின்ற ஏராளமானவரில் ஒரு சிலரே மிஷன் நிலயங்களில் அங்கமேற்றாலும், வேதாந்தப் போதனை இந் நாட்டில் பரம்பிவரும் வேகம் குறிப்பிடத்தகுந்தாகும்.

**வெளியீடுகள்:** நகைச் சுவையும், பெருவகையும், தன்னம்பிக்கையும், சுயமரியாதை உணர்வும், தன்னாட்டுச் சிறப்புணர்ந்த பெருமிதமும் பெருக வழங்கிடும் இப் பேருரைகளை செவிக்கினிய, சிந்தைக்கினிய இவ்வருட்போதனைகளை, நூல் வடிவில் வெளியிடுவரும் 'சின்மயா நூற்பதிப்புக் கழகம்' ஒன்று ஆரம்ப முதலே சென்னையில் அமைந்து, இதுவரை ஏறக்குறைய 25 நூல்களையும் எண்ணற்ற துண்டுப் பிரசுரங்களையும் அச்சிட்டு வழங்கி வந்துள்ளது. இவை அனைத்தும் ஆங்கிலமொழி நூல்களேயாகும். "ஞானயக்ஞ" விரிவுரைகளும் ஆங்கிலமொழியில் அமைந்தனவே என்பதும் குறிப்பிடத்தக்கது. சுவாமிகளின் வானொலிப் பேச்சுகளும் நூல்வடிவில் வந்துள்ளன. தமிழ் போன்ற நாலைந்து இந்திய மொழிகளிலும் இவற்றில் பல மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளன. இந் நூல்களில் பாதிக்கு மேல், வேத நூல்களான உபநிடதங்கள், பகவத்கீதை, ஆகியவற்றின் மேல் எழுந்த காப்புரைகளாகும். மற்றும் ஆதிசங்கரரின் பஜகோவிந்தம்', 'விவேகச்சூடாமணி', 'ஆத்ம போதம்' முதலான நூல்களுக்கான காப்புரைகள், சுவாமிகள் ஆற்றும் வேத உரைகளின் தொகுப்புகள், 'உயிரினை உசுப்பிவிடு' (Kindle Life), 'தியானமும் வாழ்க்கையும்' (Meditation and Life), மறுமலர்ச்சியே வாழ்க' (Hail Renaissance—in 2 parts) என்ற பல நூல்களும் இதிலடங்கும். தவிரவும், 'தியாகி' என்ற மாத இதழும், 'உஷா' என்றொரு பத்திரிகையும் முறையே சித்தூர்,

ஹைதராபாத் ஆகிய இடங்களிலிருந்து பல ஆண்டுகளாக வெளியாகி வந்தன. அண்மையில்தான் அவ்விரு இதழ்களும் பம்பாயிலிருந்து வெளிவந்த 'தபோவன் பிரசாத்' என்னும் மூன்றாவது இதழோடு இணைந்து, ஒரே பத்திரிகையாக தற்சமயம் சென்னையிலிருந்து வெளியிடப்பட்டு, இன்று சுமார் 10,000 பிரதிகள் மாதந்தோறும் செலவாகிவருகின்றது. இத்துடன் 'பால் விஹார்' என்றொரு சிறுவர் பத்திரிகை அண்மையில் பம்பாயிலிருந்து அச்சாகிவருகின்றது. இவையனைத்தும் ஆங்கிலமொழிப் பத்திரிகைகளே. இந்திய மொழிகளில் மலையாள மொழியில் மட்டும் 'பரமார்த்த புருஷார்த்தம்' என்ற மாத இதழ் வெளியாகிறது. இவ்விதழ் இவ்வியக்கத்தை வளர்த்துப் பணி புரிந்துவரும் மற்றொரு பத்திரிகையாகும்.

**பயிற்சிக்கூடம்:** பம்பாயிலுள்ள போவர்ய் ஏரிகளின் கரையோரத்தில் அமைந்த 'சாந்தி பநிசாதநலயா' என்ற தியான மன்றமும், வேத ஞானப் பயிற்சி நிலையமும் இணைந்து 1963 முதல் இயங்கிவருகின்றன. அங்கு நற்பயிற்சிபெற்று சுமார் 30 சின்மயா இயக்க மிஷனரிமார் 1968இல் வெளியேறி, பாரதத்தின் பல்வேறுப் பகுதிகளிலும் பணியாற்றிவருகின்றனர். அடுத்த 25 ஆண்டுகளுக்குள், மிஷனரிகள் ஒவ்வொருவரும் 3 அல்லது 4 இளைஞர்களைத் தக்கவாறு பயிற்றுவிக்கவும், இவ்வாறு இந்தியாவின் எல்லா நகரங்களிலும் மிஷனரிகளை நிறுத்தித் தர்ம நீதியில் மக்களை நடத்திடவும் இயக்கம் திட்டம் தீட்டியுள்ளது.

## ஈ. இயக்கத்தின் பணி

சின்மயா மிஷன் நிலையங்கள் பாரதமெங்கிலும் சுமார் 150 உள்ளன என்று முன்பே கூறினோம். இந் நிலயங்கள் பாரதப் பண்பாடு, இந்து மத நெறி, ஆன்மீக வாழ்வு ஆகியவற்றை ஆழப்படுத்தி, பரப்பிடுவதையே தங்கள் முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளன. இதற்குத் துணையாக அவை கையாளும் கருவிகள். ஆராய்ச்சிக் குழுக்கள், சத்சங்கங்கள், தேவியல் குழுக்கள், பாலவிஹாரங்கள், மாணவர் கருத்தரங்குகள் போன்றனவாகும். இவற்றின் மூலம், ஆன்மீக அறிவு பரப்புதல், மதவுணர்ச்சியூட்டிப் புனரமைப்புக் காணல், மற்றும் சமுதாயப் பண்பாட்டு விழிப்புணர்ச்சியுண்டாக்குதல் ஆகிய நோக்கங்களை நிறைவேற்றிவைக்க முற்பட்டுள்ளன. இந் நிலயங்கள் கேரளத்தில் 27 உம் தமிழ்நாட்டில் 11உம் உள்ளன. தவிரவும் சென்னை, இராஜபாளையம் பணி நிலையங்களில் உள்ளது போல 'நர்சரி' பள்ளிகளையும் துவக்கி நடத்துகின்றன. இலவச வைத்திய மனைகளும் நடத்தப்படுகின்றன. மிஷன் அங்கத்தவரான டாக்டர்கள் இவற்றின் மூலம் தொண்டு பணியாற்றுகின்றனர். பெங்களூரில் 'சின்மயா பணி

மருத்துவமனை' ஒன்று ரூ. 40 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகின்றது. இவ்வாறான சேவை நிலயங்களின் நோக்கம் முடிவில் அனைவரையும் வேதாந்தச் சுவிசேஷத்திற்கு அறிமுகப்படுத்துவதேயாகும் என்று சுவாமிகளே குறிப்பிட்டுள்ளார்.

பம்பாயில்தான் இவ்வியக்கத்தின் தலைமைப்பணி நிலையம் உள்ளது. அத்துடன் இணைக்கப்பட்ட "தாரா கல்ச்சுரல் டிரஸ்ட்" என்ற நிறுவனத்தின் மூலம்தான் இயக்கத்தின் சொத்துகள், நிதியிருப்புகள் யாவும் நிர்வகிக்கப்படுகின்றன. பம்பாய் நிலையத்தில்தான் இயக்கம் அனைத்திற்குமான கோட்பாடுகள் வரையறுக்கப்படுகின்றன. சுவாமிகளின் உள்நாட்டு, வெளிநாட்டுப் பயணங்களின் திட்டங்கள் தயாரிக்கப்படுவதும் பம்பாயில்தான். இனி பணி நிலயங்கள் கையாளும் நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றி ஒரு சில குறிப்புகளை நோக்குவோம்.

1. ஆய்வுக் குழுக்கள் (Study Circles): ஆய்வுக் குழுக்களுக்கு மிக முக்கிய இடந்தரல் வேண்டுமென்பது சுவாமிகளின் ஆணை. அவரது நூல்களின் துணைகொண்டு வேதநூல்களை நேரில் மிஷன் அங்கத்தினர்க்கும் பிறர்க்கும் கற்பிக்க அவர் கண்ட நல் உபாயமாகும் இது. கிறிஸ்தவ மத அமைப்பிலும், அதிலும் சிறப்பாக கம்யூனிஸ்டு கட்சிகளின் அமைப்பிலும் வெற்றியோடு கையாளப்பட்டு வருகின்ற "ஆராய்ச்சிக் குழு" அமைப்பு முறையைச் சிறப்பாக எடுத்தாள முயலும் நவவேதாந்த அறிஞர்களில் சின்மயாநந்தர்தான் குறிப்பிடத் தகுந்தவர். வாரமொரு நாள் 2 மணி நேரம் 10 பேருக்கு மிகாமல் ஒரு நண்பர் வீட்டில்கூடி ஆராய்ச்சியுடன் ஒருவரோடொருவர் கலந்து கருத்துப் பரிமாறிக்கொள்ளும் இம்முறைக்கு அதிகச் செல்வாக்கு ஏற்பட்டுள்ளது. தனி அங்கத்தவர், தினமும் ஒரு மணி நேரம் படித்துவந்தால், மூன்று ஆண்டு காலத்தில் இயக்கத்தில் வெளிவந்த 25 பகுதி நூல்களையும் கற்றுத்தேர்ந்து, வேதஞான அறிவில் சிறந்திடச் செய்யும் திட்டமொன்றினைச் சுவாமிகளே தீட்டி வழங்கியுள்ளார். இதனைக் கடைப்பிடித்துவரும் அன்பர்கள் ஆராய்ச்சிக் குழுவில் கூடி, மேலும் தெளிவுபடுவதால் பெரு நன்மையடைவர் என்பது அவர் கருத்து. சென்னை நகரில் மட்டும் இவ்வாறாக 10 குழுக்கள் உள்ளன.

2. சத் சங்கங்கள்: மாதமொருமுறை கூட்டுத் தொழுகை நடத்த ஏற்பட்டவை. ஓங்கார (பிரவண) நாம பஜனையும், கீதையின் அதிகாரங்களை ஓதிப்படிப்பதும் அங்கே நிகழ்கின்றன. தனித்தொழுகைக்கு மட்டும் சிறப்பிடந்தரும வேதாந்த இந்து மத நெறியில் இம் முறை ஓர் புது முயற்சியாகும்.

3. தேவியார் குழுக்கள், பாலர் குழுக்கள், மாணவர் அரங்குகள் என்பனவெல்லாம், கிறிஸ்து மத நெறியினர் நடத்

தும் பெண்கள் ஐக்கியச் சங்கம், சிறுவர் ஓய்வுநாள் பள்ளி வகுப்புகள், வாலிபர் ஐக்கிய சங்கம் என்கிற பாணியில் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

சிறப்பாக மாணவப் பருவத்தினருக்கு வேத ஞான போதங்களில் ஆர்வமூட்ட வேண்டி சுவாமிகள், எடுத்துவரும் புது முயற்சிகள், இன்றைய இளைஞரை வளைத்திட வேண்டும் என்கிற அவசியத்தை இவர் எத்துணை முக்கியப்படுத்துகிறார் என்று காட்டுகின்றன.

## உ. சின்மயாநந்தரின் சிறப்புச் செய்தி

சுவாமிகளின் சிறு கதைகூறும் திறன்பற்றி முன்னரே குறிப்பிட்டோம். உதாரணத்திற்கு ஒன்று: ஒரு செல்வந்தன் தன் அலுவல் காரியமாய் டெல்லி இரயில் நிலையத்தில் வந்து, பெட்டி படுக்கை சகிதம் சென்னை செல்லும் வண்டியில் ஏறிக் கொண்டான். தன கையில் ஒரு தோல் பையினையும் அடக்கிப் பிடித்திருந்தான். அதில் பெருந்தொகை—பொன்னோ பணமோ இருந்திருக்க வேண்டும். அதனால்தான் அவன் வெருண்டு வெருண்டு பார்த்தபடியும், மீண்டும் மீண்டும் அப் பையைத் தொட்டுப் பார்த்தபடியும் அமர்ந்திருந்தான். அவனை எப்படியோ அடையாளம் தெரிந்துகொண்டதுபோல் மற்றொருவனும் அதே பெட்டியில் வந்தேறிக்கொண்டான். அவன் "பிக் பாக்கட்" பேர்வழி. ஆனால் பட்டாடை உடுத்தியிருந்தான். அழகுமொழி பேசினான். சீக்கிரத்தில் வண்டியும் புறப் பட்டுவிட்டது. "பிக்பாக்கட்" பேர்வழி செல்வந்தனுடன் நண்புகிவிட்டான். இருவரும் இரயில் வண்டி சிநேகிதராகிவிட்டனர். முதல் இரவு வந்தது. செல்வந்தர் கொறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்தார். அடுத்த பேர்வழி அவரது பெட்டி படுக்கையெல்லாம் தேடி அலசிப் பார்த்துவிட்டான். அந்தப் பை மட்டும் கிடைக்கவில்லை. மறுநாளும் நட்பு வளர்ந்தது. காப்பி குடிக்கப் போகும்போது ஒருவர் போய்வர ஒருவர் காவலிருந்துகொணடார். இரண்டாம் இரவும் வந்தது. கள்ளப்பேர்வழி தேடாத இடமில்லை. பையையோ கண்டபாடில்லை. சென்னையும் வந்தாய்விட்டது. நணபர் என்ற உறவில் துணிந்து அவரையே கேட்டுவிட்டான்: "ஆமாம், நீங்கள் உங்கள் பணப் பையை எங்கு வைத்திருந்தீர்கள்?" "ஓ... அதுவா! உங்கள் படுக்கையின் அடியில்தான் வைத்திருந்தேன்" என்றார் செல்வந்தர்!! எதற்கு இது உதாரணம்? சின்மயாநந்தரின் போதனைகளின் நடுக்கருத்தினை விளக்க எழுந்த உதாரணமே இது. "கடவுளைத் தேடி காசிக்கும் இராமேஸ்வரத்திற்கும், உலகிலுள்ள மதங்களுக்கும் ஓடி ஓடிப் பார்ப்பானேன். உனக்குள்ளேயே ஒளிந்திருக்கும் பரம்பொருளை, ஏன் காணமாட்டாதிருக்கிறாய்?" என்று சின்மயா கேட்கின்

ளர். "மனிதன் தெய்வீகமுடையவன்"; இதனைத் தன்னுணர் வறிவினால் (self realisation) உணர்ந்துகொள்; நீ வேறு; உள் ளதனைத்திற்கும் ஆதாரமான ஒருமைப் பரம்பொருள் வேறு என்பதல்ல. நீவிர் இரண்டல்ல; ஒன்றுதான்" என்பதே அவ ரது தார்மீகத் தத்துவமாகும். "மனிதனே, நீயே கடவுள்! விழித்தெழுப்பு! உனது உள்மகிமையை உணர்ந்துகொள்" என்னும் இந்த அறைகூவல் உண்மையில் இந்து மத வேதங் களின் குரலேயாகும். எனவே, திரும்புக! பண்டைய வேதங் களாம், உபநிடதங்கள், பகவத் கீதை பிரம்ம சூத்திரங்களைக் கற்று ஊய்த்திடத் திரும்புக வேதங்களுக்கு" என்கிறார் சுவாமி கள். எனவே வேதங்களின் துணைகொண்டு உய்வு நிலை பெறுக' என்று "உயிரினை உசுப்பிவிடு" (Kindle Life) என்ற தம் நூலில் ஏவுகின்றார். மேலும் உபநிடதங்களின் சாரமென்ன? பிரம்மன் நிலத்திலும் நீரிலும் உள்ளான். ஆயினும் அவனை அவை அறியமாட்டா; அவற்றை இயக்கி நிறுத்துகிறவன் அவனே. உன் ஆத்துமாவில் உள்ளியங்கியாய் அவன் உள் ளான்; அவன் அழிவுபடாத நித்திய பரம்பொருள் என்று பிரஹதாரண்யக உபநிடதம் கூறுகின்றது. இதனை உணர்ந்து கொள்பவனே ஆன்மீக எழுச்சி பெற்றவனாகின்றான். அவனே உய்வு நிலை அடைகின்றான். பகவத் கீதையும் இதனைக் கூறுகின் றது. கண்ணன் பார்த்தனுக்குக் கூறுகின்றான்: "நீ பாவியிலும் கொடிய பாவியாயிருந்தாலும், தெய்வீக ஞானம் பெற்ற அளவில் அதன் துணைகொண்டு, எல்லாப் பாவச் செயல்களையும் கடந்து போவாய்......தெய்வீக ஞானம் போன்று தூய்மைப்படுத்தும் பொருள் ஏதும் உலகில் இல்லை......ஆன்ம அறிவில் உறுதி பெறுவதும், சத்தியத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொள்வதுமே உண்மை ஞானம்" என்று உரைக்கிறான். எனவே இதற்கு ஆன்ம அறிவினை தன்னுணர்வு அறிவின் மூலம், தியானப் பயிற்சிகள் மூலம் (Meditation), தன்னடக்கக் கலை ஞானத் தின் (art of self mastery) மூலம் பெற்றுக்கொள் என்று சின்மயாநந்தர் தமது தியானமும் வாழ்க்கையும் (Meditation and Life) என்ற நூலில் விரிவான விளக்கங்களுடன், கடைப் பிடிப்பதற்கான நடைமுறை ஆலோசனைகள் வழங்கியுள்ளார்.

மற்றும் 'தன்னுணர்வு' பெற்றவர்களினாலேதான் "இராம இராஜ்யம்" என்னும் தெய்வீக ஆட்சியினை இவ்வுலகில் நிறை வேற்றி வைக்க முடியும் என்கிறார் இவர். "தனி மனிதன் புனரமைப்பே தரணியின் புனரமைப்பு" (World perfection through Self-perfection). இதுவே உலகின் எல்லா வேதங் களும் எழுப்பும் ஏகக்குரல் என்கிறார். "பாரத நாட்டின் பண் டைப் பண்பாடுகளின் சிறப்பினை வேதங்களிலிருந்து கண்டறிந்து கொள்; அது உன்னைத் தட்டி எழுப்பும், தலை நிமிரச்செய்யும், அடிப்படையில் உள்ள ஒன்றான பண்பாட்டின் மேல்தான் நம் மிடையே உறுதியான ஒருமைப்பாடு நிறுவமுடியும்" என்று

தம் உடன் இந்தியருக்கு ஆலோசனை கூறுகின்றார். இன்றைய உலகமானது அணுயுகத்தின் அடிமைத்தனை களைந்து விடுபட ஒரே வழி ஆதிசங்கரரின் அத்துவைதக் கொள்கையில்தான் உண்டு என்று சின்மயாநந்தர் உறுதியாக எடுத்துரைத்துவருகின்றார்.

## ஊ. சின்மயா இயக்கம்—ஓர் மதிப்பீடு

ஆதி சங்கரரின் அத்துவைதக் கேட்பாட்டின் மேல் அனைத்தின் ஒருமைப்பாட்டினையும் நிறுவிக் காட்டுவதால் விவேகானந்தர் போன்றோர் வரிசையில் நின்று நவ வேதாந்தக் கருத்துகளை (Neo-Vedanta) நாட்டின் பட்டி தொட்டிகளில் எல்லாம் பரப்பிடும் இலட்சியத்தோடு செயல்பட்டு வரும் 'சின்மயா' இயக்கத்தின் சிறப்புகள் யாவை? குறைபாடுகள் யாவை? இவ்வியக்கம் கிறிஸ்தவ நற்செய்தியாளருக்கு விடுக்கும் அறை கூவல்கள் யாவை? இவை பற்றிச் சில குறிப்புகளை ஈண்டு நோக்குவோம்.

சிறப்புகள்: 1. மக்களிடையே மதநெறி வேறுபாடுகளினால் பூசல்களையும், வைராக்கியங்களையும், களைந்தெறியக்கூடிய ஒரு கருத்தினைச் சிறப்பித்துப் பரப்பிடும் இவ்வியக்கம் இன்றுள்ள இந்திய சூழ்நிலையில் போற்றுதற்குரியதாகும். ''அனைத்து மதங்களும் அடிப்படையில் ஒன்றேயாகும். இவற்றின் முடிவும் எல்லையும் அந்த ஒரே பரம்பொருள் தான்'' என்பதே அக்கருத்து. எண்ணற்ற பிரிவுகளைக் கொண்ட இந்து மதத்தினரிடையே இக் கருத்து பரவி பலன் செய்யத் துவக்கிவிட்டது. கிறிஸ்தவர் இஸ்லாமியர் போன்ற பிறமார்க்கத்தவர் இக் கருத்தினை ஏற்பதில்லையாயினும், இந்து மதத்தோடிணைந்த எல்லா மதங்களும் தமக்குள்ளே வைராக்கியம் கொள்ளுதலைத் தவிர்க்க உதவுகிறது இந்தக் கருத்து என்பதனை மறுக்க முடியாது. காட்டிலே சிங்கம் வந்து குரல் எழுப்ப, நரிகளின் குரல் அடங்கிவிடுவதுபோல, சின்மயாநந்தரின் வேதாந்தக்குரல் ஓங்குவதால் இந்துமதப் பிரிவுகளின் குரல் அடங்கும். ஒருமைப் படுத்தக் கூடிய சக்தியாக வேதாநதக் கொள்கைகள் விளங்கும் என எதிர்பார்க்கலாம்.

2 தனிமனிதனின் ''ஆன்மீக எழுச்சி பெறும் வழி தன்னுணர்வே'' என்ற மற்றொரு அடிப்படைக் கருத்தைப் பரப்பிடும் இவ்வியக்கம், ஒவ்வொரு மனிதனிலும் நித்திய பரம்பொருள் உள்ளுறைவோராய் விளங்குவதாகக் கூறுவதால் ஒதுக்கப்பட வேண்டிய ஒரு பிறவியுமே இல்லை என்று சாதித்துவருகின்றது. ஒரு மனிதனும் பிறமனிதனைவிடக் குறைந்த பிறவியல்ல என்பதை உறுதிப்படுத்துகின்றது சாதிப் பிரிவினைக்கு சாட்டையடி வழங்கும் கருத்தன்றோ இது? எனவே, சின்மயாநந்தர் இந்து மதத்தில் ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்று பறைசாற்றிய திருமூலர் வழிவந்த சீர்திருத்தத் தலைவர் எனலாம். மேலும், இக் கருத்து தனிமனிதனின் சிறப்பினையும், முக்

கியத்துவத்தையும் சுட்டிக்காட்டித் தட்டி எழுப்பி, தன்னம்பிக்கையும் சுயமரியாதையுணர்ச்சியும் ஊட்டுவதால், ஏராளமான இளம் உள்ளங்களைக் கவரக்கூடிய சக்தியாக இது விளங்கிட வாய்ப்பு இருக்கின்றது.

3. "பாரதப் பண்பாட்டின் ஒருமையினை வேதங்களில் கண்டுகொள்; அவ்வறிவு எல்லா இந்தியரையும் ஒருமைப்படுத்த வல்ல சக்தியாகும்" என்று கூறும் சின்மயாநந்தர் இன்றைய இந்தியச் சூழ்நிலையில் நல்லதொரு தேசீயவாதியாக விளங்குகிறார். மொழியாலும், நில அமைப்பாலும் பிற பிரிவினைகளாலும் உடைந்து நிற்கும் பாரதத்தை இணைத்திடும் நல்ல மருந்தொன்றுண்டு என்று காட்டுகிறார். இக் கருத்தினை முன்னிட்டும் இவ்வியக்கத்திற்குச் செல்வாக்கு மேலும் பெருகுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது.

4. "தனி மனிதனின் புனரமைப்பே சாரணியின் புனரமைப்பு" என்ற கோஷம் உலகத்தைச் சீர்திருத்தும் கண்ணோட்டத்தோடு ஆன்மீக விடுதலைக்காக மட்டுமின்றி, சமுதாயத்தின் விடுதலைக்கும் சுவாமிகள் ஏங்குகின்றார் என்று காட்டுகிறது. இந்துமதத்தின் கண்ணோட்டத்தினை, மேலை நாடுகளின் பாங்கில் திருப்புவதை இராஜாராம் மோகன்ராய், கேசப் சந்திர சென், கோகலே, திலகர் போன்றவர் வரிசையில் நின்று சின்மயாநந்தரும் ஏற்றுக்கொள்வார் என்று கருத இடமுண்டு. அதவைதக் கொள்கைப்படி இவ்வுலகம் "மாயை" என்று ஏற்றாலும், அதன் விளக்கத்தை டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் கூறுவதுபோல் சின்மயாநந்தர் ஒப்புக்கொள்வதாகத் தெரிகிறது. எனவேதான் இந்த உலகத்தின் புனரமைப்பை மனிதனின் பொறுப்பெனக் கூவியுரைத்து வருகின்றார்.

5. இந்த இயக்கத்தின் அமைப்புமுறை இந்த அணுயுகத்தில் அறிவுப்போதை கொண்டுள்ள 20 ஆம் நூற்றாண்டினருக்கு ஏற்றவகையில் அமைக்கப்பட்டிருப்பதை போற்றாமலிருக்க முடியாது. கருத்தரங்குகள், ஆய்வுக்குழுக்கள் (Study Circles), தேவியர், பாலர் குழுக்கள் என்றும், மிஷனரி நிலையங்கள் என்றும், சேவை நிலையங்கள் என்றும் பல, ஸ்தாபனங்கள், "தன்னுணர்வறிவு" பெற நாடுவோர் முழுமூச்சுடன் ஈடுபட்டுச் செயல்படக்கூடிய அமைப்புகளாய் விளங்குகின்றன.

எனவே, மேற்கண்ட சீரிய பண்புகளைக்கொண்ட இவ்வியக்கம், துவக்கப்பட்ட இருபதே ஆண்டுகளில் இத்துணை வேகமாக வளர்ந்துகொண்டிருப்பதில் ஆச்சரியமில்லை.

**குறைகள்:** இவ்வளவு சிறப்புகள் இருப்பினும் இது போன்ற பிற இயக்கங்களோடு ஒப்பிட்டுப் பார்க்குங்கால் சின்மயா இயக்கத்தின் சில குறைபாடுகளும் தெரியவருகின்றன.

1. இராமகிருஷ்ண இயக்கத்தில் உள்ளதுபோலவே சின்மயா இயக்கத்திலும் பெரும்பாலும் நடுத்தர வகுப்பினர்தான ஆர்வங்காட்டி அங்கத்துவம் பெற்றுவருவதாகத் தெரிகிறது. பாமர மக்களையும் படிப்பறிவில் குறைந்த மக்களையும் கவரக் கூடிய கருத்துக்கள் பல இதில் இருப்பினும் அன்னவரை இன்னும் ஏனோ அணுகிடாத குறை இருந்து வருகின்றது.

2. ஒரு தனித்தலைவரைத் தளமாய்க்கொண்டு இயங்குவதால் அவருக்குப்பின், இராம கிருஷ்ணர், விவேகானந்தர் ஆகியோருக்குப்பின் அந்த இயக்கத்தில் ஏற்பட்டது போன்ற மந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளோ வாய்ப்புகளோ சின்மயா இயக்கத்தில் இருப்பதாகத் தெரியவில்லை.

3. கொள்கைகளை ஆய்ந்து காணுங்கால் சின்மயாநந்தர் நூல்கள் யாவிலும் "இந்து மதத்தின் வேதங்களுக்குத் திரும்புவோம்" என்ற அடிப்படை அழைப்பின் பேரில் எழுந்த கருத்துக்களே விரவி நிற்கின்றன, பிற மார்க்கத்தாருடன் உரையாட விரும்பாத நிலையினைத்தான் இது காட்டுகின்றது. அதாவது, 'எம்மதமும் சம்மதம்' என்பது கூட அல்ல, எங்கள் இந்து மதமே, குறிப்பாக வேதாந்த நெறியே, எலலா மதங்களுக்கும் முடிவான நெறியாகும் என்று சொல்லாமல் சொல்லுகிற நிலையைத்தான் இது காட்டுகிறது.

அறைகூவல்: கிறிஸ்தவ நற்செய்தியாளருக்குச் சின்மயா இயக்கம் பின்வரும் அறை கூவல்களை விடுக்கிறது.

1. "உள்ளவை அனைத்தையும் இயக்கிடும் பரம்பொருள் ஒன்றே; அது ஒவ்வொரு தனி மனிதனையும் உள்நின்று இயக்கி வருகின்றது" என்ற கவர்ச்சிகரமான கருத்தினைக் கிறிஸ்தவ மறைநூல் குறிப்பாக எதிர்க்கின்றது. கடவுள் வேறே; மனிதன் வேறே. கடவுளின் சாயலில்தான் மனிதன் உருவாக்கப்பட்டான்; மேலும் அந்தச் சாயலின் நிலையிலிருந்தும மனிதன் தன் சுயசித்தத்தினால் விழுந்துவிட்ட நிலையில் இருக்கிறான் என்பதே திருமறைக்கருத்து. மனிதன் கடவுளின் உதவிகொண்டுதான் மீண்டும் மீட்புப்பெற முடியும். சுய முயற்சியால் இறைவனுடன் நட்புறவு பெறமுடியாது. எனவேதான் கடவுள் மனிதனாக, இயேசுவின் மூலம் மீட்பராக வந்துதவுகிறார் என்பதே கிறிஸ்தவக் கருதது. இப்படி உண்மையிருகக சின்மயா இயக்கம் எடுத்துக்கூறும் மனிதனைப் பற்றிய தத்துவமே கிறிஸ்தவ சுவிசேஷத்தைத தட்டிக்கேட்கும் அடிப்படைச் சவால் ஆகும்.

2. மேலும், சின்மயா இயக்கத்தினரிடையே விளங்கும் "மிஷனரி" ஊக்கமும் கிறிஸ்தவ நெறியாளரைச் சிந்திக்கச் செய்யும் மற்றொரு சவாலாகும்.

## துணை நூற்கள்

ஸ்வாமி சின்மயானந்தர் எழுதிய ஆங்கில நூற்கள்:

1. Narada Bhakti Sutra.
2. Vishnu Sahasranama.
3. Geeta for Children.
4. Ramayana for Children.
5. Geeta Discourses.
6. Commentaries on all important Upanishads and on Bhaja Govindam, Atma Bodh, etc.

Available from,

*The Chinmaya Publication Trust,*
175, Rasappa Chetty street,
Madras-3.

8

# ஐயப்பர் வழிபாட்டு மறுமலர்ச்சி

கா. கு. டீல்

## அ. ஐயப்ப வழிபாட்டின் மறுமலர்ச்சி

சபரிமலை ஐயப்ப சுவாமியைத் தரிசித்து வரவேண்டும் என்கிறவரின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்துவருகிறது. கார்த்திகை மாதத்தின் முதல நாளில் பகவானுக்குப் பூசை செய்து முடித்து மாலை தரித்துக்கொண்டு சபரிமலை யாத்திரை செல்லத் தயாராகவேண்டும். கார்த்திகை 20ஆம் தேதிவரை மாலை போட்டுக்கொள்ளலாம். தை மாதம் 10ஆம் தேதிக்குள் யாத்திரை முடித்து மாலை கழற்றி விரத விமோசனம் செய்யலாம். கார்த்திகை மாதம் முதல் தேதியிலிருந்து தனியாட்களும், சிறு குழுவினரும் இவ்விரதத்தைப் பண்ணினவராகத் தெருக்களிலும் நெடுஞ்சாலைகளிலும் தோன்றுவார்கள். அவர் யார் என்று அறிவிக்கும அடையாளமானது—அவர்கள் கறுப்புத் துணியோ. சிறு கறுப்புத் துண்டோ தரித்திருத்தலே. கேரளததிலும, தமிழ் நாட்டிலும் இவ்வாறான பயணிகள் கொஞ்சம் பேரல்ல. எங்கும அகில பாரத ஐயப்ப சுவாமி சேவா சங்கம் ஏற்பட்டிருக்கிறது. 1971ஆம் ஆண்டில் உலக மக்களின் பொதுக்கூட்டத்தை வைக்கும்படி இவர்கள் ஒழுங்கு பண்ணுகிறார்களாம்.

இது புது இயக்கம் என்று சொல்லுகிறதற்குக் காரணம், கடைசி சில ஆண்டுகளாக இதின் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்ததே. அதிகமதிகமாய் மக்கள் சபரிமலை சுவாமியை தரிசிக்க வருவதற்குக் காரணம் இன்னதென்று ஆராய்ந்து அறிய விரும்புபவர் ஐயப்பனின் குணங்களையும் சிறப்பையும் கேட்டுப் பதிலைக் கண்டுபிடிக்கத் தயாராயிருத்தல் நியாயம். தென்னிந்தியாவில், இமய மலையிலுள்ள பயணத் தலங்களுக்கு ஒப்பான மலைத்தலம் இல்லாமலிராது. மனிதன் இறைவனண்டை வரவேண்டிய ஆசையே மேலான, மெய்யான காரணம் என்று சொல்லல் மிகையாகாது.

## ஆ. புராண பின்னணி

ஐயப்பன் யார் என்று அறிய 'பூதநாதோ—பாக்கியானம்' என்னும் வடமொழியில் இயற்றப்பட்ட புராணத்தைப் படிக்க வேண்டும். அதில் அவருடைய அவதார வரலாற்றை வாசிக்கலாம். அதிலுள்ள கதைகளை, மலையாள மொழியில் '(சிரீ) ஸ்ரீ பூதநாத சர்வத்துவம்' என்னும் நூலிலும், சுருக்கமாய்த் தமிழ்

மொழியில் இயற்றப்பட்ட 'ஸ்ரீ ஐயப்ப ஸ்தோத்திர மாலா' என்னும் நூலிலும் வாசிக்கலாம். எல்லாவற்றிற்கும் அடிப்படையான நூல் '(கந்த) புராணம்' என்று சொல்லக் காரணம் உண்டு. அப் புராணத்தில் ஐயப்பனல்ல, '(கந்த) கண்ட சாமியாகிய சுப்பிரமணியன்',—முருகன் முக்கியமானவர் என்று சொல்லப்பட்டிருக்கிறதிலிருந்து, ஐயப்பனுக்கும், முருகனுக்கும் ஒற்றுமை (இணை) இருந்திருக்கலாம் ("ஸ்கந்த சோதர" என்று சபரிகிரி சாஷ்டகம் கூறுகிறது) என்று தோன்றுகிறது.

மகிஷி என்ற அசுரப் பெண் தன் தவத்தினால் பிரம்மனிடம் வரங்களைப் பெற்று தேவர்களுக்குப் பலவிதமான இன்னல்களைச் செய்து வந்தாள். அவள் பெற்ற வரங்களில் ஒன்று சங்கர நாராயணனிடம் தான் பெற்ற புத்திரனால் தான் மரணமடைய வேண்டும்; அப் புத்திரன் பன்னிரண்டு ஆண்டுகளாக மனித குலத்தில் குழந்தையாக வசித்தபிறகு "பிரம்மச்சாரிய" பலத்தால்தான் தன்னை வதை செய்ய வேண்டும் என்பதாகும் இது. 'சேயோன்' என்ற குழந்தைக் கடவுளின் வரலாற்றுக்கு ஒப்பானது. தொல்காப்பியம், பொருளதிகாரம் 5இல் சேயோன் குறிஞ்சித் திணைக்கு ஆண்டவன் எனப்பட்டதும் இங்கே மனத்தில் வைக்கவேண்டியது. ஐயப்பன் எப்பொழுதும் வாலிபப் பருவத்தில் தோன்றுவான்.

சிவன் தன்னிடம் முறையிட்ட தேவர்க்கு இணங்கி ஹரிஹரன் (விஷ்ணு—சிவன்) என்பவருடைய மகனை சாஸ்தாவை ஒரு குழந்தையாகப் பெற்று பம்பா நதிக் கரையை அடையச் செய்தார். அங்கே அக் குழந்தையைப் பிஞ்சகன் என்ற பெயருள்ள பந்தள (மலையாள) தேசத்து அரசன் வேட்டைக்குப் போய்க் கண்டுபிடித்து தன்னுடைய மகனாக வளர்த்துவந்தான்.

பிறகு, தன் சொந்த மகனுக்குப் பதிலாக, மணிக்கண்டன் என்ற அவ் வாலிபனுக்கு, இராஜ்யத்தை ஒப்புக்கொடுக்க அம் மன்னன் விரும்ப, முதலமைச்சரும், ராணியும் சேர்ந்து குலத்தில் பிறந்த மகனுக்கே முடி சூட்டவேண்டும் என்று மணிக்கண்டனைக் கொல்ல முயன்றார்கள். அவர்கள் உபயோகித்த தந்திரங்கள் எல்லாம் வீணாய்ப்போனபின் ராணிக்குத் தலைவலி இருக்கிறதாகப் பொய் சொல்லி, அதற்குத் தகுந்த மருந்து புலிப்பால்தான் என்று மன்னனைத் துன்பப்படுத்தினார்கள். மணிக்கண்டன் காட்டுக்குப் போய் புலிப்பால் கொண்டு வருகிறேன் என்றான். அப்படியே அவன் காட்டுக்குப் போய் இந்திரன் பெண் புலியாகவும், மற்ற தேவர்கள் புலிக்கூட்டமாகவும் மாற, அவர்களைக் கூட்டிக்கொண்டுத் திரும்பி வந்தான். காட்டிலிருந்த சமயத்தில் மஹிஷியைக் கொன்றுபோட்டான். வேலைப் பிடித்து அந்த எருமை ரூபம் கொண்ட அசுரனைச் சுற்றி வீசிப்போட்ட இடத்தில் அசுரனின் உடல் வீங்கி, பெரிய மலையாய், சூரியனையும், சந்திரனையும், மறைக்கத்தக்கதாக

வளர்ந்துகொண்டே இருந்தது. அதன் வளர்ச்சியை நிறுத்தும் படி அதனைக் கல்லால் எறியவேண்டும் என்று கூறினான் மணிக்கண்டன். யாத்ரீகர்கள் இன்றும் செய்யவேண்டிய சடங்குகளில் ஒன்று ஒரு இடத்தில் கற்களைப் போடுவது ஆகும்.

## இ: சடங்குகளும் அவற்றில் மறைந்துகிடக்கும் சில சமய உண்மைகளும்

இந்தக் கதைகள் இராமாயணத்தில் வரும் நிகழ்ச்சிகளுக்கு ஒப்பானவை. இலக்கியத்தின் வரலாற்றை ஆராய்ந்து விசாரித்தல் தனிப் பணியாகும். பயணத்தின் வரலாற்றை எழுதியவர் நினைக்கிறபடி மணிக்கண்டன் புலிப்பாலைக் கொண்டுவந்து இறுதியாக சொன்ன வார்த்தைகள் பக்தர்களின் மனத்திலுள்ள எண்ணங்களை வெளிப்படுத்துகின்றன. இந்த உலகின் செல்வம் நீர்க்குமிழிக்கு நிகர் என்றும், ஓட்டைக் குடத்தில் ஒழுகும் நீர் போன்றது ஆயுள் என்றும் சொல்லி, பலவித உபாயங்களால் அடையத் தகுந்த பொருள் இறுதியில் இறைவனே என்னும் உண்மையை இது உணர்த்துகிறது. "எமக்கு அர்ப்பணமாக எக் காரியத்தையும் செய்" என்று ஐயப்பன் மன்னனை நோக்கிச் சொன்னதாகக் கூறப்படுகிறது. மேலும், 'நினக்குக் குழந்தையாகி நான் புலிப் பாலுக்காகத் தலையிலே தேங்காயும், அன்ன ஆகாரங்களும் சுமந்து சென்றதுபோல் எம்மைக் காணவரும் யாவரும் அவ்வாறே வரட்டும். எம்முடைய தரிசனத்திற்காக ஏங்கும் பக்தர்களுக்கு யானும், எனக்கு அவர்களும் வெகு நெருக்கமாகவே இருக்கிறோம். எனக்கு அர்ப்பணிக்க எடுத்துவரும் தேங்காயில் மேல் மட்டை ஓடுகளின் உள் கடினமான ஓட்டிற்குள்ளே எப்படி பளிங்கு போல் துல்லியமான பருப்பு உளதோ, அவ்வாறே சம்சார சிக்கலான மட்டையும், பாச பந்தமான நாரும், கடினமான மாயை ஓடும் முக்குணமான ரஜஸ், ஸ்தவ, தமஸ் ஆன மூன்று வழிகளிலே தாண்டி, பரமபதமான எம் திருவடி என உணர்த்தும் படியிலே யாம் உள்ளோம் என அறிவாய்".

"காம, க்ரோத லோப, மோக, மதமாத்ச்சரிய, டம்ப, ஈர்ஷ்ண, தர்ப்ப. அசூயை முதலியன கடந்து, அஷ்டாங்க யோகமும் கடந்த பதினெட்டுக்கும் மேல் உள்ளவன் யான் என்பதை அறிவாய். எவ்வாறு கற்பூரம் கரைந்து எஞ்சாத பூரணமாய் நிற்கிறதோ, அவ்வாறே யான் எஞ்சாத பூரணம்! இனி என்னைக் காண விழையும் பக்தர்களுக்காக யான் சபரி கிரியில் பம்பா நதி தீரத்திற்கு அருகில் வாசம் செய்யப் போகிறேன். யான் அவதரித்த தினமான மகா சங்கராந்தியிலே என்னைத் தரிசித்து பக்தர்கள் பேறுபெறுவர்."

பக்தர்கள் எதிர்பார்த்ததை இம் மொழிகளின் மூலமாய் ஒருவாறு அறிந்து யாத்ரீகர்கள் அதை அடையும்படி செய்ய

வேண்டியதைக் கவனிக்கலாம் ஹிந்து கோவில்களில் ஆகம விதிகளின்படி சாதாரணமாய் நடக்கும் முறைப்படியே ஐயப்ப வழிபாடு நடக்கிறது. ஐயப்பன் பூஜையில் என்ன சிறப்புள்ளது? என்பதற்கு பதில் காண்பது இலேசல்ல. புராண கதைகளில் அடங்கியுள்ள அவருடைய வீரச் செயல்கள் தற்கால ஜனங்களின் உள்ளத்தில் நம்பிக்கையையும். பக்தியையும் உண்டுபண்ணத்தக்கவை என்று நம்புவதற்கில்லை.

மேலும், ஐயப்பனுக்கும், தென்னிந்தியாவில் எங்கும் தொழுதுகொள்ளப்பட்டுவரும் ஐயனாருக்கும், எவ்விதமான தொடர்பு உண்டு என்பதற்குப் பதில் தேட வேண்டும். சில முக்கிய ஸ்தலங்கள்தான் ஐயப்பனுக்கு உரியவை என்று அங்கிகரிக்கப்பட்டன.

முதலாவது, யாத்திரை செய்ய ஆயத்தமாக அனுசரிக்க வேண்டிய சடங்குகளையும், சாதனங்களையும் கவனிப்போம். ஸ்ரீ ஐயப்ப ஸ்தோத்திர மாலா கூறுகிறது பின்வருமாறு.

பிரதி தினம் காலையிலும், மாலையிலும் கோமயத்தைச் சிரஸில் வைத்து, ஸமஸ்தாபராத சரணம் சொல்லி, ஸ்நானம் செய்து, மடி உடுத்தி, பகவானை வழிபாடு செய்து, பானக நிவேதனம் செய்யவேண்டும் எந்நேரமும் பகவானைக் குறித்துத் தியானம் செய்யவேண்டும். க்ஷவரம் செய்துகொள்ளக் கூடாது. கடுமையான பிரம்மச்சர்ய விரதம் அனுஷ்டிக்கவேண்டும். மிதமான, சாத்வீகமான ஆகாரம் உண்ணவேண்டும். கூடியவரை வெளியிடங்களில் சாப்பிடக்கூடாது. ஆண்களை "ஐயப்பன்" என்றும், பெண்களை "மாளிகபுரம்" என்றும் அழைக்க வேண்டும். எப்பொழுதும் உண்மை பேசவேண்டும். பிறர் மனம் நோகாமல் நடக்கவேண்டும். முக்கியமாக பஹிஷ்டா ஸ்திரீகளைப் பார்க்கக் கூடாது. பார்க்க நேரிட்டால் கட்டாயமாக கோமயம் வைத்து ஸமஸ்தாபராதம் சொல்லி ஸ்நானம் செய்தபிறகு ஆகாரம் உட்கொள்ள வேண்டும். மேற்கூறிய விவரத்தை ஒவ்வொரு ஐயப்பனும் மாலையணிந்த தினத்திலிருந்து (கார்த்திகை மாதம் 12) மாலை கழற்றும் தினம் வரை (தை மாதம் சுமார் 10ஆம தேதிக்குள்) அனுஷ்டிக்கவேண்டியது.

சபரிமலை யாத்திரை செய்யும் ஐயப்பன்மார்கள் இருமுடிக் கட்டு தாங்கிச் செல்லவேண்டியது முன் கட்டில் பகவானுக்கு அபிஷேகத்துக்கு வேண்டிய சாமான்களும், பின் கட்டில் ஐயப்பன்மார்களுக்கு வேண்டிய ஆகார சாதனங்களும் வைக்கவேண்டும். கட்டுக் கட்டும்போது குருதக்ஷிணை கொடுக்க வேண்டும். எப்பொழுதும் பகவானின் திருநாமமாகிய சரணம் சொல்லிக் கொண்டு வனம் கடத்தல் மிகவும் அவசியம். இருமுடிக் கட்டை பகவானைக் கருதி எக் காரணத்தை முன்னிட்டும்

தரையில் வைக்கக்கூடாது. கம்பளியை விரித்து அதன்மேல் வைக்கவேண்டும். காலையிலும், மாலையிலும் இருமுடிக்கட்டுக்குப் பூஜை, நிவேதனம் செய்து சரணம் சொல்லவேண்டும்.

யாத்திரை துவக்கி சபரிமலையை அணுகும்போது வெவ்வேறான கோவில்களுள்ள இடங்களைத் தாண்டியே ஐயப்பனின் ஸ்தலத்தை அடையவேண்டும். அவைகளில் முக்கியமானவை பின்வருவன.

**காளைக்கட்டி:** இது ஒரு தாவளம். இவ்விடத்தில் நந்திதேவன் முக்கிய தெய்வமாய் விளங்குகிறார். மஹிஷிமர்தன காலத்தில் ஆனந்தத் தாண்டவமாடி நின்ற ஸ்ரீ பூத நாதனைத் தரிசிக்க நந்திகேஸ்வரர் அங்கு நின்றதாகக் கூறப்படுகிறது. இவ்விடத்தில் வந்தனை வழிபாடு செய்யவேண்டும்.

**அழுதா நதி:** இது ஒரு முக்கிய தாவளம். இவ்விடத்தில் ஸ்நானம் செய்து கல் எடுக்கவேண்டும். குரு தக்ஷிணை கொடுக்க வேண்டும். கல்லிடும் குன்றில் அந்தக் கல்லை இட்டு வந்தனை செய்யவேண்டும்.

**பம்பா நதி:** கரிமலை இறக்கமே பம்பா நதிக் கரையாகும். அங்கே ஸ்நானம், பித்ரு தர்ப்பணம், சக்தி, தானம், குரு தக்ஷிணை முதலியவை செய்யவேண்டும். மூன்று இரவு இந்நதிக்கரையில் தங்கும் ஐயப்பன்மார்களுக்குச் சகல ஸித்திகளும் கிடைக்குமாம்.

பிறகு நீலிமலை ஏறி, தர்மமேடு கடந்து சபரி பீடம் அடைய வேண்டும். இவ்விடத்தில் சபரி துர்க்கை என்ற தேவியின் சாந்நித்யம் உண்டு. இவ்விடத்தில் தேங்காய் உடைத்து, வந்தனை செய்து, சரங்குத்தி ஆலமரத்தை அடைய வேண்டும். இவ்விடத்திற்கு அஸ்திரபைரவன் தேவதையாய் விளங்குகிறான். இவ்விடத்தில் வேட்டையாடி கையில் கொண்டு வந்த சரம், கதை முதலியவைகளைப் போட்டு வணங்கி சபரிமலையை அடையவேண்டும்.

**பதினெட்டுத் திருப்படிகளை** வந்தனை செய்யவேண்டும். பதினெட்டாம் திருப்படியின் வலது புறத்தில் கருப்ப ஸ்வாமியும், இடது புறத்தில் கடுத்த ஸ்வாமியும் இருக்கின்றனர். கன்னி மூலையில் கணபதியும், வாயு கோணத்தில் மாளிகை புரத்தம்மனும், வடபாகத்தில் வாவர ஸ்வாமி பீடமும் பரிவாரங்களாக ஸ்ரீ தர்மசாஸ்தாவின் மூலஸ்தானத்தில் அமைந்திருக்கின்றனர். குரு காணிக்கைக் கொடுத்து, முன்முடி அவிழ்த்து, பகவானுக்கு அபிஷேகம் நடத்தவேண்டும். சந்நிதானத்தில் ஆழிப்ரதக்ஷிணம், அங்கப்ரதக்ஷிணம் செய்வது விசேஷம். மாளிகைபுரத்தம்

மன் கோவில் கதவுகள் எப்போதும் திறப்பது கிடையாது. மஞ்சமாதா கோவிலுக்குப் போகும் வழியில் நாகராஜாவின் பீடமும், பக்கத்தில் நாகயக்ஷி என்னும் தேவதையும் உண்டு. இங்கு வந்தனை வழிபாடு செய்து சர்ப்பப் பாட்டும் நடத்த வேண்டியது. சிறிது கிழக்கில் உரக்குழி தீர்த்தமென்ற கும்ப ஸ்தல தீர்த்தம் இருக்கிறது. பகவானைப் பூஜிப்பதற்கு தேவர்கள் உபயோகிக்கும் தீர்த்தமென்று இதைக் கூறுவதால் இது ஒரு சிறந்த தீர்த்தமாகும். இங்கு ஸ்நானம், பித்ரு தர்ப்பணம் முதலியவை செய்வது விசேஷம்.

கடைசியாக குருதக்ஷிணை கொடுத்துப் பிரசாதம் தாங்கி, தேங்காய் அடித்து, படி இறங்கி, பகவத் பக்தியுடன் திரும்பி யாத்திரை செய்து பதினெட்டாம் படிக்குக் காய் கொடுத்து, வீட்டை அடைந்து, குருதக்ஷிணை கொடுத்து, பகவத் பூஜை முடித்து, ஓர் நல்ல முகூர்த்தத்தில் விரத விமோசனம் செய்ய வேண்டும்.''

ஐயப்பனுக்கும் பரிவார தெய்வங்களுக்கும் துதி பாட்டுகளும், பிரார்த்தனைகளும், பல அச்சிடப்பட்டுள்ளன. அதுவுமன்றி சதநாமாவளியும், சகஸ்ரநாமாவளியும் உண்டு. கர்மா சாஸ்தாவின் பூஜாகல்பம் மலையாள பாஷையில் வெளியிடப்பட்டது. அதின்படி பூஜை நடக்கும் மற்ற ஸ்தலங்களும் உண்டு. திருஷ்டாந்தமாக ஆரியங்காவு, அச்சங்கோவில், எரிமேலி முதலியன.

தற்காலத்தில் ஐயப்பனை வழிபடுவதில் இலட்சக்கணக்கான ஜனங்கள் பிரியங்கொள்வதற்குக் காரணம் இன்னதென்று அறிய விரும்புவோர் கவனிக்க வேண்டிய சில காரியங்களாவன: யாத்திரிகர் ஒருவர் தன் மனத்தைக் கவர்ந்துகொண்ட இரண்டு விவரங்களைக் கூறினர். சபரிமலைக்குச் செய்யப்படும் யாத்திரை வெகு சங்கடம் நிறைந்தது என்பது ஒன்று. அதைப்பற்றி இவ்வாறு கூறப்படுகிறது: ''சபரிமலை ஒரு பெரிய காடு. பகவானைத் தரிசிக்க வருபவர்கள் உத்தேசமாக பத்து நாட்கள் துஷ்ட மிருகங்கள், விஷ ஜந்துக்கள், துர் தேவதைகள் ஆகியவை சஞ்சரிக்கும் இடத்தில் வசிக்கவேண்டும். ஆகையால் சரியான முறையில் விரதம் பூண்டு பகவத் பக்தி குறையாமல் நடக்கவேண்டியது அவசியமாகும். அவைகளே அவர்களுக்கு ரக்ஷா கவசமாய் விளங்குகின்றன.'' இரண்டாவது கவனிக்கத்தக்கது யாத்திரிகருக்குள் இருந்த ஒற்றுமை. பயணஞ் செய்வோரும் செய்யாதவரும் ஐயப்பவழி பாட்டில் ஒருமைப்படுகின்றனர். இதை ஒரு ஆசிரியர் பின்வருமாறு விளக்குகின்றார்: 'இன்றைய நமது பழம்பெரும் பாரத சமுதாயம் ஜாதி, மத, இன, வகுப்பு வேற்றுமைகளில் உழன்றுகொண்டிருந்த

போதிலும், புனித மகா சங்கராந்தி நாளன்று, சபரிமலை ஸ்ரீ ஐயப்பனைத் தரிசிக்கச் செல்லும் யாத்திரிகர்கள், போகும் வழியெல்லாம் பக்தி மணம் கமழ சாமி சரணம்', 'ஐயப்ப சரணம்' என்று விளிக்கும் தெய்வீக ஒலியால் நம் உள்ளத்தையும், உடலையும் ஐயன்பால் இருத்தி நாம் தன்வயம் இழந்து விடுகிறோம்! காந்தமலை ஜோதியாம் கண்கண்ட தெய்வம் சபரிகிரி வாசனைத் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெறாதவர்களாகிய நாம் அத்தகைய பாக்கியசாலிகளுக்கு அன்பு, மரியாதை, பரிவுகாட்டி சர்வ பூத தயாபரனாகவும், சர்வலோக ரட்சகனாகவும் திகழும் ஸ்ரீ ஐயப்பனுடைய அடியாருக்கு அடியாராக விளங்குவதன் மூலம் நமது கடமையை நிறைவேற்ற முயலுகிறோம்."

ஐயப்ப வழிபாடு இவ்வளவு சிறப்பு பெறக் காரணமென்ன? ஹிந்து மதம் பக்தி நிறைந்ததானாலும் தேவர் செய்கைகளின் வரலாற்றைக் கொண்டு அதை வளர்த்து பலப்படுத்த இயலாது. ஐயப்பனோடு தொழப்பட்டுவரும் பரிவார தெய்வங்கள் அவனைத் தனிச்சிறப்புள்ளவனாக்குகிறதில்லை. மேலும், ஐயப்பனும், ஐயனாரும் ஒன்றாயிருக்கிறார்களோ? ஒருவர்தான் என்று சொல்பவரும் உண்டு. அப்படிச் சொல்ல பல காரணங்கள் காணப்படுகின்றன. ஐயனாரோடு எப்பொழுதும் நெருங்கக் கூடியவன் கருப்பன். கருப்பன் வழிபாட்டைத் தென்னிந்தியாவில் ஒவ்வொரு ஊரிலும் காணலாம். ஐயப்பன் தாமே காவல்காரனாகத் தோன்றும் இடங்களும் உண்டு. திருஷ்டாந்தமாக உசிலம்பட்டி தேனி போகிற நெடுஞ்சாலை மலை அடிவாரத்திற்கு வருகிற இடத்தில் ஐயப்பனுக்கு ஒரு சிறிய கோவில் இருக்கிறது. இங்குப் பிரயாணிகள் உண்டியல் பெட்டியில் காசு கொடுத்துத்தான் தொடர்ந்து போவார்கள்.

திருச்சிராப்பள்ளிக்கு 93 கிலோ மீட்டர் வடக்கே இருக்கிற வைப்பூர் அருகே ஐயப்பனுக்கு ஒரு கோவில் இருக்கிறது. அதில் பல கருப்பன் தேவர் நிற்கிறார்கள். அங்கே ஐயப்பனுக்கு மஞ்சப்பன் என்றும் பெயர் வழங்கப்படுகிறது. மஞ்சா அம்மன் சபரிமலைக்கடுத்த கதைகளில் சொல்லப்பட்ட ஒன்று.

இன்னொரு குறிப்பையும் கவனிப்பது அவசியம். ஐயப்பன் குழந்தை தேவன். தமிழ் இலக்கியங்களில் வரும் 'சேயோன்' என்கிற வார்த்தை அதோடொக்கும். அக் குணமுள்ளவனாய் ஐயப்பன் குமார தெய்வமாகிய சுப்பிரமணியனோடு ஒத்தவனாய் இருக்கிறான் என்பதல்லாமல், இவன் இளைய பருவமுள்ள சில மனக்கவர்ச்சிகள் உள்ளவனுமாவான். இதனால் இதில் காணப்படும் இளமைக்குரிய மனக்கிளர்ச்சிகளும் இவ்வழிபாடு மறுமலர்ச்சியடையக் காரணமாயிருக்கலாம்.

இவ்வாறு ஐயப்ப இயக்கம் இன்று இந்தியாவில் பல பாகங்களிலும் பரவி வருகிறது. விஞ்ஞான அறிவு வளர்ந்து

வரும் இக் காலத்தில் பழமையில் ஊறிப்போன இத்தகைய ஒரு இயக்கத்தில் மக்களின் மனம் ஈடுபடுகிறதென்றால் அதற்குக் காரணமென்ன என்பதை நாம் ஆராய்வது அவசியம்.

## துணை நூற்கள்


1. Swami Vimochananda, *Thoughts and Reflections,* Bombay, 1954.
2. சபரிமலை ஸ்ரீ ஐயப்ப ஸ்வாமி, ஸ்தோத்திரமாலா 1963.
3. ஐயப்பனோடு ஐம்பது நாள், *சாஸ்தா பதிப்பகம், 1966.*
4. ஸ்ரீனிவாச ஐயர் G.S. (Ed), ஸ்ரீதர்ம சாஸ்த்ர பூஜாகல்பம் (மலையாளம்), சென்னை, 1966.
5. ஸ்ரீ ஐயப்பா ஸ்தோத்ர மாலா புதுக்கோட்டை, *1968.*
6. *வித்வான் சாறுமன்னூர் நாராயணன் பிள்ளை, ஸ்ரீ பூதநாத சர்வஸ்வம் (கிரந்த கர்த்தா), (மலையாளம்), கொல்லம், 1968.*
7. Swami Vimochananda, *To the Eternal,* Bombay, (year unknown).

மூன்றும் பாகம்

# இஸ்லாமிய இயக்கங்கள்

1. இக்பால் இயக்கம்
2. அகம்மதியா இயக்கம்
3. ஜமாத்-இ-இஸ்லாமி ஹிந்த்

1

# இக்பால் இயக்கம்

## ஞான இருபின்சன்

முகம்மது இக்பால் 1876-இல் பஞ்சாபில் பிறந்தார். சிறந்த தத்துவ ஞானியாகவும், கவிஞராகவும் திகழ்ந்தார். இவர் இஸ்லாமின் சூஃபி (Sufi) என்னும் இறை நிலை இணைவுக்கொள்கையைச் சார்ந்தவர். இக் கொள்கையில் காணப்பட்ட துறவு அம்சத்தை இவர் ஆட்சேபித்தாலும், தம் போதனையின் பல கருத்துக்களை இதிலிருந்தே எடுத்துக்கொண்டார். சூஃபி இறையியற் கருத்துக்களை நீச்சே (Neitzsche) என்பாரின் 'சிறப்பு மனிதன்' (Superman) என்னும் கருத்துடனும், பெர்க்சன் (Bergson) என்பாரது "ஆக்க பரிணமம்" (Creative Evolution) என்னும் கருத்துடனும், பெர்னாட்ஷாவின் சிந்தனைகளுடனும் இணைத்துத் தம் தத்துவத்தை அமைத்தார். இந்தப் பின்னணியில் இஸ்லாமின் போதனைகளைத் தற்காலச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப விளக்கமுற்பட்டார். ஆரம்பத்தில் பாரசீக, உருது கவிதைகளின் மூலம் தம்முடைய எண்ணங்களைப் பொதுமக்களுக்கு அறிவித்தார். "நான் என்னும் சுயத்தின் இரகசியம்" (Asrar-i-Khudi — Secrets of the Self) என்னும் ஒரு நூலை வெளியிட்டார். 1928-29-இல் இந்தியாவின் பல பாகங்களிலும், ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகங்களிலும் பல சொற்பொழிவுகள் ஆற்றினர். ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் 'இஸ்லாமின் சமயச் சிந்தனையைத் திருத்தியமைத்தல்" (Reconstruction of Religious Thought in Islam) என்ற தலையங்கத்தில் ஆறு சொற்பொழிவுகள் ஆற்றினர். பின்னல் இது ஒரு நூலாகவே வெளியிடப்பட்டது. இந்திய இளைஞர்கள் இவரது போதனையால் பெரிதும் கவரப்பட்டனர். முஸ்லீம்கள் இவரை சர். சயித் அஹமத்கான் வழிவந்த ஒரு மாபெரும் தலைவராகக் கொண்டனர்.

பாகிஸ்தான் ஒரு தனி நாடாகப் பிரிவதற்கு விதை தூவியவர் இவரே எனலாம். முஸ்லீம்களுக்கு ஒரு தனிநாடு என்ற கருத்தை முதன் முதலில் வெளியிட்டவர் இவர்தான். 1930-இல் அலகாபாத்தில் அனைத்திந்திய முஸ்லீம் லீக் மாநாட்டில் பேசும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்: "பஞ்சாப், வடமேற்கு எல்லைப் பிராந்தியம், சிந்து, பெலுசிஸ்தான் ஆகிய இடங்கள் ஒரு நாடாக அமைவதைக் காண நான் விழைகிறேன். முஸ்லீம்கள் ஆங்கிலேய அரசின் கீழோ அல்லது சுயமாகவோ, ஆட்சியை அடைவதே இறுதி விளைவாக, (வடமேற்கு இந்தியாவில் வாழும் முஸ்லீம்களுக்காவது) இருக்குமென்று நான் நம்புகிறேன்".[1] இந்த விதையே பின்னல் செடியாக, மரமாக

வளர்ந்து பாகிஸ்தானின் அமைப்பில் முடிந்தது. இக்பாலின் பெயர் பாகிஸ்தானில் என்றும் நினைவுகூரப்படும். அங்கு இன்று "இக்பால் தினம்" தேசிய விழா நாளாகக் கொண்டாடப் படுகிறது.

இக்பால் கடவுளைப் பற்றி வைதீக இஸ்லாமிலிருந்தும் வேறுபட்டக் கருத்துக்களைப் போதித்தார். கடவுள் கடந்து நிற்பவரல்ல (not transcendent); மனிதர் வாழ்க்கையில் உறைந்து (but immanent) நிற்பவர் என்றார். கடவுள் எல்லாரிலும் பெரிய வர் என்றால், அவர் எல்லாவற்றையும் தன்னுள் கொண்ட சுயம் என்பது பொருள். "நான் இல்லாமல் நீர் எவ்வளவு அழகா யிருக்கிறீர், என் முழுமையே!" என்று கடவுளைப் பார்த்துக் குறிப்பிட்டார் இக்பால். இஸ்லாம் கூறி அறிவித்த கடவுள் "இன்னும் இல்லாத"வருங் கூட. அவருடைய எண்ணற்ற மகத் துவங்கள் இன்னும் வெளிப்படுத்தப்பட்டு உணரப்படவேண்டும்.

படைப்பு என்பது உலகைக் கடவுளிலிருந்து "வேறு" ஒன்றாக ஆக்கின ஒரு செயலல்ல. உன்னதமாக "இருக்கிற சுயம்" (I am) தன்னை வெளிப்படுத்துவதே உலகாயிருந்தது, உலகா யிருந்தும் வருகிறது. தெய்வீக ஒருமைப்பாட்டைக் குறித்த இஸ்லாமிய கோட்பாடு கடவுளுக்கு வெளியில் மெய்ப்பொருள் எதுவும் இல்லையென்று கொண்டது.

"நான் என்னும் சுயத்தின் இரகசியம்" என்னும் நூலில் இக்பால் மனிதனைப் பற்றிய தம் கருத்தை வெளியிட்டார். ஒருவனின் சுயம் எப்படி வளருகிறது என்று இதில் விளக்கினார். குர்ஆனைப் படித்து அதன்படி நடந்தால் மனிதனின் சுயம் வளரு மென்றார். மனிதன் தன்னில்தானே ஆற்றல் உடையவன், பூரண மனிதன் (சிறப்பு மனிதன்) உலகை மேற்கொண்டு கடவுளின் குணங்களை உடையவனாய் மனுக்குலத்தில் மீட்பையடைவான். முகம்மது நபி இப்படிப்பட்டச் சிறப்பு மனிதனே. இவர் எப் பொழுதும் மக்களைச் செயல்படத் தூண்டிக் கொண்டிருந்தார். முஸ்லீம் ஒருவன் இஸ்லாமின் பெயரால் நற்கிரியைகள் நடப் பிக்கவேண்டும்; இதுவே இவர் போதனையின் சாரம். நற்கிரியை கள் செய்யும் முஸ்லீம் அல்லாதவன் (Kafir = அவிசுவாசி), தூங்கும் முஸ்லீமைவிடச் சிறந்தவன் என்றார்.

இவர் கொள்கையின்படி, மனிதனின் வாழ்க்கையின் இலக்கு "அடங்கியிருத்தலல்ல" (not submission) "மேம்பட்டு நிற்றல்" (but supremacy) ஆகும். அவன் வாழ்க்கையின் நிறைவு கட வுளின் பிரதிநிதியாக (vicegerent) உலகில் செயலாற்றிக் கொண் டிருப்பதில் காணப்படுகிறது. இங்கு இக்பாலின் போதனை மனிதனைக் குறித்தத் திருமறைப் போதனையை அடுத்துவரு வதைக் காண்க (ஆதி. 1: 27-30; சங். 8: 5-8).

---

1 Murray T. Titus, *Islam in India and Pakistan*, p. 219

இஸ்லாமியரிடையில் காணப்பட்ட பிரிவினைகளையும் கட்சிப் பாகுபாடுகளையும் இக்பால் வன்மையாகக் கண்டித்தார். இதைக் குறித்து இவ்வாறு கூறுகிறார்: "இந் நாட்டில் இஸ்லாம் ஒருமைப்பாடுடனா இருக்கிறது? சமயப் பணிகளில் ஈடுபடுவோர் பற்பல கட்சிகளையும், கூட்டுறவுகளையும் அமைத்துக்கொள்கின்றனர். ஒருவருக்கொருவர் எப்போதும்சண்டையிட்டுக்கொள்கின்றனர். இந்துக்களிடைக் காணப்படுவதைப் போன்ற ஜாதிகளும், ஜாதிகளுக்குள் ஜாதிகளும் காணப்படுகின்றன. இவ்விஷயத்தில் நாம் இந்துக்களையும் மிஞ்சிவிட்டோம். நாம் இருவகை ஜாதி பேத அமைப்புக்குள் அகப்பட்டுத் தவிக்கிறோம். ஒன்று சமய அடிப்படையிலுள்ள ஜாதிபேதம்; இவை கட்சிகளாக வெளிப்படுகின்றன. மற்றொன்று சமூக அடிப்படையில் ஜாதி வேறுபாடு; இதை ஒன்றில் நாம் இந்துக்களைப் பார்த்துக் கற்றிருக்கவேண்டும்; அல்லது இந்துக்களிடமிருந்து இதனைக் கடன்வாங்கியிருக்கவேண்டும்.... இஸ்லாம் ஒன்றே, பிரிக்க இயலாதது. அதனுள் பிரிவினை இல்லை. வாஹாபி, ஷியா, மிர்சாயி, அல்லது சுன்னி என்ற கட்சிகள் இஸ்லாமில் இல்லை".[1] இங்கு இக்பால் இந்து சமயத்தின் வர்ணாசிர தருமத்தையும் மறைமுகமாகத் தாக்குகிறார் எனலாம்.

இஸ்லாமிய பெண்களின் உரிமைக்காகவும் இக்பால் பாடுபட்டார். பலதார மணத்தை வன்மையாகக் கண்டித்தார். கற்புநெறித் தவறினாலன்றித் ஒருவன் தன் மனைவியை விவாகரத்துச் செய்யக்கூடாதென்றும் கூறினார்.

இக்பால் 1938இல் மரணமடைந்தார். இவர் இஸ்லாமில் செய்துள்ள சீர்திருத்த அம்சங்கள் பாராட்டற்குரியன. பாகிஸ்தனின் பிரிவுக்கு இவர் ஆற்றிய தொண்டைக் குறித்து இஸ்லாமியர் மகிழ்வர். மற்று, இஸ்லாமிய நம்பிக்கையை நடைமுறை வாழ்க்கையுடன் தொடர்புபடுத்துவதற்காகக் கடவுளையும் மனிதனையும் குறித்து இவர் தந்த போதனைகள் குர்ஆனிலிருந்து எடுக்கப்பட்டவை என்பதைவிட கிறிஸ்தவத் திருமறையிலிருந்து வந்தவை எனத்தகும். பிற சமயங்களிலும் ஆவியானவர் செயலாற்றுகிறார் என்பதற்கு இக்பால் இயக்கம் ஒரு எடுத்துக்காட்டாகும்.

---

1 Quoted by Murray T. Titus in *Islam in India and Pakistan*, pp. 178, 179.

## துணை நூற்கள்

1. Mohammed Iqbal. *Lectures on the Reconstruction of Religious Thought in Islam,* Lahore, 1934.

2. *Aspects of Iqbal,* (By various aouthors), Lahore, 1938

3. *Iqbal as a Thinker,* (By various authors), Lahore. 1945.

4. Singh Iqbal, *The Ardent Pilgrim: An Introduction to the Life and Work of Mohammed Iqbal,* London, 1951.

5. Titus, Murray, T., *Islam in India and Pakistan,* C.L.S., Madras, 1959.

6. Jones, L. Bevan, *The People of the Mosque,* Baptist Mission Press, Calcutta, 1959.

7. Cragg, Kenneth, *The Call of the Minaret,* Oxford University Press, New York, 1964.

# 2

# அகர்மதியா இயக்கம்

## சா. புஷ்பராஜ்

### அ. முன்னுரை

இஸ்லாம் சமயத்திற்குள் தோன்றியுள்ள ஒரு புரட்சிகர மான இயக்கமே அகம்மதியா இயக்கம். இஸ்லாம் சமயத்திலே தற்போது வளர்ந்துவரும் அறிவுத்திறநோக்கு ஒரு பக்கம், பிரிவு மனப்பான்மை மற்றொரு பக்கம்—இவற்றிற்கிடையே ஒரு புதிய, தனி இயக்கமாகத் தோன்றி, தொண்ணூறு ஆண்டுகளே ஆயினும் இஸ்லாம் சமயத்தை பரப்பும் மிஷனெரி பணியிலே இவ்வியக்கம் முன்னணியில் நிற்கிறது எனலாம்.

"அகம்மதியா இயக்கம் என்பது ஒரு புது, தனி சமயமல்ல; இது இஸ்லாம் சமயத்தின் மறு பெயரே" என்று அகம்மதியா இயக்கத்தினர் தங்கள் இயக்கத்திற்கு விளக்கம் கூறுவர். இவ் விளக்கத்திற்கு ஆதாரமாக விளங்குவது, அன்னார் இஸ்லாம் சமயத்தின் ஒரே இறைக் கொள்கையை (Monotheism) ஏற்றிருப்பதும், முகம்மது நபியை மெய்யான கடவுளின் தீர்க்கராக மதிப்பதும், குர்ஆனைக் கடவுளால் அருளப்பட்ட புனிதப் புத்தகமாகக் கொண்டாடிவருவதுமே. "அல்லாவையன்றி வேறு இறைவனில்லை. முகம்மது நபியே மெய்யான கடவுளின் தீர்க்கர்" என்ற இஸ்லாம் சமயத்தின் விசுவாச அறிக்கையே *(Kalima)* தங்கள் விசுவாச அறிக்கையெனவும் வலியுறுத்துகின்றனர்.

இஸ்லாம் சமயத்தைப் புனிதப்படுத்துவதும், அப்படிப் புனிதப்படுத்தப்பட்ட இஸ்லாம் சமயத்தை உலகத்திற்குள் எடுத்துச் செல்வதுமே தங்கள் நோக்கமென இவ்வியக்கத்தினர் கூறிக்கொள்கின்றனர். "உலகக் காரியங்கள் எல்லாவற்றிற்கும் மேலாக என் சமயத்தையே உயர்த்துவேன். உலகத்திற்கும் மேலானது என் விசுவாசமே" என்பது இவர்களின் இலக்குரையாகக் (slogon) காணப்படுகின்றது இவ்வியக்கம் அரசியல் நோக்கங்களைத் தன்னுள்ளே கொண்டதல்ல அரசியல் பலத்தைச் சார்ந்தும் இவ்வியக்கம் இயங்க முற்படுவதில்லை எனலாம்.

உலகமெங்கிலுமுள்ள இஸ்லாமியரை ஒன்றாகக் கூட்டிச் சேர்ப்பதும் தங்கள் குறிக்கோள்களில் ஒன்றென அன்னார் கூறிக்கொள்கின்றனர். இஸ்லாமியரின் சமய வாழ்வையும், விசுவாசத்தையும் சீர்ப்படுத்துவதும், அவர்களை ஒன்றாச் சேர்த்து இஸ்லாமிய சமயத்தின் விரோதிகளுக்கு எதிராக ஒரு ஐக்

கிய ஆவிக்குரிய முன்னணிப் படை திரட்டுவதும், அவ்வாறு இணைக்கப்பட்ட இஸ்லாமியருக்கென ஒரு புதுத் திட்டம் வகுத்துத் தருவதும் தங்களது பணியெனக் கருதுகின்றனர். எகிப்துக்கென்று ஒரு திட்டமும், ஈரானுக்கென்று ஒரு திட்டமும், ஆப்கானிஸ்தானத்திற்கென்று ஒரு திட்டமுமென ஒவ்வொரு இஸ்லாமிய நாடும் தமக்கென்று தனிப்பட்டச் சமயத் திட்டங்களைக் கொண்டுநடத்துவதால், முழுமைக் காணப்படவேண்டிய இஸ்லாம் சமயத்தில் நிரந்தரமான பெரும் பிளவு ஒன்று காணப்படுகின்றது. இப் பிளவை நீக்கி ஒரு முழுமையான இஸ்லாம் சமயத்தை உருவாக்கவே இவ் வியக்கம் தோன்றியது என்றும் கூறுகின்றனர்.

இஸ்லாம் சமயத்தைக் கூட்டி இணைப்பது மட்டுமல்ல, இறைவனை நம்புகிற அனைவருமே ஐக்கியப்பட்டு ஒன்றுக இணைய வேண்டுமெனக் குர்ஆனின் ஆதாரத்தோடு கூறி எல்லாச் சமயத்தினரையும் இஸ்லாம் சமயத்தில் வந்து இணையுமாறும் அன்னுர் அறைகூவவிடுகின்றனர்.

சமயப் பிரச்சாரம் செய்வதிலே சிறந்து விளங்கும் இவ் வியக்கத்தார் குறிப்பிடத்தக்க விதத்திலே கிறிஸ்தவச் சமயத்தைக் குற்றப்படுத்திக் காட்டுவதின் மூலம் இஸ்லாம் சமயத்தை உயர்த்திக் காட்ட முயலுகின்றனர் (Glorification of Islam at the cost of Christianity). சமயத்தைப் பரப்புவதில் கிறிஸ்தவ சமயத்திற்கு நேர் எதிரான போட்டி இயக்கமாக இவர்கள் விளங்கிவருகின்றனர்.

## ஆ. இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

இவ்வியக்கத்தை தோற்றுவித்தவர் அசரத் மிர்சா குலாம் அகம்மது என்பவர் ஆவர். இவர் பஞ்சாப் மாகாணத்திலே குர்தாஸ்பூர் ஜில்லாவிலே, குவாதியான் என்ற கிராமத்திலே 1839ஆம் ஆண்டு ஜூன் மாதம், பதினெட்டாம் தேதி பிறந்தார், இவர் சிறு வயதிலிருந்தே பல விநோதமான காட்சிகளையும், கனவுகளையும் கண்டு, அவற்றிற்குத் தாமாகவே பல விளக்கங்களைக் கொடுத்துவந்தார். பாரசீகம், அரேபியா, உருது ஆகிய மொழிகளில் சிறந்த எழுத்தாளராகத் தேர்ச்சிப் பெற்றுவந்தார். அரசாங்கத்தில் பணி புரியவும், வியாபாரத்தில் ஈடுபடவும் வாய்ப்பு கிட்டியபோதிலும், அவற்றை உதறித்தள்ளிவிட்டு, சமய ஆராய்ச்சியில் முற்றிலுமாக ஆழ்ந்துவிட்டார். குர்ஆனைப் படித்து ஆராய்ச்சி செய்வதிலேயே தனது முழு நேரத்தையும் செலவிடலானுர்.

1880இல் இவர் அகம்மதியாவின் அறுதிச் சான்று (Barahin-in-Ahmadiyya) என்னும் நூலின் இரு பகுதிகளை எழுதி வெளியிட்டார். இந்த நூலிலேதான் அகம்மதியா இயக்கம் தோன்று

வதற்கான வித்து காணப்பட்டது. இதே தருணத்தில் தான் ஒரு விசேடப் பணிக்கென்று தெய்வீக அழைப்புப் பெற்றவன் என்ற முடிவுக்கும் வந்தார். இந்த எண்ணம் வளர்ந்து 1889-ஆம் ஆண்டு மார்ச் மாதம் நான்காம் தேதியன்று, தான் ஒரு தெய்வீக வெளிப்படுத்தலைப் பெற்றதாகவும், அதன்படி தனக்கென்று சீடர்களைப் பெற்று, அந்தச் சீடர்களிடமிருந்து குருவுக்குரிய மதிப்பைத் தான் ஏற்றுக்கொள்ள கடவுளிடமிருந்து அதிகாரம் பெற்றதாகவும் வெளிப்படையாக அறிவித்தார். இந்த நாளே அகம்மதியா இயக்கத்தின் பிறந்த நாள் என்று கூறலாம்.

அவ்வாறே தன் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய சில சீடர்களைச் சம்பாதித்துக்கொண்டார். அன்றிலிருந்து தனது புதிய கொள்கைகளை எழுதி வெளியிட ஆரம்பித்தார். **தெய்வீக அறிவின் மூலங்கள்** என்ற கட்டுரையில் குர்ஆனைப் பற்றிய புதிய விளக்கங்களையும், மீட்பைக் குறித்த இஸ்லாமிய மார்க்கத்தின் கொள்கைகளையும் எழுதி, லாகூரில் நடைபெற்ற ஒரு சமய மாநாட்டிலே வாசித்தார். தெய்வீக வெளிப்படுத்தலைப் பெற்றதாக அறிவித்த அவர், யூத, கிறிஸ்தவ சமயங்களில் "வாக்களிக்கப்பட்ட மேசியாவும்" இஸ்லாமிய சமயத்தில் எதிர்பார்க்கப்பட்ட "மஹ்தியும்" (Mahdi) தான்தான் எனச் சாதிக்கலானார். அத்துடன் ஏனைய சமயங்களில் எதிர்பார்க்கப்பட்டவைகளும் தன்னில் நிறைவேறுதல் பெற்றுள்ளதாகவும் கூறிக்கொண்டார். தன்னில்தான் எல்லா நாடுகளுடையதும், எல்லா மனிதர்களுடையதுமான நம்பிக்கை நிறைவேறவேண்டும் என்றும் கூறினார். இதற்கெனக் கடவுளிடமிருந்து பின்வரும் வெளிப்படுத்தல் கிடைத்ததாகவும் அறிவித்தார்:

"உன்னுடைய ஆள்தத்துவத்திலே முந்திய தீர்க்கர்களின் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறுதல் பெற்றன. நீ எல்லாத் தீர்க்கர்களின் ஆடையாலும் உடுத்தப்பட்டிருக்கிறாய் (அதாவது அவர்களது வல்லமையாலும், ஆவியாலும் நிரப்பப்பட்டிருக்கிறாய்). உன்னை மேசியாவாக்கின கடவுளுக்கே எல்லா மகிமையும் உண்டாவதாக. கடவுள் ஏன் அப்படிச் செய்தார் என்று ஒருவரும் கேள்வி கேட்க முடியாது. ஆனால் கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படிய மக்கள் தவறியதற்காக அவர்களே கேள்வி கேட்கப்படுவார்கள். நீயே எஜமான்; நீயே மேசியா—உன்னுடைய நேரமும், உழைப்பும் வீணாகக் கழிக்கப்படாது. அந்தணர்களுடைய தீர்க்கரைப் போன்ற ஒரு தீர்க்கனை மக்கள் எதிர்பார்ப்பது சரியல்ல. நீயே ஆசீர்வதிக்கப்பட்ட கிருஷ்ணன்; பசுக்களைப் பேணுபவன்—உன்னுடைய புகழ் கீதையிலே பாடப்பட்டிருக்கிறது".

மேலும் இஸ்லாம் சமயத்தைப் புதுப்பித்து அதன் விசுவாசத்தை நிலைநிறுத்த ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்

திலும் முஜாடிக் என்ற விசேட மனிதனைக் கடவுள் அனுப்புவார். அதுபோல, இஸ்லாமிய கால வரையறையின்படி, பதினான்காம் நூற்றாண்டின் 'முஜாடிக்'குரிய அத்தனை தெய்வீக அம்சங்களும் தன்னில் காணப்படும் என்றும் வற்புறுத்திக் கூறலானார். கிறிஸ்தவர்கள் எதிர்பார்க்கும் இயேசுவின் இரண்டாம் வருகையும் தன்னில் நிறைவேறிவிட்டது என்றும் உரிமைகொண்டாடினார். யோவான் எலியாவின் ஆவியிலும், வல்லமையிலும் வந்ததுபோல தானும் இயேசு கிறிஸ்துவின் ஆவியிலும் வல்லமையிலும் வந்திருப்பதாகவும், இயேசுவின் காலத்திலே எவ்வாறு யூதர்கள் 'காலம் நிறைவேறினது' என்பதை உணராமல் மேசியாவின் வரவை வேறு வகையில் எதிர்பார்த்து இருந்தார்களோ, அவ்வாறே கிறிஸ்தவர்களும் தன்னில்தான் இயேசுவின் இரண்டாம் வருகை நிறைவேறியிருக்கிறது என்பதை அறியாமல் இருக்கிறார்கள் என்றும் கூறிக்கொண்டார். யூதர்கள் அடிமை மக்களாக வாழ்ந்தபோது இயேசு எப்படி வந்தாரோ, அப்படியே இந்திய மக்கள் ஆங்கில ஆதிக்கத்திற்குள் அடிமையாக வாழும்போது தான் வந்திருப்பதாகவும் சொன்னார்.

இவ்வாறெல்லாம் தன்னைப்பற்றி அகம்மது கூறிக்கொண்டதால், வைதீக இஸ்லாமியரிடமிருந்தும், ஆரிய சமாஜத் தலைவர்களிடமிருந்தும், கிறிஸ்தவர்களிடமிருந்தும் பல மறுப்புகளும், எதிர்ப்புகளும் கிளம்பின. இவ்வெதிர்ப்புகளையெல்லாம் சமாளிக்க அகம்மதுவும் அவரது சீடர்களும் தயாரானார்கள். தங்கள் இயக்கத்தின் விளக்க விவாதங்களை மாதாந்திரப் பத்திரிகைகளின் மூலமாகவும், பலவித வெளியீடுகளின் வாயிலாகவும் எழுதி வெளியிட்டார்கள்.

இவ்வாறு குவாதியான் என்ற கிராமத்தில் அகம்மது என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட இவ்வியக்கம் குறுகிய காலத்திற்குள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியடைந்தது.

1896இல் இவ்வியக்கத்தில் 313 அங்கத்தினரே இருந்தனர். பின்னர் 1901இல் அரசாங்கப் புள்ளி விவரக் கணக்கின்படி 1,113 பேர்கள் பஞ்சாபிலும், 931 பேர்கள் (முந்திய) ஐக்கிய மாகாணத்திலும், 11,087 பேர் பம்பாய் மாகாணத்திலும் இருந்து வந்ததாக அறியப்படுகிறது. இவ்வியக்கத்தின் வளர்ச்சி 1911இல் 18,695 அங்கத்தினர்களாகவும் 1918இல் 70,000 அங்கத்தினர்களாகவும் உயர்ந்தது. ஆரம்பத்தில் பஞ்சாப் மாகாணத்தில்தான் இதற்கு நிறைய ஆதரவு கிட்டியதாகத் தெரிகிறது. தற்போது இவ்வியக்கம் உலகமெங்கும் பரவி, ஏறக்குறைய ஐம்பது லட்சம் அங்கத்தினர்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஆரம்பத்தில் அகம்மதுவைப் பின்பற்றியவர்கள் குவாதானியர் அல்லது மிர்சாயர் என்று அழைக்கப்பட்டனர். வைதீக இஸ்

லாமியர் வழிப்பாட்டில் கலந்துகொள்ள மறுத்த இவர்கள் ஏனைய இஸ்லாமியரினின்றும் வேறுபட்டவர்கள் என்பதைக் காட்டிக்கொள்ள இவ்வாறு தங்களை அழைத்துக்கொண்டனர். 1900இல் இவ்வியக்கத்தினரின் விருப்பத்திற்கிணங்க இந்திய அரசாங்கப் புள்ளி விவர வரிசையிலே "அகம்மதியா" எனப் பட்ட ஒரு தனிப்பட்ட இஸ்லாமிய வகுப்பாராக அதிகாரப் பூர்வமாக அங்கீகாரம் செய்யப்பட்டனர். அதன் பின்பு அன்னோர் தங்களை அப் பெயராலேயே அழைத்துக்கொள்ள ஆரம்பித்தனர்.

1908-ஆம் ஆண்டு இவ்வியக்கத்தின் தோற்றுநர் அகம்மது இறந்த பின்பு அவரது சீடரான அக்கீம் நூருதீன் என்பவர் முதல் கலீபா ஆனூர். இவர் மிகவும் புத்திசாலியாவார். அகம்மதுவின் இறுதி விருப்பப்படியே இவ்வியக்கத்தை நடத்த ஒரு விசேடக் குழுவை நியமித்தார். இக் குழு இயக்கத்தின் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படும். மேசியாவின் சந்ததி (Kalifat-ul-Masi) என்பவருடைய தலைமையின் கீழ் செயல் படவேண்டும் என்ற திட்டமும் இருந்தது. ஆனால் நூருதீன் அத்தகைய அதிகாரம் வாய்ந்த முதல் தலைவராக இருப்பினும், தனக்கென்று பிரத்தியேக அதிகாரங்களைத் தேடாமல், தன்னை இக் குழுவின் ஒரு சாதாரணப் பணியாளாகவே க்கருதி உழைத்து வந்தார். இப் புதிய சூழ்நிலைக்குள் இயக்கம் ஒருவாறு வளர்ந்துகொண்டேவந்தது. அதே சமயத்தில் இயக்கத்திற்குள் பிரிவினைக்குரிய அறிகுறிகளும் தோன்றலாயின.

1913-இல் அரசாங்க நடவடிக்கை ஒன்றினலே ஏற்பட்ட முகம்மதிய கலகத்திலே இவ்வியக்கத்தின் முக்கிய அங்கத்தினராக விளங்கிய கமாலுதீன் என்பவர் ஈடுபட்டார். இவ்வாறு அகம்மதியா இயக்கத்தினர் அரசியலில் ஈடுபடுவது தவறு என அகம்மதுவின் மகனை மிர்சா பாசிருதின் என்பவர் கண்டித்து எழுதினர். இயக்கத்திலே முக்கிய அங்கம் வகித்தவர்களிலே அநேகர் பாசிருதின் தனிப்பட்ட கருத்துக்கள் வெளியிடுவதை விரும்பாவிடினும், அதே சமயத்தில் கமாலுதீன் செய்தது தவறு என்றும் குற்றஞ்சாட்டினர். இதனல் பாசிருதினை ஆதரிக்கும் ஒரு சாராரும், அவரை எதிர்க்கும் மற்றொரு சாராருமென இரு சாரார் இவ்வியக்கத்திலே தோன்றலாயினர். மேலும் முதல் கலீபாவான நூருதீன் இறந்த பின்பு அகம்மதுவின் மகனை பாசிருதினை ஒரு சாரார் தலைவராகத் தேர்ந்தெடுத்தபோது, இத் தேர்தலை ஒப்புக்கொள்ளாத இன்னொரு சாரார் உடனே பிரிந்துச்சென்று லாகூரிலே வேறு ஒரு புதிய குழுவை ஏற்படுத்தினர். இது தவிர கொள்கை அடிப்படையிலேயும் இவ்விரு கட்சிகளுக்குள்ளும் வேற்றுமைகள் எழும்ப ஆரம்பித்தன. குவாதியானில் இருந்தக் குழுவினர் அகம்மதுவை ஒரு தீர்க்கனுகை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் அப்படி ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவிசுவாசிகள் என்றும்

அவ்வாறு ஏற்றுக்கொள்ளாத இஸ்லாமியர் வேறு எந்தக் கொள்கையில் ஒன்றித்து இருப்பினும் அவர்களோடு வழிபாட்டில் கலந்து கொள்வது தவறு என்றும் கூறினர். மேலும் வைதீக இஸ்லாமியரின் தொழுகையில் பங்கு கொள்வதையும், சவ அடக்கத்தில் பங்கு கொள்வதையும், தங்கள் பெண்களை அன்னாருக்கு மணம்புரிந்து கொடுப்பதையும் நிறுத்திக் கொண்டனர்.

லாகூர் குழுவினர், அகம்மது தன்னை தீர்க்கரெனக் குறிப்பிடாததால், அவரைத் தீர்க்கராக ஏற்றுக்கொள்வது அவசியம் இல்லையென்றும், அவ்வாறு ஏற்றுக்கொள்ளாதவர்களை அவிசுவாசிகள் என்று அழைப்பதும் தவறு எனக் கண்டித்தனர். மேலும், அவர்களுடைய கருத்துப்படி, அகம்மது இஸ்லாம் சமயத்தைப் புதுப்பித்து, அதன் விசுவாசத்தை நிலைநிறுத்தக் கடவுளால் அனுப்பப்பட்ட ஒரு விசேட மனிதரென்றும், அவரது முக்கியத்துவம் இயேசுவின் மரணத்தைப் பற்றியும், இயேசு காஷ்மீரில் அடக்கம் பண்ணப்பட்டிருப்பதைப் பற்றியும் அன்னாருக்குள்ள நம்பிக்கையிலும், ஏனைய சமயங்களின் குற்றங்களை எடுத்துக்காட்டிய எதிர்ப்பு மனப்பான்மையிலுமே அடங்கியுள்ளது என்றும் கூறினர்.

இவ்வாருக இரு பிரிவுகளாகப் பிரிந்த இவ்வியக்கம், இன்று வரையிலும் குவாதியான் பிரிவினர், லாகூர் பிரிவினர் என இரு பிரிவுகளாகவே வளர்ந்து வந்துள்ளது. இவ் விரு பிரிவினரும், இந்தியாவிலும், அயல் நாடுகளிலும் இஸ்லாமிய மிஷனெரிப் பணியை மிகச்சிறப்பாகச் செய்துவருகின்றனர். இங்கிலாந்து, ஜெர்மனி ஆகிய இடங்களில் இவர்களது ஊழியம் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது ஐரோப்பாவின் பல்வேறு இடங்களிலும் பரவிவருகிறது. சமீபத்தில் குவாதியான் பிரிவினர் அமெரிக்காவில் உள்ள வாஷிங்டனிலும் தங்கள் ஊழியத்தை நிறுவி, ஒரு மசூதியையும் கட்டியுள்ளனர். இவர்களது ஊழியமே தற்போது வெற்றிகரமாக நடந்தேறி வருகிறது எனக் கூறப்படுகின்றது. பர்மா, சிலோன், ஈராக், அரேபியா, எகிப்து ஆகிய இடங்களில் மட்டுமல்லாமல், அமெரிக்கா போன்ற மேற்கு நாடுகளிலும் இஸ்லாமிய சமயத்திற்கு அநேகரை மத மாற்றம் செய்துவருவதாக அன்னார் அவ்வப்போது அறிக்கை வெளியிடுகின்றனர். இவர்களது தலைமை நிறுவனம் தற்போது குவாதியாவிலிருந்து, ராப்வா என்ற இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இவ்வாருக தற்போது இவ்வியக்கத்தினரின் (இரு பிரிவினரையும் சேர்த்து) மிஷனெரி ஊழியம் ஏறக்குறைய 40 நாடுகளில், 250 மிஷனெரிமார்களைக்கொண்டு நடைபெற்று வருகிறது. இம்மிஷனெரி ஊழியத்தை நடத்துவதற்காக இவ்வியக்கத்தார் தங்களது வருவாயில் பதினாறில் ஒரு பங்கையாவது உற்சாகத்தோடு அளித்துவருகின்றனர். இவ் வியக்கத்தார் கிறிஸ்தவ மிஷனெரி ஊழியத்தைப் பின்பற்றி மருத்துவ

மனைகள், பள்ளிக்கூடங்கள் போன்ற பொது நலத் தாபனங்களை ஏற்படுத்தி அவற்றின்மூலம் சமயப் பிரச்சாரம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வியக்கத்தாரின் மிஷனெரிப் பணி ஆப்பிரிக்காக் கண்டத்திலே மிகச் சிறப்பாக நடைபெற்றுவருவதாக குறிப்பிடப்படுகின்றது. S. G. வில்லியம்ஸ் என்பவர் தனது கிறிஸ்து அல்லது முகம்மது என்ற புத்தகத்தில் ஆப்பிரிக்காக் கண்டத்திலே கிறிஸ்தவ சபைக்கு ஒரு பெரும் சவால் இருக்கிறது என்பதைக் குறித்த சந்தேகம் இருக்கமுடியாது. ஆப்பிரிக்காவை ஆளப்போவது சிலுவையா, பிறையா, என்பதை இன்னும் முடிவு செய்யவில்லையென்று குறிப்பிடுகின்றார். இவ்வியக்கத்தின் நடவடிக்கைகளை ஆப்பிரிக்காக் கண்டத்திலே பல பாகங்களில் கண்டறிந்துவந்த ஜீன் சீமன்ட் என்பவர் 'கிறிஸ்டியன் ரீடர்' (Christian Reader) என்ற பத்திரிகையிலே பின்வருமாறு எழுதியுள்ளார்: 'நான் நைஜீரியாவிலே பாகிஸ்தானிலிருந்து வந்துள்ள ஆறு அகம்மதியா மிஷனெரிமார்களையும், இரண்டு மிஷனெரி வைத்தியர்களையும் சந்தித்தேன். கிழக்கு ஆப்பிரிக்காவில், பாகிஸ்தானிலிருந்து வந்துள்ள பதினைந்து அகம்மதியா மிஷனெரிமார்களும், பயிற்சியளிக்கப்பட்ட இருபத்துநான்கு ஆப்பிரிக்க மிஷனெரிமார்களும் ஊழியம் செய்து வருகின்றனர். இது தவிர 'சத்தியம்' (The Truth) என்ற பத்திரிகையும் சமயப் பிரச்சாரத்திற்காக நடத்திவருகின்றனர். இவ்வியக்கத்தைக் குறித்த அநேக சிறு புத்தகங்களும், துண்டுப் பிரதிகளும், அவ்வப்போது வெளியிடப்படுகின்றன. இவர்கள் அநேக மருத்துவசாலைகளை நடத்திவருகிறார்கள். கடைத்தெருக்களிலே பிரசங்கிப்பதிலும், குறிப்பாகத் தனித்தாள் ஊழியத்திலும் மிகுந்த கவனம் செலுத்திவருகின்றனர்.'

## இ. இஸ்லாம் சமயத்தில் அகம்மதியா இயக்கத்தின் இடம்

இஸ்லாம் சமயத்தில், அகம்மதுகான் போன்ற பகுத்தறிவுத் தீவிரவாதிகள் ஒரு பக்கம், வைதீகர்கள் மற்றொரு பக்கம். இவ்விருவர்களின் தொடர்பில் அகம்மதியா இயக்கம் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. மக்களை அறியாமை இருளில் வைத்தும், இஸ்லாம் சமயத்தை வெறும் காட்சிப் பொருளாக வைத்தும், பிரிவினையைத் தடுக்க இயலாமலும் இஸ்லாமிய குருக்கள் இருக்கிறார்கள் என அகம்மது மிக வன்மையாகக் கண்டித்தார். இயேசுவின் காலத்தில் யூத சமயம் இருந்தது போலவே, இஸ்லாம் சமயமும் சடங்காச்சாரம் நிறைந்த ஒரு சமயமாக மாறிவிட்டதென்று கூறிக்கொண்டார். எனவே, வைதீக இஸ்லாமியர் இயந்திரம் போன்று சமயச் சட்டங்களுக்கு வார்த்தைக்கு வார்த்தைக் கீழ்ப்படிவதைக் கண்டித்து, ஆவிக்குரிய அறநெறிப் போதனைகளை புதிய முறையிலே பிரச்சாரம் செய்ய அகம்மதியா இயக்கம் முன்வந்தது. வாயினால் சில மந்திரங்

களை நாள்தோறும் ஓதுவது உண்மையான பிரார்த்தனையாகாது; வாயினல் சில ஜெபங்களை ஓதுவதின் மூலம் மீட்பைச் சம்பாதிக்க முடியாது—கடவுள் உள்ளத்தைப் பார்க்கிறர்—ஆகவே கடவுளுக்கு முன்பாக உள்ளம் உருக வேண்டும் என்பது போன்ற புதிய ஆவிக்குரிய கருத்துக்களை இவ்வியக்கம் வைதீக இஸ்லாமியர் முன்பு வைத்தது.

அதே சமயத்தில் இஸ்லாமிய மார்க்கத்தின் பகுத்தறிவுச் சமயவாதிகளை இவ்வியக்கம் வெறுத்தது. அமீர் அலி, பாட்சா போன்றவர்கள் குர்ஆன் ஒரு முழுமைப்பெற்ற தெய்வீக ஆகமம் என்பதைச் சந்தேகித்தனர். அவர்கள் இஸ்லாம் சமயத்திலுள்ள ஆதிக் கோட்பாடுகள், கிறிஸ்தவ சமயத்திலும், யூத சமயத்திலும், இஸ்லாமுக்கு முன்பு இருந்த அரேபிய மார்க்கத்திலும் இருந்ததைச் சுட்டிக்காட்டினர். சமூகச் சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையில் இவ்வியக்கம் மிதவாதிகளின் பக்கமே இருந்தது. படுதாமுறை ஒழிப்பைக் கண்டித்தது. இஸ்லாமிய விவாகரத்துச் சட்டத்தை மிகவும் தீவிரமாக ஆதரித்தது. இஸ்லாமிய சமயம் ஒரு பக்கம் தவறுதல்களற்ற புனித மார்க்கமாயிருப்பினும் மற்றொருபக்கம் தவறுதலுள்ள சமயமென்று நிரூபிக்க இடமுமிருக்கிறது என்பதை இவ்வியக்கம் ஒப்புக்கொண்டது. . இவ்வாறு சீர்திருத்தக் கொள்கைகளை இஸ்லாம் சமயத்திற்குள் திணிக்க முனைந்ததால் வைதீக கட்சியினரின் விரோதத்தையும் சம்பாதித்துக்கொண்டது. அகம்மது தேவ தூஷணம் சொன்னவன் என்றும், சமய விரோதி என்றும், ஏமாற்றுக்காரன் என்றும் பழிக்கப்பட்டார். அதன் விளைவாக அவரும், அவரது சீடர்களும் இஸ்லாம் சமயத்திலிருந்து விலக்கப்பட்டனர். அவர்கள் மசூதிகளைத் தங்கள் வழிபாட்டிற்கு உபயோகிக்கத் தடைசெய்யப்பட்டனர். உடனே அகம்மது தன்னுடைய சீடர்களுக்கு, அகம்மதியர குருக்களின் (Imam) கீழ்மாத்திரம் தொழுகை நடத்தவேண்டும் என்றும் கட்டளையிட்டார். ஆப்கானிஸ்தானத்தில் நான்கு அகம்மதியா ஊழியர்கள் தேவ தூஷணத்திற்காக மரணதண்டனை விதிக்கப்பட்டனர். இந்தத் தண்டனையை நிறைவேற்ற இந்தியாவிலிருந்த வைதீக இஸ்லாமியர் கூட, காபூலில் இருந்த அமீருக்குத் தங்கள் மனமார்ந்த சம்மதத்தை தந்தியின் மூலம் தெரிவித்தனர். இவ்வாறு இஸ்லாம் சமயத்திற்குள்ளேயே பெரும் புரட்சியை உண்டாக்கக்கூடிய ஒரு இயக்கமாக அகம்மதியா இயக்கம் விளங்கி வருகிறது.

### ஈ. கிறிஸ்தவ சமயத்தைப்பற்றி அகம்மதியா இயக்கம் கொண்டுள்ள கருத்து

அகம்மதியா இயக்கம் தனது மிஷனெரிப் பணியையும்; சமயப் பிரச்சாரத்தையும் கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றி நடத்திவந்தபோதிலும் கிறிஸ்தவ சமயத்திற்கு எதிராக முழு

மூச்சோடு துர்ப்பிரச்சாரம் செய்துவருகிறது: குறிப்பாகக் கிறிஸ்தவ சமயத்தின் அடிப்படைச் சத்தியமான கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை இவ்வியக்கம் முற்றிலும் நிராகரிக்கிறது. இத்தகைய துர்ப்பிரச்சாரங்களுக்குச் சாதகமாக மேனாட்டு இறையியல் வல்லுனர்களின் திறனாய்வு விளக்கங்களை அன்னார் பயன்படுத்திக்கொள்கின்றனர்.

கிறிஸ்தவ திருமறையைப் பற்றிக் கூறும்போது, அது கலப்படம் நிறைந்து காணப்படுகிறது என்றும், குர்ஆன் மட்டும் அற்புதவிதமாக எவ்வித கலப்படமும், மாற்றமும் இல்லாதபடி கடவுளின் பாதுகாப்புக்குள் இருந்துவருகிறது என்றும் இவ்வியக்கத்தார் கூறிக்கொள்கின்றனர். திருமறையில் காணப்படும் சில காரியங்களைக் குறித்து உறுதிப்படுத்துவதற்குப் பதிலாக குர்ஆன் தெளிவான மறுப்பு தெரிவிக்கிறது என்றும் விளம்புகின்றனர். உதாரணமாக,—குருடனும், குஷ்டரோகிகளும் புனிதமில்லாதவர்கள் என்பது, சாலொமோன் ஒரு விக்கிரக ஆராதனைக்காரன் என்பது, தாவீது சோதனைக்கு இரையானான் என்பது, ஆரோன் ஜனங்களுக்குப் பயந்ததினாலே கன்றுக்குட்டியின் வழிபாட்டில் சேர்ந்துகொண்டான் என்பது, இயேசு கடவுளின் குமாரன் என்பது, மற்றவர்களின் பாவங்களை ஒருவர் சுமக்கக்கூடும் என்பது, நியாயப் பிரமாணம் சாபம் என்பது, கடவுள் சோர்வுற்றார். மனம் மாறினார் என்பது, தமது விசேட சிலாக்கியங்களை அனுபவிக்கக் கடவுள் இஸ்ரவேலரை தெரிந்துகொண்டார் என்பது—போன்ற அநேக விசுவாசக் கோட்பாடுகளையும், போதனைகளையும் குர்ஆன் பலமான வாதங்களின் மூலம் மறுப்பதால், இவை கடவுளின் வெளிப்பாடுகள் அல்ல, மனிதன் செய்த கலப்படமே என அன்னார் விளக்கம் கூறுகின்றனர். மேலும் நற்செய்தி நூல்களில் காணப்படும் சில முரண்பாடுகளையும் சுட்டிக்காட்டி, திருமறை கடவுளால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றல்ல, மனிதர்களால் உருவாக்கப்பட்ட ஒரு புத்தகமே என்று வாதம் செய்கின்றனர்.

திருச் சபையைப் பற்றி கூறுங்கால், கிறிஸ்தவ சமுதாயமும் மனிதனால் உருவாக்கப்பட்ட ஒன்றே என்று கூறுகின்றனர். ஏனெனில் திருச்சபையைத் தோற்றுவித்தவர் இயேசு கிறிஸ்து வல்ல,—புனித பவுலடியாரே என்பது இவர்கள் கூற்று. மேலும் திருச்சபையில் காணப்படும் சடங்காச்சாரங்கள், பண்டிகைகள், சித்தாந்தங்கள் யாவும் பண்டைய சூரிய வழிபாடு போன்ற அஞ்ஞான மார்க்கங்களிலிருந்து திரிந்து வந்தவையே என்றும் கருதுகின்றனர். கிறிஸ்தவ சமயம் உலகயனைத்துக்குமுரிய சமயமல்ல. ஏனெனில் இயேசு தமது ஊழியத்தை இஸ்ரவேலரின் வீட்டாருக்கு மட்டும் வரையறுத்துக்கொண்டார். இயேசுவின் உண்மையான சமயமும் இஸ்லாம் சமயமே என்றும் பறைசாற்றி வருகின்றனர்.

கிறிஸ்தவ சமுதாய நிலையையும் இவர்கள் குற்றப்படுத்தத் தவறவில்லை. மேனாடுகளில் இருந்துவரும் விவாக ரத்து நிலையைச் சுட்டிக்காட்டி, இஸ்லாமியப் பெண்கள், கிறிஸ்தவப் பெண்களைக் காட்டிலும் சந்தோஷமான நிலைமையில் வாழ்கிறார்களென்றும், சட்ட ரீதியாள விபச்சாரத்தைக் காட்டிலும், இஸ்லாமிய சமயம் அனுமதிக்கும் பலதார விவாகம் (polygay) மேலானது என்றும் கூறுகின்றனர்.

இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதை மறுக்கும் இவர்கள் கன்னிப் பிறப்பு, இயேசுவின் ஆள் தத்துவம். சிலுவை மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவை பற்றி விபரீதமான விளக்கங்களை வெளியிட்டுவருகின்றனர். இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபோதிலும், அவர் சிலுவையில் மரிக்கவுமில்லை, உயிர்த்தெழவுமில்லை, பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுமில்லை, ஆகவே திரும்பிவரப் போவதுமில்லை என்று கூறி, அதற்கு ஆதாரமாக பல புதிய கருத்துக்களையும் வெளியிடுகின்றனர். கன்னிப் பிறப்பைப் பற்றிக் கூறும் போது, "ஆதாமுக்குத் தாயும் இல்லை, தந்தையும் இல்லை. ஆயிரக் கணக்கான அணுக்கள் சேர்ந்து தந்தை இல்லாமலே ஆதாமை உருவாக்கின. தந்தையின் வித்து இல்லாமலே தாயின் கருவிலே உருவாகக்கூடும் என்பதைக் கிரேக்க, இந்திய வைத்திய நிபுணர்கள் நிரூபித்திருக்கின்றனர். இவையெல்லாம் இயேசுவின் தெய்வீகத்தைக் கன்னிப்பிறப்பின் சித்தாந்தத்தின் மீது எழுப்புவது தவறு என்பதையே சுட்டிக்காட்டுகின்றன. மேலும் கன்னிப் பிறப்பைக் குறித்த கிறிஸ்தவ சித்தாந்தம் மத்தேயு குறிப்பிட்டுள்ளபடி ஏசாயா தீர்க்கனின் ஆகமத்தில் அடங்கியுள்ளது (7: 14, 15). ஆனால் அவர் உபயோகப்படுத்தும் பார்த்தனூஸ் *(Parthanos)* என்ற கிரேக்க வார்த்தை 'வாலிபப் பெண்' என்று அர்த்தம் கொடுக்கும் எபிரேயச் சொல்லின் மொழி பெயர்ப்பல்ல என்பது இவர்கள் கூற்று.

இயேசுவின் அற்புதங்களை இவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. அதற்கு மாறாக தண்ணீரைத் திராட்சரசமாக்கினது, அத்தி மரத்தைச் சபித்தது, பன்றிக்கூட்டத்தை அழித்தது ஆகியவை இயேசுவில் காணப்பட்ட நேர்மையற்ற நியாயத் தீர்ப்பையே எடுத்துக்காட்டுகின்றன என்பர் லாகூரிலுள்ள அகம்மதியா தலைவரான மைலானா முகம்மது என்பவர் முகம்மதுவும் கிறிஸ்தவமும் என்ற புத்தகத்தில் இயேசுவின் தெய்வீகத் தன்மையை மறுத்து எழுதும்போது நற்செய்தி நூல்களில் குறிப்பிட்டிருக்கிறபடி சரீர சுகமளித்தல் நடைபெற்றிருக்கமுடியாது அப்படி நடைபெற்றிருப்பின், கிறிஸ்துவுக்குத் திரளான சீடர்கள் சேர்ந்திருப்பார்கள் என்றும், "எல்லோரும்", "அநேகர்" குணமடைந்தார்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தும், வெகு சிலரே விசுவாசிகளானதாகக் காண்கிறபடியால், நற்செய்தி நூல்களில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் அடையாள வார்த்தைகளாக

மட்டும் அவற்றைக் கருதவேண்டும் என்றும் எழுதியிருக்கிறார். இயேசு பாவமற்றவர் என்ற கூற்றுக்கு மறுப்புவிடுக்கும் அன்னார் அதற்கு ஆதாரமாகக் குறிப்பிடும் மூன்று முக்கிய காரியங்கள்:

1. இயேசுவின் திருமுழுக்கு.

2. இயேசுவின் சோதனை.

3. 'நீ என்னை நல்லவனென்று கூறுவானேன். தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே. (மா. 10: 18) என்ற வசனம்.

இயேசுவின் சிலுவை மரணத்தைப் பற்றிக் கூறுங்கால், இயேசு சிலுவையில் அறையப்பட்டபோதிலும் அவர் அங்கு மரிக்கவில்லை; மயக்கமுற்ற நிலையில்தான் இருந்தார். பிலாத்துவின் ரகசியத் திட்டப்படி அவர் மயக்கமுற்ற நிலையிலேயே சிலுவையிலிருந்து இறக்கப்பட்டுக் கல்லறையில் வைக்கப்பட்டார். கல்லறையில் மூன்று நாட்கள் இருந்தபோது சீடர்கள் இரகசியமாக வந்து பலவித மருந்துகளைப் போட்டார்கள். அதன் மூலம் இயேசு சற்று சுகம்பெற்று மூன்றும் நாள் விடியற்காலையிலே தோட்டக்காரனைப் போல் வேடமணிந்து கல்லறையிலிருந்து வெளியேறினார். ஆகவேதான் மரியாளுக்குக் கூட அவரை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. இவ்வாறு கல்லறையிலிருந்து வெளியேறிய இயேசு யூதர்களிடமிருந்து தப்பித்துக்கொள்ள எண்ணி, உடனே பிரயாணப்பட்டு காணாமற்போன பத்து இஸ்ரவேல் கோத்திரங்களைத் தேடிச் சென்றார். கடைசியில் காஷ்மீரில் வந்துசேர்ந்தார். அங்கு அவர் 'வேறு ஆடுகளாகிய' இஸ்ரவேலரைக் கண்டதால் அங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டார். அங்கு அவர் முதிர் வயதுவரையில் (120 வயது வரை) வாழ்ந்து இயற்கை மரணம் எய்தினார். அவரது கல்லறை இன்றும் ஸ்ரீநகரில் கான்யன் என்ற வீதியில் இருக்கிறதென்றும், யாவரும் அக்கல்லறையை வந்து பார்க்கலாமென்றும் அறைகூவல் விடுக்கின்றனர். இதைப்பற்றி அகம்மது தன்னுடைய இந்தியாவில் இயேசு என்ற புத்தகத்தில் விவரமாக எழுதியுள்ளார். இந்தப் புத்தகத்தில் காணப்படும் விவரங்களின் அடிப்படையில் 'இயேசு இந்தியாவுக்குச் சொந்தமானவரா?' என்ற கேள்விகூட சமீபத்தில் இந்திய பார்லிமென்டில் எழும்பியது.

### உ. அகம்மதியா இயக்கத்தாரின் சில நம்பிக்கைகள்

மற்றவர்களின் பாவத்தை ஒருவர் சுமக்கக்கூடும் என்பதை இவர்கள் நம்ப மறுப்பதாலும் இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றை நிராகரிப்பதாலும்

இயேசுவின் மூலம் கிடைக்கும் மீட்பை இவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

*1.* **மீட்பு:** மீட்பைப் பற்றிக்கூறும்போது ஒருவன் வெறும் வார்த்தைகளின் மூலம் விசுவாசத்தை அறிக்கையிடுவதால் மட்டும் பரலோக அரசின் சுதந்தரவாளியாக முடியாதென்பதும் நல்ல கிரியைகளின் மூலமாகவும், தன்னுடைய கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவதன் மூலமாகவும் மட்டுமே மீட்பைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதும் இவர்கள் கோட்பாடு. ஆனால் ஒருவனுக்கு அவன் நிறைவேற்றவேண்டிய விசுவாசத் திற்குரிய கடமைகளும், கிரியைகளும் தெளிவாக அறிவிக் கப்பட்டாலன்றி அவன் நரகத்திற்குப் பாத்திரனல்ல. ஒருவன் உலகிலேயே மிகவும் முக்கியமான சத்தியத்தை மறுதலிக்கிற வனாக இருக்கலாம். ஆனால் பரலோகத்திற்கும், நரகத்திற்கும் போகிற வழியைக் குறித்து அவனுக்குத் தெளிவாக அறிவிக் கப்பட்டாலொழிய அவன் நரகத்திற்குரியவன் என்று சொல்ல முடியாது. ஆகவேதான் முகம்மது நபி, குழந்தைகளும், காடு மலைகளில் வசிக்கிற அஞ்ஞானிகளும், புத்தித் தடுமாற்றமுள்ள வர்களும், சத்தியத்தைப் புரிந்துகொள்ளக்கூடிய சக்தியற்றவர் களும் மரிக்கும்போது கடவுளுக்கு முன்பாகப் பதிலளிக்க கட மைப் பட்டவர்கள் அல்ல என்று கூறியிருக்கிறார் என்பர். நியாயத்தீர்ப்பு நாளிலே அப்படிப்பட்ட மக்கள் மீண்டும் உயிர்த் தெழுதலைப் பெறும்போது, அவர்களுக்காக இன்னொரு தீர்க்கர் அனுப்பப்படுவார். அவர் அவர்களுக்குச் சத்தியத்தையும், பொய் யையும் விளக்கிக் கூறி இரண்டில் ஒன்றை அவர்களையே தெரிந்துகொள்ளச் சொல்வார். அவ்வாறு பொய்யைத் தெரிந்து கொள்கிறவர்கள் நரகத்திற்குப் போவார்கள், சத்தியத்தை தெரிந்துகொள்கிறவர்களோ பரலோகத்திற்குப் போவார்கள். இவ்வுலகத்திலே இருக்கும்போது சத்தியத்தைத் தெளிவுற அறிந்தும், அதைத் துணிச்சலோடு மறுத்து வாழ்பவர்கள் நியாயத்தீர்ப்பின் நாளிலே கடவுளுக்கு முன்பாகப் பதில் அளிக்க வேண்டும். ஆனாலும் அந்தச் சமயத்திலும் கூட கடவுளின் சொல்லிமுடியாத இரக்கத்தினாலும், ஞானத்தினாலும் ஒருவன் கடவுளின் மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளக்கூடும். இதைப் பற்றி ஒருவரும் கடவுளிடத்தில் கேள்வி கேட்க முடியாது. ஏனெனில் கடவுளின் இரக்கம் அவருக்கே உரியது. நாம் அவரது வேலைக்காரரே. நித்திய ஆக்கினை என்பது கிடையாது என்பதும் இவர்களது போதனை. விசுவாசிகளானாலுஞ்சரி, அவிசுவாசிகளானாலுஞ் சரி; ஒருவருமே நித்திய ஆக்கினையை அடையமாட்டார்கள். இதற்கு ஆதாரமாக இவர்கள் குறிப் பிடுவது குர்ஆனிலுள்ள ஓர் வசனம்: "என்னுடைய இரக்கம் எல்லாவற்றையும் கடந்து செல்கிறது" (7; 157). மேலும் குர்ஆ னில் 'அவிசுவாசிகளின் தாய் நரகம்" (101: 10) என்று குறிப் பிட்டுள்ளபடி நரகம் ஒரு தாய்க்குரிய இரக்கமான சேவை

யைச் செய்கிறது. இறுதியிலே தீயவருங்கூட கடவுளின் பிரசன்னத்திலே சேர்க்கப்படுவார்கள். கடவுளை வணங்குவதற்காகப் படைக்கப்பட்ட மக்கள் சாத்தானை வழிபடுவதற்காக நிரந்தரமாக நரகத்தில் தங்கிவிடுவார்கள் என்பது கடவுளின் இரக்கத்திற்கு மாறானது.

**2. தேவதூதர்களைப்பற்றிய நம்பிக்கை:** தேவதூதர்கள் உண்டென்றும் அவர்களோடு தொடர்புகொண்டு அநேக ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதும் அன்னாரின் நம்பிக்கை. கடவுளின் சத்தியங்களை மனிதருக்கு விளக்கிக் காட்டுவதில் தேவதூதர்கள் உதவுவதாக சாட்சிகளும் கொடுப்பார்கள்.

**3. சாத்தானைப் பற்றி:** சாத்தான் ஒரு தீய சத்துவம் (evil being) என்றும் அவனைப் பற்றிக் குர்ஆனில் கூறப்பட்டிருப்பதால் அவன் உண்டென்று தாங்கள் நம்புவதாகவும் கூறுகின்றனர். மேலும் சாத்தானின் சக்திகளை அழிப்பதற்கெனக் கடவுள் தன்னுடைய உண்மையான விசுவாசிகளுக்குப் பொறுப்புக் கொடுத்திருக்கிறார் என்றும், விசுவாசிகள் கடவுளின் உதவியையும், வழி நடத்துதலையும் கொண்டு சாத்தானுடன் போராடி அவனது சக்திகளை அழிக்கவேண்டும் என்றும் கூறுவர்.

**4. அற்புதங்களைப் பற்றி:** முகம்மது நபி செய்த அற்புதங்கள் குர்ஆனில் குறிப்பிடப்பட்டிருப்பதால் அவற்றையெல்லாம் தாம் நம்புவதாகக் கூறுகின்றனர். முகம்மது நபி செய்த அற்புதங்களை மறுக்கிறவர்கள் ஆவிக்குரிய காட்சியை இழந்தவர்கள் என்றும், முகம்மது நபியை உண்மையாக பின்பற்றுகிறவர்கள் கூட அத்தகைய அற்புதங்களை நடப்பிக்க முடியும் என்றும் நம்புகின்றனர்.

## ஊ. முடிவுரை

தற்கால இயக்கங்களில் புரட்சிகரமாகத் தோன்றி, குறுகிய காலத்திற்குள் பெரும் வளர்ச்சிபெற்ற இயக்கமாயிருப்பினும், இவ்வியக்கத்தினரைப் பற்றியும், அன்னாரின் புரட்சிகரமான கருத்துக்களைப் பற்றியும் ஒன்றுமே அறியாத இஸ்லாமியர் அநேகர் இன்னும் இருக்கிறார்கள். பெரும்பாலான கிறிஸ்தவ மக்களுக்கும் இவ்வியக்கத்தைப் பற்றி ஒன்றும் தெரியாதென்றே கூறலாம். கிறிஸ்துவின் கல்லறையைப் பார்வையிட்டு ஆராய்ச்சி செய்த சில மேனாட்டு அறிஞர்கள் அக் கல்லறை ஐந்நூறு ஆண்டுகளுக்குள் கட்டப்பட்ட ஒரு கல்லறையென்றும் அது இயேசு கிறிஸ்துவின் கல்லறையாக இருக்க முடியாதென்றும் மறுப்புத் தெரிவித்திருக்கின்றனர். கிறிஸ்தவ சத்தியங்களுக்கு விபரீத விளக்கங்களைத் தருவதற்கு இவர்களுக்கு உதவியாக இருப்பது மேனாட்டுக் கிறிஸ்தவ இறையியல் வல்லுனர்களின் திறனாய்வு விளக்கங்களேயன்றி

(Critical Exposition) வேறல்ல. தங்களுடைய முரண்பாடான வாதங்களை நிரூபிக்க, பில்கிரகாம் போன்ற கிறிஸ்தவப் பெருமக்களை எதிர்வாதம் செய்யும்படி போட்டிக்கும் அழைத்திருக்கின்றனர்.

இயேசுபிரானின் உயிர்த்தெழுதல், அவர் மூலம் அருளப்படும் மீட்பு ஆகியவை ஒரு தனி மனிதன் விசுவாசத்தின் மூலம் தன் வாழ்வில் அனுபவிக்கும் அனுபவத்தாலன்றி வேறு வாதத்தினால் நிரூபிக்கக் கூடியவையல்ல என்பதே அன்னாருக்குக் கிடைத்திருக்கும் பதில்.

## துணை நூற்கள்


1. Chowdhry, Moulvi Muzaffarud-Din, *The Life and Teachings of Hazrat Mirza Ghulam Ahmad*, Nashro-Ishaat, Qadian, 1939.

1. Walter, H. A., *The Ahamadiyya Movement*, Longmans Green & Co., London, 1941.

3. Shams, J. D., *Where did Jesus Die*, Nazir-Dawat-o-Tabligh, Qadian, Punjab, 1959.

4. Ahmad, M. M., *What is Ahamadiyyat?*, Nazir Dawat-o-Tabligh, Qadian, Punjab, 1963.

5. Bashir-Ud-Din, H. M., *Ahamadiyya Movement*, Nazir-Dawat-o-Tabligh, Qadian, 1964.

# 3

# ஜமாத்-இ-இஸ்லாமி ஹிந்த்

## (The Jamaat-E-Islami Hind)

ஞான இருபின்சன்

### அ. வரலாறு

ஜமாத்-இ-இஸ்லாமி ஹிந்த் இயக்கம் இஸ்லாமிய இயக்கங்களுள் மிகவும் இளமையான ஒரு இயக்கம் எனலாம். இந்தியா சுதந்திரமடைவதற்குச் சற்று முன்னும் அதற்குப் பின்னும் இந்திய அரசியல், சமய, சமூக சூழ்நிலைகள் குழப்பமுற்ற நிலையில் காணப்பட்டன. மக்களிடையில் இன அடிப்படையிலும் சமய அடிப்படையிலும் கட்சிப் பிரிகவுள் காணப்பட்டன. இந் நிலையில் வாழ்வின் உயர்தகவுகளைப் பற்றி மக்கள் கவலையற்றுப் போயினர். வருங்காலம் என்ன என்பது எவருக்கும் தெரியாத ஒன்ருக இருந்தது. சமயம் புறக்கணிக்கப்பட்டது. இஸ்லாமும் இந் நிலைக்கு விதிவிலக்கல்ல. இஸ்லாமின் உயர்ந்த தகவுகளையும் கொள்கைகளையும் மக்கள் புறக்கணித்து வாழ்ந்தனர். மக்கள் இஸ்லாம் வெறும் ஆசாரங்களிலும் சடங்குகளிலும் அடங்கியிருப்பதாகக் கொண்டனர். உலக நிலையும் இதே வகையில்தான் காணப்பட்டது.

இந் நிலையில் மக்களின் ஒருமைப்பாட்டையும், ஒழுக்கமும் பக்தியுமுள்ள வாழ்க்கையையும் விரும்பிய முஸ்லீம் பெரியார் எழுபத்தைந்துபேர் 1941-இல் மௌலானு சயித் அபுல் அலா மௌடூடி (Maulana Syed Abdul Ala Maudoodi) என்பவர் ஆலோசனையின் பேரில் லாகூரில் கூடி ஜமாத்-இ-இஸ்லாமி என்னும் கட்சியாகத் தங்களை அழைத்துக்கொண்டனர். மௌலானு மௌடூடி இக் கட்சியின் அமீராக (Amir—தலைவன்) ஒரே மனதாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

தொடக்கத்திலிருந்தே ஜாமாத் ஜாதி சமய வேறுபாடின்றி எல்லா இந்தியர்களையும் ஒன்றுபோல் கருதிச் செயல்பட்டது. பலாத்காரம், வெறுப்பு ஆகியவற்றைத் துறந்து ஒரு நீதியுள்ள சமூகத்தை உருவாக்க முன்வருமாறு எல்லாக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தது.

இப்படிப்பட்ட ஒரு சமூகத்தை உருவாக்க சமயம் (Religion) இன்றியமையாதது என்பதை ஜமாத் வலியுறுத்தினது. வரலாற்றில் பற்பல காலங்களில் தோன்றிய தீர்க்கர்களையும், கடவுளுக்குக் கீழ்ப்படிந்து வாழுமாறு அன்னுர் கொடுத்துவந்த ஆலோசனைகளையும் நினைவுகூருமாறு மக்களைத் தூண்டினது.

சமயத்தைக் குறித்த குறுகின மனப்பான்மையைக் கைவிடு மாறு மக்களைக் கேட்டுக்கொண்டது. சமய மறைகளைச் சரி யாகக் கற்றுத் தெளியுமாறு மக்களைத் தூண்டினது.

இஸ்லாமியரைப் பார்த்து அன்னூர் சிறந்த உண்மைகளைக் கொண்டுள்ளார் என்றும், ஆகையால் அன்னூர் அரசியல் தீங்கு களில் ஈடுபட்டு அழுக்காறு அடையலாகாது என்றும் எச்சரித் தது. நாடு பிரிவினை உணர்ச்சியில் கொந்தளித்தபோது ஜாமத் முஸ்லீம்கள் இக் குழப்பங்களிலிருந்து விலகி நிற்குமாறு கேட் டுக்கொண்டது.

இந்த அழைப்புக்குச் செவிமடுத்தோர் தங்களை இஸ்லாமின் போதனைகளுக்கு உட்படுத்தி பக்தியிலும் நீதியிலும் நிலைத் திருக்குமாறு கேட்டுக்கொண்டது. இப்படியாக, ஜமாத் தன் முழுக் கவனத்தையும் மனிதனுடைய பண்பைப் பண்படுத்துவதில் செலவிட்டது.

முஸ்லீம்களல்லாதோரும் ஜாமாத்தின் இலக்கிய வெளி யீடுகளைக் கண்டபோது, அதன் செய்திகள் இன வேறுபாடின்றி அனைத்துலகுக்கும் பொதுவானதாக இருப்பதைக் கண்டுகொண் டனர். 1946, ஏப்ரல் 26-இல் பாட்னாவில் நடந்த ஜமாத் கூட்ட மொன்றில் காந்திஜி கலந்துகொண்டார். அங்கு ஆற்றப்பட்ட உரையைக் கேட்ட காந்திஜி அதனைப் பாராட்டி வாழ்த் தினார்.

ஜமாத்தில் ஏறத்தாழ அறுநூறு அங்கத்தினர் இருந்தனர். இவர்கள் மட்டும் கூடி இந்தியாவின் விதியை நிர்ணயிக்க முடியாது. அரசியல் பாகுபாடுகளும், இன வெறிகளும், சூழ்ச்சி களும் தாண்டவமாடி இரத்த வெள்ளத்தில் பிரிவினை ஏற்பட்டது.

இந் நிலையில் மக்களிடையில் ஒற்றுமையைக் காக்கவேண் டிய தேவையை ஜமாத் கண்டது. அங்கத்தினர் யாவரையும் ஏற்பட்ட இழப்பை நிவிர்த்திசெய்ய ஒருங்கே பாடுபடுமாறு கேட்டுக்கொண்டது. இப்படியாக பிரிவினைக்குப்பின் ஜமாத் இதர ஸ்தாபனங்களுடன் சேர்ந்து மக்கள் நலனுக்காகப் பாடுபட்டது. நிவாரண நிலையங்களைப் பல இடங்களில் திறந்து நிர்க்கதியற்றோருக்கு உதவினது.

நிலைமை ஒருவாறு அமைதியடைந்ததும் 1948, ஏப்ரல் திங்கள் அலகபாத்தில் வைத்து ஜமாத்-இ-இஸ்லாமி ஹிந்த் ஆரம் பிக்கப்பட்டது. மௌலானா அபுல் லைஸ் நாத்வி (Maulana Abul Lais Nadvi) இதன் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். பாகிஸ்தானுக்குட்பட்ட ஜமாத்-இ-இஸ்லாமியுடன் இது எத் தகைய தொடர்பையும் வைத்துக்கொள்ளவில்லை. ஜமாத்-இ-இஸ்லாமி ஹிந்த்-இன் அமைப்பும் சட்டமும் மாற்றியமைக்கப்

பட்டன. 1956-இல் ஒரு நான்கு வருடத் திட்டத்தை உருவாக்கினது. இதன்படி மக்களிடையில் காணப்பட்ட இனவெறியையும் பிரிவினைப்பான்மையையும் முற்றிலுமாகக் களைந்தெறிய அங்கத்தினர்களுக்குச் சரியான போதனை கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

முஸ்லீம்கள் சகிப்புத்தன்மையைக் கடைப்பிடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டது. பிரிவினையில் கவலையுற்றிருந்த முஸ்லீம்களுக்கு நம்பிக்கையூட்ட பாடுபட்டது. இந்திய முஸ்லீம்கள் பாகிஸ்தானில் சென்று குடியேறுவதைக் கண்டித்தது. இந்தியாவைத் தங்கள் தாய்நாடாக எண்ணி முகம்மதின் செய்தியை இங்குப் பரப்புமாறு அன்னாரைக் கேட்டுக்கொண்டது.

1960-64-இல் நாட்டின் பல பாகங்களிலும் இனவெறி மீண்டும் தலைதூக்கினது. முஸ்லீம்கள் கொடுமைப்படுத்தப் பட்டனர். ஆகையால் இனவெறியை முழு மூச்சுடன் எதிர்க்க இன்னொரு நான்காண்டுத் திட்டம் வகுக்கப்பட்டது (1964-68). இதற்காகப் பின் வரும் திட்டங்களை வகுத்தது:

1. மக்கள் பெரிய நஷ்டத்தை உண்டாக்கும் இனவெறியாட்டங்களில் ஈடுபடுவதற்குரிய முக்கிய காரணம் அன்னார் நாட்டின் உண்மை நிலையை அறியாததாகும். ஆகையால் உண்மை நிலைகளைப் பொதுமக்கள் அறிய வகைசெய்யவேண்டும்.
2. பெரும்பான்மை சமூகத்திலுள்ள சமாதானத்தை விரும்பும் மக்கள் அழிவை உண்டாக்குகிற சமூக விரோதிகளின் நடவடிக்கைகளைத் தடுக்கவேண்டும்.
3. ஆட்சியில் இருப்பவர்கள் இந்தச் சூழ்நிலையில் தங்கள் பொறுப்பைச் சரிவர செய்ய அன்னாரைத் தூண்டவேண்டும்.
4. வெளித் தாக்குதல்களின்போது முஸ்லீம்கள் பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் கடவுள்மேல் விசுவாசத்துடனும் இருப்பதுடன், அன்னார் குழப்பத்திற்கு இரையாகிவிடக்கூடாது. நிலைமையைத் தைரியமாய்ச் சமாளிக்கவேண்டும். சமய அடிப்படையிலும் ஒழுக்க அடிப்படையிலும் தவறல்லாத எல்லா உபாயங்களையும் கையாளலாம். சமாதானத்தை விரும்பும் இதர ஆற்றல்களின் ஒத்துழைப்பையும் அன்னார் நாடலாம்.

இந்நோக்கங்களுடன் 1964-இல் பண்டிதர் சயித் மஹ்முத் (Dr. Syed Mahamad, M.P.) தலைமையில் லக்னவ்வில் ஒரு மாநாடு நடந்தது. இதன் விளைவாக முஸ்லீம் மஜ்லிஸ்-இ-முஷாவராத் (Muslim Majlis-e-Mushawarat) என்னும் அமைப்பு ஏற்பட்டது. இவர்களுடைய பணிகள் எல்லோராலும் பாராட்டப்பட்டன.

## ஆ. கொள்கைகள்

பன்னிரண்டு குறிப்புகள் தரப்படுகின்றன.

1. செய்தி முஸ்லீம்களுக்கும் முஸ்லீம் அல்லாதவருக்கும் அறிவிக்கப்படவேண்டும். முஸ்லீம் சமூகம் (Millat) இஸ்லாமிய வாழ்க்கை வழியுடன் (Deen) நேரடித் தொடர்புகொண்டுள்ளதால், அதன்மேல் கூடுதல் கவனம் செலுத்தப்படவேண்டும்.

2. வாழ்க்கை வழியில் குறிப்பிட்டுள்ளபடி, செய்தி பாகுபாடின்றி எல்லா மக்களுக்கும் ஒன்றுபோல் அறிவிக்கப்பட வேண்டும். இருப்பினும் எல்லா இடங்களிலும் செல்வாக்கு உள்ளவரிடத்தில் அதிகக் கவனம் செலுத்தவேண்டும்; ஏனெனில் இவர்கள் மூலம் அதிக பலன் விளையும்.

3. செய்தி மனத்தில் பதியும்படி கொடுக்கப்படவேண்டும். இனிமேலுள்ள வாழ்வில் இரட்சிப்படைவதே வாழ்க்கையின் முக்கிய பிரச்சனை என்பதை மக்களுக்கு விளங்கவைக்கவேண்டும்.

4. இஸ்லாமியரிடையில் செய்தியைக் கூறியறிவிக்கும் போது, அந்தச் செய்தியை ஏற்றுக்கொள்வதால் நடைமுறை வாழ்க்கையில் செய்யவேண்டிய காரியங்களை வலியுறுத்துவது அவசியம். இதனால் அன்னார் இஸ்லாமுக்குப் புறம்பான கருத்தைக் கைவிடவும், தாங்கள் கட்டுப்பாடுடைய ஒரு சமூகம் என்பதை உணரவுங்கூடும்.

5. முஸ்லீம்கள் அல்லாதோருக்குச் செய்தி விளக்கப்படும்போதும் இஸ்லாமுக்குப் புறம்பான நம்பிக்கைகள் எடுத்துக்காட்டப்படவேண்டும். இதன் மூலம் இஸ்லாமைப் பற்றிய தப்பபிப்பிராயத்தைவிட்டு அன்னார் இஸ்லாமின் உண்மையை ஏற்றுக்கொள்ளக் கூடும்.

6. வாழ்க்கை வழி (Deen) கருத்து வழங்க இடமளிக்கும் சந்தர்ப்பங்களில் பாரபட்சமற்ற நேர்மையான கருத்து வழங்கப்பட வேண்டும். உலக சமாதானம், மனிதனது அடிப்படை உரிமைகள், மனித பரிவு, இஸ்லாமிய சகோதரத்துவம் முதலானவற்றைப் பற்றிய பிரச்சனைகள் எழும்போது பேசத் தயங்கக்கூடாது.

7. இஸ்லாமுக்குள் பிரச்சனைகள் ஏற்படும்போதும் பாரபட்சமற்று, கருத்துக்களை வழங்கவேண்டும், பொதுமக்களின் ஆதரவையும் பயன்படுத்தலாம்.

8. அரசியல் காரியங்களிலும் பாரபட்சமற்ற கருத்துக்கள் வழங்கப்படவேண்டும். மக்களுடைய சுதந்திரம்,

குழுக்களிடையில் உறவுகள், ஒழுக்கம், சட்டம் முதலானவை ஆபத்திற்குள்ளாகும்போது பேசாமலிருக்கக்கூடாது.

9. தீமையை அகற்றி நன்மையை நிறுவ எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டும். இதற்காக நாட்டில் மேற்கொள்ளப்படும் எல்லா முயற்சிகளுக்கும் ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும்.

10. இஸ்லாம் வாழ்க்கை வழி போதிக்கிறபடி எல்லா மனிதருக்கும் நேராய் சகோதர மனப்பான்மையை வளர்க்கவேண்டும்.

11. முஸ்லீம்கள் இஸ்லாமின் உண்மைகளைச் செயலிலும் சொல்லிலும் நாட்டில் வாழ்ந்துகாட்டி உடன் மக்களுக்கு அவற்றைப் போதிக்கும்படி அவை அவர்களுக்கு நன் முறையில் போதிக்கப்படவேண்டும்.

12. இஸ்லாமின் வாழ்க்கை வழிக்கு மக்களை அழைப்போரது வாழ்க்கை ஒரு முன்மாதிரியாக அமைய வேண்டும். ஆகையால் தலைவர்கள் தங்கள் வாழ்க்கையைக் குறித்து வெகு கவனமாக இருக்கவேண்டும்.

முஸ்லீம்களுக்குச் செய்தியைக் கூறுகையில், ஜமாத் பணியாள் தனது போதனையைக் கேட்டுப் புரிந்துகொண்டதாகக் கொள்ளும் நபர் முத்தாரிஃப் (*Mutaarif*) என்று அறியப்பட்டான். ஒரு திட்ட காலத்தில் ஒரு இலட்சம் முஸ்லீம்களுக்குச் செய்தி கூறப்படவேண்டும். ஜமாத்தின் போதனையைக் கேட்டு அதைப் புரிந்து ஏற்றுக்கொண்டவன் முத்தாஃபிக் (*Muttafiq*) என்று அறியப்பட்டான். ஒரு திட்ட காலத்தில் இருபத்தையாயிரம் முத்தாஃபிக்மாரை இலக்காகக் கொள்ளவேண்டும். ஜமாத்தின் விசுவாச அறிக்கையையும் நோக்கங்களையும் ஏற்று அவை எதிர்பார்க்கின்றவற்றை நிறைவேற்றவும் மனமுடையவன். ஆனால் ஜமாத்தில் சேர பக்தியற்றவன், ஹம்டார்ட் (*Hamdard*) என்று அறியப்பட்டான். ஒரு திட்ட காலத்தில் நாலாயிரம் ஹம்டார்டுகள் எதிர்பார்க்கப்படவேண்டும். பெண்களிடையிலும் பணி மேற்கொள்ளப்படவேண்டும்.

ஒரு திட்ட காலத்தில் முஸ்லீம்களல்லாதோர் முப்பதினாயிரம் பேரைச் சந்திக்கவேண்டும். ஆறாயிரம் பேருக்காவது செய்தியைச் சரியாகச் சொல்லிக்கொடுக்கவேண்டும்.

இவ்வாறு ஜமாத்-இ-இஸ்லாமி ஹிந்து என்னும் இயக்கம் தக்க நிருவாகத்துடன் சிறப்புற இயங்கிவருகிறது என்று காணலாம்.

## இ. முடிவுரை

ஜமாத், இஸ்லாமிய நம்பிக்கையைக் கைக்கொண்டு, அதை மற்றவர்களுக்கும் அறிவிக்க முனைகிறது. படைக்கிறவரும் பாதுகாக்கிறவரும், எல்லா மனிதருக்கும் ஆண்டவருமாகிய கடவுளுக்குக் கீழ்ப்படிய மக்களை அழைக்கிறது. எல்லாச் சமயங்களிலும் எல்லாக் காலத்திலும் தீர்க்கர்கள் மூலமாகக் கடவுள் வெளிப்படுத்தின உண்மைகளை உணர மக்களை அழைக்கிறது. இவ் வெளிப்படுத்தல்களில் குர்ஆனே முடிவானதும் இறுதியானதும் என்று கொள்கிறது. சுருங்கச் சொன்னால், முழுக்க முழுக்கக் கடவுளுடைய சித்தத்திற்கு அடங்கி வாழ (இஸ்லாம்), அதாவது இஸ்லாம் வாழ்க்கை வழியைக் (Deen) கடைப்பிடித்து ஒழுக, ஜமாத் மக்களை அழைக்கிறது.

இது இன ஒருமைப்பாடு, சகோதரத்துவம், ஒழுக்கம் ஆகியவற்றை வலியுறுத்துவது பாராட்டற்பாலது. அதிலும் இந்து-முஸ்லீம் வெறுப்பு வேளாவேளைகளில் தலைதூக்கும் இந் நாட்டில், ஜமாத்தின் பணி கடவுளின் பணியே என்பதில் ஐயமில்லை. இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்காகப் பாடுபடும் ஜமாத் கிறிஸ்தவர்கள் ஒத்துழைத்துச் செயலாற்றுவதற்கேற்ற ஒரு களமாகிறது எனலாம்.

### துணை நூற்கள்

1. *The Jamaat-E-Islami-Hind*, Jamal Press, Delhi-6, 1959.

2. *Policy and Programme of The Jamaat-E-Islami-Hind*, The Secretariat, The Jamaat-E-Islami Hind.

3. *The Constitution of the Jamaat-E-Islami-Hind*, Jamal Press. Delhi-6, 1965.

## நான்காம் பாகம்

# கிறிஸ்தவ சமய இயக்கங்கள்

அ. பிரிவினை இயக்கங்கள்

1. பெந்தேகோஸ்தே இயக்கம்
2. ஏழாம் நாள் வருகைக் கோட்பாட்டாளர் இயக்கம்
3. எகோவா சாட்சி இயக்கம்
4. அறநெறிப் போர் எழுச்சி இயக்கம்
5. சுப்பராவ் இயக்கம்

ஆ. நற்செய்திப்பணி இயக்கங்கள்

1. இந்திய மிஷனரிச் சங்கம்
2. இந்திய தேசிய மிஷனரிச் சங்கம்
3. நிர்மல் மிஷன்
4. பாரக்கல் மிஷன்
5. இதர பல மிஷனரி இயக்கங்கள்

அ

# பிரிவினை இயக்கங்கள்

ஜெ. பா. அலெக்சாந்தர்

## முன்னுரை:

திருச்சபையின் வரலாற்றில் இடையிடையே பல பிரிவுக் குழுக்கள் தோன்றியுள்ளன. திருச்சபையின் கோட்பாடுகளை மனமார ஏற்றுக்கொள்ளாத காரணத்தாலும், தங்கள் ஆத்ம பசியைத் தீர்க்க திருச்சபையில் ஒன்றுமில்லை என்று உணர்ந்த காரணத்தாலும், ஒரு தலைவனால் கவரப்பட்ட காரணத்தாலும் திருச்சபையின் ஒழுங்கான அமைப்பிலிருந்து பிரிந்து வாழும் எண்ணம் சிலருக்குள் உண்டாகிறது. இத்தகையோர் வித்தியாசமான எண்ணங்களுடையவர்கள். பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கைகளுக்கு மாறான கொள்கையுடையவர்கள். அத்தகைய சில குழுக்கள் திடீரென்று தோன்றி திடீரென்று மறைந்துவிட்டன; சில, நீண்டகாலம் நிலைத்திருக்கின்றன. நம் நாடு இதற்கு விதிவிலக்கல்ல. உலகில் எப்பகுதியிலுள்ள எவ்வித குழுக்களுக்கும் இங்கு நல்வரவு உண்டு. இக் குழுக்களுக்குப் பொதுவாயுள்ள ஒரு அம்சம், உண்மையை உண்மையல்லவென்று போதிப்பதும் உண்மை அல்லாததை உண்மையாகப் போதிப்பதுமேயாகும். நம் நாட்டில் தோன்றியுள்ள சில முக்கிய பிரிவுகளில் இது எவ்வாறு நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதை இங்கு ஆராய்வோம்.

## 1. பெந்தேகோஸ்தே இயக்கம்

## (Pentecostalists)

இவ்வியக்கத்தின் பெயரிலிருந்தே இது பெந்தேகோஸ்தே அனுபவத்தை முக்கியப்படுத்தும் இயக்கம் என்பது புலனாகும். பெந்தேகோஸ்தே நாளில் எருசலேமில் மேல் வீட்டறையில் நிகழ்ந்தது போன்று எல்லாக் கிறிஸ்தவர்களின் வாழ்க்கையிலும் நடந்தேறவேண்டுமென்பதை இவ்வியக்கத்தினர் வற்புறுத்துகின்றனர். பெந்தேகோஸ்தே நாளில் தூய ஆவியானவர் ஏறக்குறைய நூற்றிருபது பேரில் இறங்கினார். "அப்பொழுது வேகமாய் அடிக்கிற பலத்த காற்றைப்போல வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அக்கினி மயமான நாவுகள் போல பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு அவர்கள்

ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தன. யாவரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். தாங்கள் வசனிக்கும்படி ஆவி அருளியபடியே இதர பாஷைகளில் பேசத்தொடங்கினார்கள்'' (அப். 2: 2-4). இதே அடையாளங்கள் ஆவியானவர் ஒருவன் மேல் இறங்கும்பொழுது காணப்படும் என்றும், இத்தகைய பெந்தேகோஸ்தே அனுபவத்தைப் பெற்றவர்களே தூய ஆவியானவரைப் பெற்றவர்கள் என்றும் இவர்கள் நம்பினர். இதுவே பெந்தேகோஸ்தே இயக்கத்தின் பிரதான எண்ணம்.

பெந்தேகோஸ்தே நாளில்தான் அப்போஸ்தலர் காலத்திலிருந்து இயங்கிவரும் திருச்சபை பிறந்தது. தூய ஆவியானவரால் அபிஷேகம் பெற்று கிறிஸ்துவின் சரீரமாக சபை அமைந்திருக்கிறது. அன்று நூற்றிருபது பேருக்குமட்டுமல்ல, விசுவாசிக்கிற அனைவருக்காகவும் அவர் அருளப்பட்டார். அவர் திருச்சபையில் செயலாற்றி மக்களை அழைத்தும் வழிநடத்தியும் பல்வேறு விதத்தில் பயன்படுத்தியும் வருகின்றார். எல்லாரும், பெந்தேதோஸ்தே நாளில் சீடர்கள் ஆவியானவரைப் பெற்றது போல பெற்றால்தான் ஆவியைப் பெற்றவர்கள் என்று எண்ணுவது தவறு. பல்வேறு விதங்களில் தூய ஆவியானவர் மக்களை ஆட்கொள்ளுகிறார். புதிய ஏற்பாட்டின்படி, கிறிஸ்தவன் ஆவியைப் பெற்றவன்.

பெந்தேகோஸ்தே இயக்கம் உயிர்மீட்சிக் கூட்டங்களின் விளைவால் உண்டானது. 16-ஆம் நூற்றாண்டில் நடந்த சீர்திருத்தத்திற்குப் பின் பல இயக்கங்கள் தோன்றின. அவற்றில் ஒன்றாகிய 'தூயவர்' அல்லது 'பியூரிட்டேனியர்' என்னும் பிரிவும் இதில் அடிப்படையான சில எண்ணங்களுக்கு வழிவகுத்தது எனலாம். அதுபோல் ஜியார்ஜ் பாக்ஸ் 1648-இல் ஏற்படுத்திய நண்பர் கழகம் அல்லது ''குவேக்கர் பிரிவினர்'' அனுசரித்த கொள்கைகளும் பெந்தேகோஸ்தே இயக்கத்தின் கொள்கைகளுக்கு ஓரளவில் ஒத்தவையாகும். குவேக்கர் பிரிவினரிடமும் பலமொழி பேசும் நாவு வரம் காணப்பட்டது; இன்றும் காணப்படலாம். சார்ல்ஸ் வெஸ்லி, ஜான் வெஸ்லி ஆகியோருடன் உழைத்த ஜியார்ஜ் ஒயிட் பீல்ட் என்பாரின் கூட்டங்களிலும் உடல் நடுக்கங்களும், சத்தமிடுதலும் தன்னுணர்வு இழத்தலும் இருந்துள்ளன. ஆயினும் சார்ல்ஸ் வெஸ்லியும் ஜான் வெஸ்லியும் அதனை ஆதரிக்கவில்லை.

1880-இல் 'தூய்மை இயக்கம்' என்று ஒரு பிரிவு ஏற்பட்டது. இதில் தூய்மை அடைய நீதிகரிக்கப்படுதல், சுத்திகரிப்பு, ஆவியின் முழுக்கு அல்லது 'இரண்டாம் ஆசீர்வாதம்' ஆகியவை தேவை என்று வற்புறுத்தப்பட்டது. சிலர் தெய்வீக சுகம் பெறுதல், மொழிகள் பேசுதல் ஆகியவற்றிலும் நம்பிக்கை கொண்டனர்.

இவ்வியக்கத்திலிருந்து 1890உக்கும் 1894உக்கும் இடையில் இருபத்தைந்து வெவ்வேறு பிரிவுகள் ஏற்பட்டன. சார்ல்ஸ் பின்னி, டி. எல். மூடி, ஆர். ஏ. தோரி ஆகியோர் தூய்மை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் திருப்பமடைந்த நாள், தூய வாழ்க்கை, ஆவியின் முழுக்கு ஆகியவற்றைப் பற்றிய திட்டமான அனுபவங்களை வற்புறுத்தினர். இத்தகைய எண்ணங்கள் பல விதங்களில் வளர்ந்ததின் விளைவாக 1900-இல் பெந்தேகோஸ்தே இயக்கம் உருவானது.

இவ்வியக்கம் தற்பொழுது உலகின் பல பகுதிகளில் பரவியுள்ளது. 1955-இல் ஸ்டாககோம் என்னுமிடத்தில் கூடிய அனைத்துலக பெந்தேகோஸ்தே விசுவாசிகள் ஐம்பது லட்சம் எனக் குறிப்பிட்டுள்ளது.

பெந்தேகோஸ்தே பிரிவினரின் கோட்பாடு திருமறையே, அவர்களுடைய எண்ணங்களை வெளிப்படுத்தும் விசுவாசப் பிரமாணங்களோ, இறையியல் விளக்கங்களோ கிடையா. ஆயினும் அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தையும், நிசேய விசுவாசப் பிரமாணத்தையும் ஒப்புக்கொள்ளுகின்றனர். விசுவாசப் பிரமாணங்களில் 'கத்தோலிக்க சபை' என்னும் சொற்றொடருக்குப் பதிலாகக் 'கிறிஸ்தவ சபை' என்னும் சொற்றொடரைப் பயன்படுத்தியுள்ளனர்.

பெந்தேகோஸ்தே இறையியல் இலக்கியங்கள் இல்லாவிடினும், அவர்களது விசுவாசத்தை விளக்கும் கோட்பாடுகள் உள. இரண்டு தத்துவங்கள் அவர்களுக்கு அடிப்படையானவை. (1) திருமறையை எழுத்துக்கெழுத்து ஏற்கும் கோட்பாடு (Biblicism). (2) அனுபவத்திலேயே நம்பிக்கைவைக்கும் முறை (Empiricism). திருமறையிலுள்ள வசனங்களை அளர்கள் அப்படியே எடுத்து உபயோகிக்கின்றனர். திருவசனம் மனச்சாட்சியையும் பகுத்தறிவையும் விட மேலானது. ஆனால், அது பகுத்தறிவுக்கு மாறானதல்ல. மேலும் மூன்று அனுபவங்களில் தூய்மையான கோட்பாடு அடங்கியுள்ளது.

1. மறுபடியும் பிறத்தல் (யோ. 3: 3).
2. தூய்மைப்படுதல் (எபி. 12: 14; 13: 12).
3. தூய ஆவியின் அபிஷேகம் பெறுதல் (அப். 1: 4-8).

அவர்களுடைய கோட்பாடுகளில் பல திருச்சபையின் விசுவாசத்திற்கு முரண்பட்டவையல்ல. திரித்துவக் கொள்கையை அவர்கள் நம்பினாலும் பிதாவைவிட இயேசுவையே அதிகமாக உச்சரிக்கின்றனர். விண்ணப்பங்கள் பெரும்பாலும் இயேசுவுக்கு ஏறெடுக்கப்படுகின்றன. விசுவாசிகளை இயேசுவின் பிள்ளைகள் என்று அழைப்பது சாதாரணம். இது சில எழுப்புதல் இயக்

கங்களுக்குப் பொதுவானது. எனவே, சிலர் இயேசுவின் நாமத்தில் மட்டும் திருமுழுக்குக் கொடுக்கின்றனர். ஆனால் பேந்தே கோஸ்தே இயக்கத்தினர் பெரும்பாலும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் திருமுழுக்கு அளிக்கின்றனர். பரிசுத்த ஆவியைப் பற்றி அடிக்கடிப் பேசுவார்கள். அருளுரைகளில் அது மிகுதியாக இடம் பெறுகிறது. பரிசுத்த ஆவி அடிக்கடி ஒரு சக்தியாக எண்ணப்படுகிறது. ஆனால் சாத்தான் ஆள்த்துவமுடையவன் என்பதையும் நரகம் உண்டென்பதையும் அவர்கள் நம்புகின்றனர்.

பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்தும் சாத்தானின் அடிமைத்தனத்திலிருந்தும் விசுவாசிக்குப் பூரணமான விடுதலை கிடைத்துவிட்டதென்னும் தொனி அவர்களது சாட்சியில் அடிக்கடிக் கேட்கப்படும். இனி அவர்கள் பாவஞ் செய்வதில்லை. சாத்தான் அவர்களை ஒன்றும் செய்யமுடியாது. "தேவனால் பிறந்தவன் பாவஞ்செய்யான்". பாவத்தைப் பற்றிய சரியான எண்ணம் இல்லாமையே இதற்குக் காரணம். ஆயினும் விசுவாசிக்குப் போராட்டம் உண்டென்பதை அவர்கள் ஒத்துக்கொள்கின்றனர். விழுந்துபோகும் அனுபவங்களும் அவர்களுக்குள் உண்டு.

விசுவாசத்தினால் நீதிமானாகத் தீர்க்கப்படுதல் அவர்களுடைய கோட்பாடுகளில் ஒன்று. ஆயினும், மனிதன் செய்ய வேண்டியதை அவர்கள் முக்கியப்படுத்தும் அளவில் மீட்புக்குக் கிரியை அவசியமென்பது வலியுறுத்தப்படுகிறது. கிருபையின் மார்க்கத்தைக் கிரியையின் மார்க்கமாக்குகின்றதாகக் காணப்படுகிறது. வசனத்திற்குக் கீழ்ப்படிதல் வலியுறுத்தப்படுகிறது. இயேசுகிறிஸ்துவின் மீட்பின் வல்லமையை இது மட்டுப்படுத்துகிறதாகத் தோன்றுகிறது. மனிதன் செய்யும் எதுவும் கிறிஸ்து பாவிக்காகச் செய்த செயலுக்கு இணையாகாது.

திருமுழுக்கை அவர்கள் முக்கியப்படுத்துகையில், அது மீட்புக்கு இன்றியமையாததென்பதல்ல, முழு கீழ்ப்படிதலுக்கு அது அவசியமானது என்பதையே வலியுறுத்துகின்றனர். இதை அவர்கள் வலியுறுத்துகையில் திருமுழுக்கினால் வரும் பலனை விட அதை எடுப்பது அதிக முக்கியம் என்று தோன்றுகிறது. அனுபவத்தை முக்கியப்படுத்துகிறவர்கள் இங்கே சடங்கை அதைவிட முக்கியமாகக் கருதுகின்றனர்.

பருவமடைந்தவர்களே திருமுழுக்குப் பெறலாம் என்பர். குழந்தைகளுக்குத் திருமுழுக்குக் கொடுப்பது திருமறைக்கு விரோதமானதென்று கூறுவர். இயேசுகிறிஸ்துவில் வெளிப்பட்ட ஒளியின் அடிப்படையில் கவனிக்கையில் இவ்வாறு அவர்கள் எண்ணுவது தவறு. திருச்சபையில் முதல் நூற்றாண்டி

லிருந்தே குழந்தைத் திருமுழுக்குப் பின்பற்றப்பட்டது என்பது தெளிவு. திருச்சபை வரலாற்றில் முதலாவது குழந்தைகளுக்குத் திருமுழுக்குக் கொடுப்பது சரியல்ல என்று விவாதிக்கப்பட்டது கி.பி. 1525-இலேயாகும். சூரிச் நகரில் கிராபெல், மேன்ஸ் ஆகியோர் மார்ட்டின் லூத்தர் ஏற்படுத்திய மறு சீராக்கத்தை ஒப்புக்கொண்டு சபையில் இன்னும் கூடுதலான சீர்திருத்தம் தேவை என்று உணர்ந்தனர். திருமறையில் குழந்தைகளுக்குத் திருமுழுக்குக் கொடுப்பதைப்பற்றி ஒரு ஆதாரமும் இல்லாதபடியால் குழந்தைகளுக்குத் திருமுழுக்குக் கொடுப்பது சரியல்ல என்று வாதித்தனர். இத்தகைய கொள்கை கடவுள் ராஜ்யத்திற்குக் குழந்தைகளை விலக்குவதுபோல் தோன்றுகிறது. எனினும், சிலர் குழந்தைகளை ஆசீர்வதிக்கும் ஒழுங்கையும் பின்பற்றுகின்றனர். சிறுபிள்ளைகள் கடவுள் ராஜ்யத்திற்குரியவர்கள். தங்கள் செயல்களுக்குப் பொறுப்புள்ளவர்களாகுமட்டும் அவர்கள் கடவுள் ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள் என்பது சிலரால் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

இவ்வியக்கத்தைச் சேர்ந்த சில பிரிவினர் (கடவுளின் சபை) ஒரு உடன்படிக்கையுடன் மக்களைச் சபையில் சேர்க்கின்றனர். "திருமறையைக் கடவுள் வார்த்தையாக ஏற்றுக்கொண்டு புதிய ஏற்பாட்டை விசுவாசத்திற்கும், நடத்தைக்கும், ஆளுகைக்கும், சிட்சைக்கும் சட்டமாக ஒப்புக்கொண்டு, அறிவுக்கும் திறமைக்கும் ஏற்றவாறு அவ்வெளிச்சத்தில் நடந்து சபைக்குத் தசமபாகம் செலுத்தி, பொது மன்றம் போதிக்கும் யாவற்றையும் கைக்கொள்வாயா?" என்ற வினா கேட்கப்படுகிறது.

சிலர் திருமுழுக்குக் கொடுக்கும்போது பின்வரும் வார்த்தைகளைக் கூறி திருமுழுக்குக் கொடுக்கின்றனர்: "ஆண்டவரின் கட்டளைப்படி, நீ மனம் மாறினாய் என்று கூறியதையும், கடவுள் பேரிலுள்ள உன் விசுவாசத்தையும் ஆதாரமாய்க் கொண்டு கிறிஸ்துவுக்குள் உனக்குப் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கிறேன்."

திருமுழுக்குக் கொடுக்கும் ஆராதனையில் திருமறை வாசிக்கப்பட்டபின் போதனை கொடுக்கப்படுகிறது. அப்பொழுது திருமுழுக்குப் பெறவேண்டியவர்கள் முன் வந்து நிற்கின்றனர். அதன்பின் திருமுழுக்குக் கொடுக்கப்பட்டு ஒரு பாடலுடனும் ஜெபத்துடனும் ஆசீர்வாதம் கூறப்பட்டு ஆராதனை முடிவடைகிறது.

புனித நற்கருணை, சில பிரிவுகளில் ஆண்டுக்கொருமுறை நடத்தப்படுகிறது. வருடாந்தர ஆவிக்குரிய எழுப்புதல் கூட்டங்கள் நடக்கும் தருணத்தில் அது நடத்தப்படுகிறது. பிற சடு

யங்களில் அவர்கள் சேர்ந்திருக்கும் சபைகளில் நற்கருணை எடுப்பார்கள். வேறு பிரிவுகளில் அடிக்கடி நடத்தப்படுவதும் உண்டு. நற்கருணை எடுப்பது பாவமன்னிப்புக்காக அல்ல, நினைவுகூருதலுக்காகவே. கிறிஸ்துவின் ஆவிக்குரிய பிரசன்னத்திற்கு அடையாளங்களாக அவை எண்ணப்படுகிறது. அதில் பங்குபெறுபவர்களுக்குச் சுகமளிக்கும் கிருபை உண்டு.

நற்கருணைக்குப்பின் "கால்களைக் கழுவுதல்" நடைபெறுகிறது. யோ. 13: 1-10 வசனங்களை ஆதாரமாய்க் கொண்டு இதைச் செய்கின்றனர். ஆனால் சிலர் இதைப் பின்பற்றுகிறதில்லை. ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே ஒரு திரை தொங்கவிடப்படுகிறது. பின் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவுகின்றனர்.

1 கொரி. 12-இல் கூறப்பட்ட எல்லா வரங்களும் இக்காலத்திற்குமுரியது என்று அவர்கள் எண்ணுகின்றனர். குறிப்பாக, அந்நிய மொழிகளில் பேசும் நாவு வரம், தீர்க்கதரிசன வரம், குணமாக்கும் வரம் ஆகியவை அவர்களால் மிகவும் வற்புறுத்தப்படுகின்றன. இவை மூன்றிலும் நாவு வரமே பெரியது எனப்படுகிறது. விசுவாசத்தினால் நீதிகரிக்கப்படும் எண்ணத்தில் அவர்கள் லூத்தரன் விசுவாசத்தையும், திருமுழுக்கைப் பொறுத்த அளவில் அவர்கள் பாப்திஸ்து கொள்கையையும், பரிசுத்தமாக்கப்படுதலில் மெதடிஸ்து எண்ணத்தையும் உடையவர்கள். ஆனால், ஆவியின் முழுக்குப்பெற்று அந்நிய மொழிகளில் பேசுவதில் அவர்கள் பெந்தெகோஸ்தே எண்ணமுடையவர்கள். இவ்வாறு அவர்கள் கலப்புக் கொள்கை உடையவர்கள். சிலர் 8 மொழிகளில் பேசுகின்றனராம். விளங்காமல் பேசுகிறதும் உண்டு. சில வேளைகளில் சில வார்த்தைகளை மட்டும் சொல்வார்கள். இப் பரவசப் பேச்சுக்கு அர்த்தம் கூறுபவர்களும் உண்டு. சிலவேளைகளில் கேட்கப்படும் வார்த்தைகள் எச்சரிப்பாகவும் உறுதிமொழியாகவும் காணப்படும். சான்றாக "காலம் குறுகினது. கர்த்தர் சீக்கிரம் மேகங்கள்மேல் வருகிறார், கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன். ஒன்றும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை. நான் உன்னை அபிஷேகம் பண்ணுவேன். சத்தியம் ஜெயிக்கும்". இது ஒரு பரவசப் பேச்சிலுள்ளதாகும்.

அப். 19: 12இல் கூறப்பட்டபடி குணமாக்குதல் அறிவிக்கப்படுகிறது. கைக்குட்டைகள், கச்சைகள் திருமறையின் மேல் வைக்கப்பட்டு, ஜெபித்து, எண்ணெய்யால் அபிஷேகம் பண்ணப்பட்டு அனுப்பப்படுகின்றன.

தொழுகையில் உணர்ச்சிக்கு மேலான இடம் கொடுக்கப்படுகிறது. எனவே, தொழுகை உணர்ச்சியை உண்டாக்கும் அளவில் செய்யப்படுகிறது. சத்தத்தை அடக்கிக்கொள்வது தவறு. ஆவியின் செயலாற்றுதலுக்கு முற்றிலுமாய்த் தங்களை

விட்டுக்கொடுக்க வேண்டுமென்று இவ்வாறு முயலுகின்றனர். கைதட்டிப் பாடி ஆர்ப்பரிக்கின்றனர். காத்திருந்து ஜெபித்த லும் அவர்களுக்கு இன்றியமையாதது. இரண்டாம் வருகையைப் பற்றியுள்ள எதிர்பார்ப்பில் உபவாசித்து ஜெபிக்கின்றனர்.

ஒருவிதமான சபை ஆட்சி முறையையே அவர்கள் பின்பற்றுகிறார்கள். போதகர், சகோதரர், சகோதரிகள் ஆகியோர் ஊழியத்தில் பங்குபெறுகின்றனர். தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரும் சில பிரிவுகளில் மேற்பார்வையாளரும் செயலாற்றுகின்றனர். விசுவாச வீடுகளில் தொழுகை செய்கின்றனர். தாங்களே மணவாட்டிச் சபை என்ற எண்ணம் அவர்களுக்குண்டு.

பெந்தேகோஸ்தே இயக்கத்திற்குள் ஏராளமான பிரிவுகள் உள. தங்களுக்குள் ஒருமைப்படவேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்குண்டு. ஆகவே, முதல் பெந்தேகோஸ்தே அனைத்துலக மாநாடு ஆஸ்லோவில் 1911-இல் நடைபெற்றது. 1920-இல் ஆம்ஸ்டர்டாமிலும், 1939-இல் ஸ்டாக்கோமிலும் 1947-இல் சூரிச்சிலும், 1949-இல் பாரிஸிலும், 1952-இல் லண்டனிலும், 1958-இல் டாரன்டோவிலும், 1961-இல் எருசலேமிலும் அனைத்துலக மாநாடுகள் நடைபெற்றன. சபைகளின் அனைத்துலக ஆலோசனை மன்றத்தில் 1961 வரை அவர்கள் சேரவில்லை. 1961-இல் புதுடில்லியில் நடைபெற்ற சபைகளின் அனைத்துலக ஆலோசனை மன்றத்தில் தென் அமெரிக்காவிலிருந்து இரு பெந்தேகோஸ்தே பிரிவினர் வந்திருந்தனர்.

கிறிஸ்தவர்களுக்குள்ளிருந்தே ஆட்களைப் பிடித்தல், குழந்தைத் திருமுழுக்கைத் தாக்குதல், இரண்டாம் திருமுழுக்குக் கொடுத்தல், சபைகளைக் குற்றப்படுத்தியே பேசுதல், மருத்துவப் பணியை இழிவாய் எண்ணுதல், கிறிஸ்துவினாலுண்டாகும் மீட்புப் போதாது, மற்றொரு அனுபவம் தூய ஆவியானவரால் அருளப்படுகிறது என்று கூறுதல், தூய ஆவியைப் பெற்றதற்கு மறுமொழியில் பேசுவது இன்றியமையாததென்று கூறுதல் ஆகியவை இப் பிரிவிலுள்ள தீய உபதேசங்கள்.

## 2. ஏழாம் நாள் வருகைக் கோட்பாட்டாளர் இயக்கம்

## (Seventh Day Adventists)

திருமதி எல்லன் ஒயிட் (Mrs. Ellen White) அம்மையாரால் இவ்வியக்கம் நிறுவப்பட்டது. அமெரிக்காவில் மாசச்சூசெட்ஸில் பாப்திஸ்து சபையைச் சேர்ந்திருந்த உல்லியம் மில்லர் (1782—1849) திருமறையிலுள்ள தீர்க்கதரிசனங்களை

ஆராய்ந்து கிறிஸ்து 1843-இல் வருவாரென்று முடிவுகட்டினர். அவருடைய எண்ணங்களை அவரோடிருந்தவர்கள் பரப்பினதின் பயனாக ஒரு இயக்கம் உண்டானது. 1843-இல் ஒன்றும் உலகில் ஏற்படாதபோது, மில்லர் மீண்டும் தீர்க்கதரிசனங்களை ஆராய்ந்து கிறிஸ்துவின் வருகை 1844-இல் நடக்குமென்று தெரிவித்தார். 1844-இலும் உலகில் ஒரு மாறுதலும் ஏற்படவில்லை. அப்பொழுது அவர்கள் ஏனைய சபையோர்களால் துன்புறுத்தப்பட்டனர். ஆகவே, அவர்கள் தங்களுக்கென்று ஒரு சபையை உருவாக்கி, அதற்கு அட்வன்திஸ்ற் சபை (Adventist Church) என்று பெயரிட்டனர்.

உல்லியம்மில்லர் தான் கூறிய தீர்க்கதரிசனத்தின் தவறை உணர்ந்தபோதும், எல்லன் ஒயிட் அது உண்மை என்றும், 1844-இல் மெய்யாகவே கிறிஸ்து பூமிக்கல்ல பரலோகத்திலுள்ள பரிசுத்த ஸ்தலத்தில் வந்துள்ளார் என்றும் கூறினள். பின்பு சனிக்கிழமையை ஓய்வுநாளாக ஆசரித்து ஏழாம் நாள் வருகைக்கோட்பாட்டாளர் பிரிவை நிறுவினள்.

சனிக்கிழமையை ஓய்வுநாளாக ஆசரிக்கத் துணிந்ததற்கு ஒரு தரிசனம் காரணமாயிருந்தது. அத் தரிசனத்தில் பரலோகத்திலுள்ள பரிசுத்த ஸ்தலத்திற்கு அவள் எடுத்துக் கொள்ளப்பட்டாள். அங்கே இயேசு உடன்படிக்கைப் பெட்டியைத் திறந்து காட்டினர். அதில் பத்து கற்பனைகள் எழுதப்பட்ட கற்பலகைகளை அவள் கண்டாள். அவற்றில் நாலாவது கற்பனையைச் சுற்றி பிரகாசமுள்ள ஒளி இருப்பதையும் அந்தக் கற்பனை மட்டும் மத்திபத்தில் இருப்பதையும் கண்டு அதிசயித்தாள்.

எனவே, ஏழாம் நாளில் ஓய்வுநாளை ஆசரித்தல் இப் பிரிவினருக்குப் பிரதானம். முதலாம் நாளை ஓய்வுநாளாக ஆசரித்தல் மிருகத்திற்குரிய அடையாளம். ஏழாம் நாளை ஆசரிக்கிற அவர்களே 1,44,000 பேரைச் சேர்ந்தவர்கள். மா. 2: 27, 28-இல் "மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராயிருக்கிறார்" என்று கூறப்பட்டதனல், யூத ஓய்வு நாளாகிய ஏழாம் நாளே ஆண்டவரின் நாள்; தரி. 1: 10-இல் கூறப்பட்டுள்ள ஆண்டவரின் நாள் சனிக்கிழமையேயாகும் என்று சாதிக்கின்றனர். மேலும், ஆண்டவரே ஆதி. 2: 1-8-ஐக் குறிப்பிட்டு, ஓய்வுநாள் மனிதனுக்காக உண்டாக்கப்பட்டது என்றார் (மா. 2:27). யாத். 20: 8-11-இல் "கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து அதைப் பரிசுத்தமாக்கினர்" என்று கூறப்பட்டுள்ளது. யூதர் ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்கினமையால் எருசலேம் விழுவதற்கும் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போகவும் நேர்ந்தது. கிறிஸ்துவே ஏழாம் நாளை ஆசரித்தார் (லூ.

4: 16); அவர் பிதாவின் கட்டளைகள் எல்லாவற்றையும் கைக்கொண்டார். (யோ. 15: 10).

வாரத்தின் முதல் நாளில் விசுவாசிகள் கூடினதாகச் சொல்லப்படும் இடங்கள் அப். 20: 1-13, 1 கொ. 16: 2 ஆகும். அப். 20இல் கூறப்படும் நிகழ்ச்சி நடந்தது சனிக்கிழமை இரவில். அது துரோவாவில் நடந்த வழி அனுப்புக்கூட்டம். ஞாயிறு காலையில் பவுல் அகோஸுக்குப் புறப்பட்டுச் சென்றார். 1 கொ. 16: 2-இலுள்ளது ஒரு ஆராதனை.

வாரத்தில் எந்தநாளையும் ஓய்வுக்காகத் தெரியலாம். ஆனால் அது கடவுளின் ஓய்வுநாளாயிராது. ஒருவரது பிறந்த நாளை வேறொரு நாளில் ஆசரிப்பதால், பிறந்தநாள் மாறிவிட முடியாது. ஞாயிற்றுக்கிழமை மனிதனால் ஏற்படுத்தப்பட்ட ஓய்வு நாள். சனிக்கிழமை கடவுளால் ஏற்படுத்தப்பட்ட ஓய்வு நாள். ஞாயிற்றுக்கிழமையை ஓய்வுநாளாக எண்ணுவது, மனிதன் "தெய்வமெனப் படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவது எதுவோ அவை எல்லாவற்றிற்கும் மேலாக தன்னை உயர்த்துவதற்குச் சமம்" (2 தெச. 2: 4).

இவ்வாறு ஓய்வுநாளை மாற்றுகிறவர்களைக் குறித்து தானி. 7: 25-இல் கூறியிருக்கிறது என்பர்: "அவன்.........உன்னதமானவருக்கு விரோதமாகப் பேசி உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை அழித்துத், திருநாட்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்".

ஆனால், நாளிலல்ல முக்கியத்துவம் உளது. இயேசு ஓய்வு நாளுக்குக் கொடுத்த புரட்சிகரமான கருத்தினால் அவர் ஓய்வு நாளை மீறுகிறவர் என்று குற்றஞ் சாட்டப்பட்டார். இரக்கம் பாராட்டுவதே முக்கியமென்பதைப் போதித்தார். கடவுளை நாட்களுக்கும் சமயங்களுக்கும் கட்டுப்படுத்துவது கடவுளைப் பற்றிய ஆழ்ந்த எண்ணத்தைக் குறிக்கவில்லை. மேலும் ஓய்வு நாள் மனமகிழ்ச்சியின் நாள். இயேசு உயிர்த்தெழுந்த நாளைத் தவிர மகிழ்ச்சிக்குரிய நாள் கிறிஸ்தவனுக்கு இல்லை. எனினும் நாளுககு நாம் அடிமைப்பட்டவர்களல்ல. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலோடு இணைக்கப்படுவதே மெய்யான இளைப்பாறுதலைத் தரும். புதியவை வரும்போதே பழையவைகள் ஒழியும். கிறிஸ்தவர்கள் தங்கள் வழிபாடுகளை நடத்த யூத வழிபாடுகளிலிருந்து பிரியவேண்டியதாயிற்று. இவ்வாறு கர்த்தருடைய நாள், அதாவது உயிர்த்தெழுந்த நாள் ஆதிச் சபையில் ஆவிக்குள்ளாகும் நாளாயிற்று.

கிறிஸ்துவின் பிராயச்சித்தப் பலியைக் குறித்து எல்லன் வினோதமான எண்ணத்தையுடையவளானாள். சிலுவையில் அவ

ரது ஆசாரியத்வப் பணி முடியவில்லை என்று கூறினர். அவர் அரசனாக ஏற்படுமுன் பெரிய பிராயச்சித்தத்தைப் பரலோகி லுள்ள மகா பரிசுத்த ஸ்தலத்தில் செய்வார். பரத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது கிறிஸ்து மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்கவில்லை என்றுள். ஆனல் எபிரேயர் 1: 3உக்கு இது விரோதமானது.

பாரசீக அரசனாகிய அர்த்தசஷ்டா எருசலேம் ஆலயத்தைக் கட்ட கட்டளையிட்ட ஆண்டு (எஸ்ரா 7: 7) கி.மு. 457. தானியேல் 8: 14இல் இரண்டாயிரத்து முன்னூறு நாட்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருநாள் ஒரு ஆண்டுக்குச் சரி. ஆகவே கி. மு. 457இலிருந்து இரண்டாயிரத்து முன்னூறு ஆண்டுகள் சென்றால் கி.பி. 1844 ஆகும். .தானியேல் 8: 14இன் படி "அதன் பின்பு பரிசுத்த ஸ்தலம் சீரடையும்". ஆகவே கி.பி. 1844இல் கிறிஸ்து வந்தாயிற்று. ஆனல் உலகத்திற்கல்ல, பரிசுத்த ஸ்தலத்திற்கு அவர் வந்தார். அத்துடன் நியாயத்தீர்ப்பு ஆரம்பித்துள்ளது.

எபிரெயர் நிருபத்தின் ஆக்கியோன் இயேசு பரத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்துள்ளாரென்று கூறியுள்ளார். மேலும், 1844 வரை கிறிஸ்துவின் பணி என்ன? திருமறையை நாட்களைத் திட்டமிடுவதற்காக பயன்படுத்துவது தவறான முறையாகும். தீர்க்கதரிசிகளின் வேலை திட்டமான காலக் குறிப்புகளை முன் அறிவிப்பதே என்று எண்ணுவதும் தவறு. கால அட்டவணையைத் திருமறையில் காண முயல்வது வீண். இயேசுவே 'அந்நாளைக் குமாரனும் அறியார்' என்று கூறும்பொழுது இவ்வாறு காலங்களைத் திட்டமிடுவது மேசியாவைவிட தங்களுக்கு மேலான அறிவு உண்டு என்று கூறுவதாகும்.

மரணத்திற்குப் பின்னுள்ள நிலை உணர்வற்ற நிலை என்றும் அவர்கள் கூறுகின்றனர். சங். 146: 4; பிர. 9: 5, 6, 10; தானியேல் 12: 2 ஆகிய வசனங்களை இதற்கு ஆதாரமாய் உபயோகிக்கின்றனர். இது புதிய ஏற்பாட்டு எண்ணத்திற்கு மாறுபட்டது.

எனவே, இக் கொள்கையினருடைய மூன்று முக்கியமான எண்ணங்கள் புதிய ஏற்பாட்டுக்கு விரோதமானவை என்பது தெளிவு.

## 3. எகோவா சாட்சி இயக்கம்

## (Jehowah Witness Movement)

இப் பிரிவினர் பல பெயர்களால் தங்களை அழைக்கின்றனர். இப் பெயரைத் தவிர விழிப்புக் கோபுரம் (Watch Tower), இரசல் கூட்டத்தார் (Russelite) அனைத்துலக வேத மாணவச் சங்கம் (The International Bible Students' Association), ஆயிர ஆண்டு ஆட்சிப் பொழுதுக்குரியவர் (Millenial Dawnists), என்னும் பெயர்களுடன் தற்காலத்தில் சபையாரின் சுதேச மிஷனரி இயக்கம் (Laymen's Home Missionary Movement) என்னும் பெயரையும் சேர்த்துள்ளார்கள். இதை ஆரம்பித்து வைத்தவர் பிட்ஸ்பர்கிலிருந்த சார்ல்ஸ் டேஸ் இரசல் (Charles Taze Russell) என்பவராகும்.

இரசல் தமது இயக்கத்தை 1879இல் ஆரம்பித்தார். தமது போதனையில் உலக முடிவு 1914இல் ஏற்படும் என்றார். ஆனால் அவ்வாண்டில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் ஒன்றும் நடைபெறவில்லை. 1916இல் இரசல் மரித்தார். அவரது பின்னடியார்கள் 1984இல் உலகம் முடியுமென்று கூறினார்கள். இரசலது மரணத்திற்குப் பின் ரூதெர்போர்ட் (Rutherford) அவரது கொள்கைகளைத் திறமையுடன் பரவச் செய்தார். 1880இல் இக் கொள்கை இந்தியாவுக்கு வந்ததாகச் சொல்லப்படுகிறது.

இயேசுவைப் பற்றிய அவர்களது போதனை கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் தோன்றின அரியூ திரிபுக் கொள்கையை ஒத்தது. எகோவா ஒரே கடவுள். இயேசு கடவுளின் நித்திய குமாரன் என்பதை மறுத்து, தூய ஆவி எகோவாவின் சக்தி என்று கூறுகின்றனர். எனவே, திரித்துவக் கொள்கையில் அவர்களுக்கு நம்பிக்கை கிடையாது.

இயேசு பிறப்புக்குமுன் பிரதான தூதனாகிய மிகாவேலாக இருந்தாரென்பது அவர்களது உபதேசம். இதற்குத் தானி. 12: 1ஐ ஆதாரமாய்க் கூறுகின்றனர். "உன் ஜனத்தாரைப் பாதுகாக்கும் பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்தில் எழும்பி வருவான்". அவர் மாம்சத்திலிருக்கையில் தமது தூதத் தன்மையை விட்டுவிட்டு சாதாரண மனிதனாயிருந்தார் என்றும் அவர்கள் கூறுகின்றனர். இயேசு தெய்வீகமானவரில்லாவிடினும் மனிதரை மரணத்திலிருந்து விடுவிப்பதற்குரிய மீட்கும் பொருளைத் தமது மரணத்தால் செலுத்தினார். அவரது பிராயச்சித்தப் பலி ஆயிர ஆண்டு ஆட்சிவரை பலிக்கும்.

இயேசுவைப்போல் நடப்பதாலே மீட்பு உண்டாகுமென்பது அவர்களது விசுவாசம். எனவே மீட்புக்கு சுய முயற்சி இன்றியமையாதது.

இயேசுவுக்கு உயிர்த்தெழுதலில் ஒரு புது ஆவிக்குரிய சரீரம் அளிக்கப்பட்டதென்றும், அவருடைய உடல் அற்புதமாய்க் கல்லறையிலிருந்து நீக்கப்பட்டதென்றும் அவர்கள் நம்புகின்றனர்.

இயேசுகிறிஸ்துவில் மெய்யான மனிதத்துவம், மெய்யான தெய்வத்வம் ஆகிய "இரு தன்மைகள் யாதொரு குழப்பமும், பேதமும், பிரிவும், குணவேறுபாடும் இல்லாமல் இசைந்திருக்கின்றன" என்று கால்சிதோன் ஆலோசனைச் சங்கத்தில் செய்யப்பட்ட முடிவை இறசல் வன்மையுடன் தாக்கியுள்ளார். 'மனிதனாகிய இயேசு' என்று அவர் தமது நூல்களில் குறிப்பிட்டுள்ளார்.

மரணத்தில் எல்லா மனிதரும் அழிவை அடைகின்றனர். ஆனால் கிறிஸ்துவின் 2-ஆம் வருகையில் எல்லாரும் எழுப்பப்படுவார்கள். அதன்பின் இரண்டாம் தடவை தருணம் அளிக்கப்படுகிறது. இந்த இரண்டாம் தருண கோட்பாட்டுக்குப் புதிய ஏற்பாட்டில் ஆதாரமில்லை; இரண்டாம் தருணத்திலும் மீட்பைத் தள்ளுகிறவர்கள் முற்றிலுமாக அழிவடைவார்கள். நித்திய ஆக்கினையோ நித்திய வேதனையோ கிடையாது. நித்திய காலமாக கடவுள் மனிதனை வாதிப்பாரானால் அவர் அன்புள்ள கடவுளாயிருக்கமுடியாது.

ஆயிர ஆண்டு ஆட்சியில் பூமி தன் விளைச்சலைப் பிறப்பிக்கும். அப்பொழுது வனந்தரமும் விடாய்த்ததுமான பூமியெல்லாம் ஏதேன் தோட்டமாய் மாறும். பூமி 5 70,000,00 சதுர மைல் பரப்பளவு உடையது. அதில் இதுவரையில் வாழ்ந்த எல்லாருக்கும் இடமுண்டு. 200 குடும்பங்கள் வாழ்வதற்குரிய ஒரு கிராமத்திற்கு 1275 ஏக்கரா பூமி கிடைக்குமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். பூமியில் இடமில்லாவிட்டால் சமுத்திரத்தில் கடவுள் தரை உண்டாகச் செய்வார், அர்மகதோன் போருக்குப்பின் 1,44,000 எகோவாவின் சாட்சிகள் கிறிஸ்துவுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டு புது பூமியில் கிறிஸ்துவோடு ஆளுவார்கள்.

ஏசா. 53: 10 என்னும் வசனத்தை ஆதாரமாய்க் கொண்டு ருதர்போர்டால் 1931இல் 'எகோவாவின் சாட்சிகள்' என்னும் பெயர் இப் பிரிவினருக்குக் கொடுக்கப்பட்டது. 'எகோவா' பழைய ஏற்பாட்டில் கடவுளுக்கு அருளப்பட்ட பெயர். புதிய ஏற்பாட்டில் கடவுளை இயேசுகிறிஸ்துவின் மூலம் பிதாவாக அறிகிறோம்.

**அவர்களது வெற்றிக்குக் காரணங்கள்.**

1. சிறந்த சான்றுகளுடன் கவர்ச்சிகரமான போதனைகள் கொடுக்கின்றனர்.

2. திருமறையைத் தாராளமாய்ப் பயன்படுத்துதல். இரசல் தம் நூல்களில் 5,000 மேற்கோள்கள் திருமறையிலிருந்து கையாண்டுள்ளார்.

3. இயக்கத்திலுள்ள ஒவ்வொருவரும் சாட்சி என்பது அவர்கள் குறிக்கோள்.

4. கவர்ச்சிகரமான நூல்கள் மூலமாகவும், வானொலி, இசைத் தட்டுக்கள் மூலமாகவும் செய்தி பரப்புகின்றனர்.

5. நரக பயங்கரத்தைத் தவிர்க்கின்றனர்.

6. போர்புரிதலையும் ஆடம்பரத்தையும் கண்டிக்கின்றனர்.

## 4. அறநெறிப் போர் எழுச்சி இயக்கம்

## (Moral Re-Armament Movement)

## அல்லது ஆக்ஸ்பர்ட் கூட்டு இயக்கம்

## (Oxford Group Movement)

இதை நிறுவினவர் மறைத்திரு. பிராங்க் டி. புக்மான் (Rev. Frank D. Buchman). இதற்கு முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவ கூட்டுறவு என்றும் பெயர் வழங்கப்படுகிறது. (The First Century Christian Fellowship). Frank பென்சில்வானியாவில் 1878-இல் பிறந்தவர். ஓவர்புருக்கில் இவர் ஒரு லூத்தரன் சபைக்குப் போதகராகப் பணியாற்றினார். சிலரோடு சண்டையிட்டு வேலையிலிருந்து பிரிந்து இத்தாலி இங்கிலாந்து முதலிய இடங்களுக்குச் சென்றார். இங்கிலாந்திலிருக்கையில் புகழ்பெற்ற கெஸ்விக் கன்வென்ஷனில் ஒரு பெண், கிறிஸ்துவின் சிலுவை தன் வாழ்க்கையில் உண்டாக்கின மாற்றத்தைச் சாட்சியாய்க் கூறினதைக் கேட்டு இவர் மனமாற்றம் அடைந்தார். அப்பொழுது ஓவர்புருக்கில் அவர் வருத்தப்படுத்தினவருக்கு மன்னிப்புக் கடிதம் அனுப்பி ஒப்புரவாகிக்கொண்டார். அதன் பின் பென்சில்வானியாவில் வாலிபர் கிறிஸ்தவ சங்கத்தின் செயலாளராக டாக்டர் ஜான் ஆர். மாட் என்பவரின் சிபார்சினால் நியமிக்கப்பட்டார். அப்பொழுது இவ்வியக்கத்திற்குரிய பிரமாணங்களை உருவாக்கலானார்.

தனது அனுபவத்தைப் பகர்ந்து கொடுப்பதால் பிறரைக் கடவுளின் சித்தத்தின்படி வாழத் தூண்டலாம் என்பது அவரது அவாவாயிற்று. பாவங்களை அறிக்கை செய்தலும் பாவங்களின் மேல் வெற்றி அடைவதும் அவரது மனத்தில் முக்கிய இடம் பெற்றன. நாட்டுக்கு நாடு போர் ஏற்படுவதைத் தடுப்

பத்திற்கு வாழ்க்கைத் திருப்பம் ஒன்றே இன்றியமையாதது என்று உணர்ந்தார். எனவே தமது இயக்கத்திற்கு 1938-இல் தமது 60-வது பிறந்த நாளன்று அறநெறிப்போர் எழுச்சி இயக்கம் என்று பெயரிட்டார். பின்னர் அவர் பல நாடுகளில் சுற்றி பணி செய்தார். அப்பொழுது ஆசியாவுக்கு வந்தார்.

1921-இல் இங்கிலாந்துக்குத் திரும்பினபோது ஆக்ஸ்பர்டில் 'அமைதி நேரம்' என்னும் ஒழுங்கை இவ்வியக்கத்தின் மற்றொரு பிரமாணமாக்கினர். ஆக்ஸ்பர்ட்டிலிருந்து இவ்வியக்கம் 1927-இல் ஆப்பிரிக்காவுக்குப் பரவினபோது அங்கே ஆக்ஸ்பர்ட் இயக்கம் என்ற பெயர் வழங்கப்படலாயிற்று. பின் ஸ்வித்சர்லாந்திலுள்ள காக்ஸ் என்னுமிடத்தில் 1946-இல் அதன் தலைமை இடம் ஏற்படுத்தப்பட்டது. விரைவில் இது ஒரு அனைத்துலக இயக்கமாக மாறிற்று.

வீடுகளில் நிகழும் கூட்டுறவுக் கூட்டங்களுக்கு ஆண்களும் பெண்களும் குறிப்பாக நல்ல நிலையிலுள்ளவர்களும் அழைக்கப்படுகின்றனர். ஆண்களும், பெண்களும் வெவ்வேறு குழுக்களாய்த் தத்தம் அனுபவங்களைக் கலந்துகொள்ளுகின்றனர். தங்களுக்கும் கடவுளுக்குமிடையே தடையாயிருந்த பாவங்களை மறைக்காமல் அறிக்கையிட ஏவப்படுகின்றனர்.

கிறிஸ்தவ வாழ்க்கையில் கிறிஸ்துவைப் பின்பற்றி கைக்கொள்ளவேண்டிய நான்கு தனிப் பண்புகள் உறுப்பினர்களிடம் எதிர்பார்க்கப்படுகின்றன. அவையாவன: வாய்மை, தூய்மை தன்னயமின்மை, சத்தியம் ஆகியவை. இவற்றை அடைவதற்கு நான்கு காரியங்கள் செய்யப்படவேண்டும்.

1. கடவுளுக்கு ஒப்புக்கொடுத்த இன்னொரு கிறிஸ்தவனோடு தன் பாவங்களையும் சோதனைகளையும் கலந்து பகிர்தல்.
2. கடவுளின் பாதுகாவலுக்கும் வழி நடத்துதலுக்கும் வாழ்க்கையை ஒப்புக்கொடுத்தல்.
3. யாருக்காவது நேரடியாகவாவது மறைமுகமாவது இன்னல் விளைவித்திருந்தால் சமரசப்படுதல்.
4. நாம் செய்கிற, சொல்லுகிற ஒவ்வொரு காரியத்திலும் கடவுளின் நடத்துதலுக்காக காத்திருந்து அதிலேயே சார்ந்திருத்தல்.

எனவே, அவர்களது கூட்டுறவுக் கூட்டங்கள் பிரதானமாக சாட்சிக் கூட்டங்களாய் அமைந்துள்ளன.

இம் முறையின்படி உலகையே கடவுளுக்காக வெல்லலாமென்பது ஆக்ஸ்பர்ட் குழுவினரின் நம்பிக்கை.

இவ்விதமாகத் தனி ஆத்துமாவைச் சந்திக்கும் முறை பாராட்டத்தக்கது. மேலும், சாதாரண நற்செய்திப் பணிகளில் சாதாரண மக்களுக்கும் பெரும்பாலும் நற்செய்தி அறிவிக்கப் படுகிறது. ஆனால் இங்கே முக்கியமான ஆட்கள் சந்திக்கப் படுகிறார்கள். கிறிஸ்தவர்கள் பெயரளவில் மட்டும் கிறிஸ்தவர் களாயிராமல் கடவுளுக்காக ஒரு தீர்மானம் செய்யவும் சாட்சி புகரவும் அவர்களை ஏவும் நற்பண்பும் இவ்வியக்கத்திற்குரிய சிறப்பு. ஒவ்வொருவருடைய இல்லங்களிலும் நண்பர்களாய்க் கூடி சமநிலையில் பேசி தங்கள் உள்ளங்களைத் திறந்து வைத் தல் ஒரு நல்ல முறையாகும்.

எனினும் அவர்களுக்குத் திட்டமான கோட்பாடுகள் கிடையா. வாழ்க்கைத் திருப்பத்தை மட்டும் கவனிக்கின்றனர். கிறிஸ்தவ அனுபவம் முக்கியமாயினும், தங்கள் விசுவாசத்தைக் குறித்துப் பதில் சொல்ல வல்லவர்களாய் இருத்தல் தேவை யானது. தாங்கள் நம்புவது எவை என்பதை அறிந்திருக்க வேண்டும். இல்லையேல், எவ்வித தீய உபதேசத்தாலும் மருண்டுபோக ஏதுவாகும்.

திட்டமான கோட்பாடுகள் இல்லாதபடியால் இதில் பல் வேறு கருத்துக்களுடையவர்கள் பங்குபெறுகின்றனர். இந்தி யாவில் சில இடங்களில் இந்துக்களும், முஸ்லீம்களும், புத்த மதத்தினரும் இதில் பங்குபெறுகின்றனரென்று தெரிகிறது. எத்தகைய கூட்டுறவு அச்சந்தர்ப்பங்களில் அடையலாமென்று அறிவது கடினம். அவர்கள் வலியுறுத்தும் வாழ்க்கைத் திருப் பம் கிறிஸ்துவை மையமாய்க் கொண்டதோ என்பதும் ஐயப் பாடுடையது.

பாவங்களைப் பிறரிடம் அறிக்கையிடுவதிலும் தீமை உளது. கேட்பதற்குக் கவர்ச்சிகரமாயிருப்பதற்குப் பெருப்பித்துச் சொல் லும் சோதனையும் இல்லாமலில்லை.

மேலும் இங்குச் சீர்திருத்தம் முக்கியப்படுத்தப்படுகிறதே யன்றி மறுபிறப்பு முக்கியப்படுத்தப்படவில்லை. விசுவாசத்தை விடச் செயலும் கடவுளின் வெளிப்படுத்தலைவிட மனிதனின் பொறுப்பும வலியுறுத்தப்படுகின்றன.

முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவ கூட்டுறவு என்ற பெயரை ஆரம்பத்தில் வைத்திருந்த போதிலும், முதல் நூற்றாண்டி லிருந்த சபை அமைப்பும் தொழுகையும் அருளுரையாற்றுதலும் கைவிடப்படுகிற காரணத்தால் இவ்வியக்கத்தினாலுண்டாகும் அபாயம் வெளிப்படையானது. எனினும் ஆக்ஸ்போர்ட் இயக் கத்திலுள்ள அனல் திருச்சபைக்குத் தேவை.

# 5. சுப்பராவ் இயக்கம்

கலகர சுப்பராவ் கோதாவரி மாவட்டத்தில் எல்லுரு என்னுமிடத்தில் 1912இல் பிறந்தவர். இந்து குடும்பத்தில் பிறந்து வளர்ந்தாலும் இந்து சமய எண்ணங்களை எதிர்த்து வந்தார். 1930இல் இளங்கலை வகுப்பில் முதல் வகுப்பில் வெற்றிபெற்றார். அதன்பின் ஆசிரியப் பயிற்சிப் பட்டம் பெற்று கிருஷ்ணா மாவட்டத்தில் ஆசிரியராய் அமர்ந்தார். 1937இல் மணம் புரிந்தார்.

சுப்பராவ் சமய எண்ணமற்றவராக கடவுளைப் பற்றிய நம்பிக்கையே இல்லாதவராக வாழ்ந்தார். இயேசு என்ற பெயரை அவர் அறிவார். ஆனால் புதிய ஏற்பாட்டை அவர் வாசித்ததோ கிறிஸ்தவ போதனையைக் கேட்டதோ கிடையாது. கிறிஸ்தவ சமய தூதுவர், பாதிரிமார் ஆகியோரின் உடை நடை முதலியவை அவருக்கு வெறுப்பாய் இருந்தன.

1942இல் அவர் கிறிஸ்துவின் தரிசனத்தைப் பெற்றதாகவும், கிறிஸ்து தம் ஊழியத்தைச் செய்ய அவரை அழைத்ததாகவும் கூறியுள்ளார். இயேசுவின் நாமத்தில் பிணியாளிகளுக்குக் குணமளிக்கவும் அவர் நடத்தப்பட்டார். எனவே இயேசுவின் நாமத்தின் வல்லமையையும், தமது அழைப்பின் நிச்சயத்தையும் உணரலானார். அநேகர் அவரிடம் வந்து குணமடைந்தனர். எனினும், சிலர் குணமடையாதிருந்தபோது 'கர்மா' தான் அதற்கு விடை என்று அவர் கூறினார். சிலருக்காக வாரங்களாகவும் மாதங்களாகவும் ஜெபித்த பின்னர்தான் அவர்கள் சுகம் பெற்றனர். சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவின் ஒரு சொரூபத்திற்கு முன் பிணியாளியை நிற்கச் செய்து தமது கையைப் பிணியாளியின் தலையின் மேலோ அல்லது பாதிக்கப்பட்ட வேறு பாகத்திலோ வைப்பார். பின்னர் இயேசுவின் நாமத்தை இரண்டு மூன்று முறை கூறி பின்வரும் வார்த்தைகளில் தெலுங்கு மொழியில் ஜெபிப்பார்: "ஆண்டவராகிய இயேசுவே இந்த உமது பிள்ளையை எல்லாச் சரீர ஆத்மீக சுகவீனங்களிலுமிருந்து விடுவியும். எல்லா அசுத்த ஆவிகளையும் துரத்தி நரகத்திற்கு அனுப்பும்". பின் அவர்கள் கிறிஸ்துவில் விசுவாசம் வைக்க ஏவி அவரது நாமத்தை அடிக்கடி உச்சரிக்குமாறு கூறுவார்.

சுப்பராவின் வல்லமையைக் கேட்டு சென்னை, மத்திய பிரதேசம், பம்பாய், டில்லி, வங்காளம், ஒரிஸ்ஸா, மைசூர் முதலிய இடங்களிலிருந்து மக்கள் அவரிடம் வருகின்றனர். ஆயிரக்கணக்கான மக்கள் பல பிணிகளிலிருந்து குணமடைந்திருக்கின்றனர்.

அநேகர் அவருடைய கை தங்கள்மேல் வைக்கப்பட்டவுடன் மயங்கி விழுகின்றனர். இயேசுதான் குணமாக்குகிறவரென்றும், தன்னைப் பாராமல் சிலுவையையே நோக்கிப்பார்க்க வேண்டுமென்றும் அவர் கூறுகிறார். உண்மையாய்க் கேட்கிற எவருக்கும் இயேசு இவ் வரத்தைக் கொடுப்பாரென்றும் போதிக்கிறார். சுகமளிப்பதற்காக பணம் ஒன்றும் அவர் வாங்குவதுமில்லை என்று கூறப்படுகிறது.

ஆனால் சுப்பராவ் திருமுழுக்குப் பெற்றதுமில்லை, சபையில் சேர்ந்ததுமில்லை. மக்களைத் தூண்டிலினால் பிடித்துச் சமயம் என்னும் படுகுழிக்குள் போடுவதுதான் திருமுழுக்கு என்று அவர் கூறுகிறார். 'போ பாதிரி போ' என்ற தலைப்புள்ள ஒரு கைப்பிரதியில், குருவானவர் 'திருமுழுக்கு' என்ற எழுத்துக்கள் தீட்டப்பட்ட வாளியைக் கையிலேந்தி நிற்கும் கேலிப்படம் வரையப்பட்டுள்ளது. குருக்களுக்கும், சுவிசேஷகர்களுக்கும், மேனாட்டுச் சமய தூதுவர்களுக்கும் எதிராகச் சவால் விட்டு அவர்கள் கூறுவது இயேசுவின் நற்செய்தி அன்று என்று பறைசாற்றுகிறார்.

சபைகளுக்குக் கிறிஸ்துவோடு ஒரு சம்பந்தமுமில்லை என்பது அவரது முடிவு. கிறிஸ்துவைப் பற்றி உண்மையாய்ச் சபைகளில் அருளுரையாற்றப்படவில்லை என்று அவர் எண்ணுகிறார்.

சமயம் என்பதையே சுப்பராவ் கண்டிக்கிறார். சமயம் மூட நம்பிக்கையும் புத்தியீனமுமானது என்று அவர் கூறியுள்ளார்.

சமயம் போற்றும் கடவுள் மனிதனே உருவாக்கியது. தன்னுடைய விழுந்துபோன நிலையில் தன்னுடைய சாயலாலேயே ஒரு கடவுளை மனிதன் உண்டாக்கிக்கொண்டான். தங்களது கடவுள் தங்குவதற்கு ஆலயங்களும் கட்டியுள்ளார்கள் என்கின்றார். உன்னதமான கடவுளை சுப்பராவ் நம்பாமல் ஒரு நாத்திகன் போலவே காணப்படுகிறார்.

சமய சடங்குகள் மனிதனை மீட்க முடியாதவை. இல்லாத கடவுளை அடைய முயற்சிக்கும் வீணான செய்கைகள். மற்றெல்லா சமயங்களையும்விட கிறிஸ்தவ சமயத்தைத்தான் அதிகமாகத் தாக்குகிறார். சிலுவையின் வழியைக் காட்டின கடவுளை ஒரு தொழுகையின் கடவுளாக மாற்றி தங்கள் வழிபாடுகளினாலும் ஜெபங்களினாலும் அவரைத் துன்புறுத்துகின்றனர் என்கின்றார். கிறிஸ்து தம்மைப் பின்பற்றக் கேட்கிறாரே ஒழிய தம்மைத் தொழுவதற்குக் கேட்கவில்லை. திருச்சபை தன் சடங்குகளினால் சமயம் என்னும் சிறையில் கிறிஸ்துவைச் சிறைபிடித்து வைத்திருக்கின்றது.

இயேசுவின் தெய்வீகத்தை வெளிப்படையாய் அவர் மறுக்காவிடினும் அவர் கடவுளல்ல, 'சத்குரு' என்று கூறுகின்றார். 'மேலான குரு' என்பது இதன் கருத்து.

கிறிஸ்து அருளும் மீட்பு மரணத்திலிருந்து தப்புவித்து மோட்சத்துக்கு வழிநடத்தும் ஒன்றல்ல; மீட்பு அறியாமையிலிருந்து ஞான மார்க்கத்திற்கு வழிநடத்தும் ஒன்று. மீட்பு என்றால் 'அத்வைதம்'; 'நான்', 'நீ' என்றோ 'மனிதன்', 'கடவுள்' என்றோ அல்ல. எல்லாம் ஒன்று என்பதேயாகும். இந்த ஒருமையை அடைவதே மீட்பு. ''நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம், நான் உங்களிலும், நீங்கள் என்னிலும்'' என்ற இத்தகைய வசனங்களை அவர் ஆதாரமாய்க் கொண்டுள்ளார்.

கிறிஸ்துவின் முன்மாதிரி அவரது போதனையைவிட மேலானது. கிறிஸ்துவின் செய்திதான் சிலுவையில் மேன்மை அடைந்துள்ளது.

இயேசு ஒரு புது சமயத்தை ஏற்படுத்த இவ்வுலகிற்கு வரவில்லை. தமமை மக்கள் தொழுவதையும் அவர் விரும்பவில்லை. தமது காலடிகளைப் பின்பற்றுவதையே விரும்புகிறார். அவரை நோக்கி ஜெபிப்பதும் திருமறையைப் படிப்பதும்தான் கிறிஸ்துவைப் பின்பற்றும் முறை என்று கிறிஸ்தவர்கள் நினைக்கின்றனர். இது முற்றிலும் தவறு என்று சுப்பராவ் கூறுகிறார். ஜெபமும் திருமறை வாசிப்பும் பயனற்ற அப்பியாசங்கள் என்பது அவரது கருத்து. 'ஜெபியாதே' (Don't pray) என்ற தலைப்புடன் ஒரு கட்டுரை எழுதி வெளியிட்டுள்ளார்; எனினும், ஜெபத்தை அவர் வெறுக்கிறாரென்று எண்ணலாகாது. ஏனெனில், பிணியாளிகளைக் குணமாக்கும்போது அவர் ஜெபிக்கிறார். ஜெபத்திற்காக ஜெபிக்கலாகாது. கிறிஸ்துவோடு ஒன்றுபட ஜெபிக்கவேண்டும் என்பதே அவரது எண்ணம். கிறிஸ்தவர்கள் தங்கள் சுய விருப்பங்களை நிறைவேற்ற கிறிஸ்துவைக் கடவுளாக்குகிறார்கள் என்கிறார்.

திருமறையைப் படிப்பதில் சில கிறிஸ்தவர்கள் அடைக்கலம் பெறுகின்றனர். திருமறையின் செய்தியை அறிந்திருக்க வேண்டும், நம்பவேண்டும் என்றெல்லாம் எண்ணி அதன்படி வாழவேண்டும் என்பதை மறந்துவிடுகின்றனர்.

கிறிஸ்துவைப் பின்பற்றவேண்டுமானால் உலக ஆசைகளையும், ஆஸ்தியையும், மனைவி பிள்ளைகளையும் துறக்கவேண்டும் என்பது சுப்பராவின் போதனை.

கிறிஸ்துவை நாம் பின்பற்றுவதால் நாம் அவரைப்போலாக வேண்டும் என்பது மட்டுமல்ல, நாம் கிறிஸ்துக்களாகவே மாற வேண்டும். 'கிறிஸ்துவாக மாறு' (Become Christ) என்பது அவரது மற்றொரு கட்டுரையின் தலைப்பு. நாம கிறிஸ்துவை வழிபடுகிறவர்களாயிராமல் கிறிஸ்துக்களாக வேண்டும்.

இதுவே வாழ்க்கையின் லட்சியம். நமது வாழ்க்கை பரலோகத்தில் தொடரும் என்பதைப் பற்றிய எண்ணம் ஒன்றும்

அவருக்குக் கிடையாது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, இறுதி நியாயவிதி ஆகியவற்றைப் பற்றிய எண்ணங்கள் அவருடைய விசுவாசப்பிரமாணத்தில் இல்லை. நாம் கிறிஸ்துவோடு ஒன்றுபட்டு கிறிஸ்துக்களாக மாறும்போது பாக்கிய நிலையை அடைந்துவிட்டோம் என்பது அவருடைய கொள்கை.

முடிவுரை:

மேற்கூறப்பட்ட இயக்கங்களைக் குறித்து நாம் எண்ணுவது யாது?

முதற்கண், இந்த இயக்கங்கள் யாவற்றின் போக்கிற்கும் அவை திருமறையைப் பயன்படுத்தும் விதம் ஒரு காரணமெனலாம். திருமறையை அர்த்தப்படுத்துவதில் தூய ஆவியானவர் காலாகாலங்களில் திருச்சபையை வழிநடத்தியிருப்பதை விட்டுப் பிரிவது அபாயமே. புரட்சிகரமான கருத்துக்கள் மூலம் கிறிஸ்துவில் வெளிப்பட்ட உண்மையைப் பலி செலுத்தலாகாது. கிறிஸ்துவைத் திருமறையின் மூலம் அறிகின்றோம். திருமறையைக் கைவிட்டால் கிறிஸ்துவைப் பற்றிய தவறான கருத்துக்களையே நாம் கொள்ளமுடியும். கிறிஸ்துவை வசனத்தின் நிறைவேறுதலாகக் காண்பது இன்றியமையாதது. ஆனால், திருவசனத்தில் கிறிஸ்துவைக் காண முயலாமல், வசனத்தையே விக்கிரகமாகக் கொள்ளுதல் கிறிஸ்துவின் சிந்தைக்கு ஒவ்வாத தீய உபதேசங்களுக்கும் கொள்கைகளுக்கும் வழிநடத்தப்பட ஏதுவுண்டாக்கும்.

திருமறையை ஒரு கணித நூலாக எண்ணிக் காலங்களையும் சமயங்களையும் கணக்கிட முனைதல் பெருந் தவறாகும். தீர்க்கதரிசிகளின் பணி வருங்காலத்தைப் பற்றிய திட்டமான கால அட்டவணையைக் கொடுப்பதன்று.

இரண்டாவதாக, தூய ஆவியானவர் கிறிஸ்துவில் அருளப்பட்ட வெளிப்படுத்தலை விட வேறு வெளிப்படுத்தலை அருளுகிறாரென்று எண்ணுவது திருமறைக்கு முரண்பாடாகும். ஒருவன் கிறிஸ்துவினால் மீட்பை அடையும்பொழுது தூய ஆவியானவரைப் பெறுகிறான். கிறிஸ்துவுக்கு எவ்வளவாக ஒப்புக்கொடுக்கிறானோ அவ்வளவாக ஆவியின் நிறைவைப் பெறுகிறான். இது கிறிஸ்துவை விசுவாசிக்கிற எல்லாருக்கும் உரிமையானதே. ஆவியானவரின் செயலாற்றுதல் ஆவியின் வரங்களினால் அறியப்படும் அடையாளங்கள் அவசியமல்ல. மேலும் ஆவியானவர் ஆள்தத்துவமுடையவர். திரித்துவத்தில் ஒரு ஆள். நாம் அடைந்து பெருமைகொள்ளவேண்டிய ஒரு சக்தியன்று. அவரது ஆளுகைக்கு நம்மை விட்டுக்கொடுப்பதே தேவையானது.

மூன்றாவதாக, மிகுதியான உணர்ச்சிவசப்படாது ஆவியானவரின் நடத்துதலுக்கு இடங்கொடுக்க மறுப்பதாகும்.

தரிசனங்கள் மூலமாய் அல்ல, விசுவாசத்தினால் கிறிஸ்துவைத் தரிசிப்பதாலேயே மெய்யான அறிவை அடையலாம். புனித பவுல், சாது சுந்தர்சிங் ஆகியோர் கண்ட தரிசனங்களில் கிறிஸ்துவின் மீட்பின் செயலேயும் அன்பையும் அறிந்தனர். கிறிஸ்துவின் மீட்பின் அன்பை மையமாய்க் கொள்ளாத தரிசனங்களை சந்தேகக் கண்களாலேயே பார்த்தல்வேண்டும்.

உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை உண்மையாய் சந்திக்கிறவன் "என் ஆண்டவரே, என் கடவுளே" என்று தொழுதுகொள்ளாமல் இருக்க முடியாது. சபைக்கு அமைப்பும் ஒழுங்கும் தொழுகை முறைகளும் தேவை என்பதைத் திருச்சபையின் அனுபவம் உறுதிப்படுத்துகிறது. ஆண்டவர் தாமே ஒப்புக்கொண்டதும் கட்டளையிட்டதுமான இரு அருட்சாதனங்கள் (சாக்கிரமந்துகள்) கிறிஸ்துவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் அவர் திரும்பி வரப்போவதையும் நினைவுப்படுத்தி நாம் அவரது பிரசன்னத்தை உணருவதற்கும், அவரோடு உறவு கொள்வதற்கும் உரித்தான கிருபையின் எத்தனங்களாயிருக்கக் கிறிஸ்தவன் அவற்றை நன்றியுடன் ஏற்றுக்கொள்ளுகிறான். அது கிறிஸ்துவில் வெளிப்பட்ட பண்பாகும்.

நான்காவதாக, கிறிஸ்து அருளும் மீட்பு மனித ஆள்தத்துவத்தை அழித்து தமக்குள்ளே ஒன்றுபடுத்தும் ஒன்றல்ல என்பதைத் திருச்சபையும் கிறிஸ்தவ அனுபவமும் எடுத்துக்காட்டுகின்றன. கிறிஸ்துக்களாக நாம் மாறி அவருக்குள் இரண்டறக் கலத்தல் வாழ்க்கையை அர்த்தமற்றதாக்கும் ஒன்று. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மறுமைக்குரிய வாழ்க்கையின் உண்மையை வெளிப்படுத்துகிறது.

எவ்வாறுயிருப்பினும் சபைகளின் நிலை என்ன? தனித்து இயங்கும் இப் பிரிவுகள் எழக் காரணம் யாது? திருச்சபையின் தொழுகை ஜீவனுள்ளதாயிருக்கிறதா? கிறிஸ்து வாழ்க்கையிலும் போதனையிலும் வெளிப்படுத்தப்படுகிறாரா? இதுவே இப் பிரிவினர் நமக்கு விடுக்கும் அறைகூவல்.

## துணை நூற்கள்


1. Butler J. F., *Jehovah's Witness.*
2. Davies Horton, *Christian Deviations.*
3. Nils Block-Hoell, *The Pentecostal Movement.*

ஆ

# நற்செய்திப்பணி இயக்கங்கள்

ஜே. பா. அலெக்சாந்தர்

## முன்னுரை:

முதல் நூற்றாண்டிலேயே நற்செய்தி கொண்டுவரப்பட்ட பெருமை இந்தியாவுக்குளது. பாரம்பரியங்களின் மூலமாக இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய புனித தோமாவே நற்செய்தியைக் கொண்டுவந்துள்ளாரென நம்புகிறோம். இதற்கு ஆதாரமான சான்றுகள் கிழக்கு, மேற்கு நாடுகளில் உள்ளன. இதை மறுக்க சரித்திர ரூபகாரமில்லை.

ஆரம்ப நூற்றாண்டுகளில் தென் இந்தியாவிலிருந்த சூரியானி கிறிஸ்தவர்கள் அந்தியோகியா, எருசலேம், பாரசீகம், எகிப்து முதலான இடங்களிலுள்ள சபைகளோடு தொடர்பு கொண்டிருந்தனர்.

16-ஆம் நூற்றாண்டில் உரோமன் கத்தோலிக்க மிஷன்கள் இந்தியாவில் வந்து பணிசெய்து திரளான மக்களைக் கிறிஸ்தவ சமயத்தில் சேர்த்தன.

18-ஆம் நூற்றாண்டில் பிரோட்டஸ்தாந்து மிஷன்கள் வேலைகள் ஆரம்பித்தன. இதன் பலனாகவும் இந்தியாவின் பல பகுதிகளில் சபைகள் வளர்ந்தன. 19-ஆம் நூற்றாண்டில் அநேக மிஷன்கள் வந்தன. இவை நாட்டின் பற்பல பகுதிகளில் நற்செய்திப் பணிபுரிந்தன. கல்வித்துறையிலும், மருத்துவத்துறையிலும் தொழில் துறையிலும் வேலை செய்யும் பல மிஷன்கள் ஏற்பட்டன. 1935 இறுதியில் இந்தியாவில் மொத்தம் 163 அயல்நாட்டு மிஷன்களும் 15 சுதேச மிஷன்களும் நற்செய்திப் பணியில் ஈடுபட்டிருந்தன. 4.467 அயல்நாட்டுக் கிறிஸ்தவ சமய தூதுவர்கள் பணிசெய்தனர். சுதேச ஊழியர்களின் எண்ணிக்கை பல்லாயிரமாயிருந்தது. தவிர, பாடசாலைகள், கல்லூரிகள், மருத்துவ நிலையங்கள், கைத்தொழிற்சாலைகள் அநேகம் செயல்பட்டன. பிற மதத்தினர், அரசியல் தலைவர்கள் ஆகியோர் இவ்வரிய பணிகளைப் பாராட்டாமல் இருக்கவில்லை.

அனாதை சாலைகள், செவிட்டு ஊமைப் பிள்ளைகள் நிறுவனம், விதவைகள் இல்லம், தொழுநோய் மருத்துவ மனைகள், விவசாயப் பள்ளிகள் ஆகிய பல தாபனங்கள் மிஷன்களால் நாட்டு நலனுக்காக நடத்தப்பட்டன.

எண்ணற்ற பணம் இத்தகைய பணிகளுக்காகச் செலவழிக்கப்பட்டன. அயல்நாட்டு சமய தூதுவர்கள் நூற்றுக் கணக்

க்க இப் பணிகளில் தங்கள் உயிரைத் தியாகம் செய்திருக்கின்றனர். நம் நாடு அயல்நாட்டு மிஷன்களுக்கும் இப் பரோபகாரமான பணிகளுக்கும் பட்டிருக்கும் கடன் இவ்வளவு அவ்வளவென்று மதிப்பிடமுடியாது.

சுதேச கிறிஸ்தவர்களாகிய நாமும் இத்தகைய சீரிய தூதுப் பணியில் ஈடுபட வேண்டியவர்களாயிருக்கிறோம்.

எனவே, இவ்வறைகூவலுக்கு இணங்கி நம் நாட்டில் பல நற்செய்திப் பிரபல்ய சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றை இங்குக் காண்போம்.

## I. இந்திய மிஷனரிச் சங்கம் (I. M. S.)

சுதேச மிஷன் சங்கங்களில் இந்திய மிஷனரிச் சங்கம் முக்கியமான ஒன்று. இது திருநெல்வேலி அத்தியட்சாதீனத்தால் (C.S.I.) நடத்தப்பட்டு வருகின்றது.

இச் சங்கம் 1903 பெப்ருவரி 12-ஆம் நாள் திருநெல்வேலியிலுள்ள பாளையங்கோட்டையில் நிறுவப்பட்டது. 1854-இல் இருந்தே தூதுப் பணியைப் பற்றிய எண்ணம் திருநெல்வேலி கிறிஸ்தவர்களுக்கு உண்டானது. தாமஸ் காட்ஜட்டான் ராக்லண்ட் முதலாவது சிவகாசியில் தம் மிஷனை ஆரம்பித்தார். இந்த மிஷனரி ஆர்வம் திருநெல்வேலியின் தெற்குப் பகுதியிலும் எழுந்தது. அத்துடன் மறைத்திரு. ஏ. எச். ஆர்டன் எழுதிய 'அயல்நாட்டு மிஷன்களும் நாட்டு அழைப்பும்' என்னும் நூல் 1896-இல் வெளிவந்தது. இது திருநெல்வேலிக் கிறிஸ்தவர்களுக்குள் புத்துணர்வை உருவாக்கினது. 1897-இல் தாமஸ் வாக்கர் செய்த சுற்றுப் பயணங்களினாலும் சேவையினாலும் கிராம சபைகளில் உயிர்மீட்சியும் நற்செய்திப் பணியில் ஆர்வமும் உண்டானது. சுவிசேஷக் குழுக்கள் சபைகளில் ஏற்படுத்தப்படும் காலமாக அக்காலம் விளங்கினது 1899 டிசம்பர் 3-ஆம் நாள் இந்தியாவின் உணர்வுக்காக மன்றுடும் நாளாய் அனுசரிக்கப்பட்டது. திருநெல்வேலி அசைந்தது. 1900-இல் டக்கர் அம்மாள்புரத்தில் நற்செய்திப் பணியில் ஆர்வம் தீபோல பற்றி எழுந்தது. அவ்வமயம் திரு. வே. சா. அசரியா (பின்பு அத்தியட்சர்) வாலிப கிறிஸ்தவ சங்கத்தின் செயலாளராக இலங்கைக்குச் சென்றிருந்தபொழுது யாழ்ப்பாணம் கிறிஸ்தவர்களின் ஊழிய வாஞ்சையால் கவரப்பட்டு அனல்மூட்டப்பட்டு வந்தார். இவற்றின் விளைவாக 1903 பெப்ருவரி 12-ஆம் நாளில் பல திருநெல்வேலி கிறிஸ்தவர்களின் கனவு நினைவாயிற்று. தற்

சமயத்தில் திருநெல்வேலி அத்தியட்சாதீன அச்சகம் இருக்கும் கட்டடம் அக் காலத்தில் மிஷன் சத்திரமாக வாலிப கிறிஸ்தவ சங்கத்திற்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது. அங்கே எட்டு குருக்களும் 20 அதீட்சதர்களும் கூடி ஜெபத்துடன் இந்திய மிஷனரிச் சங்கத்தை ஆரம்பித்தனர்.

இதன் முதல் செயலாளராகப் பணியாற்றியவர் திரு. வே. சா. அசரியா அவர்கள். திரு அ. சா அப்பாசாமி அதன் முதல் தலைவராகவும், திரு. ஜே. அன்புடையான் அதன் முதல் பொருளாளராகவும் சேவை செய்தனர். நல்லூர், சுரண்டை, சுவிசேஷபுரம், பண்ணைவிளை, திருநெல்வேலி, மெஞ்ஞானபுரம் முதலிய வட்டாரங்களிலும், திருநெல்வேலி கல்லூரியிலுமாக ஏழு கிளை காரியதரிசிகளும் ஏற்படுத்தப்பட்டனர்.

இச் சங்கத்தின் முக்கிய நோக்கம் இந்திய சபையில் மிஷனரி ஆவியை நம் சொந்த முயற்சிகளினால் வளரச்செய்ய வேண்டுமென்பதும், நற்செய்தியை இந்தியாவிலும் இதர நாடுகளிலும் கூறி அறிவிக்கவேண்டுமென்பதுமாகும்.

ஆரம்பத்தில் இச் சங்கத்திற்குப் பல இடையூறுகள் இருந்தன. அவற்றில் பிரதானமானது பணப் பிரச்சனை. அந்நிய நாட்டு உதவியை நாடாமல் சுய ஆதரவில் இச் சங்கத்தை நடத்த முயற்சித்தவர்களுக்கு இது ஒரு பிரச்சனையாகத்தானிருந்தது. எனினும் அசரியா, அன்புடையான், அப்பாசாமி, ஆர்தர், ஆசீர்வாதம் ஆகியோரின் தளரா முயற்சியால் இடையூறுகள் நீக்கப்பட்டு இச்சங்கம் விருத்தியடைந்தது.

**தோர்ணக்கல் மிஷன்:** தமிழ் நாட்டில் நற்செய்தி கூறப்படாத இடங்களில் பணிசெய்ய வேண்டுமென்று முதலாவது முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் சென்னைக்கு வடக்கே தெலுங்கு நாட்டில் வாரங்கல் மாவட்டத்தில் மனுக்கோட்டையில் ஊழியம் செய்ய கடவுள் வழிநடத்தினர். மாக்புபாபாட் என்று அழைக்கப்பட்ட மனுக்கோட்டையில் மொத்த மக்களின் எண்ணிக்கை 60,000. இதில் ஏழுபேரடங்கிய ஒரு கிறிஸ்தவ குடும்பம் இருந்தது. அவர்கள் மெதடிஸ்து சபையைச் சேர்ந்தவர்கள். இங்கே ஊழியம் செய்ய திரு. சாமுவேல் பாக்கியநாதன் முதல் மிஷனெரியாக ஏற்படுத்தப்பட்டார். இவர் 1904-இல் கமாமட் அடைந்து அங்கே தங்கி விரைவில் தெலுங்கு மொழி கற்றார். அதன் பின் 1905-இல் திரு. தேவசகாயமும், 1906-இல் திரு. சாலமோன் பாக்கியநாதனும் மிஷனெரிமாராக அவர்களோடு அனுப்பப்பட்டனர் மூவருமாக மனுக்கோட்டை அடைந்தனர். ஆனால் அவ்வூரில் அவர்களுக்குத் தங்க இடம் கிடையாதிருந்ததால் கமொமட் என்னுமிடத்திற்குத் திரும்பினார்கள். வழியில் 18 மைலுக்கப்பால் ஒரு இடத்தில் புகை வண்டியிலிருந்து இறங்கினபோது 6 ஏக்கரா பூமி ஒரு பெரிய கட்

டடத்தோடு விற்பனைக்கிருப்பதை அறிந்தனர். ஆகவே, சங்கத்தின் உதவியால் அது வாங்கப்பட்டது. அங்கே மிஷனெரிமார் மூவரும் குடியேறினர். அது தோர்ணக்கல்லைச் சேர்ந்தது. 1905-இல் பெரோலில் ஏழு குடும்பங்கள் முதலாவது கிறிஸ்தவர்களாக உடன்பட்டனர். 1906 ஆகஸ்ட் 6ஆம் நாள் தோர்ணக்கல்லில் முதல் திருமுழுக்கு சென்னைப் பேராயர் ஹென்றி ஒயிட்கெட் அவர்களால் நடத்தப்பட்டது. பின்னர் சபை அங்கு வளர்ந்தது.

1908இல் 28 சபைகள் இருந்தன. மொத்தக் கிறிஸ்தவர்கள் 902. 1909இல் மறைத்திரு. வே. சா. அசரியா தோர்ணக்கல்லுக்கு மிஷனரியாகச் சென்றார். பின் சபைகள் வளர்ந்து ஒரு அத்தியட்சாதீனமாயிற்று. 1912இல் தோர்ணக்கல் அத்தியட்சாதீனத்திற்கு வே. சா. அசரியா முதல் பேராயராக நியமனம் பெற்றார்.

தோர்ணக்கல் மிஷனில் கிறிஸ்தவர்களான சாதியினர் லம்பாடியர், மாலாக்கள், மாதிகாக்கள், வுட்டர், கௌண்டர், கோலர், முத்திராக்ஷர், கம்பர், காப்பர், ஹெடிமார், தெலுங்கர், சாலியர், தங்காலியர் ஆகியவர்கள்.

தற்பொழுது தோர்ணக்கல்லில் மறப்பட, தாழவூக்கல், பெத்தகலை, நள்ளிக்குடூர் என்னுமிடங்களில் விஸ்தரிப்பு ஊழியம் நடைபெற்றுவருகிறது. ஏராளமான மக்கள் திருமுழுக்குப் பெற்றுவருகின்றனர்.

**அணைக்கரை பளியர் மிஷன்:** 1909இல் இந்த மிஷன் ஊழியத்தை இச் சங்கம் C.M.S.இடமிருந்து பெற்றுக்கொண்டது. அணைக்கரை கேரள எல்லைக்குச் சமீபத்திலுள்ளது, புளியங்குடி, சிவகிரி, செய்த்தூர், ஸ்ரீவில்லிப்புத்தூர், உவலட்ராப், தலையணை முதலிய இடங்களிலுள்ள பளியரிடையிலும் மிஷன் வேலை நடந்துவருகிறது. முளகு மிஷன் வேலை தோர்ணக்கல் கிருஷ்ண அத்தியட்சாதீனங்களால் நடத்தப்பட்டுவருகிறது.

## 2. இந்திய தேசிய மிஷனரிச் சங்கம் (N.M.S.)

இப்பொழுது 'பாரத கிறிஸ்தீய சேவக் சமாஜ்' என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவில் கிறிஸ்தவர்களல்லாதவர்களின் எண்ணிக்கையைக் குறித்து 1903இல் சில வாலிபர் ஆராய்ச்சி செய்தனர். இந்தியாவிலுள்ள மிஷனரிச் சங்கங்களால்

இந்தியாவில் இன்னும் நற்செய்தியைக் கேட்டிராத கோடிக் கணக்கான மக்களுக்கு அறிவிக்க முடியாவிட்டால் இந்திய கிறிஸ்தவர்களாலேயே அது செய்யப்படவேண்டுமென்று உறுதி கொண்டார்கள். ஆகவே, இந்திய புரொட்டஸ்தாந்து கிறிஸ் தவர்கள் ஒன்றுபட்டு உழைக்கக்கூடிய ஒரு மிஷனரிச் சங்கம் ஏற்படுத்தவேண்டுமென்ற எண்ணம் உதயமாயிற்று. மிஷனரி மாரும் இந்திய கிறிஸ்தவத் தலைவர்களும் இதை ஆமோதித்த னர். இந்தியாவிலுள்ள பிரதான மிஷன் இடங்களைச் சந்தித்து நம் நாட்டில் நற்செய்திப் பணி புரிவதின் பொறுப்பை உணர்த்த ஆட்கள் அனுப்பப்பட்டனர். இதில் ஆர்வமுள்ளவர்கள் செராம் பூரில் 1905 டிசம்பர் 24-28 வரை அழைப்பு கொடுக்கப்பட் டது. இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் பின்வரும் பதினாறு பிரதிநிதிகள் வந்தனர்: வே. சா. அசரியா (திருநெல்வேலி), ஜான் ரஞ்சன் பானர்ஜி (ஹூக்ளி), ஆ. செள பர்மா (ஷிட்டாம் பர், அஸ்ஸாம்), பீ. ஆல்விஸ் (இலங்கை), ஜீ. ஷெர்வூட் எடி (மதுரை), குலான் மாசிஹி (ஐக்கிய மாகாணம்), ஹென்ஸ்மேன் (யாழ்ப்பாணம்), வி கர்மார்கர் (அகமத் நகர்), நி. ச. முக்கர்ஜி (அலகாபாத்), க. தி. பால் (சேலம்), சி. ரத்னவேல் (சிராஜாபீன். லாகூர்), பி. எஸ். சர்க்கார் (ரங்கூன்), எஸ். என. முக்கர்ஜி (டெல்லி). செராம்பூர் கல்லூரியில் இப் பிரதிநிதிகள் 1905 கிறிஸ்மஸ் தினத்தில் கூடி இச் சங்கத்தை உருவாக்கினர்.

இச் சங்கத்தின் நோக்கங்கள்: 1. இந்திய தலைமை, இந்திய பணம், இந்திய முறைகள் இதன் கோட்பாட்டுச் சொற்கள்.

2. மனம் மாறுகிற புறமதத்தினரை அண்மையிலிருக்கும் சபைகளில் சேர்க்கவேண்டும். புதிய பிரிவுகள் ஏற்படுத்தலா காது.

3. இப் பணி எல்லா இந்திய சபைகளுக்கும் பொதுவா னது.

4. வேறு மிஷன்கள் பணிபுரியும் இடங்களில் போட்டி யிடலாகாது.

கிறிஸ்தவர்களில் மூன்றில் இரண்டு பகுதி தென் இந்தி யாவில் இருக்கிறபடியால் சென்னை இச் சங்கத்தின் தலைமை இடம் ஆக்கப்பட்டது. மேலும் இது பர்மாவுக்கும் இலங்கைக் கும் மத்திப இடம்.

இச் சங்கத்தின் முதல் செயலாளர் திரு. வே. சா. அச ரியா அவர்கள்; பொருளாளர், திரு. க. தி. பால்; தலைவர், ராஜா சர். ஹர்ைம் சிங்.

ஏராளமான பெண்கள் கிளைச்சங்கங்கள் இருப்பது இச் சங்கத்திற்குப் பிரத்தியேகமான ஒன்று. பஞ்சாபிலுள்ள பெண்

கள் கிளைச்சங்கம் எருசலேமைத் தங்கள் வேலை இடமாகக் கொண்டிருக்கிறார்கள். சென்னையிலுள்ள பெண்கள் கிளைச்சங்கம் வட ஆர்க்காட் மாவட்டத்தில் மிஷனரிமாரைக் கொண்டு வேலை செய்கிறது.

பஞ்சாபிலுள்ள மான்ட் காமெரி மாவட்டம்தான் இச் சங்கம் பணிசெய்த முதல் களம். அதன்பின் தமிழ்நாட்டில் ரேவா, வட கன்னடம் முதலிய இடங்களில் வேலை ஆரம்பிக்கப்பட்டன. இந்தியா பங்கீடு செய்யப்பட்டபின் பஞ்சாபிலுள்ள வேலை லாகூர் அத்தியட்சாதீனத்திற்கு விட்டுக் கொடுக்கப்பட்டது. மத்திய பிரதேசத்தில் இச் சங்கம் செய்த வேலை லூத்தரன் சபைக்குக் கொடுக்கப்பட்டது. அது இப்பொழுது ரேவா மிஷன் என்று அழைக்கப்படுகிறது. வட கன்னட ஊழியம் மார்த்தோமா சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. 1964இல் தமிழ்நாட்டில் புரம் காட்டேரி என்னுமிடங்களில் செய்யப்பட்ட வேலை கோயம்பத்தூர் அத்தியட்சாதீனத்திற்குக் கொடுக்கப்பட்டது.

1955ஆம் ஆண்டில் இச் சங்கத்தின் பொன் விழா கொண்டாடப்பட்டபின் தமிழ் நாட்டில் ஜவ்வாதி மலையிலும், ஒரிஸ்ஸாவில் பூரியிலும், மத்திய பிரதேசத்தில் பாபினாவிலும், ஐக்கிய மாகாணங்களில் பச்சேர்வாவிலும் புது ஊழியங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1964இல் ஐக்கிய மாகாணங்களில் பாகேஸ்வரர் என்னுமிடத்தில் ஊழியம் ஆரம்பிக்கப்பட்டது. 1965இல் நடந்தவைர விழாவுக்குப் பின் 1966இல் ஜான்சி என்னுமிடத்திற்கு ஒரு ஊழியர் நியமிக்கப்பட்டிருக்கிறார். தற்சமயம் 1970இல் இச் சங்கத்திற்கு ஒன்பது களங்களும் இருபது ஊழியரும் உண்டு. வட பாகத்திற்குச் சம்பளம்பெற்று வேலை செய்யும் ஒரு செயலாளரும் உண்டு.

**ஜவ்வாதி மலை ஊழியம்:** இம் மலைகளில் ஐந்து மைய இடங்களில் இச் சங்கம் வேலைசெய்கிறது. ஜாமனமரத்தூர், கல்யாணமந்தை, குண்டலத்தூர் ஆகிய மூன்று கிராமங்களில் ஊழியர்கள் தங்கி பல கிராமங்களில் பணி செய்கின்றனர். கல்யாண மந்தையில் ஒரு சிற்றாலயமும், ஒரு சபை வீடும் உண்டு. புதிதாகத் திருமுழுக்குப் பெற்ற 32 கிறிஸ்தவர்களாலானது அச் சபை. நாதனூர் என்னுமிடத்திலும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**பூரி ஊழியம்:** இங்கே இசபந்தி ஆசிரமம் என்றொரு ஆசிரமம் உள்ளது. ஒரு நூலகமும் வாசிப்புச் சாலையும் நற்செய்திப் பணிக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. அண்மையில் 39 ஆடவர்கள் திருமுழுக்குப் பெற்றுள்ளார்கள். தெலுங்கருக்காக ஒரு தெலுங்குப் பாடசாலையும், ஒரியருக்காக ஒரு ஒரிய பாடசாலையும் இங்கே நடத்தப்பட்டுவருகிறது. தொழுநோயாளிகளிடமும் இங்கே ஊழியம் நடந்துவருகிறது.

பச்பேராவில் ஒரு சிறு மருத்துவ நிலையமும் ஒரு வாசிப்புச் சாலையும் உள்ளன.

பகேஸ்வாரில் ஒரு பாடசாலை மக்களின் நல்லெண்ணத்தைக் கவர்ந்துவருகிறது.

நேபாளத்திலும் இச் சங்கத்தின் ஊழியம் நடந்துவருகிறது. இங்கே ஒரு தொழில் நிறுவனத்தையும் ஒரு வாசிப்புச் சாலையையும் இச் சங்கம் நடத்திவருகிறது. அவற்றின் மூலமாக மக்களோடு தொடர்புகொள்ள நல்ல வாய்ப்பு ஏற்படுகிறது.

இராஜஸ்தானில் நடந்தேறும் பணியில் ஊழியர்கள் அண்மையிலுள்ள சபைகள் மூலமாகவும் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

இச் சங்கத்தின் ஊழியத் திட்டங்கள் பாராட்டப்படத் தக்கவை. பிற மத மக்களோடு அன்புடன் தொடர்புகொள்வதற்குரிய சீரிய முறைகளைக் கையாளுதல் திருப்பணிக்கு இன்றியமையாதது. இந்திய சபைகளே இவ்வூழியத்தைச் செய்ய ஊக்குவிக்கப்படுவது நன்முறையாகும். பூரியில் அரசாங்க எதிர்ப்பு ஏற்பட்டிருக்கும் இத் தருணத்தில் அங்குள்ள கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் உறுதியாயிருப்பது கடவுளுக்கு நன்றி செலுத்துவதற்குரிய குறிப்பாகும். நற்செய்தியை ஏற்றுக்கொண்டவர்கள் கிறிஸ்தவ விசுவாசத்தில் வேரூன்றி கட்டப்பட பவுலடியாரின் முறைகள் இக் காலத்திற்கும் ஏற்றவை.

## 3. நிர்மல் மிஷன்

1915இல் தென் இந்தியாவிலுள்ள மெதடிஸ்து சபை, தென் இந்தியாவில் புது களங்களில், இந்திய ஊழியர்களைக் கொண்டும் தென் இந்தியாவிலுள்ள ஆதரவைக் கொண்டும் நற்செய்திப்பணி செய்யத் தீர்மானித்தது.

மெதடிஸ்து சபையின் ஹைதரபாத் மாவட்ட ஆசனபதி மறைத்திரு C. W. போஸ்னட் என்பாரின் தூண்டுதலினால் 180 கிராமங்கள் அடங்கிய நிர்மல் தாலுகாவில் ஊழியஞ்செய்ய முடிவுகட்டப்பட்டது. இவ்வூழியத்தைச்செய்ய திரு. சக்கரம் தானியேல் அவருடைய மனைவியுடன் தெரிந்தெடுக்கப்பட்டார்.

வறுமை நிறைந்த மக்களிடையில் அவர்கள் புரிந்த பணியின் காரணமாக 1917உக்குள் ஐந்து கிராமங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டன. ஊர் தலைவன் அவர்களை எதிர்த்துத் தனக்கு அதிகாரமுள்ள பத்து கிராமங்களில் அவர்கள் பிரவேசியாதபடி தடுத்தான். அதன்பின் திடீரென அத் தலைவன்

நோய்வாய்ப்பட்டான். மரணத்தறுவாயிலிருக்கையில் திரு. கிளாமக்து என்னும் ஒரு மருத்துவ சுவிசேஷகர் அவன் மீண்டும் சுகமடைய உதவினர். எதிரிக்குப் பாராட்டின கிறிஸ்தவ அன்பை உணர்ந்த அத் தலைவன் மனம் மாறி தன் விக்கிரகங்களை ஆற்றில் எறிந்துவிட்டு கிறிஸ்தவனானன். இச் செய்கை நற்செய்திப் பணி வெற்றிகரமாக முன்னேற உதவினது. 1921உக்குள் ஏழு சபைகள் உண்டாயின.

1941இல் 8,223 கிறிஸ்தவர்களைக்கொண்ட 59 சபைகள் இருந்தன.

தற்சமயத்தில் அங்கே அதிக முன்னேற்றம் காணப்படுகின்றது. இப்பொழுது மல்கா, ஜம்புகா முதலிய கிராமங்களிலுள்ள லம்பாடியருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டுவருகிறது. கோபால்பேட்டை என்னுமிடத்தில் பலர் திருமுழுக்குப் பெற ஆயத்தப்படுகின்றனர்.

## 4. பாரக்கல் மிஷன்

மத்திய திருவிதாங்கூர் அத்தியட்சாதீனத்தால் இம் மிஷன் 1924இல் ஆரம்பிக்கப்பட்டது. ஹைதராபாத்திலுள்ள கட்றப் பள்ளி, பாரக்கல் முதலிய இடங்களில் அசரியா அத்தியட்சரின் ஆலோசனையால் ஊழியம் செய்யப்பட்டது.

முதலாவதாக 1930இல் நாற்பது பேர் திருமுழுக்குப் பெற்றனர். 1948இல் பாரக்கல்லுக்கு 5 மைலுக்கப்பாலுள்ள எல்லம்பள்ளி என்னும் கிராமத்திலுள்ள மடிகாக்கள் கிறிஸ்தவ விசுவாசத்தில் போதனை பெற்றுக்கொள்ள விரும்பிக் கேட்டனர். போதனைக்கு ஆள் அனுப்பப்படுமுன்னே சபைக்குச் சந்தா, காணிக்கைகள் கொடுக்க ஆரம்பித்துவிட்டனர்.

தற்பொழுது அங்கே இரண்டு மிஷனரிப் போதகர்களும் 35 கிராம சபைகளில் ஊழியம் செய்யும் 25 ஊழியர்களும் உண்டு. நாகராம் என்னுமிடத்தில் ஒரு ரெடி குடும்பத்தில் உள்ளவர்கள் சபையில் மசர ஒபபுகொண்டுள்ளனர். உயர்ந்த சாதியினர் என்று எண்ணபபடுகிறவர்கள் கிறிஸ்துவைப் பற்றி அறிய அதிக ஆர்வம் கொள்கின்றனர். அதற்காக மிஷனரிமாரைத் தங்கள் இல்லங்களில் வரவேற்கின்றனர்.

முகலப்பள்ளி, சாயம்பேட்டா முதலிய இடங்களிலும் புதிய களங்கள் கிடைத்திருக்கின்றன.

## 5. இதர பல மிஷனரி இயக்கங்கள்

1 **வையனாடு மிஷன்:** *இவ்வூழியத்தைச் சென்னை மிஷன் போர்டு நடத்திவருகிறது. மேப்பாடி, மனந்தோடி, கூடலூர், என்னுமிடங்களில் பணி நடத்தப்பட்டது மேப்பாடியும், மனந்தோடியும் வட கேரள அத்தியட்சாதீனத்திற்குக் கொடுக்கப் பட்டுள்ளன. கூடலூர் மைசூர் அத்தியட்சாதீனத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ளது.*

2. **காதரின் லிஸ் தோடர் மிஷன்:** *சென்னை மிஷன் போர்டே இம் மிஷனையும் நடத்துகிறது. தோடர் கல்வியில் முன்னேறியிருக்கின்றனர்.*

3. **தென் இந்திய கோண்டர் மிஷன்:** C. M. S. *மிஷனரி மாரின் சேவையால் 1885இல் முதல் சபை கோண்டர் மத்தியில் ஆரம்பமானது.*

4. **ஆலம்பூர் மிஷன்:** *இராயலசீமா அத்தியட்சாதீனம் இம் மிஷனை நடத்திவருகிறது.*

5. **முஸ்லிம்கள் மத்தியில் நற்செய்திப் பணி:** *1895இல் இந்துஸ்தான் மிஷன்* C.M.S.*ஆல் ஆரம்பமானது. 1909இல்* C.M.S. *ஆஸ்திரேலியன் மிஷனுக்கு இந்துஸ்தான் மிஷனை ஒப்புவித்தது. இங்கே* C.M.S. *சபை இருக்கிறது. ஒரு பாடசாலையும் உண்டு. நற்செய்தி தொடர்ந்து அறிவிக்கப்பட்டு வருகிறது. மேடக் அத்தியட்சாதீனம் அதை நடத்துகிறது. வாணியம்பாடியில் முஸ்லிம் ஊழியத்திற்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.*

6. **மைசூர் மிஷனரிச் சங்கம்:** *1911இல் ஆரம்பிக்கப்பட்டது. மைசூருக்கு 36 மைல் தூரத்தில் கஸ்தூரில் பணிசெய்து வளர்ந்து வருகிறது.*

7. **அடூர் மிஷன்:** *மத்திய கேரள அத்தியட்சாதீனம் நடத்திவருகிறது. 1903-இல் ஆரம்பமானது. 1914-இல் 9 சபைகளும் 321 கிறிஸ்தவர்களும் இருந்தனர். இன்று அப் பணியின் நிலை வருமாறு.*

*மத்திய கேரள அத்தியட்சாதீனத்தில் நற்செய்திப் பணியைப் பற்றிய புள்ளி விவரம்:*

| | |
|---|---|
| *பிறசமய வீடுகள் சந்திப்பு* | *5,079* |
| *நற்செய்திப் பிரதிகள் விற்றது* | *6,230* |
| *கைப்பிரதிகள் இலவச அளிப்பு* | *50,866* |
| *பங்கெடுத்த பெண்கள்* | *2,361* |
| ,, *ஆண்கள்* | *3,054* |
| *வெளிக் கூட்டங்கள்* | *344* |
| *விசாரணைகள்* | *1,041* |
| *மொத்த செலவு* | ரூ. *7,029* |

**8. தென் திருவிதாங்கூர் சுதேச மிஷனெரிச் சங்கம் (H.M.S.):** *1900-இல் ஆரம்பிக்கப்பட்டு பல சபைகளையும் பாடசாலைகளையும் நடத்திவருகிறது.*

**9. மதுரை நகர மிஷன்:** *மதுரையில்* City Mission *தூதுப் பணியைச் சிறப்படன் செய்கிறது. மாதவபுரம், வேதூர் குப்பம், செய்யூர் (சிங்கல்பட்), செய்யூர் (வடஆர்காடு) ஆகிய புதிய மிஷன் களங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.*

*கோவிநூரில் 9 கிராமங்களில் பணி நடக்கிறது. திருவதானையில் 13 கிராமங்களில் நற்செய்திப் பணி நடக்கிறது. பெரியகோட்டையில் ஒரு புது ஆலயம் கட்டப்பட்டுள்ளது.*

| | |
|---|---|
| Neighbourhood | Evangelism |
| Chittra Festival | ,, |
| Hospital | ,, |
| *சிறை சந்திப்பு* | |

*ஆகியவை சிறப்புடன் நடத்தப்படுகின்றன.*

**10. பரதேச மிஷனெரி ஊழியங்கள்:** *தென் இந்திய ஐக்கிய சபை பாப்புவாவில் 1944-இல் ஊழியத்தை ஆரம்பித்தது. பின் தென் இந்திய சபை இதை எடுத்துச் செய்தது. மறைத்திரு.* Y. *சத்தியா ஜோஸப் முதல் மிஷனெரியாகப் பணி புரிந்தார்.*

*பல இடையூறுகளினிமித்தம் இப் பணி இப்பொழுது தாய்லாந்தில் செய்யப்பட்டுவருகிறது. தென் இந்திய சபையின் மிஷனெரியாக மறைத்திரு. பால் மாணிக்கம் ஐயர் பணிபுரிந்து வருகிறார். தென் இந்திய சபையின் எல்லா அத்தியட்சாதீனங்களும் இவ்வூழியத்தை ஆதரிக்கின்றன.*

**11. தொழில் துறை நற்செய்திப் பணி (Industrial Evangelism):** *சென்னை, கோயம்பத்தூர், மைசூர் முதலிய அத்தியட்சாதீனங்கள் இப் பணியை ஊக்குவித்துவருகின்றன. வட கேரளத்திலும், மேடக், மதுரை, ராமநாதபுரம் அத்தியட்சாதீனங்களிலும் இப் பணி ஆரம்பிக்கப்படும் நிலையில் இருக்கிறது. இதற்குத் தகுந்த பயிற்சி தேவை. தொழிலாளிகளுக்கு நற்செய்தியைக் கொண்டு செல்லுதல் தற்காலத்திற்கேற்ற முறை. இந்தியா தொழிலை வற்புறுத்தும் இக் காலத்தில் இத்துறையில் கூடுதலான கவனம் செலுத்தப்பட வேண்டியது இன்றியமையாதது.*

**முடிவுரை:**

*கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 2·30 சதவீதம் இருக்கையில் இந்திய கிறிஸ்தவ சபை தன் முக்கிய கடமை நற்செய்திப் பணி என்பதை உணருவது அவசியம். தகாத முறைகளில் இப் பணியைச் செய்யாது நம் நாட்டுக்கேற்ற முறைகளை அனு*

சரித்து கிறிஸ்துவின் அன்பை வெளியிடுவது நமது கடமை. சபை ஒருமைப்பாடு இதற்கு இன்றியமையாதது. கிறிஸ்து அருளிய தூதுப்பணி ஒன்றுபட்ட சபையின் மூலம் செய்யப் படுவதே சாலவும் சிறந்தது. அப்பொழுது தூதுப்பணி சாட்சிப் பணியாக அமைய ஏதுவாகும்.

## துணை நூற்கள்


1. Abraham, Joseph, *Fifty Years of I. M. S.*
2. Richter, J., *History of Mission* in India.